
கதை நாயகி

என்.சீதாலெட்சுமி

கூகூல்

கூஞ்கூ!

1



லஷ்மிபதே கமலநாப சுரேஷ விஷ்ணு
வைகுண்ட கிருஷ்ண மதுசூதன புஷ்கராஷ
பிரம்மனிய கேசவ ஜனார்த்தன வாசுதேவா
தேவசி தேகி கிருபன்ஸ்ய கலாபலம்பம்!

வீடெங்கும் சாம்பிராணியின் வாசனை மணம் பரப்ப, மணிச் சத்தம் செவிகளுக்குள் புகுந்து மன திற்குள் ரீங்காரமிடத் தொடங்கியது!

சரியாகப் பத்து நிமிடங்கள் கழித்து பூஜை முடிய, ''விவேக்... என்ன செய்றே? காய் வாங்கிட்டு

வந்துட்டியா?'' என்று விவேக் என்ற விவேகானந்தனை ஏவினார் வேலுநாச்சியார்.

படித்துக் கொண்டிருந்த பேப்பரை கீழே போட்டுவிட்டு, ''இதோமா... போறேன்... என்ன வாங்கணும்?'' என்றபடியே எழுந்த விவேக், ஒரு எலும்பு முறிவு மருத்துவன்.

''யுகாட்ட கேட்டுக்கோ! அவ தான் லிஸ்ட் எழுதி வச்சிருந்தா...'' எனக் கூறியவர், கையில் காப்பிக் கோப்பையுடன், வலது பக்கமிருந்த அறையின் புறம் திரும்பினார்.

''ஹோ! என்ன உங்க செல்ல மகனுக்கு... காபியோ?'' என விவேக் நக்கலாய் சிரிக்க,

''உனக்கும் தானேடா கொடுத்தேன்...'' என்று செல்லமாய்க் கடிந்தார் வேலுநாச்சியார்.

''ஹ்ம்ம்... தந்தீங்க தந்தீங்க... நான் பல்லு விளக்கி... ஜாகிங் போயிட்டு வந்து.. பேப்பர் வாங்கிட்டு வந்துன்னு எல்லா வேலையும் பார்த்துட்டு வந்து.... அம்மா காபின்னு பத்து வாட்டி கத்தினதுக்கு அப்புறம் தந்தீங்க! அந்தப் பொடிப்பயலுக்கு மட்டும்... பெட் காபி! இதெல்லாம் சரியே இல்ல...ம்மா!'' என்றான் ஒரு விரல் நீட்டி மிரட்டலாய்.

''போடா.. போடா.. போய்... காய் வாங்கிட்டு வர வழியப் பாரு!'' என்று அவனது பேச்சை ஒரு பொருட்டாய் எடுத்துக் கொள்ளாமல், சின்ன மகனின் அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்ற வேலுநாச்சியார்,

''புள்ள... முதன்முதலா வேலைக்குப் போகப் போறான்! அவனைக் கொஞ்சாம... ரெண்டு வருஷமா வேலை பாக்குற உன்னைக் கொஞ்சுவாங்களாக்கும்! போடா!'' என்று பின்பாட்டுப் பாடிய படியே, விவேக்கின் எரிச்சலை வாரிக் கட்டிக் கொண்டார்.

அம்மா உண்டு பண்ணிய எரிச்சல் போதாது என்று, எரிச்சலுக்கு அடித்தளம் நாட்ட இன்னொருத்தி வேறு கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள்! சமையலறையில்!

சமையலறைக்குள் நுழைந்த விவேக், ''வீணா... காய்கறி லிஸ்ட் ரெடியா... தா...'' என அவன் கேட்க,

''ஹோ! ஒரு நிமிஷம் இருங்க... ரெடி பண்றேன்!'' என்றவள்,

''காலிஃபிளவர், கத்திரிக்காய்...'' என்று காகிதத்தில் எழுதத் தொடங்க,

''ஏய்... எனக்கு இதெல்லாம் பிடிக்கவே செய்யாது!'' என்று அலறினான் விவேக்.

''உங்களுக்குப் பிடிக்காட்டா போங்க! ரபின்க்கு பிடிக்கும்!'' என்று அலட்சியமாய் தலையைச் சிலுப்பி, அடுத்த அடுத்த காய்கறிகளின் மீது கவனம் செலுத்தத் துவங்கியவள் வேறு யாராக இருந்தாலும் விவேக் கவலைப்பட்டிருக்க மாட்டான்! அவள்... யுகவீணா... அவனது தர்மபத்தினியன்றோ!

''ஏய்... இதெல்லாம் டூ மச்...'' என்று அவன் சிறு பிள்ளை போல், காலை உதைத்துக் கொண்டு சிணுங்க,

''ஷ்... போங்க! இன்னைக்கு ரபின்க்கு ஃபிரஸ்ட் டே... ஆபீஸ்! பிடிச்சதை செய்யணும்!'' என்று அவனது முதுகில் கை வைத்து, வீட்டின் வெளியே கொண்டு விட்டாள் யுகவீணா.

அழுது வடிந்தபடியே அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு, முகத்தைச் சுளித்துக் கொண்டு, இரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் பள்ளி செல்வது போல் கடைக்குச் சென்று வந்த வனின் கைகளில், வீணா எழுதிக் கொடுத்த காய் கறிகள் மட்டுமல்ல... ரபின் என்ற ரபீந்தரநாத்திற்குப் பிடித்த ராகிப் புட்டு ஒரு பாக்கெட்டும் இருந்தது.

அவன் வருவதற்குள், ரபின் எழுந்திருந்தான். காபியும் அருந்தியாகி விட்டிருந்தது!

வேலுநாச்சியாரோ ''ரபின்... யூனிஃபார்ம் அயர்ன் பண்ணியாச்சு ராஜா...'' என்றபடி, அவனது காக்கி யூனிபார்மை எடுத்துக் கொண்டு, அறைக்குள் சென்றார்.

அவனோ, ''ஹோ தேங்க்ஸ்மா.. எனக்கு காலையில பூரி வேணுமா...'' என்றான் கொஞ்சல் குரலில்.

''அதான் ராஜா பண்ணியிருக்கு! மத்தியானம்... காலிஃபிளவர் சூப்... எண்ணெய் கத்திரிக்காய் குழம்பு... பீட்ரூட் தேங்காய் போட்டு துவட்டல்! ஓகே தானே!''

''டபுள் ஓகே! ஹோ அம்மா... என்னோட ஷூ.... பாலிஷ் பண்ணனுமே?!''

''சரி.. சரி... நீ குளிக்கப் போ! நா பாலிஷ் பண்ணி வைக்கிறேன்...'' என்றவர், காக்கி யூனிஃபார்மை

அறையில் வைத்துவிட்டு, அவனது பூட்ஸை எடுத்து பாலிஷ் போடத் துவங்கினார்.

கையில் காய் கூடையை மாட்டிக் கொண்டு, இடுப்பில் கை வைத்தபடி, புஸுபுஸுவென மூச்சு விட்டபடியே இருவரையும் முறைத்துக் கொண்டு நின்றான் விவேக்.

அதைக் கவனிக்காதது போல், ''டேய் விவேக்... வந்துட்டியா? எனக்கு இன்னைக்கு உன்னோட கார் வேணும்டா... நீ இன்னைக்கு என்னோட பைக்ல போ!'' என்றான் ரபீந்தரநாத்.

இவன் 'தரியா?' என்று கேட்கிறானா? இல்லை 'எடுத்துக்கிறேன்!' என்று தகவல் சொல்கிறானா என்று விவேக் யோசிக்கும் போதே, ''கார் கழுவி தானே இருக்கு? இல்லைன்னா... கொஞ்சம் துடைச்சு வச்சுடேன்! ப்ளீஸ் விவேக்! நான் குளிக்கப் போறேன்!'' என்று ரபின் நகர்ந்து விட,

வேலுநாச்சியாரோ, ''என்னடா இங்க நின்னு ரயில் இன்ஜின் மாதிரி மூச்சு விட்டுட்டு இருக்கே? போ... போய் காய்கறியை யுகாட்ட கொடுத்துட்டு... காரைத் துடை!'' என்று பெரிய மகனை ஏவியபடி, சின்ன மகனின் பாலிஷ் போட்ட ஷூவை எடுத்து ராக்கில் வைத்தார்.

''அம்மா... இதெல்லாம் ட்ட்ட்ட்ட்ட்ட்டூ மச்! ஒரு நாளைக்காவது என்னோட கோட்டை அயர்ன் பண்ணி யிருக்கீங்களாம்மா?'' என அவன் எகிற,

''ஆமா... அதுவே ஒரு தொம்ம கூத்தாடி கோட்டு! அதை அயர்ன் பண்ணாலும் ஒண்ணு தான்...

பண்ணலைன்னாலும் ஒரே மாதிரி தான் இருக்கும்! போடா.. போ... வேலைக்குக் கிளம்புற வழியப் பாரு!'' என்று அவனை விரட்டியபடி அவர் நகர,

வீணாவோ, காய்கறிக் கூடையைப் பிடுங்கிக் கொண்டு ஓடினாள்.

மூக்கைச் சுருக்கி, அங்கில்லாத அனைவரையும் முறைத்துவிட்டு, தன் வேலையைப் பார்க்கச் சென்றான் விவேகானந்தன்.

சரியாக, ஒன்பது மணியளவில்... உணவு மேஜையில் ரபினை பூரிகளால் குளிப்பாட்டிக் கொண்டிருந்தனர் பெண்கள் இருவரும்! ஏற்கனவே, தண்ணீரில் குளித்து விட்ட போது, எண்ணையில் குளித்த பூரிகளில் குளிப்பது ஆனந்தமாய் இருக்க, அவனும் ஆர வாரமாய் பூரிகளை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தான்.

''அவன் என்ன... மல்யுத்தத்துக்கா போறான்? பொதி மூட்டைக்கு அடைக்கிற மாதிரி அடைச்சிட்டு இருக்கீங்க? போலீஸ் வேலைக்குத் தானே சேரப் போறான்! அதுவும், ட்ரைனிங் முடிச்சு... போஸ்டிங் போட்டு.. அங்க ஜாயின் பண்ணப் போறான்! என்னவோ... முதன்முதலா ட்ரைனிங் போற மாதிரி செம பில்ட்-அப் பண்ணிட்டு இருக்கீங்க?! விடுங்க! டேய்... எழுந்திரு! இன்னும் அஞ்சு நிமிஷம் இங்க உக்காந்து இருந்தே... எனக்கு தட்டு கூட மிச்சமிருக்காது போல!'' என்று ரபினின் பின்னந்தலையில் தட்டி, அவனை எழுந்து கொள்ளச் செய்த

விவேக்கை, முறைத்துவிட்டுச் சென்றது அந்த இளம்காளை!

ஆம், அவன் காளையே தான்!

கறுப்பென்றாலும் கலையான முகம்! முறுக்கேறிய உடம்பு! திமிறிய புஜங்கள்! 'நான் போலீஸ்காரன்' என்று சொல்லாமல் சொல்லிய முறுக்கு மீசை! துளி கூட அதிக சதையில்லாத ஆஜானுபாகு உடம்பு! ஒட்ட வெட்டப்பட்ட சிகை! கண்களில் இளமையின் துள்ளல்! நடையில் வேகம்!

அதிலும், சிறு கசங்கல் கூட இல்லாத அந்தக் காக்கி யூனிஃபார்மில், ஆணழகனாய் தெரிந்தான் அவன்!

ஒன்பது பதினைந்துக்கெல்லாம், அந்தக் கட்டிளம் காளை வேலைக்குச் செல்லத் தயாராகி, அன்னையிடம் வந்து சேர்ந்தது!

''அம்மா... என்னை ஆசிர்வாதம் பண்ணுங்கம்மா!'' என அவன் பாதம் பணிய,

''நல்லபடியா போயிட்டு வா, ராஜா! நீ ஆசைப்பட்டபடி ஐ.பி.எஸ். ஆகிட்டே... அதில நிலைச்சு இருந்து நல்ல பேர் எடுக்கணும்!'' என்று ஆசிர்வாதம் செய்தார் வேலுநாச்சியார்.

அவரிடம், ஆசி வாங்கி வந்தவன், ''டேய் விவேக்... அண்ணியோட நில்லு! ஆசிர்வாதம் வாங்கணும்!'' எனக் கூற,

''ச்சே.. இதென்னடா ஃபார்மாலிட்டி! யூ ஆர் மை ஃபிரண்ட்! விஷ் யூ ஆல் தி பெஸ்ட்!'' என்று வாழ்த்தி அனுப்பினான் விவேக்.

யுகவீணாவோ, கட்டை விரலை உயர்த்தி அவனுக்கு விடை கொடுத்தாள்.

விவேக்கின் ஸ்கோடாவில் ரபீந்தரநாத், கமிஷனர் ஆபீஸ் வந்திறங்கிய போது, மணி சரியாகப் பத்து!

உள்ளுக்குள் சிறு படபடப்பாய் இருந்தபோதும், 'ரபீந்தரநாத்... ஐ.பி.எஸ்! அசிஸ்டெண்ட் கமிஷனர் ஆஃப் போலீஸ்!' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, நெஞ்சை நிமிர்த்தி, வீறு நடை போட்டு அலுவலக வாயிலைக் கடந்தான்.

அங்கே காவலுக்கு நின்ற கான்ஸ்டபிள்கள் பலர், அவனது நடையையும்... அவனது உடையையும்... அவனது முகக்களையையும் கண்டு, சல்யூட் அடித்தனர்.

அவற்றை ஒரு சிறு தலையசைவுடன் பெற்றுக் கொண்டு, கமிஷனரின் அலுவலக அறை நோக்கிச் சென்றான் அவன்.

கமிஷனர் அறையின் முன்னே நின்ற பணியாளரிடம், தனது போஸ்டிங் ஆர்டரை கொடுத்துவிட்டு, அவன் அனுமதிக்காக காத்து நின்ற நிமிடங்களில், இன்ஸ்பெக்டர்கள் சிலர் ''குட் மார்னிங் சார்!'' என்று தாமாக வந்து, அறிமுகம் செய்து கொண்டனர்.

சிறு சிரிப்புடன், அவன் நிறுத்திக் கொள்ள, ''சார்... கமிஷனர் சார் வரச் சொன்னார். போங்க!'' என்று அனுமதி கொடுத்தார், கமிஷனரின் உதவியாளர்.

''தேங்க் யூ!'' என்று விட்டு, கமிஷனர் அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றவன்,

விறைப்பாய் ஒரு சல்யூட் வைத்து, ''குட் மார்னிங் சார்!'' என்றான் கம்பீரமாய்.

''குட் மார்னிங், மிஸ்டர். ரபீந்தராத்! உக்காருங்க!'' என்று அவனுக்குத் தன் எதிரே இருந்த இருக்கையைக் காட்டியவர்,

''உங்க ரெகார்ட்ஸ் எல்லாம் பார்த்தேன்! வொண்டர்புல்! ட்ரைனிங்ல நல்ல ஸ்கோர் பண்ணியிருக்கீங்க! கீப் இட் அப்!'' என்றார்.

''தேங்க் யூ, சார்!'' என அவன் சிறு புன்னகையுடன் ஏற்றுக் கொண்டதும்,

''உங்களைப் பார்த்தா... சின்ன வயசில என்னைப் பார்த்த மாதிரியே இருக்கு! அவ்வளவு துடிப்பு!'' என்றார் பெருமையாய்.

ரபின், ஒன்றும் சொல்லாமல் அதே புன்னகையைத் தொடர்ந்திருக்க,

''ஆனா... இந்தத் துடிப்பு உருவத்தில மட்டும் தானா... இல்லை உத்யோகத்திலையும் இருக்கான்னு தெரிஞ்சுக்க வேணாமா? சோ.. இன்னைக்கே உங்களுக்கு ஒரு அசைன்மெண்ட் தரேன்! லெட்ஸ் ஸீ... ஹவ் யூ டூ இட்!'' என்றார் அவர் ஆராய்ச்சி பார்வையுடன்.

''கண்டிப்பா சார்! உங்களோட எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வேன்!'' என்றான் ரபீந்தராத் உறுதியுடன்.

''ஓகே! லெட்ஸ் ஸீ!'' என்றவர், ஒரு கோப்பை (பைல்) அவன் முன்னே போட்டார்.

"இந்த ஃபைலில... தேனியோட பிரபல ரௌடி ஆட்டோ குப்பனோட விவரமிருக்கு! அவன் மேல... இது வரைக்கும்... பன்னிரண்டு கொலை.. இரு பதுக்கும் மேல வெட்டுக்குத்து... நாலு கற்பழிப்பு... அஞ்சு கடத்தல்... கஞ்சான்னு ஏகப்பட்ட கேஸ் இருக்கு! அவனை... ஒரு தடவை அரெஸ்ட் கூட பண்ணிட்டோம்! ஆனா... அரசியல் செல்வாக்கில ஜாமீன்ல வெளிய வந்தவன், அதுக்கு அப்புறம் தலைமறைவாகிட்டான்! நாங்களும்... நிறைய இடத்தில் தேடிட்டோம்! இன்னைக்கு... மார்க்கெட்ல ஒரு கடையில ஒரு டீலிங் முடிக்க வரதா தகவல் வந்திருக்கு! நீங்க... அங்க போய்.. அவனை என்கவுண்டர்ல போட்டுத் தள்ளுறீங்க! அதான்... உங்களுக்கு நான் தர... முதல் அசைன்மெண்ட்!" என்றார் அவர் தீவிரத்துடன்.

ரபின் ஒரு வினாடி கூட யோசிக்கவில்லை!

அவர் கொடுத்த கோப்பை எடுத்துப் புரட்டியவன், இருக்கையை விட்டு எழுந்தான்!

"இந்த நாய்.. செத்துட்டான்ங்கிற நியூசோட தான் சார் உங்களை நான் மீட் பண்ணுவேன்!" என நிமிர்வுடன் கூறியவன், நகர முற்படவும்,

"ஹெல்ப்க்கு ஒரு போலீஸ் ஃபோர்ஸ் எடுத்துக்கோங்க ரபின்!" என்றவர், இன்டர்காமில் யாரையோ அழைத்து, உள்ளே வரச் செய்தார்.

"ரபின்! இவர் பேர்... நாகராஜன்! இவரோட... இன்னும் அஞ்சு கான்ஸ்டபிள்ஸையும் கூட்டிக்கோங்க!

ஆல் தி பெஸ்ட்!" என விடை கொடுத்து அனுப்பினார்.

"தேங்க்ஸ் சார்!" என்ற ரபின், அந்த ஆட்டோ குப்பனைப் பற்றிய தகவல்களைப் புரட்டியபடியே வர,

நாகராஜனோ "சார்... இவன் ரொம்ப பயங்கர மானவன் சார்... ஏகப்பட்ட ஆள் பலம் வேற... புது விதமான துப்பாக்கி எல்லாம் வச்சிருக்கான் சார்... நீங்க ஏன் சார் முதல் நாளே இதில சிக்கிக்கறீங்க?" என எச்சரிக்க,

"உங்களுக்கு பயமா இருந்தா... நீங்க வர வேணாம், மிஸ்டர். நாகராஜன்! நான் பார்த்துக்கிறேன்! எனக்கு ஒரு வண்டியும்.. மார்க்கெட் ஏரியா தெரிஞ்ச ஒரு ஆளையும் மட்டும் ஏற்பாடு பண்ணுங்க!" என்றான் கறாராய்.

அதே பிடிவாதத்துடன், தனது காக்கி உடையைக் களைந்து விட்டு, மஃப்டிக்கு மாறியவன், ஒரு காவலரின் புல்லட்டில் அவர் பின்னே அமர்ந்தபடி மார்க்கெட் நோக்கி விரைந்தான்.

"இதான் சார்.. ஏரியா! நமக்கு வந்த தகவல்படி... அந்த தேங்கா கடைக்கும்... பூக்கடைக்கும் நடுல இருக்க... குட்டி சந்தில... மூணாவது வீட்டில தான்... டீலிங் நடக்கிறதா உறுதியாகியிருக்கு!" என அவர் சொல்ல,

"ஓகே! நான் பார்த்துக்கிறேன்!" என்றவன், பாக்கெட்டில் இருந்த பிஸ்டலை எடுத்து, சாக்ஸில்

மறைத்துக் கொண்டு, அந்த இடம் நோக்கி, இலகு வாக நடக்கத் தொடங்கினான்.

யாருக்கும் சந்தேகம் வராதபடி, தேங்காய் கடை யில் தேங்காய்க்கு விலை கேட்டவன், மெல்ல பக்கத்து சந்தில் நுழைந்தான்!

நாலா பக்கமும் பார்வையைச் சுழற்றியபடி, நிதான மாய் நடந்தவன், இரண்டாம் வீட்டை அடைந்ததும், நடையின் வேகத்தைக் குறைத்து, சுவற்றோடு ஒன்றிக் கொண்டான்.

தலையை நன்றாக பின்னால் சாய்த்து, மூன்றாம் வீட்டு மூடிய ஜன்னல் வழியே கசிந்த சிறு பேச்சு சத்தத்தைக் கூர்ந்து கவனித்தான்.

சற்று நேரம், அவனால் எதையுமே புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனாலும், மனம் தளராமல் காதுகளைத் தீட்டி, கவனத்தை ஒன்று திரட்டி, மூன்றாம் வீட்டிலிருந்து வந்த ஒலி அலைகளை, வார்த்தைகளாக மாற்ற முயற்சி செய்தான்.

அதில் "குப்பா... அந்தப் புலிபாண்டி ரொம்ப பிரச் சனை பண்றான்... எப்படியாவது அவனைப் போட் டுடு! உனக்கு எவ்வளவு வேணுமோ... நான் தரேன்.." என ஒரு குரல் கேட்க,

அதற்கு எதிரொலியாய் "பணமெல்லாம் வேணாம்ய்யா! ஒன் செல்வாக்க வச்சு... என்னைய கேசில இருந்து வெளிய கொண்டு வாய்யா! இப்படி...

ஒளிஞ்சு மறைஞ்சு வாழ முடியல!" என இன்னொரு குரலும் கேட்டது!

'ஆஹா! எலி சிக்கிடுச்சு! இவன் தான் குப்பன்!' என்று மனம் முடிவு செய்துவிட, கைகள் காலில் மறைத்து வைத்த துப்பாக்கியை எடுத்தது!

அடுத்த நொடி, அந்த ஜன்னலின் தாளை அவனது துப்பாக்கியின் ஒரு குண்டு பதம் பார்க்க,


பழைய காலத்து ஜன்னல், விசாலமாய் திறந்து கொண்டு, உள்ளே இருந்த குப்பனை பதறி ஓட வைத்தது!

அவன் தப்பிக்க முயற்சி செய்வது தெரிந்ததும், ரபினின் பிஸ்டல் அவனைக் குறி பார்த்தது!

"டூமீல்!"

"டேய்... ரபின் எரும! மணி ஒன்பதாகப் போவுது! இன்னும் என்னடா தூக்கம்!? எழுந்திரு! முதன் முதலா... வேலையில ஜாயின் பண்ணப் போறோமேன்னு சின்ன பயம் கூட இல்லாம!!!!" என்று அவனை எட்டி உதைத்துக் கொண்டிருந்தான் விவேகானந்தன்! (அடக்கடவுளே... பயபுள்ள கனவு கண்டிருக்கு!! நாந்தேன் தெரியாத்தனமா ஏக பில்ட்-அப் கொடுத் திட்டேனோ!?)

2



"டேய் ஸ்டெத்து... ஒன்பது மணி ஆகிடுச்சா? எழுப்பி விட வேண்டியது தானே?" என்று வாரிச்

சுருட்டிக் கொண்டு எழுந்தான் ரபின் என்றழைக் கப்படும் ரபீந்தரநாத்.

"நானே மேரி மாதா பாக்காத நேரமா பாத்து வந்து எழுப்புறேன்... இவன் வேற... சீக்கிரம் கிளம்புடா..." என்று அவனைக் குளியலறைக்குள் தள்ளிவிட்டான் விவேக் என்று அழைக்கப்படும் விவேகானந்தன்.

"அய்யயோ! மேரி மாதா... காளி மாதாவா மாறி டுச்சா? இன்னைக்கு சாப்பாட்டில கை வச்சிருமே!" என்று அலறிக் கொண்டே, அவன் தண்ணீரைத் திறந்து விட,

"வேலைக்கு லேட் ஆச்சேன்னு கவலை இல்ல... சாப்பாடு காலாவதி ஆகிடுமேன்னு தான் கவலை! உன்னையெல்லாம்... எவன் தான் ஐ.பி.எஸ்ஸா செலக்ட் பண்ணானோ?! ச்சே... போடா!" என்று தன் அருமைச் சகோதரனைத் திட்டியபடி, அவனது பீரோவைத் திறந்து, அவனது காக்கி உடையை எடுத்து வைத் தான்.

அதற்குள், "விவேக்... அங்க என்ன செய்றே? அவனை எழுப்பக் கூடாதுன்னு சொன்னேனா இல்லையா?" என்று ஓர் அதிகாரக் குரல் வெளியே இருந்து கேட்டது!

அதில் அதிர்ந்தவனாய் "இல்ல ம்மா... நா எழுப்பல... அவனே தான் எழுந்தான்..." என்று அடித்துப் பிடித்து வெளியே ஓடி வந்தான் விவேக்.

ரபினின் அறை வாயிலில் நின்றிருந்த வேலு நாச்சியார், வெளியே ஓடி வந்த மூத்த மகனைத் தன் முறைப்பால் அரணிட்டு நிறுத்தினார்.

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியும்டா... அத விட... அவனைப் பத்தி எனக்கு நல்லாவே தெரி யும்!" என அவர் கோபம் கொண்டதும்,

சில வினாடி நேரம் மட்டுமே, விவேக் என்ன சொல்வது என்று தெரியாமல் நின்றிருந்தான்.

திரு திருவென சற்று நேரம் முழித்ததை ஈடு கட்டு வது போல், வேகமாய் ஓடி வந்து, தாயின் இரு கன் னங்களையும் இரு கைகளாலும் பிடித்து இப்படியும் அப்படியுமாய் ஆட்டியவன், "எங்க ரெண்டு பேரைப் பத்தியும் இன்ச் பை இன்ச்சா தெரிஞ்ச நீங்களே... இப்படி பேசினா எப்படி மேரி மாதா? கூல் இட்!" எனக் கூறிவிட்டு, எட்டுக் கால் பாய்ச்சலில் அங் கிருந்து ஓடியே போனான்!

"அடி! என்னை மேரி மாதான்னு கூப்பிடாதேன்னு எத்தனை வாட்டி சொல்றது?" எனக் கத்தியபடியே, பெரிய மகனைத் துரத்திக் கொண்டு ஓடினார் அவர், சிறு பிள்ளையென!

"மேரி மாதா பிடிக்கலைன்னா சொல்லுங்க மேரி மாதா... காளிமாதான்னு கூப்பிடுறோம்!" என்று பின்னாலிருந்து ஒரு குரல் கேட்க,

தன் ஓட்டத்தை நிறுத்தி, தன் பின்னே நின்றிருந்த சின்ன மகனைப் பார்த்து முறைத்தவர், "உன்னைத் தான்டா செம மொத்து மொத்தணும்! முதல் நாள் வேலைக்குப் போறோமே... அதுவும் பொறுப்புள்ள ஒரு போலீஸ் அதிகாரியா அப்பாயிண்ட் ஆகுறோ மேன்னு கொஞ்சம் கூட பயமே இல்லாம... அப்படி

என்னடா தூக்கம் வேண்டிக் கிடக்கு?'' என்றார் கோபமாய்.

''என்ன மேரி செய்றது... சாரி என்ன காளி செய்றது? நேத்து நைட்... இந்த ஸ்டெத் பையன்... நாளைக்கு வேலைக்குப் போறே இல்ல... பார்ட்டி கொடுடான்னு ஒரே நச்சு பண்ணிட்டான்... அதான் ஒரு பாச்சுலர் பார்ட்டியைப் போட்டு... தலைவர் படம் ஒண்ணைப் பார்த்துட்டு... வீட்டு கேட்டை ஏறிக் குதிச்சு உள்ள வரையில மணி ஒண்ணு! அதுக்கு அப்புறம், யுகா காலில கையில விழுந்து கொஞ்சம் சோறை வாங்கி உள்ள தள்ளிட்டு... படுக்கும்போது மணி ரெண்டு! அதான் லேட் ஆகிடுச்சு!'' என்று நீளமாய் பேசி, தன்னை மட்டுமல்லாமல் தன் அண்ணனையும் கூடவே அண்ணியையும் சேர்த்தே போட்டுக் கொடுத்தான் ரபின்!

''என்னது?!!!!!!'' - வேலுநாச்சியார் நிஜமான காளி அவதாரம் எடுத்தார்.

''ஹய்யோ!!! ஏற்கனவே ஊ...ஊன்னு ஊத்திட்டு இருந்த சங்கை... ஏன்டா... லபோ... திபோன்னு ஊத வைக்கிறே?! கெரகம் பிடிச்சவனே! வாடா... வந்து சாப்பிட்டுத் தொலை!'' - தாயின் பின்னே நின்றிருந்த விவேக், முன்னே கையை நீட்டி, தம்பியை இழுத்தான்.

''விவேக்... ரபின்... நில்லுங்க! என்ன நடக்குது?'' என்று வேலுநாச்சியார் கண்டிப்புடன் கேட்டதும்,

ரபினோ ''என்ன நடக்குது இல்லம்மா... என்ன நடந்ததுன்னு கேட்கணும்!'' என்று பாடம் நடத்தினான்.

நாச்சியார் பல்லைக் கடிக்கும் போதே, ''அவன் சும்மா உளறுறான்ம்மா... நேத்து நைட் படம் பார்த்திட்டு லேட்டா வந்தோம்! அவ்வளவுதான்! தண்ணியெல்லாம் அடிக்கலை! ப்ராமிஸ்! நீங்க வேணும்னா வீணாவைக் கேளுங்க!'' என்றான் விவேக், தாயை நேராய் பார்த்து!

அவனது பார்வையே, அவன் சொல்வது உண்மை என்று சொல்லிவிட்டபோதும், ''உம் பொண்டாட்டி தானே? உனக்கு எதிரா சாட்சி சொல்லிட்டா... அவளால மூச்சே விட முடியாது! போடா போ... நல்ல ஆளா பார்த்துத் தான் பஞ்சாயத்துக்குக் கூப்பிடுறே!'' என்று சலித்துக் கொண்டவரின் முகத்தில் பெரு மிதமே தவழ்ந்தது.

விவேக்கின் முகத்திலும் அப்படியொரு பூரிப்பு!

அதைக் கண்டு கொள்ளாதவர் போல், ''பொண்டாட்டியோட சினிமாக்குப் போறதை விட்டுட்டு... இந்தத் தடியனோட என்னாட சினிமா வேண்டிக் கிடக்கு? அதுவும் செகண்ட் ஷோ சினிமா?'' என்றார் கண்டிப்புடன்.

''அவள எப்படி...'' என்று விவேக் பதில் சொல்லும் முன்னர்,

''அம்மா... இதெல்லாம் டூ மச்! எனக்கு ஒரு கல்யாணம் பண்ணி வச்சிருந்தா... நான் ஏன் இந்த தயிர் சாதத்தோட சினிமாக்குப் போறேன்! அதை விட்டுட்டு... என்னைத் தடியான்னு திட்டுறீங்க!'' என்று ஒரு விரல் நீட்டி மிரட்டினான் ரபின்.

"முதல்ல.. வேலைக்குப் போய்... நாலு காசு சம் பாதிக்கிற வழியைப் பாருடா! அதுக்கு அப்புறம்... இந்த மூஞ்சிக்கு எவனாவது பொண்ணு தர ஒத்துக் கிட்டான்னா... கல்யாணத்தைப் பத்திப் பார்க்கலாம்!" என்றார் வேலுநாச்சியார் கேலியாக. (பாயிண்ட்!)

விவேக் அடக்க மாட்டாமல் சிரிக்க, சீனாக்காரன் போல் இரு கண்களையும் முடிந்தளவுக்கு சுருக்கி, "இந்த அவமானம் உனக்குத் தேவையா?" என்ற ரபினின் ஆட்காட்டி விரல், அவனை நோக்கி இருக்க வில்லை!

மாறாய், வேலுநாச்சியாரை நோக்கி இருந்தது! (அட்ரா... சக்கை! அட்ரா சக்கை!)

"டேய்... என்ன கொழுப்பா?" என்றபடியே, தன் முன்னே நீட்டப்பட்டிருந்த மகனின் விரலை அவர் பிடிக்க,

"அப்புறம்... ரபின் அப்படியே அவங்க அம்மா மாதிரியே இருக்கான்னு எல்லாரும் சொல்லும்போது... உங்க பல்லு ஏன் வாயை விட்டு வெளிய வந்து சிரிக்குது? சொல்லுங்க மேரி மாதா! சொல்லுங்க! எனக்குத் தெரிஞ்சாகணும்!" என்றான் ரபின், தீவிர மாய்.

அதற்கு பதில் சொல்ல முடியாமல், சிரிப்பு அவரைக் கட்டிப் போட்டது!

இருந்தாலும், மகன் முன்னே தன் கெத்தை விட்டுக் கொடுக்காமல், "போடா வெட்டிப் பயலே! போய்...

சாப்பிட்டு வேலைக்குக் கிளம்புற வழியைப் பாரு!" என அவனது கையை விடுவித்தார்.

"ஹிஹிஹி! ஹஹஹ! ஹோஹஒஹோ!" என்று வெவ்வேறு விதமாய் சிரித்தபடி, உணவு மேஜைக்கு அவன் சென்றபோது, அங்கே காலை உணவாய் பூரி தயாராய் இருந்தது!

"ஹையா பூரியா?" என்று ரபின் குதிக்க,

"ஆளுக்கு ரெண்டு பூரி... அப்புறம் ராகி கூழ்!" என்று அறிவித்தார் வேலுநாச்சியார்.

"ஹுக்கும்!!!" என்று மூக்கைச் சுருக்கித் தன் அதிருப்தியை காட்டியபடியே உணவு மேஜையில் அமர்ந்தவன், தன் முன்னே இருந்த தட்டில் யுகவீணா ஒரே நேரத்தில் நாலு பூரியை வைக்கவும், அக மகிழ்ந்து போனான்.

"யுகா... நீ தான் அவனைக் கெடுக்கிறதே! ரெண்டு பூரி போதும்!" என்று வேலுநாச்சியார் சொல்லும் போதே,

ரபினின் தட்டில் இரண்டு பூரிகள் தான் இருந்தன! மீதி இரண்டைத் தான் லபக்கி இருந்தானே!

"ரெண்டு தான் மேரி மாதா இருக்கு! சும்மா... யுகா பேபியைத் திட்டாதீங்க!" என அவன் பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல,

"என்னை மேரி மாதான்னு கூப்பிடாதடா! ராணி வேலுநாச்சியாரோட நினைவு நாளான டிசம்பர் (25) இருபத்தியஞ்சாம் தேதி பிறந்தேன்னு எங்கப்பா அழகா வேலுநாச்சியாருன்னு பேரு வச்சா... நீங்க

ரெண்டு பேரும் ஏன்டா இப்படிக் கொலை பண்றீங்க?'' என்று ஆதங்கப்பட்டார் நாச்சியார்.

''என்னம்மா செய்றது... எங்களுக்கு டிசம்பர் 25-ன்னா கிறிஸ்துமஸ் தான் ஞாபகம் வருது!'' என்று ரபின் வருத்தம் கொள்ள,

''அப்படியே இருந்தாலும்... ஜீசசோட நினைவு நாள் தானேடா அது?!'' என வேலு கேட்க,

''அதான்மா... அவரோட நினைவா... அவரு அம்மா பேரை வச்சு உங்களைக் கூப்பிடுறோம்!'' என்று சந்தோஷமாய் முடித்தான், விவேக்.

இரு மகன்களும் ஹை-ஃபை கொடுத்துக் கொள்ள, ''ஹய்யோ! நீங்களும் உங்க விளக்கமும்!'' என்று தலையில் அடித்துக் கொண்ட நாச்சியாரைப் பார்த்து சிரித்தாள் யுகவீணா.

''உனக்கும் என்னைப் பார்த்தா கேலியா இருக்காக்கும்?'' என்றபோதும், குரலில் சிரிப்பே இருக்க,

''சரி... போகுது! மேரின்னாவது கூப்பிடுங்கடா... ஜீசசோட அம்மா பேரா இருந்திட்டுப் போவுது! இதென்ன மேரி மாதா!'' என்றார் வேலு கெஞ்சுதலாய்.

''ஹஹஹஹ!'' என்ற விவேக் சிரிக்க,

''என்னம்மா... இளமை திரும்புதா?!!!'' என்று கிண்டல் செய்தான் ரபின்.

''ச்சீ போ!'' என்று கையை அசைத்து, அவனது கேலியை ஒதுக்கியவள், ஒரு குட்டி ராஜ்யத்தையே கட்டி ஆள்கிறார் என்றால் யாரும் நம்பக் கூட மாட்டார்கள்.

வீர மங்கை வேலுநாச்சியாரின் நினைவாய், 'வேலு நாச்சியார்' என்று பெயரிட்ட அவரது தந்தை, அந்த வீரத் தாயைப் போல வீரத்தை ஊட்டியே வளர்த்திருந்தார்.

அந்தக் காலத்திலேயே, தேனியின் பின்தங்கிய கிராமங்களில் இருந்து முதன் முதலாய் பள்ளி படிப்பை முடித்து, கல்லூரியில் B.A (Tamil Literature) படித்தவர் வேலுநாச்சியார்.

திருமணம் செய்ததும்... முற்போக்கு வாதியான சங்கரனை என்பதால், அந்தக் காலத்திலேயே குடும்பத் தொழிலை எடுத்து நடத்தும் திறமை பெற்றவராய் விளங்கினார்.

தந்தைக்கு ஒரே மகள் என்பதால், பிறந்த வீட்டு சொத்துக்களும் அவர் கண்காணிப்பின் கீழே வர, சிறு வயதிலேயே கணவன் தவறிவிட்டதால் கணவரது முழு சொத்தும் வேலுநாச்சியாரின் பொறுப்பில் வந்தது!

காடு... மேடு... வயல்... வரப்பு... தோப்பு என நில புலன்களும், சணல் தொழிற்சாலையும் என சொத்துக்களை அவர் பெருக்கினாரே ஒழிய, அழிக்கவில்லை!

சொத்துக்களின் எண்ணிக்கை கூடிய அதே நேரத்தில், புண்ணியத்தின் அளவையும் ஏற்றிக் கொண்டே சென்றார் வேலுநாச்சியார்.

ஆதரவற்ற பெண்களுக்கு வேலை கொடுப்பது, குடியால் அழிந்த குடும்பத்தாரின் பிள்ளைகளைப் படிக்க வைப்பது, வயதானோருக்கு இருக்க இடமும்...

உண்ண உணவும் கொடுப்பது என்று அவரது சேவை ஓங்கி வளர்ந்தது!

அந்தச் சேவை எண்ணத்தாலோ... இல்லை சமூகத்தின் மீது கொண்ட அக்கறையினாலோ, தன் இரு மகன்களையும் சமுதாயத்திற்கு தொண்டாற்றும் பதவிகளில் இருத்தி வைக்க ஆசை கொண்டார் வேலுநாச்சியார்.

அவரது ஆசைப்படி, மூத்தவன் எலும்பு முறிவு மருத்துவனாய் பணியில் அமர, அடுத்த மகன் அரசாங்கச் சேவைக்கான தேர்வெழுதி காவல் துறை உயரதிகாரியாய் பொறுப்பேற்கப் போகிறான்! பெயரைப் போலவே, வேலுநாச்சியார் செயலிலும் சொல்லிலும் சற்றே கடினம் மிக்கவர்தாம்!

ஆனால், அவரது கடினம் மகன்களிடம் கடலை மிட்டாய் போல் கரைந்து போய்விடும்! அதிலும், சின்னவன்!?!! ஹப்பப்பா! ஊர் பட்ட வாய்!

அவரது எண்ணங்களின் நாயகன், தன் 'வாயை' நிரூபிக்க, மீண்டும் பேசினான்!

''ஹ்ஹஹா! சொல்ல மறந்துட்டேனே... இன்னைக்கு ஒரு கனவு!'' என்று வாயில் ராகிக் கூழை ஊற்றியபடியே அவன் பேச,

விவேக்கும் யுகவீணாவும் அவனையே பார்த்திருந்தனர்! ஆர்வமாய்!

சின்ன விஷயத்தைக் கூட, சுவாரஸ்யம் கலந்து... அலுக்காமல் அறுக்காமல் சொல்வதில் அவன்

மன்னன் என்பதால், வேலுநாச்சியாரும் சிறு ஆர்வத்துடன் அவனைப் பார்த்திருந்தார்.

''அதில முதல் காமெடி என்ன தெரியுமா? நம்ம வீட்டில... சாம்பிராணி வாசனை ஊரைக் கூட்டுது! மணி சத்தம் காதைப் பிளக்குது! அதை விட... நம்ம மேரி மாதா சுலோகம் சொல்றாங்க!'' என அவன் கண்ணை உருட்டிக் கூற,

கேட்டிருந்த அனைவருமே (நாச்சியார் உட்பட) வாய் விட்டுச் சிரித்தனர்!

ஆம், முற்போக்கு வாதியான சங்கரன் ஆத்திகரும் கூட! அவரைப் பின்பற்றி ''செய்யும் தொழிலே தெய்வம்! தானமும் தர்மமுமே அறம்!'' என்ற கொள்கையுடன் வாழ்பவர் நாச்சியார்.

'சாமிக்கு வைர மாலையும்... கூடை கூடையா பூவும் கொட்டுறதுக்கு பதிலா, ரெண்டு ஏழைக்கு வேலையும்... கஷ்டப்படுற குடும்பத்துக்குப் படிப்பும்... பசிச்ச வயித்துக்கு சோறும் போட்டாலே புண்ணியம் சேரும்!' என்ற எண்ணத்தை செயல் படுத்தி வாழ்ந்தனர் சங்கரன்-நாச்சியார் தம்பதியர்.

அதனாலேயே, வீட்டில் மணி சத்தமும்... சாம்பிராணி வாசனையும் என்றதும், வாய் விட்டுச் சிரித்தனர் அனைவரும்!

ஆனால், யுகவீணா வீட்டு மருமகளாய் வந்த பின்னர், பூஜையறையே இல்லாமல் இருந்த அந்த வீட்டில் சின்னதாய் ஓர் பூஜையறை முளைத்தது!

பூஜை... புனஸ்காரம் என்று பெரிதாய் நடக்காவிட்டாலும், யுகவீணாவின் பக்தியை நாச்சியார் தட்டிப் பேசியதில்லை.

அதை மனதில் வைத்துக் கொண்டு, ''ரொம்ப பேசாதடா! என்னமோ... வீட்டில சாமியே கும்பிடாத மாதிரி!'' என்று நாச்சியார், மருமகளை மனதில் வைத்துக் கொண்டு பேச,

''அம்மா!! கனவில... நீங்க சுலோகம் சொன்னீங்கம்மா... அதுவும் சமஸ்கிரத சுலோகம்! நம்ம யுகா பேபி சொல்லல!'' என்று சிரித்தான் சின்னவன்!

''போடா வெட்டிப்பயலே!'' என்பதைத் தவிர, ரபினின் கேலிக்கு வேறு பதில் கூற முடியவில்லை நாச்சியாரால்.

''ஹே... கனவில அடுத்த காமெடி என்ன தெரியுமா? நம்ம மேரி மாதா... எனக்கு பெட் காபி கொடுத்தாங்க!'' என்று கண்ணை உருட்டினான் அவன், நக்கலாய்.

மீண்டும் கொல்லென்று ஓர் சிரிப்பு!

அந்த வீட்டில் 'காபி... டீ'க்கு எப்போதுமே தடா! வெறுமனே பால் அல்லது கம்மங்கூழ் தான் திரவ பானமே!

அப்படியிருக்கையில், 'காபி... அதுவும் பெட் காபி!' என்றால் சிரிப்பு வராதா என்ன?

''வேற என்னடா காமெடி பண்ணே?'' என்று விவேக் சிரிக்க,

''உன்னைத் தான்டா நிறைய டேமேஜ் பண்ணேன்... வேற ஒண்ணும் பெருசா பண்ணலை!'' என்று தோளைக் குலுக்கினான் ரபின்.

''அதான்... முழிச்சிருக்கும் போதே செய்வியே?! அதையே கனவிலையும் செஞ்சியா?!'' என முகத்தைச் சுருக்கினான் விவேக்.

''நா என்ன மேன் செய்யட்டும்... கனவை டைரக்ட் பண்ணவங்ககிட்ட போய் கேளு! என் கையில ஒண்ணுமே இல்லை!'' என விட்டேற்றியாய் சொன்னவன்,

''ஹே ஒரு முக்கியமான விஷயம்... வேலைக்குப் போகும்போது.. உன் காலிலையும் இந்த பொடுசு காலிலையும் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினேன்டா... என்ன ஒரு கொடுமை பாரேன்!'' என்றவன், அருகே நின்ற யுகாவின் தலையில் லேசாய் குட்டிவிட்டு, கை கழுவ எழுந்து சென்றான்.

''ம்ம்ம்ம்ம்ம்ம்'' என்று யுகா சிணுங்க,

சட்டென கோபம் கொண்ட விவேக், ''டேய்... எருமை! அவளை ஏன்டா அடிக்கிறே? பாவம்... வலிக்கும்!'' என எரிச்சலாய் மொழிந்த கையோடு, வேகமாய் எழுந்து வந்து மனைவியின் தலையைத் தடவி விட்டான்.

''நேத்து தான்... கதவுல முட்டிக்கிட்டா... இப்ப அதே இடத்தில கொட்டுறே?! ப்ச்... வலிக்குதாடா!'' எனத் தம்பியைத் திட்டியபடியே, வீணாவிடம் வினவினான்.

''ம்ஹூம்! வலிக்கலை!'' என்று சிரித்தவள், அவன் தோளோடு ஒன்றிக் கொள்ள, உணவு மேசை மாநாடு கலைந்தது! ஒரு வழியாக.

ரபின் வேலைக்குக் கிளம்பிச் செல்லும் நேரமும் வந்தது!

தாயிடம் வந்து ''என்னை ஆசிர்வாதம் செய்ங்க ராணி வேலுநாச்சியாரே!'' எனக் காலில் விழுந்து ஆசி பெற்று கொண்டான் ரபின்.

''அங்க இருக்கவங்களையும் பேசியே எரிச்சல் படுத்தாம... ஒழுங்கா வேலை பாரு!'' என்று ஆசி கூறினார் தாயார். (இதுவன்றோ வாழ்த்து!)

''வேவேவ்வே!'' என்று சிறு பிள்ளை போல் அவருக்கு அழகு காட்டிவிட்டு, அண்ணனிடம் வந்தவன், ''ஸ்டெத்து... உன் துதிக்கையால் என்னை வாழ்த்தி அனுப்பு!'' என்றான் சிரிப்புடன். பிள்ளை யார் பிரம்மச்சாரியன்றோ!?

''என்னோட ஸ்டெத்ஸ்கோப் உனக்கு துதிக்கையா?! அடிங்க!'' - தம்பியை அடித்த போதும், ''ஆல் தி பெஸ்ட், ரபின்! இந்த வேலை... உனக்கு பிடிச்ச மாதிரியா இருக்கட்டும்!'' என்றான் அவனை அணைத்த படி.

''தேங்க்ஸ் மேன்!'' என்றவனுக்கு, அனைவரது வாழ்த்தையும் விட யுகவீணா கட்டை விரலை உயர்த்திக் காட்டியது யானை பலத்தைக் கொடுத்தது!

தனது ராயல் என்ஃபீல்ட்டில் கமிஷனர் அலுவல கத்திற்கு செல்லும் வழியாவும், கனவில் தான் செய்த

என்கவுன்ட்டரே மனதையும் மூளையையும் நிரப் பியது!

'ஹஹஹா! ஐ.பி.எஸ் காடெர் கிடைச்சதும்... மூன்று முகத்தில் இருந்து... சிங்கம் 2 வரைக்கும் எல்லா படத்தையும் போட்டு பார்த்து ரொம்பக் கெட்டுப் போயிட்டேடா ராஸ்கல்!'

'எடுத்ததும்... உனக்கு என்கவுண்ட்டர் கேஸ் கொடுப்பாங்களாக்கும்! ரொம்பத் தான் நினைப்பு! நினைப்பு பொழப்பை கெடுக்காம பார்த்துக்கடா!' (அந்தளவுக்கு அறிவிருந்தா போதும்!)

எண்ணங்களின் முடிவில், கமிஷனர் அலுவலகம் வந்திருக்க, தனது போஸ்டிங் ஆர்டரை எடுத்துக் கொண்டு, எஸ்.பியை சந்தித்தான் ரபின்.

அவரது அறைக்குள் அனுமதி வாங்கிக் கொண்டு சென்றவன், விறைப்பாய் ஓர் சல்யூட் வைத்து ''குட் மார்னிங் சார்!'' எனக் கூறவும்,

''ஹோ! மிஸ்டர். ரபீந்தரநாத்! வெல்கம்!'' என்று நல்ல முறையாகவே வரவேற்றார் அவர்.

சில பல அறிமுகங்களுக்குப் பின்னர், ''தேனி மாவட்டத்தில... போடி... ஆண்டிப்பட்டி... பெரிய குளம்ன்னு நிறைய பெரிய ஊரு இருக்கு... ரபின்! உங்களை... போடி சைடுக்கு இன்சார்ஜா போட லாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்... இப்ப அதைப் பார்த்துட்டு இருக்க தங்கபாண்டியன்கிட்ட அந்த ஏரியாவைப் பத்தி இன் அண்ட் அவுட் கேட்டுக்


கோங்க! கொஞ்சம் கொஞ்சமா... பொறுப்புகளை உங்க கைக்கு மாத்தி விடுறேன்!'' என்று அவனுக்கான வேலையைப் பிரித்துக் கொடுத்தவர், தங்க பாண்டியனை அலைப்பேசியில் அழைத்து, ரபினை அறிமுகம் செய்து வைத்தார்.

''ஓகே சார்! நான்... அங்க நடக்கிற முக்கியமான வழக்குகள் பத்தி அவர்ட்ட கேட்டுக்கிறேன்...'' என்று அவன் விடைபெற்று, வந்த பத்து நிமிடத்திலேயே,

''சார்... உங்களை எஸ்.பி. கூப்பிடுறாங்க!'' என்று ஆள் வந்தது.

அவன் அங்கே விரையவும், ''கண்டமனூர்ல ஏதோ ஜாதித் தகராறுல எவனையோ வெட்டிட்டானுங்களாம்! நீங்க உடனே ஸ்பாட்க்கு போய்... சிசசு வேஷனை கன்ட்ரோலுக்கு கொண்டு வாங்க!'' என அவனுக்கான முதல் வேலையை நியமித்து, கண்டமனூர் நோக்கி அவனை விரையச் செய்தார்!

3



ரபின், ஆணை பிறப்பிக்கப்பட்ட முப்பதாவது நிமிடம் கண்டமனூர் கிராமத்தில் இருந்தான்.

நாலு கான்ஸ்டபிள், ஒரு ஓட்டுனர் என நால் வரும், அவனுமாய் சேர்த்து ஐந்தே பேர்!

வண்டியில் ஏறும் முன்னர், உடன் வரும் காவலாளிகளின் பெயர் மற்றும் கைப்பேசி எண்ணை தெரிந்து கொண்டான் ரபின்.

அங்கே செல்லும் வரை, வண்டியில் அவ்வளவாய் பேச்சே இல்லை!

மற்றவர்கள் ஏன் பேசவில்லை என்று அவனுக்குத் தெரியவில்லை! ஆனால், அவனது மௌனத்திற்குக் காரணம் - அந்தக் கலவரத்திற்கான காரணம்! ஜாதி!!

'இந்த ஜாதியில் என்ன தான் கண்டான்களோ?' என்றெண்ணியபடியே அவன் பயணத்தை முடிக்க,

அங்கே அவன் கண்ட காட்சி, மூச்சை நிறுத்தியது!

கிட்டத்தட்ட அறுபது எழுபது பேர் கூடியிருந்தனர்! கூடியிருந்தனர் என்று சொல்வதை விடவும் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்!

கையில் வேற்கம்பு... வீச்சரிவாள்... அரிவாள் மனை... கடப்பாரை... மண்வெட்டி... தொரட்டி கம்பு என்று ஏகப்பட்ட ஆயுதங்கள்!

''ஏய்...''

''ஊஈஇ...''

''மவனே! ஒன்னைய கொல்லாம விட மாட்டேன்டி!''

''ஆஅ.... மண்டையை ஒடைச்சுட்டானே! பாவி!''

''எம் பங்காளியவா வெட்டினே? மவனே... ஒன் சங்கை அறுக்கல...''

''வெக்கங்கெட்ட **** ஜாதி நாய்களா? எங்கட்டவே எகிறிப் பாக்கீகளோ?!''

"யாருவே வெக்கங்கெட்டவன்... பன்னிப் பாலை குடிக்க நீங்க தேன் பக்கிப் பயலுக!"

"எங்களையவா பக்கிங்கிற... வெட்டுடா அவன..."

- ஊரெங்கும் இப்படியாய் ஏகப்பட்ட ஓலங்கள்!

வண்டியை விட்டு இறங்கியதும், கான்ஸ்டபிள்கள் வண்டி அருகிலேயே தயங்கி நிற்க,

"என்ன ராமானுஜம்... வாங்க..." என்றான் ரபின், அங்கிருந்த காவலாளிகளிலேயே பெரியவரான ஒருவரிடம்.

"இல்ல சார்... கொஞ்சம் மெதுவா போவலாம்... அவனுங்க எல்லாரும் கொலைவெறில இருக்கானுங்க... அவனுங்க ஆளுங்களுக்குள்ளேயே அவனுங்களுக்கு வித்தியாசம் தெரியாது... இப்ப... நாம போனா வேணும்னே எதுனா வில்லங்கம் செய்வானுங்க சார்! மொத்தமா அடிச்சிக்கிட்டு... சாவட்டும்! மெதுவா போகலாம், சார்! இப்பப் போனாலும்... அடங்கக் கிடங்க மாட்டாய்ங்க சார்!" என்றார் அவர், விளக்கமாய்.

மற்ற அனைவருக்குமே, அவரது கருத்தில் உடன்பாடு இருப்பது அவரவர் முக பாவத்திலிருந்தே புரிய, அவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "சரி... உங்க பிஸ்டலை என்கிட்டே கொடுங்க..." என்று பெரியவரிடம் கேட்டான் ரபீந்தரநாத்.

"சார்..." எனத் தயங்கியவர்,

"கொடுங்க, மிஸ்டர். ராமனுஜம்!" என்ற ரபினின் அழுத்தம் கூடிய அழைப்பில், கைத் துப்பாக்கியை எடுத்து அவன் கையில் வைத்தார்.

அதை எடுத்து, தன் இடுப்பிலுள்ள துப்பாக்கியை ஏந்தும் பையினுள் சொருகிக் கொண்டவன், நிமிர்ந்த நடையும், அழுத்தமாய் சுழன்ற பார்வையுமாய் அங்கே விரைந்தான்.

நடையின் நடுவே, அங்கே அடிப்பட்டு கிடந்தவர்களை மருத்துமவனைக்குக் கொண்டு செல்லும் படி ஒரு காவலாளியைப் பணிக்கவும் அவன் மறக்க வில்லை.

சேதம் எங்கே அதிகமாய் இருக்கிறது என்பதை கணக்கிட்ட கண்கள், இரு இளவட்டங்களிடம் நிலைக்க, ரபினின் கால்கள் வேகமாய் அங்கே விரைந்தன.

ரபின் என்ற ரபீந்தரநாத், ஓடவில்லை! விரைந்தான்! வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு, அவன் நடப்பது போல் தான் இருக்கும்! ஆனால், நீள எட்டுக்களை அழுத்தமாய் எடுத்து வைத்து, அவர்களிடம் சென்றான்!

அங்கே, "ஏலேய்... ஒன்னைய வெட்டாம விடுறதில்ல!!!" என்று கத்திய ஒருவனுக்கு, பதினெட்டு வயது கூட இருக்காது!

அடுத்தவனோ, "வெட்டிருவியோ? வெட்டுலே பாப்போம்! குத்திக் கொடல உருவிடுவேன்..." என்றான் திமிராய்.

இருவர் கையிலும், முழ நீளத்திற்கு அருவாள்!

ஒருவன் மற்றொருவன் சட்டையை இடது கையில் கொத்தாய் பிடித்து, வலது கையிலிருந்த அருவாளை ஓங்க,

அடுத்தவனோ, வலது கையிலிருந்த அருவாளால் தன்னைப் பிடித்தவனின் கழுத்திற்கு அணையிட்டான்.

அந்த நேரம் தான், ரபின் உள்ளே நுழைந்தது!

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி இருந்தமையால், சட்டையைப் பிடித்திருந்தவனின் இடது கையும்... அருவாளை நீட்டியவனின் வலது கையும் இருவருக்கும் குறுக்கே நடந்து வந்த ரபினின் எதிரே இருந்தன.

ஒரு வினாடி கூட தாமதிக்காதவனாய், வலது கையை நேராக நீட்டி, கழுத்தில் வைக்கப்பட்டிருந்த அருவாளை ஒரு தட்டு தட்டியவன், அதே சமயம் இடது பக்கம் நின்றிருந்தவனை இடது கையால் தள்ளிவிட்டான்.

ரபினின் லாவகமான தாக்குதலில், அருவாள பிடித்திருந்தவனின் கையிலிருந்து மட்டுமல்லாமல்... குறி பார்க்கப்பட்டவனின் கழுத்திலிருந்து எகிறிக் குதித்து, வானம் நோக்கி லேசாய் பறந்து, வேறு பக்கமாய் விழுந்தது!

அதே நேரம், ரபினால் தள்ளிவிடப்பட்டவனும் தனக்கு நீட்டப்பட்ட அருவாளின் பிடியிலிருந்து தப்பி, சற்றே தள்ளிப் போய் விழுந்தான்! (கிளாப்! கிளாப்! கிளாப்!)

அந்த அடி விழுந்ததும் தான், ''ஏலேய், போலீஸ்டே!!!!'' என்று ஒருவன் கூவ,

ஓர் நிமிடத்திற்கும் குறைவாய், அங்கே அமைதி நிலவியது! ஆம், அரை வினாடிக்கு மேல், ''அய்யயோ!!'' என்பது போல் நின்றிருந்தவர்கள்,

அடுத்த அரை வினாடியிலேயே, 'ஆமா... பெரிய போலீஸ்!' என்ற எண்ணம் வந்தவர்கள் போல், தத்தம் சண்டையில் மூழ்கிப் போயினர்.

ரபினால் தாக்கப்பட்ட இருவருள் ஒருவன், கைலியை தொடை தெரிய ஏற்றிக் கட்டிக் கொண்டு ஓடத் துவங்க, ''கீழ விழுந்த அருவா... கால ரெண்டாக்கணும்ன்னா ஓடுடா!!'' என்றான் ரபின், கீழே விழந்த அருவாளை, தன் உள்ளங்காலால் நெம்பி மேலே பறக்கச் செய்தவாறே.

மண்ணில் கிடந்த அருவாளை, அவன் காலால் கிளறி... ஒரே உந்துதலில் மேலே தூக்கி வீசியதில், கீழே கிடந்த மண், புழுதியாய் மேலே பறந்தது!

புகை மண்டலத்தின் நடுவே, அருவாளைக் கையில் பிடித்துக் கொண்டு நின்ற ரபின், வீரபத்திர சாமி போல் தெரிய, ஓடியவனின் கால்கள் தானாக நின்றன. (வாட் அ மேன்!)

''சார்... நா வந்து...'' என்று அவன் தடுமாற,

''காங்கேயம்... வந்து இவன பிடிச்சிட்டுப் போங்க...'' என்று நின்ற நிலையிலேயே, பின்னாலிருந்த காவலர் ஒருவருக்கு குரல் கொடுத்தான் ரபின்.

அவர் வந்து, அவனை இழுத்துச் சென்றதும், மற்றவன் கையிலிருந்த மண்ணைத் தட்டிவிட்டபடி, வாயெல்லாம் பல்லாக ரபினின் பக்கம் வந்தான்.

''சார்... நீங்க நம்ம சாதியாளா சார்? பட்டையைக் கிளப்பிட்டீங்க போங்க!'' என அவன் குதூகலிக்க,

ரபினின் கரம் அருவாளைக் கீழே போட்ட அதே வேகத்துடன், வலது கையைப் பலமாய் வீசி, அவனது கன்னத்தில் தனது ஐந்து விரல்களின் அடையாளத்தைப் பதித்தன.

செவிப்பறை கிழிந்து, மூளைக்குச் செல்லும் நரம்பு ஒரு டிஸ்கோ டான்ஸ் போட்டது போல் கிடு கிடுத்தது!

'இதற்கு அருவாள் வெட்டே மேல்!!' என்று எண்ணும் அளவிற்கு, கன்னம் தகதகவென எரிய,

''சார்!!!!!!!!!!!!!'' என்றான் அவன் அதிர,

''என்ன கேட்டே? நம்ம சாதியாளான்னா?!! ஆமாடா... நானும் உன் சாதியாளு தான்! மிருகசாதி ஆளு!'' என்றவன், அவனது சட்டையைக் கொத்தாய் பிடித்தான்.

''ராமானுஜம்!!!'' என்ற அவனது அழைப்பு காற்றில் கரைந்த மறுவினாடி, ரபினிடம் அறை வாங்கியவன், ஜீப்பிற்கு கொண்டு செல்லப்பட்டான்.

அவன் சென்றதும், ''ராமானுஜம்... எஸ்.பி. ஆபீஸ்க்கு போன் பண்ணி, போலீஸ் வேன் ஒண்ணு கொண்டு வரச் சொல்லுங்க... இங்க இருக்க அத்தன பேரையும் லாக்-அப்ல வச்சு ரெண்டு நாள்... நா என்ன சாதின்னு காட்டினா தான் அடங்குவானுங்க... போல!'' என்றான் ரபின் ஆணையாக.

அவனது ஆணை பிறந்த மறு வினாடி, அங்கே அருவாளும் வேற்கம்புமாய் நின்ற சில பல தலைகள், ஆளுக்கொரு பக்கமாய் ஓட்டம் எடுத்தனர்.

ரபின் விட்ட ஓர் அறை தான், வாங்கியவனின் செவிப்பறையை மட்டும் கிழிக்காமல், கேட்டவர் களின் செவிப்பறையையும் அதிரச் செய்திருந்ததே!

அதற்கு மேல், அவனது ஆணை!

அறையே இப்படி என்றால்? ரெண்டு நாள் வைத்து, ஒருவர் இருவராய் அடித்தாலும், நான்கு நாள் ஆஸ்பத்திரியில் வைத்தியம் பார்க்க வேண்டும் போலவே!

பாதி பேர் ஓடிப் போய்விட, மீதிப் பேரின் 'ஜாதிப் பற்று' அவர்களை ஓட விடவில்லை.

''உன் சாதி தாழ்த்தி! என் சாதி உயர்த்தி!'' என்று கூவிக் கொண்டே இருந்தார்களே ஒழிய, சண்டை யின் மூல காரணத்தை யாரும் வாயைத் திறந்து சொல்வதாய் இல்லை!

ஓட்டம் எடுப்பவர்களைப் பிடிக்கச் சொல்லி, வந்திருந்த கான்ஸ்டபிள்களிடம் கண் காட்டிய ரபின், விவாதம் முற்றிக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்றான்.

''சண்டையை நிறுத்துங்க! என்ன பிரச்சனைன்னு சொல்லுங்க!'' என்று அவன் நடுவே புகுந்து, விவர மறிய முற்பட,

அங்கே பெரிய தலைகள் போல் தெரிந்த இருவர், ''அது தம்பி...'' என்று ஆரம்பித்தனர்.

ஆனால், அதற்குள் ''ஏலேய்... எம் பரம்பர பெரும தெரியுமாலே! கத்தி எடுத்தா ரத்தம் பாக்காம வைக்க மாட்டோம்லே! எங்களையா... ஆடு மேய்ச்சவைங் கன்னு சொன்னே! ஒன்ன!!'' என்று ஒரு குரல் எகிற,

''எங்க மாமன் வீட்டையாடா ஆடு மேய்ச்சவைங் கன்னு சொன்னே?! நாயே! ஒங்கப்பன் பன்னில மேய்ச்சான்! அதேன்... பன்னி மாதிரி தரங்கெட்டு போயி பேசுறே!'' என்று அடுத்த குரல் துணைக்கு வர,

அடுத்த வெட்டுக்குத்து ஆரம்பமாகியது!

''யோவ்!!! நிறுத்துங்கய்யா!!!'' - ரபினின் குரல் உயர்ந்து ஒலித்தபோதும், அங்கே சண்டை நிற்பதாய் இல்லை!

சட்டென, தன் இடுப்பில் சொருகியிருந்த கைத் துப்பாக்கியை எடுத்து, வானை நோக்கிச் சுட்டான் ரபின்!

அந்தக் குண்டு தன் உறையை விட்டுப் பறந்த வினாடி, அங்கே சர்வமும் அடங்கியது போல் பேரமைதி! படங்களில் காட்டுவது போல், அலைகள் அப்படியே உறைய... புயலெனக் காற்றை வாரி இறைத்துக் கொண்டிருந்த மரங்கள் அப்படியே நிற்க... ஓடிக் கொண்டிருந்த நாய்கள் முன் காலைத் தூக்கியபடியே நிற்க... ரயில் பெட்டிகள் செயின் பிடிக் காமலே தன் ஓட்டத்தை நிறுத்த... செல்போனில் வந்து கொண்டிருந்த 2ஜி/3ஜி அலைகள் எங்கே செல்வது என்று தெரியாமல் அந்தரத்தில் ஊசலாட...

லாப்டாப்பில் பாய்ந்து வந்த நெட் சட்டென கட் ஆக... இப்படியான உவமேயம்... உவமானத்துடன் அந்த இடமே ஸ்தம்பித்து நின்றது!

இதுநாள் வரை, சண்டை முடிந்த பின்னர் தான் போலீஸ் வரும்!

அப்படியே வந்தாலும், சமரசம் என்ற பெயரில் இரு தரப்பினரையும் கூப்பிட்டு பேச்சு வார்த்தை நடக்கும்!

அந்தப் பேச்சு வார்த்தையின் முடிவில், ஓர் ஜாதிக் கட்சி தலைவரின் தலையீட்டில் கைதும் நடக்காது... அடியும் கிடைக்காது!

ஆனால், இன்று!!!

அனைவருமே விக்கித்து நிற்க, ''இன்னும் ரெண்டு நிமிஷம் தான் டைம். அங்க நிற்கிற என் னோட ஜீப்க்கு எதிர்ல... ரெண்டு பக்க ஆளுங்களும் வந்து நிக்கிறீங்க! அதை மீறி... வெட்டுவேன்... குத்துவேன் என்று அலைஞ்சா... மேலே பாய்ஞ்ச குண்டு மேனில பாய்ஞ்சுடும்!'' என்றான், துப்பாக்கி நுனியை அங்கு நின்ற ஓர் பெரிய மீசைக்காரரின் நெஞ்சில் குத்தி!

ரபினின் துப்பாக்கியை அண்டக் கொடுத்து நின்ற வீர நெஞ்சம் தான், ஜீப்பின் முன்னே சென்று நின்ற முதல் ஆள் என்று சொல்லவும் வேண்டுமா?!

அனைவரும் இரு குழுவினராய்ப் பிரிந்து நின்றதும், ஜீப்பின் மீது சாய்ந்து நின்ற ரபின், ''என்ன பிரச் சனை?'' என்றான் இரு பக்கத்தாரையும் பார்த்து.

பிரச்சனை இது தான் - மேல் ஜாதிக்காரன் என்று மார் தட்டிக் கொள்ளும் மண்ணின் மைந்தர்கள் வணங்கும் ஓர் தெய்வ வடிவை, அந்தஸ்த்தில் தாழ்ந்த கீழ் ஜாதிக்காரன் கை கூப்பி வணங்கி விட்டான்! கூடவே, ஒரு தேங்காயையும் அவன் உடைக்க, அது மேல் ஜாதிக்காரனின் தலையில் சிதறியிருக்கிறது! அவ்வளவே தான்!

இதில் பிரச்சனை, சாமியா? தேங்காயா? அல்லது தலையா? என்பது தான் தலையாயக் கேள்வி!

''எங்க சாமியைக் கும்பிட்டதுக்கு தண்டனையா தான்... அவன் மண்டையைக் காவு வாங்கிடுச்சு...'' என்று ஒரு முரட்டு மீசை எகிற,

ஒரு வினாடி கூட தாமதிக்காமல், அவன் நின்ற கூட்டணி பக்கம் சென்ற ரபின், பேசிய மீசையின் சட்டையைக் கொத்தாய் பிடித்து வெளியே இழுத் தான்.

''சார்... என்ன செய்றீக...'' எனக் கூவிய அனை வருள் ஒருவர் சுதாரிக்கும் முன்பே,

பிடித்திருந்த சட்டையின் பிடியாலேயே அவரைக் குனியச் செய்தவன், காக்கிச் சட்டைப் போட்ட தன் கால்களை மடக்கி, அதால் அவரை ஒரு குத்துவிட்டு, அந்த குத்தின் வேகத்திற்கு அவரை நிமிரச் செய்தான்.

அந்த குத்து விழுந்த இடம் எதுவென்று சொல்ல வேண்டுமா என்ன?

''உன் சாமி தானேய்யா அது? இப்ப உன் வம்சத் தையே காவு வாங்கிட்டேனே... ஏன் பார்த்துட்டு

நிக்குது? வந்து... என்னை அடிக்கச் சொல்லு!'' என்றான் ரபின், ஆக்ரோஷமாய்.

வலியில் சுருண்ட அந்த மீசையால் மூச்சே விட முடியில்லை என்கையில், பேச்சு எங்கிருந்து வரும்?

அவருக்குப் பதிலாய், ''தம்பி...எங்க சாமியைக் குத்தம் சொல்லுத வேலையெல்லாம் வேணாம்! ரோஷமுள்ள அய்யனாரு தம்பி... கால பிடிக்க வச்சிரும்!'' என்றார் ஒரு பெரியவர், மிரட்டலாய்.

''விழுகையில பாத்துக்கலாம்!!!'' என்று அலட் சியமாய் கூறியவன்,

''உங்க அய்யனாரு... ஜாதி பாத்து ஆசி கொடுப் பாருன்னா... அவரு ஆசாமி! சாமியில்ல!'' என்றான் எரிச்சலாய்.

அந்த எரிச்சல், கலவரத்தில் ஈடுபட்டவர்களை காவல் துறைக் கண்காணிப்பில் வைத்துவிட்டு, வீடு திரும்பும் வரையிலும் கூட அடங்கவில்லை.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த காயம் பட்டவர்களைச் சென்று பார்த்துவிட்டு வந்தவன், கையைத் திருப்பி மணி பார்த்தான்.

மணி எட்டே கால்!

விவேக் இன்னமும் மருத்துவமனையில் தான் இருப்பான்! அந்தப் பொடுசும் எடுபிடி வேலை பார்த் துக் கொண்டு அங்கு தான் சுற்றிக் கொண்டிருக்கும்! அங்கேயே செல்லலாம் என்ற முடிவுடன், வண்டியை விவேக்கின் மருத்துவமனைக்கு விட்டான் ரபின்.

உள்ளே நுழைந்தவன், வரவேற்பில் அமர்ந்திருந்த யுகவீணாவிடம் ''குட்டிம்மா... உள்ள பேஷன்ட் யாராவது இருக்காங்களா?'' என்றான் கேள்வியாக.

அவள் இல்லையென்று தலையசைக்கவும், தலையைக் கோதிக் கொண்டு அவன் விவேக்கின் அறைக்குள் நுழைந்த ஐந்தாவது வினாடி, சூடான காபியுடன் அதே அறைக்குள் நுழைந்தாள் யுகவீணா!

மேசை மீது இரு கைகளையும் ஊன்றி, தலையைத் தாங்கிப் பிடித்தபடியே அமர்ந்திருந்த ரபினின் தோளை லேசாய் தட்டியவள், ''ம்ம்ம்...'' என்றாள் காபியை நீட்டியபடியே.

''ஹே! தேங்க்ஸ் குட்டி! என்னோட மனசை... முகத்தை வச்சே கண்டுபிடிக்கிற வித்தை அம்மாக்கு அடுத்தபடியா உனக்குத்தான் தெரிஞ்சிருக்கு! இந்தத் தடிப்பயலும் இருக்கானே... என்னடா விஷயம் என்னடா விஷயம்ன்னு குடையுறானே ஒழிய... எனக்கு என்ன தேவைன்னு புரிஞ்சுக்கவே இல்ல...'' என்று பாராட்டும் திட்டுமாய் காபியைக் குடித்தவன்,

அன்று நடந்த விஷயம் முழுதையும் சொல்லி முடித்தான்.

முடிவில், ''இந்த சாதில என்ன ஸ்டெத்து இருக்கு.. அது தோளில போட்டுக்கிற ஒரு துண்டு மாதிரி... தோளில இருக்க வரைக்கும் அழகு... கீழே விழுந்துட்டா அழுக்கு! அதுக்குப் போய்... எதுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறாங்க!? அதுவும்...

ஒரு ஆளை வெட்டுற அளவுக்கு?! ச்சை... நினைச்சாலே செம காண்டாவுது!! மேல போட்டிருக்க துண்டை பாக்கிரானுங்களே ஒழிய... உள்ள இருக்க உடம்பைப் பாக்குறதில்ல... சதையும் நகமும் ரத்தமும் எல்லா சாதிக்காரனுக்கும் ஒண்ணு தானே... ஸ்டெத்து! ஏன்டா... ஏன்?'' என்று புலம்பியவன்,

''இந்த ஜாதி.. மதம்... உட்பிரிவு... வெளிப்பிரிவு.. இப்படி எதையும் பாக்காம சமத்துவ முறையில ஒரு கல்யாணம் பண்ணிக்கணும்டா!!'' என்றான் தீர்க்கமாய்.

விவேக் சட்டென சிரித்துவிட்டான்!


''டேய்.. டேய்... என்ன மாதிரி விஷயம் பேசிட்டு இருந்தே? அதை அம்போன்னு விட்டுட்டு கல்யாணத்துக்குக் போயிட்டியேடா...'' என அவன் சிரிக்க,

''ஆமா... நானும் எப்படி எப்படியோ சொல்லிப் பார்க்கிறேன்... உன் மரமண்டைக்கும் ஏற மாட்டேங்குது... அம்மாவோட ஸ்டீல் மண்டைக்கும் ஏற மாட்டேங்குது... ஏன் இந்த பொடுசோட மண்ணு மண்டைக்கும் ஏற மாட்டேங்குது!'' என்று அலுத்துக் கொண்டான் ரபின்! கன்னாபின்னாவென்று அடிகளை வாங்கிக் கொண்டே!

ஆனால், அவனுக்குத் தெரியவில்லை! ஜாதியை முன் வைத்துத் தான் தன் திருமணமே நடக்கப் போகிறது என்று!

அதை விட மேலாய், இன்று ''ஆசாமி'' என்று ஏசிய அய்யனார் சாமியின் காலில் தான் பணிந்து எழப்போவதையும் அவன் அறியவில்லையே!

4



''செந்தூர்.. செந்தூர்! டேய்... உன்னைய ரோசா தேடிட்டு இருக்குடா... இங்க உக்காந்து... என்னடா வெட்டிக்கதை பேசிட்டு இருக்கே?'' - கல்லூரிக்கு வெளியே இருந்த டீக்கடையில் அமர்ந்து, புகை பிடித்துக் கொண்டிருந்த செந்தூர்பாண்டியனை எழுப்பினான், கணேசன்.

''ரோசா!!'' என்ற சொல்லைக் கேட்டதும், கையிலிருந்த பாதி கூடப் புகைந்திராத சிகரெட்டை கீழே போட்டவன், அதைக் காலால் நசுக்கிவிட்டு, ஓட்டமும் நடையுமாய் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

''பாவி! ஏன்டா... முழு சிகரெட்டையும் கீழே போட்டே?! ச்சை... அஞ்சு ரூவா வீணாப் போச்சே?!'' என்று அலுத்துக் கொண்டவனுக்கு, அந்த அஞ்சு ரூபாய் சிகரெட் விதைக்கும் ஆயிரம் டன் நஞ்சைப் பற்றிச் சிறிதும் கவலையிருக்கவில்லை! என்ன செய்வது? விளையும் பயிர்! சிகரெட்டின் சூட்டில் இதம் தேடுகிறது!

ஆனால், செந்தூர் பாண்டிக்கு அதெல்லாம் காதிலேயே விழவில்லை!

சிகரெட்டாவது ஒண்ணாவது? ரோஜா எனும் அழகு தேவதைக்கு முன்னால்... சிகரெட் சிரம் தாங்குமா என்ன?!

வாயை ஊதி, கைகளால் அதைத் தட்டிவிட்ட படியே, மின்னலாய் பாய்ந்தான் செந்தூர்பாண்டியன்.

தான் படிக்கும் பி.காம் மூன்றாம் வருட வகுப் பறைக்குள் செந்தூர்பாண்டியன் நுழைந்த வினாடி, ''இன்னுமா நீ போகல?! ஐயோ... ரோஜா கிரௌண்ட்க்குப் போய் அரை மணி நேரமாச்சு!?'' என்று தலையில் அடித்துக் கொண்டாள், பரிமளா.

''அரை மணி நேரமாச்சா? முன்னாடியே சொல்ல வேண்டியது தானே? அவ இன்னமும் காலேஜுக்கு வரலைன்னு நா பாட்டுக்கு இருந்துட்டேன்...! ஆமா... எப்படி வந்தீங்க? நா வாசலேயே தானே நின்னேன்...'' என வினவினான் செந்தூர், பதட்டமும் கேள்வியுமாய்.

''உங்களை மாதிரி சுவரேறி குதிச்சா வருவோம்? வாசல் வழியா தான் வந்தோம்.. நாங்க வந்ததைக் கூடக் கவனிக்காம... பேப்பர்க்குள்ள தலையை விட்டிருந்துட்டு... பேச்சைப் பாரு!'' என நொடித்த பரிமளாவைப் புறம் தள்ளிவிட்டு, மைதானம் நோக்கி ஓடினான் செந்தூர்.

அங்கே, வேப்பமரத்தின் கீழ் போடப்பட்டிருந்த கல் பெஞ்ச் ஒன்றில், வடித்து வைத்த சிலையென

அவனது காதலி ரோஜா என்ற கண்மணிரோஜா அமர்ந்திருந்தாள்!

அவளைக் கண்டதுமே, நெஞ்சுக்குள் ஓர் குளுமை பரவ, ''ரோஜா...'' என்று குரலில் மென்மையைக் கூட்டி அழைத்தான் செந்தூர்.

அமைதியே வடிவாய் அமர்ந்திருந்த ரோஜாவா என்றெண்ணும் அளவிற்கு, சட்டென திரும்பிய அவளது கண்களில் அத்தனை கோபம்! எரிச்சல்!

அதைச் சரியாகப் படித்தவனாய், ''சாரி ரோஜா... நீ வெயிட் பண்றது தெரியல... அதான் லேட் ஆகி டுச்சு!'' என்று மன்னிப்புக் கோரியபடியே அவளருகே சென்று அமர்ந்தான் செந்தூர்.

''வெயிட் பண்றது தெரியுறது இருக்கட்டும்! அய்யாவுக்குத் தான்... நா வந்ததே தெரியலையே! என்னை விட.. அந்த இத்துப் போன பேப்பர் முக்கியமா போச்சு!'' என்று கோபமாய் மொழிந்தவள் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

''ஏய்... இல்ல ரோஜா! நா அவ்வளவு நேரமும்... பஸ் ஸ்டாப்பையே தான் பாத்துட்டு இருந்தேன்... ரெண்டு நிமிஷம் நான் கண்ணைத் திருப்பின காப்ல நீ காலேஜ்க்குள்ள வந்துட்டே!'' என்று தன் நிலையை செங்கல்பொடி போட்டு விளக்க முயன்றான், அவளை இரண்டு வருடங்களாய் காதலித்து வரும் செந்தூர்பாண்டியன்.

''ப்ச்! போ!'' - அப்போதும் ரோஜாவின் கோபம் குறைவதாய் இல்லை!

இருக்கையை விட்டு எழுந்து, அவள் முன்னே நின்றவன் ''ஹே... என்ன ரோஜா இது? இப்படி மூஞ்சைத் தூக்கி வச்சுக்கிறே?! என்னோட ரோஜா... எப்பவும் ப்ரெஷ்ஷா... அழகா சிரிச்சிட்டே இருக்க வேணாமா?'' என்றான், அவளது கன்னத்தைப் பிடித்து ஆட்டியபடியே.

''ச்சீ... விடுங்க!'' என்று அவன் கையைத் தட்டி விட்ட ரோஜாவின் முகத்தில், சட்டென வெட்கப் புன்னகை.

''ஹே... ரோஜா... என்னப்பா இது... பாதி நேரம் வராம வேஸ்ட்டா போச்சு... இப்ப நீ கோச்சுக்கிட்டு இன்னும் கொஞ்ச நேரம் போச்சு! நமக்கு கிடைக்கிற கொஞ்ச நேரத்தையும் இப்படியே வேஸ்ட் பண்ணா எப்படி?'' என்று ஆதங்கப்பட்டான் செந்தூர்.

ரோஜாவுக்கும் அது சரியென்று பட்டது!

காதலர்களான அவர்களுக்கு, கல்லூரியே காதல் களம்! அதை விட்டு வெளியே சென்றுவிட்டால், அவனைக் கண்ணால் பார்க்கக் கூட முடியாது!

அவன் காதலைச் சொன்ன நாள் தொட்டு, இந்த மரத்தடியும்... இந்த மைதானமும் தான் அவர்களது காதலுக்கு சாட்சிகள்!

அதிலும், அந்த மரத்தடியில் தான் எத்தனை எத்தனை நினைவுகள்!?! நிகழ்வுகள்!

செந்தூர்பாண்டியன், முதன்முதலில் தனது காதலை வெளியிட்டது அந்த மரத்தடியில் தான்.

முதலில், முடியவே முடியாது என்று மறுத்த ரோஜா... அடுத்த மூன்று மாதத்தில் அவனது காதலிலும்... உருகலிலும்... கெஞ்சலிலும் பனிப்பூவென உருகி "சரி!" என்று தலையாட்டியதும் இதே மரத்தடியில் தான்!

ஏகப்பட்ட காதல் நினைவுகளைப் பொக்கிஷமாய் பாதுகாக்கும் அந்த மரத்தின் கீழே, மீண்டும் ஓர் காதல் நாடகம் அரங்கேறத் துவங்கியது.

ரோஜா சமாதானம் அடைந்த பின்னர், அவளருகே அமர்ந்து, அவளது கையைத் தன் கைகளுக்குள் எடுத்துக் கொண்டான் செந்தூர்பாண்டியன்.

அடுத்த ஐந்தாவது வினாடி, ரோஜாவின் தலை செந்தூரின் தோள்களில் மெல்லச் சாய்ந்தது!

தன்னை விட அரை அடி பெரியவனாய் இருந்த செந்தூரின் தோள்களில் சாய்ந்த ரோஜாவின் பார்வை மேலே காற்றில் ஆடிய வேப்பிலைகளிலேயே நிலைத்திருக்க, "இன்னும்... மூணு மாசம் தான் இருக்கு!" என்றவளின் குரலோ காய்ந்த வேப்பிலை சருகுகளாய் கரகரத்தது!

"ஹ்ம்ம்! சீக்கிரமா படிப்பை முடிச்சா தானே... சீக்கிரம் ஒரு வேலையைத் தேடிக்க முடியும்! வேலை கிடைச்ச மறு நிமிஷம்.. உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியும்!" என்றான் செந்தூர், பெரியதாய் ஓர் பெருமூச்சை வெளியிட்டு.

"ஹ்ம்ம்! ஆமா... நல்ல வேலையா கிடைக்கணும்! நல்லவேள நான் செகண்ட் இயர்ல தான் இருக்கேன்...

அதனால நமக்கு இன்னும் ஒரு வருஷம் மூணு மாசம் டைம் இருக்கு... அதுக்குள்ளே ஒரு நல்ல வேலை கிடைச்சிடும் தானே?" என்று ரோஜா கவலையும் பயமுமாய் கேட்க,

"கண்டிப்பா ரோஜா! அப்படியே வேலை கிடைக்கலைன்னானலும் மூட்டை தூக்கினாலும் உன்னைக் காப்பாத்திடுவேன்!" என்றான் செந்தூர் உறுதியாக.

"ஹ்ம்ம்! எங்க வீட்டில மூணாவது வருஷம் கடைசில தான் மாப்பிள பாக்க ஆரம்பிப்பாங்க... அதுக்குள்ள நீங்க ஒரு வேலையைத் தேடிக்கிட்டா போதும்! அவசரப்பட்டு எங்கேயாவது போய் மாட்டிக்கக் கூடாது!" என்றாள் ரோஜா யோசனையாய்.

செந்தூருக்கும் அதே கவலை தான்!

இந்த அழகு ஓவியத்தைக் கரை படியாமல் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம், அவனைக் கவலை கொள்ளச் செய்தது!

அதை மறையாமல் வார்த்தையில் வெளியிட்டான் அவன்.

"உன்னை... உங்க வீட்டில் வச்சுக்கிட்டதை விட நல்லா வச்சுக்கணும்ன்னு நினைக்கிறேன் ரோஜா! ஆனா... முடியுமான்னு தெரியல!" என்றான் அவன், அவளது கையை எடுத்து நெஞ்சில் வைத்து அழுத்தியபடி.

அவளோ, அவன் தோள் மீது சாய்ந்திருந்த தலையை நிமிர்த்தி, அவனது முகத்தை நேராகப் பார்த்தாள்.

''எங்க வீட்டில் இருக்கிற வசதியை உங்ககிட்ட எதிர்பார்த்து நான் காதலிக்கலை... செந்தூர்! எங்க வீட்டில் இல்லாத பாசமும்... அக்கறையும் உங்ககிட்ட இருக்கிறதால தான் காதலிச்சேன்! அதனால, எனக்கு உங்க காதல் போதும்! வேற எதுவும் வேணாம்!'' என உணர்ச்சி பூர்வமாய் பேசிய ரோஜா, அவளது பிறந்த வீட்டின் மூன்றாவது மகள்! சுருக்கமாய் பீடை!

'ஆண் வாரிசு வேண்டும்! ஆண் வாரிசு வேண்டும்!' என்ற பேராசையில், மனைவியை மூன்றாம் முறையாக கர்ப்பம் தரிக்க வைத்த ரோஜாவின் தகப்பனாருக்கு, மூன்றாவது குழந்தையும் பெண்ணாய் பிறந்ததில் ஏகப்பட்டக் கோபம்! ஆத்திரம்! அந்த ஆத்திரம் முழுதும், ரோஜா வளர வளர... அவளது வளர்ச்சிக்குத் தண்ணீராகியது!

நான்காவதாய் பையன் பிறந்துவிட்ட போதும், அதற்கு முன்பே பிறந்த பெண் குழந்தைகள் மீது, அவளது தந்தைக்குக் கோபம் குறையவே இல்லை!

அதிலும், ரோஜாவைக் கண்டாலே அவருக்குப் பிடிக்காது! ஒருவேளை, தன் வீட்டு ஜாடை சுத்தமாய் இல்லாமல்... மனைவி வீட்டு ஆட்கள் ஜாடையில் பிறந்ததாலோ என்னவோ.. எப்போதுமே ரோஜாவுக்கு கடைசி இடம் தான்!

அதிலும், அவளது மூத்த சகோதரிகள் இருவரும் திருமணம் முடித்துச் சென்றபின்னர், ரோஜா என்ற சிறு மலர்... முள் கூட்டத்தின் நடுவே தனித்து விடப் பட்டது!

அவளது ஒரே ஆறுதல், அவளது அன்னை - வேலுத்தாயி! இப்போது, செந்தூர்பாண்டியன்!

''சரி... சரி... எதுக்கு இப்போ உங்க வீட்டைப் பத்தி நினைச்சு டென்ஷன் ஏத்திக்கிறே? சும்மா விடு!'' என்று அவளது மூடை மாற்றியவன்,

''நேத்து... புது படப் பாட்டு ரெண்டு... மூணு டவுன்லோட் பண்ணியிருக்கேன்... கேட்கலாம் வா!'' என்றவன், தன் கைப்பேசியில் ஹெட்போனை மாட்டி, அதன் ஒரு பக்கத்தை ரோஜாவையும்... மறு பக்கத்தைத் தானும் மாட்டிக் கொண்டான்.

தன் மனதிற்கு இனியவனின் தோளில் சாய்ந்து, ரம்மியமாய் பாய்ந்த பாடல் வரிகளில் தன் உலகத்தை அழகாக்கிக் கொண்டிருந்தாள் ரோஜா!

''சூப்பரா இருக்கு செந்தூர்! செம மெலோடியா இருக்கு... அப்படியே ஒரு புது உலகத்துக்கு நம் மளைக் கூட்டிட்டுப் போகுதில்ல...'' என்று ரோஜா சந்தோஷமாய் குதூகலிக்க,

''ஹ்ம்ம்! உனக்குப் பிடிக்குமேன்னு தான்... ரெண்டு மணி நேரமா நெட்ல உக்காந்து... பாத்து... பாத்து டவுன்லோட் பண்ணினேன்!'' என்றான் அவன், தன் மனம் கவர்ந்தவளின் மனம் புரிந்தவனாய்.

''தேங்க்ஸ்! தேங்க்ஸ்! தேங்க்ஸ்!'' என சந்தோஷமாய் முகம் மலர்ந்தவள், ''ச்சே... என்கிட்டே மொபைல் இல்ல... இருந்திருந்தா எல்லா பாட்டையும் என்னோட தில எடுத்திட்டுப் போயிருவேன்...'' என்றாள் வருத்தமாய்.

''என்னோட ரோஜா பொண்ணு.. முகம் வாட லாமா? நமக்கு கல்யாணம் நடந்ததும்... முதல் வாங் குறது மொபைல் தான் ஓகேவா?'' என்றான் செந்தூர், அவளது கன்னத்தைப் பிடித்து ஆட்டி.

''ஹ்ம்ம்... இப்பவே வாங்கணும் போல ஆசையா இருக்கு...'' என்றாள் ரோஜா ஏக்கமாய்! வீட்டில், கைப்பேசி வைத்துக் கொள்வதற்கு விதிக்கப்பட்ட தடையின் விளைவே இந்த ஏக்கம்!

''ஹே... போன் வாங்கவா? இல்ல கல்யாணம் பண் ணிக்கவா?'' என்று செந்தூர் கண் சிமிட்ட,

''ச்சீ போங்க!'' என்று அலுத்துக் கொண்ட ரோஜாவின் குரல், ''ரெண்டுக்கும் தான்!'' என்றது சன்னமாய்!

''ஹுர்ரே!'' என்று செந்தூர் கூவ,

''எனக்கு... எங்க வீட்டில இருந்து எப்படா வெளிய வருவோம்ன்னு இருக்குப்பா! இன்னைக்கே கல் யாணம் கட்டி.. இந்த ஊரை விட்டுக் கூட்டிப் போய்ட்டா கூட ஓகே!'' என்றாள் சலிப்பும் எரிச்சலு மாய்.

''எனக்கும் ஆசை தான்... என்ன செய்யறது? இப்ப வெளிய போனா... பத்து பைசா காசுக்குக் கூட வேலை கிடைக்காது! நடு ரோட்டில நிக்க வேண் டியது தான்...!'' என்றவன்,

அவளது முகத்தைக் கையில் ஏந்தி, ''இன்னும் மூணு மாசம்... மிஞ்சி மிஞ்சிப் போனா ஆறே மாசம்...

நீ படிப்பை முடிக்கணும்னு கூட இல்லை! கல்யாணம் பண்ணிக்கிட்டு... எங்கயாவது போய்டலாம்!'' என் றான் உறுதியுடன்.

ரோஜாவின் கண்களில், தன் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகள் ரம்மியமாய் விரிந்தன!

சின்ன வீடென்றாலும்... அவளும் செந்தூருமாய் வாழும் அழகிய வாழ்க்கைக்கு மனம் ஏங்கியது!

தான் படிக்கும் பி.எஸ்சி (பாட்டனி) படிப்பின் மீது கூட அவளுக்கு அவ்வளவாய் ஏக்கம் இல்லை! அவன் வந்து அழைத்தால், படிப்பை முடிக்காமலே சென்று விடலாம் என்று தான் தோன்றியது! வேண்டு மென்றால், பின்னாளில் தொலைதூரக்கல்வியில் ஏதாவது படித்துக் கொள்ளலாம்!

மனம், எதிர்காலக் கனவுகளில் லயித்திருக்க,

''ஹே ரோஜா! நமக்கு இருக்க இந்தக் கொஞ்ச நாளை வேஸ்ட் பண்ணாம... இனிமே வர மூணு மாசமும் தினம் எங்கேயாவது போலாம்... என்ன சொல்றே?'' என்றான் செந்தூர், ஆர்வமே உருவாய்.

''ஹய்யையோ! வெளியவா? யாருன்னா பார்த் துட்டா?'' என அவள் பதற,

''என்னோட பைக்ல தானே போகப் போறோம்! நீ... தலையில முக்காடு போட்டுட்டு வா! யாருக்கும் தெரியாது!'' என்றான் அவன் தீர்வாய்.

''போகும் போது தெரியாது! ஆனா... போற இடத் தில யாராவது பார்த்துட்டா...''

"யாரும் பாக்காத இடத்துக்கா போகலாம்."

"அப்படி என்ன இடமிருக்கு?"

"ஹே... உடனே சந்தேகமா பாக்காத! ஏதாவது அர்த்த பழைய படம் ஓடுற தியேட்டருக்கு போவோம்! எவனும் வர மாட்டான்!"

"ஹ்ம்ம்... ஹோ..." என மெல்ல யோசித்தவளை, இதையும் அதையும் சொல்லி, கல்லூரியை விட்டுக் கடத்திக் கொண்டு சென்றான் செந்தூர்பாண்டியன்.

பழைய ஆங்கிலப் படம் ஒன்றிக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு, இருவரும் திரையரங்கத்தில் நுழைந்தனர்.

அடுத்த மூன்று மணி நேரமும், திரையில் என்ன ஓடியதோ இருவருள் ஒருவர் கூட கவனிக்கவில்லை! சொல்லில் வடிக்க முடியாத காதல் லீலைகள் அங்கே அரங்கேறத் தொடங்கின!

தன் இனியவளின் அருகாமையில், தன் சுயத்தை இழந்த செந்தூர்பாண்டியனின் கரங்கள் ரோஜாவின் தோள்களை இறுக அணைத்துக் கொண்டன!


பெண்மை விழித்த போதும், அவன் மீதிருந்த காதல் அவனது தொடுகைக்கு சாமரம் வீசியது!

மூன்று மணி நேரமும் மூன்றே வினாடிகளாய் கழிந்து போக, மனமே இல்லாமல் கல்லூரிக்குத் திரும்பியவர்கள், ஒருவரை ஒருவர் பார்த்தபடி தத்தம் வீட்டிற்கு விடைபெற்றுச் சென்றனர்.

செந்தூர்பாண்டியனின் ஊர் - உஞ்சாம்பட்டி!

கண்மணி ரோஜாவின் ஊர் - கண்டமன்னூர்!

5



ஒரு மாதம் கழித்து

காலையில் வேலைக்குக் கிளம்பி வந்த ரபின், உள்ளே நுழையும் முன்னரே, "சார்... சார்... நீங்க வந்ததும் உடனடியா எஸ்.பி. சாரை பார்க்கச் சொல்லி... ஆர்டர் சார்!" என்று பதறிக் கொண்டு ஓடி வந்தார் ஓர் காவலாளி.

'ஆஹா! நாம நேத்து ஒண்ணும் வில்லங்கத்தை இழுத்து விடலையே!? என்ன மேட்டரு!' என்று இல்லாத மூளையைத் தட்டி யோசித்தபடியே, வேகமாய் எஸ்.பியின் அறைக்குள் நுழைந்தான் ரபின்.

"குட் மார்னிங் சார்!" என ஆரம்பித்தவன், அவர் பதிலுக்கு வணக்கம் சொல்வதற்கு முன்னரே,

"சார்... நா நேத்து... எந்த ஜாதி ஆளையும் அடிச்சு தூக்கலையே சார்! ஏன்... ஒரு கேஸ் கூட ஃபைல் பண்ணலையே?! ஏற்கனவே உள்ள இருக்க ரெண்டு தடிமாடுகளை அடிச்சேன் தான்... ஆனா... அது ஜாதி பிரச்சனை இல்லையே சார்! உங்களுக்கு ராங் இன்போ வந்திருக்குன்னு நினைக்கிறேன்... எந்த ஜாதிக் கட்சி தறுதல... ச்சே தலைவர் சொன்னான்?" என்று மின்னல் வேகத்தில் கேள்விகளை அடுக்கிய

வனின் கண்களில் சற்றே கோபம்! (சரியான... மணி(காஷ்)யூ!)

''ஸ்டாப்! ஸ்டாப்!'' எனக் கையமர்த்திய எஸ்.பி.,

''கொஞ்சம் மூச்சு வாங்கு மேன்!'' என்றார் சிரிப்புடன்.

ரபின், ஒன்றும் சொல்லாமல் அவரையே பார்த்துக் கொண்டிருக்க,

''ரபின்! உன்னோட கோபம் எனக்குப் புரியது! பட்... நம்ம சமூகத்தில இருந்து ஜாதியையும் பிரிச்சு எடுக்க முடியாது... அரசியலையும் பிரிச்சு எடுக்க முடியாது!'' என்றார் அவர், நிதர்சனத்தை எடுத்துரைக்கும் குரலில்.

''ஆனா... அரசியலையும் ஜாதியையும் பிரிக்கலாம் இல்லையா சார்? அதுவும் முடியாதா என்ன?'' என்று ரபின் புருவம் உயர்த்த,

''முடியாதுன்னு சொல்ல மாட்டேன்! முடியலாம்!'' என்றார் அவர் வேதாந்தம் போல்.

''அது முடியாட்டியும்! நம்மளோட வேலைக்குள்ள அரசியல் கலக்குறதை நிறுத்த முடியாதா சார்?!'' என்றான் அவன் எரிச்சலாய்.

''என்ன செய்றது ரபின்?! நாம.. அவங்க பேச்சைக் கேட்கலைன்னு வை... ஊரில கலவரத்தை உண்டு பண்ணிடுவானுங்க! இவனுங்க கலவரத்தில்... அப்பாவி பொது ஜனங்களுக்குத் தான் அதிகமான பாதிப்பு இருக்கும்! அதுக்கு... இவனுங்க சொல்ற

ஆளுங்களை வெளிய விட்டுறது மேல்!'' என்றார் அவர், தன் பக்கத்து நியாயமாய்.

''ஹ்ம்ம்! அவனுங்க வெளிய இருந்தாலும் கல வரம் வருதே, சார்! எப்படியும் நாலஞ்சு பேர் அடிச் சிட்டு... ஆஸ்பத்திரில கிடக்கிற மாதிரி ஆகிடுது!'' என ரபின், தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினான்.

''நூறு பேருக்கு அடிபடறதை விட அஞ்சு பேர் அடிச்சிட்டு சாவட்டும்! விட்டுத் தள்ளு மேன்!'' என அவனது தோள் தட்டி சமாதானம் செய்தார், எஸ்.பி.

கூடவே, ''நா இப்போ கூப்பிட்டது... ஜாதிக்கல வரம் விஷயமா இல்ல! இப்பத்தான்... ரபீந்தரநாத் ஐ.பி.எஸ்ங்கிற பேரைக் கேட்டாலே, காலைத் தூக்கிட்டு ஓடுறானுங்களே! நீ அடிக்கிற அடில... நாலு நாளைக்கு பொண்டாட்டி பக்கத்திலேயே போக முடியலையாம்! எதுக்குடா வீண் வம்புன்னு... அவனவன்... பம்மி பதுங்குறானுங்களாம்! அதுமட்டு மில்ல... ஜாதிக் கலவரம்... ஜாக்கி ஜான் கலவரமா முடிஞ்சிடுமோன்னு பயந்து போயிருக்கானுங் களாம்!'' என்றார் சிரிப்புடன். இதை மட்டும் ஜாக்கி ஜான் கேட்டாரு?! நடு முற்றத்தில... தூக்கு போட்டு தொங்கிடுவாரு! பாவம்!

''ஹஹா!'' என்று சிரித்தவன், ''என்ன விஷயம் சார்?'' என்றான் அவரது கவனத்தைத் திசை திருப்பி.

''நம்ம டிஸ்ட்ரிக்ட்ல... முக்கியமா தேனி டவுன்ல... ஏகப்பட்ட செயின் ஸ்னாட்ச்சிங் நடக்குது ரபின்! இங்க இருக்க போலீஸ் ஃபோர்ஸ் எல்லாருமே...

மர்டர்... அந்த நகைக்கடை கொள்ளை... கட்சி பாது காப்புன்னு ஸ்ப்ளிட் ஆகிட்டாங்க! அதான்... உன்னை போடி அனுப்ப வேண்டாம்ன்னு முடிவு பண்ணிட் டேன்... ஒரு தனி ஃபோர்ஸ் ஃபார்ம் பண்ணி, அதை நீ லீட் பண்ணினா... ரிசல்ட்ஸ் நல்லா வரும்ன்னு நினைக்கிறேன்! நீ என்ன சொல்றே? லீட் பண்றியா?" என்றார் அவனை நேரே பார்த்தபடி.

"கண்டிப்பா சார்!" என்றவன், ஓர் சல்யூட்டோடு அவரிடமிருந்து விடை பெற்றான்.

நாட்கள் வாரங்களாய் நகர, ரபின்... தேனி நகரில் நடந்த... நடக்கிற... நடக்கவிருக்கும் நகை பறிப்பு வழக்குகளை, அலசி ஆராய ஆரம்பித்தான்!

பெரும்பாலனவை, ஆள் நடமாட்டமில்லாத இடங்களில் நடந்தேறியிருந்தன. ஆனால், சமீபமாய் நடந்த கொள்ளைகள் அனைத்தும், முக்கிய வீதி களில்... ஏன் காவல் நிலையம் அருகே கூட ஓர் கொள்ளை நடந்தேறி இருந்தது!

அனைத்துமே, மோட்டார் பைக்கில் பறக்கும் இருவரின் கை வண்ணமாய் இருந்தது!

பல சமயங்களில், நகை பறிபோன அதிர்ச்சியில் பறித்தவன் பறந்து சென்ற வண்டியின் எண்ணைக் கவனித்திருக்கவில்லை, பெண்கள்.

சிற்சில சமயங்களில், வண்டி எண்ணை அவர்கள் கவனிக்க முயன்று தோற்று போயிருந்தனர்! அந்த எண்கள்.. வேண்டுமென்றே மங்கலாக்கப் பட் டிருந்தன!

"இரண்டு மாதிரி இருந்துச்சு சார்... ஆனா... எட்டான்னும் தெரியல..." என்று பெண்கள் தடு மாறுகையில், ரபினால் அவர்களைக் கோபித்துக் கொள்ள முடியவில்லை.

ஓரிடத்தில் கொள்ளை நடந்தால், காவலாளிகளை அங்கே குமித்து, ஆட்களைப் பிடிக்கலாம்?!

ஆனால், நகரின் பல இடங்களில் நடக்கும் இந்த பகல் கொள்ளையை எப்படி தடுப்பது?!

ஒரு வாரமாய், ரபினுக்கு மண்டை காய்ந்தது!

அதுவும், ஒரு நாள்... ஒரு சமயம்... ஒரு இடத்தில் கொள்ளை நடந்தால், அதே இடத்தில் அடுத்த கொள்ளை நடக்க, கிட்டத்தட்ட ஒரு மாதமாகிற்று!

இதை வைத்துப் பார்க்கையில், ஒன்று பட்டு செயல்படும் ஓர் கும்பலின் கை வண்ணம் என்று புரிந்தது!

தேதி வாரியாக... நேரம் வாரியாக... இடங்களைப் பிரித்து, நகைகளைப் பறித்துக் கொண்டிருந்தனர்!

இதே நினைவாய், வீட்டிற்கு வந்தவனை, "டேய்... ராபின்! நீ... என்ன நாலஞ்சு நாளா... டையர் கழண்டு போன தையில் மெஷின் மாதிரி... சும்மாக் காச்சும் வீல் சுத்துறே? என்ன விஷயம்?" என்றான் விவேக், கேள்வியாக.

வேலுநாச்சியாரோ, "தொர, இந்த வாட்டி கொடுத்த புது அசைன்மெண்ட்டை வச்சு... எப்படி நூல் சுத்தி... கல்யாணத்துக்கு பிட்டு போடலாம்ன்னு யோசிச் சிட்டு இருப்பான்!" என்றார் நக்கலாய்.

விவேக்கின் கூற்றை ஆட்சேபிக்க வாய் திறந்த ரபின், தன் தாயின் நக்கலில் பொங்கி எழுந்துவிட்டான்.

''ஆமா... இந்த நக்கலுக்கு ஒண்ணும் குறைச்சலில்லை! ஒரு அம்மாவா... லட்சணமா மகனுக்குப் பொண்ணு பாக்கத் தெரியல! இதில... பிட்டு... புட்டு... சிட்டு... லட்டுன்னு... மக்கு மாதிரி ரைமிங் பேச வேண்டியது!'' என எரிந்து விழுந்தான்.

''டேய்! லூசுப் பயலே! நா வெறும் பிட்டு மட்டும் தான்டா சொன்னேன்! நீ ஏன்... கண்டதையும் லிஸ்ட்ல சேர்க்கிற?'' - பெரிய நகைச்சுவையைக் கண்டது போல், வெடித்துச் சிரித்தார் வேலுநாச்சியார்.

''வேணாம்! நானே காண்டுல இருக்கேன்... என்னைத் தேவையில்லாம உசுப்பிவிட்டு... விபரீதத்தை விலை கொடுத்து வாங்காதீங்க!'' என்ற ரபினின், முகத்தில் சிரிப்பின் சிறு ரேகைகள் படரத் தொடங்கிவிட்டன.

''இப்ப எனக்கு விபரீதம் எது? விலை எதுன்னு தெரிஞ்சே ஆகணும்!'' என்றான் விவேக், உணவு மேசையைத் தட்டி!

''இது கூடத் தெரியாம... நீ என்னடா டாக்டர்?! அவன் வாழ்க்கையில் விபரீதம்ன்னு ஒண்ணு நடந்தா அது கல்யாணம் தான்டா!'' என்றார் வேலுநாச்சியார், வெடிச்சிரிப்புடன்.

''ஹ்ஹஹஹா!'' என்று விவேக் சிரிக்க, வீணாவின் முகமே சிரிப்பு மலராய் விரிந்திருந்தது!

''அம்மா... இது டூ மச்! ஏற்கனவே சிரிப்பு போலீஸ் ரேஞ்சுக்கு என்னோட இமேஜை ஒரு அம்மா டேமேஜ் பண்ணி வச்சிருக்கு! நீங்க என்னாடன்னா... சுத்தமா குழி தோண்டிப் புதைச்சிடுவீங்க போலவே!'' என்றபோது, ரபின் தன் யோசனைகளை எல்லாம் மறந்தே போயிருந்தான்.

''டேய்! டேய்! நாங்க ரெண்டு பேரும்... அட்லீஸ்ட் நா மட்டுமாவது... புதைகுழில இருக்க உன்னோட இமேஜை மண்ணு போட்டு... மண்ணு போட்டு மேல எழுப்பி இருக்கோம்!'' என்ற வேலுநாச்சியார்.

''அதுக்கு இதோ ஒரு சாம்பிள்!'' எனக் கூறி, ஓர் பெண்ணின் புகைப்படத்தை அவன் கையில் திணித்தார்.

''ஹே!!!!!!'' என்று விவேக் கூவ,

ரபினோ, ''வாவ்! ஒரு வழியா பொண்ணு பார்த்துட்டீங்களா? பொண்ணு உங்களை மாதிரி டேஞ்சர் லைட்டா? இல்ல, யுகா மாதிரி ஃப்யூஸ் போன பல்பா?'' என்றான் அவன், உற்சாகத்துடன்.

''உன்னோட வாய்க்கு... தீவெட்டியைத் தான்டா கொழுத்தி வைக்கணும்!'' என்று அவன் தலையில் அடித்த வேலுநாச்சியார்,

''இந்தப் பொண்ணு பேரு... கீதாஞ்சலி! நம்ம தூரத்து சொந்தம்! பி.காம் படிச்சிருக்கா... படிப்பு

முடிஞ்சிடுச்சு... அப்பாருக்கு விவசாயம் தான் குலத் தொழில்! சொத்து பத்து... சொந்த பந்தம்ன்னு நல்ல தனக்காரங்க! பாரு... உனக்கு பொண்ணை பிடிச் சிருந்தா... அதுக்கு மேலா அவங்களுக்கும் உன்னைப் பிடிச்சிருந்தா... பாக்கலாம்!'' என்றார் அவர், விவரம் கூறும் குரலில்.

ரபினின் கண்கள், அப்பெண்ணின் புகைப்படத் தில் பதிந்தன.

மறுப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று தோன்றியது! அதே நேரம், சரி எனச் சொல்வதற்கும் எந்தக் காரணமும் இருப்பதாய் தெரியவில்லை!

மனதில் ஓர் பொறி! மண்டையில் ஓர் அடி! மூளைக்குள் ஓர் இடி! கண்ணில் ஓர் பின்னல்! மூக்கில் ஓர் தும்மல்! காதில் ஓர் ''நொய்ங்!'' கன்னத் தில் ஓர் ''ஜிலீர்!'' நெற்றியில் ஓர் கீறல்! - ஒரு மண்ணும் இல்லை!

மண்டையை லேசாய் சொரிந்து கொண்டு, ''ஏன்டா ஸ்டெத்து... கண்டதும் காதல்... கண்ணுக் குள்ள ஸ்பார்க்... பார்த்ததும் அப்படியே பிரம்மிச்சு போய் நிக்கிறது... போட்டோவை விட்டுக் கண் ணையே எடுக்க முடியல... இப்படி எதுவுமே உள்ள நடக்க மாட்டேங்குதே!'' என ரபின் கேட்க,

''சில பேரைப் பார்த்ததும் பிடிக்கும்டா... சில பேரைப் பாக்கப் பாக்கத் தான் பிடிக்கும்! இன்னும் சில பேரை... பிடிக்கும்... ஆனா பிடிக்காது!'' என்று தத்துவம் பேசிய விவேக்,

''கடைசி சில பேர்ல... உன் பேருக்குத் தான் முத லிடம்!'' என்றுவிட்டு, அங்கிருந்து ஓடியே போனான். இந்த அவமானத்துக்கு, ரபின் ஒரு டின்... பால் டாயிலைக் குடிச்சிருக்கலாம்!

''டேய்!!!!!!!!'' என்று ரபினால் கத்த மட்டுமே முடிந்தது!

''கீதாஞ்சலி''யின் புகைப்படம் வந்த நேரமா? இல்லை அவன் வாழ்வின் அடுத்த திருப்பத்திற்கான நேரமா? - எதுவோ ஒன்று, அவனை அடுத்து வந்த நாட்களில்... நகை பறிப்புக்கு எதிரான நடவடிக்கை களை எடுத்து வைக்க வைத்தது!

அதில் முதல் படியாய், நகை பறிப்பு நடக்கும் நேரங்களான - ஏழு முதல் ஒன்பதரை மணி வரை, குடியிருப்புகள் நிரம்பியிருக்கும் இடங்களில், காவலை அதிகப்படுத்தினான்.

சில முக்கிய இடங்களில், அவனே காவலுக்கு நின்றான்.

ஒரு வாரம் கடந்த நிலையில், தன் கீழே வேலை செய்யும் காவலாளிகளை ஓர் கூட்டத்திற்கு அழைத் தவன்,

''நாம காவல் இருக்கிறது தெரிஞ்சோ என்னவோ... இதுவரை ஒரு நகைத் திருட்டும் நடக்கலை!'' என ஆரம்பித்தான்.

அனைவரது முகத்திலும் புன்னகை பரவி, எதையோ சாதித்து விட்ட உணர்வை வெளிப்படுத் தவும்,

"நீங்க சந்தோஷப்படுற அளவுக்கு... நாம எதையும் சாதிக்கலை!" என்றான் ரபின், பட்டென.

அனைவரும் திகைத்து விழிக்க, "குற்றவாளி... மறைஞ்சிருக்கான்! தட்ஸ் இட்! அது நம்மளோட வெற்றியில்ல!" என்றான் தெளிவாக.

மேலும், "குற்றம் குறைஞ்சு... ஒரு கட்டத்தில மறைஞ்சே போச்சுன்னு தெரிஞ்சதும்... நம்ம மேலிடம், நம்மளை வேறொரு டாஸ்க்குக்கு மாத்துவாங்க! வருஷக் கணக்கில நாமளும் ரோட்டில தேவுடு காக்க முடியாதில்லையா? அந்த நேரம் வந்ததும்... திரும்பவும் குற்றம் ஆரம்பமாகும்!" என்றான் நிதர்சனத்தை விளக்கி!

அனைவரது முகத்திலும், 'அட... ஆமா!' என்பது போன்ற பாவனை தெரியவும்,

"சோ! அவன் வெளிய வரணும்! அவனுங்க வெளிய வந்தா... அந்த நெட்வொர்க்கை மடக்கிப் பிடிக்கணும்! அப்பத்தான்... நம்ம வேலை முடிஞ்சதா அர்த்தம்!" என்றான் ஆணித்தரமாய்.

"அதுக்கு... என்ன சார் செய்யணும்? காவல் இருக்கிறதை நிறுத்திடணுமா?" என்றனர், அவர்கள் குழப்பமாய்.

"காவல் இருக்கிறதை நிறுத்திட்டா... அவன் பாட்டுக்கு செயினைப் பறிச்சிட்டு போயிட்டே இருப்பான்! நாம... வெறுமனே கம்ப்ளைன்ட் எழுதிட்டு... எஃப்.ஐ.ஆர். ஃபைல் பண்ணிட்டு இருக்க வேண்டியதுதான்!" என்றான் கடுப்பாக.

"அப்புறம் என்ன சார் செய்யணும்?"

"காவல் இருக்கணும்! ஆனா... அவங்களுக்குத் தெரியாம காவல் இருக்கணும்! அவன் தப்பு செய்யணும்! ஆனா... தப்பை என்ஜாய் பண்றதுக்குள்ள பிடிச்சிடணும்!" என்றான் ஓர் வியூகம் போல்!

அந்த வியூகத்தை அமைத்தும் கொடுத்தான்!

ஒரோர் ஏரியாவிலும்... ஓரோர் தெருவிலும்... சில குடியிருப்பு வாசிகளை அழைத்துப் பேசினான்.

அந்தப் பேச்சு வார்த்தையின்படி, ஓரோர் தெருவின் முதல் வீடு... நடுவே ஓர் வீடு... முடிவில் ஓர் வீடு என்று தேர்ந்தெடுத்து, அந்த வீடுகளின் உள்ளே மறைவாய் காவல் இருந்தனர் காவலர்கள்.

நகை பறிப்பு நடந்த அடுத்த நொடி, மூவரும் ஓடி வந்து... கள்வனைப் பிடித்து விடவேண்டும் என்ற திட்டத்துடன், ரபின் காய்களை நகர்த்தினான்.

முதலிரண்டு நாட்களும், எந்தவிதமான திருட்டுமில்லை!

மெல்ல மெல்ல... காவலர்களின் கண்காணிப்பு ஒட்டு மொத்தமாய் நிறுத்தப்பட்டு விட்டது என்பதை அறிந்து கொண்ட கொள்ளையர்கள், தலை தூக்க ஆரம்பித்தனர்!

அன்று, தேனியின் முக்கிய நகர் ஒன்றில் காவலிருந்தான் ரபின்.

நேரம் சரியாக எட்டு மணி, ஐந்து நிமிடங்கள்!

வாயிலிருந்து சில பல கொட்டாவிகள் வெளியேற, வயிறோ 'டேய் எருமை! சோறைப் போடேன்டா!' என்று கூவிக் கொண்டிருந்தது!

''ச்சே... நாமளும் இந்த ஸ்டெத்து மாதிரி டாக்டருக்குப் படிச்சிருந்தா... பொடுசு இந்நேரம் கிளினிக்குக்கே சாப்பாடு கொண்டாந்திருக்கும்! ப்ச்...! எல்லாம் இந்த அம்மாவால வந்தது... சின்ன வயசில ஊசி போட்டுக்கப் பயந்தேன்னு என்னை டாக்டர் படிக்க விடாம செஞ்சுட்டாங்க! ஹ்ம்ம்!'' என்று அவன் முனங்கிக் கொண்டிருக்கும்போதே,

''ஐயோ! செயினைப் பறிச்சுட்டானே பாவி!'' என ஓர் குரல், இரவு நேரத்துக்கு நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு வந்ததில், அவனது புலம்பல் காலாவதி ஆனது!

ஒரே வினாடி தான்!

தான் பதுங்கி நின்ற வீட்டின் மதில் சுவரை ஒரே தாவலில் ஏறிக் குதித்தான்!

மின்னல் வேகத்தில், ரோட்டின் மத்திக்கு வந்தவன், அவன் ஏறிக் குதிக்கும் அரவம் கேட்டதும், வண்டியை வேகமாய் ஓடித்தான் அந்த பைக் திருடன்! இல்லையில்லை, திருடர்கள்! பைக் ஓட்டி ஒருவன்... பின்னால் நகை பறிப்புக்கு மற்றொருவன்!

அங்கே அவர்கள், ரபினை... ஏன் தங்கள் வழியை மரிக்கும் ஒருவனை சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை என்பது அவர்கள் பைக் தடுமாறியதில் இருந்தே தெரிந்தது!

அந்த அரை வினாடி தடுமாற்றத்தைத் தனக்கு சாதகமாய் எடுத்துக் கொண்ட ரபின், தன் பலம் முழுதையும் திரட்டி, வண்டியின் அருகே ஓடினான்.

அதே வேகத்துடன், வண்டி ஓட்டி வந்தவனைத் தள்ளி விட்டன அவனது கைகள்!

அவன் விழுந்ததுமே, வண்டி குடை சாய... அடுத்தவனும் தரையில் உருண்டான்!

முகத்தை மறைப்பதற்காக, அவர்கள் போட்டிருந்த ஹெல்மெட்... அவர்களிடமிருந்து மரணத்தை மறைத்திருந்தது! அவர்களுக்கு மட்டுமல்லாமல், குற்றவாளியை உயிருடன் பிடிக்க பிரம்மப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்த ரபினுக்கும் உதவி புரிந்தது அந்த ஹெல்மெட்! தலைக்கவசம்... உயிர் கவசம்!

ஆம், குற்றவாளி(கள்) கையும் களவுமாய் பிடிபட்டனர்!

வண்டி ஓட்டி வந்தவனை விட, ஓர் பெண்ணின் கழுத்தில் பெரிய காயத்தை உண்டு பண்ணி... அவளது ஜீவநாடியான தாலிக் கொடியை அறுத்த அந்தப் பொறம்போக்கு மீது ரபினுக்குக் கட்டுக் கடங்காமல் கோபம் பொங்கி வர,

அவனது சட்டையைக் கொத்தாய் பிடித்து நிறுத்தியவன், ''டேய்... பொறுக்கி நாயே! உம் பேரு என்னடா?'' என்றான் கர்ஜனையாய்.

எடுத்ததும் பேர் சொல்ல அவன் என்ன லூசா?


ஆனால், பேரை மட்டுமல்லாது அவனது ஜாதகத்தையே வாங்காமல் விட ரபின் என்ன கிராக்கா?

ஊர்... பேர்... படிப்பு என அனைத்து விவரங்களையும், அடுத்த ஒரு மணி நேரத்தில், கள்வனின் வாய்மொழியாகவே வரவழைத்தான், ரபீந்திரநாத்!

அவை எழுதப்பட்டிருந்த காகிதத்தை எடுத்துக் கொண்டு, தன் மேசைக்கு வந்து அமர்ந்தவன்,

அதில் பார்வையை ஒட்டியபடியே, ''செந்தூர்பாண்டியன்... உஞ்சாம்பட்டி... பி.காம்... ஹ்ம்ம்... இன்னும் படிப்பை முடிக்கவே இல்ல போல! தறுதல நாயி!'' என்றான் கோபமாய்!

6



''ரபின்! இன்னைக்குப் பொண்ணு பார்க்கப் போறோம்... ஞாபகம் இருக்கு தானே?'' - சாப்பாட்டு மேசையில் அமர்ந்து, கேப்பைக் கூழையே இப்படியும் அப்படியுமாய் நோட்டம் விட்டுக் கொண்டிருந்த மகனிடம் கேட்டார் வேலு நாச்சியார்.

''இவ்வளவு முக்கியமான விஷயம்? அதைப் போய் மறப்பேனா? அங்க அவங்க கொடுக்கப் போற சொஜ்ஜி அண்ட் பஜ்ஜிக்காக... இப்பவே வயிறைக் காலியா வச்சுக்க முடிவு பண்ணிட்டேன்! சோ... இந்தக் கூழு எனக்கு வேணாம்!'' என்று ரபின் அறிவிக்க,

''அடி விழும்! ஒழுங்கா... குடி! சாப்பாடை வீணாக்கக் கூடாது!'' என்றவாறே, மகனை அடித்தார் தாயார்.

அவர் அந்தப் பக்கமாய் நகர்ந்ததும், விவேக் அங்கே வருகை தந்தான்.

அவனைப் பார்த்து, ''டேய் ஸ்டெத்து... இன்னைக்கு நீ... ஒரு சாயம் போன சட்டையும்... வெளுத்துப் போன பாண்ட்டும் போட்டுட்டுத் தான் பொண்ணு பார்க்க வர! சொல்லிட்டேன்! அங்க வந்து நீ எனக்கு வில்லனா மாறிடுற அபாயம் நிறைய இருக்கு!'' என ஆணை பிறப்பித்தான், ராபின்.

அவன் பேசுவதற்கு முன்னர், யுகவீணா ஓடி வந்து விவேக்கின் தோளைச் சுற்றி கை போட்டு, ''ம்ம்ம்... போ! என் விவேக்!'' என்று உரிமை கொண்டாட,

''அவன் போறான்... போ! அப்படியே அந்தப் பொண்ணு... நான் தான் மாப்பிள்ளைன்னு நினைச்சிட்டு, இவரைப் பிடிச்சிருக்குன்னு சொன்னாலும்... நான் பட்டுன்னு ''எனக்கு என் வீணு குட்டி போதும்!''ன்னு சொல்லிடுவேன்! நீ கவலைப் படாதேடா குட்டி!'' என்று கையைப் பின்னே கொடுத்து, அவள் தலையைத் தனது சிரசோடு அணைத்து, மனைவியைக் கொஞ்சினான். காதல் புறாக்கள் அல்லவா!

''போங்கடா உங்க கொஞ்சலும் நீங்களும்!'' என்று சலித்துக் கொண்ட ரபின்,

யுகவீணா, அவனுக்குப் பழிப்பு காட்டிவிட்டு, சமையற்கட்டுப் பக்கம் நகரவும், ''யுகாக்கு... உன் மேல எவ்வளவு பொசஸிவ்நஸ் பாரேன்... விவேக்! அவ கண்ணில அப்படியொரு கோபம்... காதல்... பாசம்... 'என் புருஷன்...'ங்கிற உரிமை... இது எல்லாமே இருந்துச்சுடா! யுகா இவ்வளவு எமோஷனல்ன்னு

நான் நினைக்கவே இல்லடா!'' என்றான் கண்ணில் வியப்புடன்.

''ஹ்ம்ம்!'' என்றோர் பெருமித முறுவலை வெளியேற்றிய விவேக், ''இப்பன்னு இல்ல ரபி! எப்பவுமே அவ எமோஷனல் தானே? முதல் தடவ... அவ நம்ம வீட்டுக்கு வரும்போது... எப்படி இருந்தா? அது மறந்து போச்சா என்ன? எதுக்கெடுத்தாலும்... கண்ணில தண்ணி தான் நிக்கும்! அவள போய்... எமோஷனல்ன்னு நினைக்கவே இல்லைன்னு சொல்றே?'' என்றான் ஆட்சேபனையாக.

''இல்லடா... அது சின்ன வயசு மனநிலை! ஆனா... இப்பவும்...'' என ஆரம்பித்த ரபினை விவேக் முடிக்க விடவில்லை.

''இப்பவும் என்ன இப்பவும்? எப்பவும் அவ குழந்தை தான்டா! அன்புக்காக ஏங்கி நிக்கிற அழகான குழந்தை!'' என்றான் அவன் லயிப்புடன்! அவன் குரலில், 'அவள் யாசிக்கும் அன்பைக் கொடுக்கும் அமுதசுரபி நான்' என்ற பெருமிதமும் ரசனையும் கரை புரண்டு ஓடியது!

''எனக்கு உங்களைப் பார்த்தா பெருமையா இருக்குடா... அதே சமயம்... நமக்கு இப்படியொரு புரிதலோடான வாழ்க்கை அமையுமான்னும் பயமா இருக்கு!'' என்றான் உண்மையை வெளிப்படுத்தி.

''டேய்! இந்த செண்டி டைப் ரோல் எல்லாம் உனக்கு செட் ஆகாதுடா! காமெடியனாவே இருக்கத் தான் நீ லாயக்கு!'' என்று அவனது தோள் தட்டிய

விவேக், ''உனக்கு எப்பவுமே பெஸ்ட் இன் லைஃப் தான்டா கிடைக்கும்! அதே லைன்ஸ்ல... இந்தப் பொண்ணும் பெஸ்ட்டா இருப்பா!'' என்றான், ஓர் மூத்த சகோதரனாய்.

''ஹ்ம்ம்! பார்ப்போம்!'' என்ற ரபினுக்கு, ஏனோ இந்தப் பெண் தனக்கான இணையில்லை என்று மனம் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது!

ஆனால், இதைப் போய் வேலு நாச்சியாரிடம் சொன்னால் அவ்வளவு தான்! அவனைக் கிறுக்கு பிடிக்க வைத்து விடுவார்!

அவரிடமிருந்து ஓர் அறிவுரை மழையைப் பரிசாய் பெறுவதற்கு, பெண் பார்க்கப் போவதே மேல் என்று முடிவு செய்தவனாய் அலுவல் கிளம்பிச் சென்றான் ரபின்! தான் இன்று பெண் பார்க்கப்போகப் போவதில்லை என்பதை அறியாமல்!

அன்று, அந்த நகை பறிப்பு கும்பலிடம் விசாரணை!

செந்தூர்பாண்டியனும், அவனுடன் பிடிபட்ட மொக்கைசாமியும் லாக்கப்பில் அடிபட்டு கிடந்தனர்.

அவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த காவல் நிலையத்திற்குள் நுழைந்த ரபின், ''காங்கேயம்... அந்த நாயிங்க ரெண்டு பேரும்... ஏதாவது சொன்னாங்களா இல்லையா?'' என்றபடியே லாக்கப்பை நோக்கிச் சென்றான்.

''இல்ல சார்! அன்னைக்கு உங்ககிட்ட பேரு... ஊரு சொன்னதோட சரி! வேறெதுவும் சொல்ல மாட்டுறானுங்க!'' என்றார் அந்த மூத்த அதிகாரி.

''நீங்க கேட்கிற விதத்தில கேட்டிருக்க மாட்டீங்க!'' என்றவன்,

''லாக்கப்பை திறங்க! நான் கேட்டுக்கிறேன்!'' என்றான், சட்டைக் கையை ஏற்றி விட்டபடி!

லாக்கப் திறக்கப்பட்டதும், சட்டையை மடக்கி விட்டபடியே, அவர்களருகே சென்றவன், ''என்னடா மாப்பிள்ளைகளா? மாப்பிள்ளை அடி வேணுமோ? அப்பத் தான் உண்மை சொல்லுவீங்களோ?'' என்றான் கண்ணில் கோபத்துடன்.

இருவரது முகத்திலும், பயத்தின் ரேகை பலமாய் ஓடி மறைய, ''மயிலே... மயிலேன்னு கத்தினா எல்லாம் நீங்க இறங்க மாட்டீங்கடா! ஒரொரு ரெக்கையா பறிச்சா தான் அடங்குவீங்க!'' என்றவன், மூலையில் முடங்கியிருந்த செந்தூர்பாண்டியனை, கொத்தாய் பிடித்து இழுத்தான்.

''ஏன்டா பொருக்கி நாயே! பி.காம் படிக்கிற உனக்கு எதுக்குடா திருட்டும்... பொரட்டும்? இந்தா.. இவன் திருடினாவாது... படிக்காத முட்டாப் பய திருடினான்னு சொல்லலாம்! ஆனா... உனக்கு என்னடா? ஒரு நல்ல காலேஜ்ல படிச்சுக்கிட்டு... எதுக்குடா இந்த ஈனப் பொழப்பு!'' - பேச்சின் முடிவில், செந்தூரின் அடி வயிற்றில் இடியென ஓர் அடி இறங்கியது!

''ஆஆஆஆ!'' என அவன் அலறியதைப் பொருட்படுத்தாமல்,

''பொம்பளைங்க தாலிக் கொடியை அறுத்து எரிஞ்சுட்டுப் போறியே... உன் வீட்டுப் பொம்பளைங்க... ஏன் உனக்கு பொண்டாட்டிய வரவ தாலி நிலைச்சு இருக்குமா என்ன? கொஞ்சம் கூட அறிவில்லை!'' என்றான், அடுத்த அடியை அவனது நடுவயிற்றில் இறக்கி!

''ஆஆ!!!!'' - செந்தூர் வலியின் உச்சத்தில் சுருண்டு போக,

''உங்களுக்கெல்லாம் ஒரு தலைவன் இருப்பானில்ல! அவன் யாருடா?'' என்றான் ரபின், அடுத்த அடிக்குக் கையை முறுக்கியபடியே.

செந்தூர் பதில் சொல்வதற்கு முன்னர், ''தலைவன் எல்லாம் இல்ல சார்!'' என்றான் மற்றொருவன்!

''வாங்க மாப்பிள்ள! வாங்க! உன்னை மட்டும் அடிக்கலைன்னு வருத்தப்படுறியோ? நீ வருத்தப்பட்டா! என் மனசு தாங்குமா சொல்லு? தாங்கவே தாங்காது! வா! வா!'' என்ற ரபின், மொக்கையின் மேனியை மத்தளமாக்கி, தன் அடிகளின் நர்த்தனத்தை அரங்கேற்றினான்.

அந்த அடிகளின் முடிவில், இருவரும் தங்கள் செயல்படும் கும்பலைப் பற்றிய முழு விவரங்களையும் சொல்லாமல் விட்டிருந்தால்... அவர்கள் உடம்பில் உயிரைத் தவிர அனைத்துமே காலாவதி ஆகியிருக்கும்!

ஏற்கனவே, பாதி பாகங்கள் போகி பண்டிகைக்குப் போக வேண்டிய பழையன போல் ஆகிவிட்டிருக்க,

மீதிப் பாகங்களையும் காப்பாற்றிக் கொள்ளும் வண்ணம், உண்மைகள் அணிவகுத்து வந்தன.

அவர்கள் கொடுத்த விவரங்களை ஒரு முறை படித்துப் பார்த்த ரபின்,

''இதில ஏதாவது ஒரு சின்னத் தகவல் தப்பா இருந்தா கூட.... நீங்க செத்தீங்க! என் கையே ஒடிஞ்சு... ஓய்ஞ்சு போனாலும்... உங்களை அடிச்சே கொன்னுடுவேன்!'' என்று எச்சரித்து விட்டு, அங்கிருந்து நகர்ந்தான்.

வெளியே வந்தவன், ''நாலு அடி கூடத் தாங்க மாட்டுறானுங்க... இவனுங்களையெல்லாம் எந்த லூசு திருட அனுப்புச்சோ!'' என்றான் எரிச்சலாக.

கூடவே, ''அவனுங்களுக்கு சாப்பிட ஏதாவது வாங்கிக் கொடுங்க காங்கேயம்! ஒரு வலி மாத்திரையும் வாங்கிக் கொடுங்க! வலி குறையட்டும்! தகவல் தப்பா இருந்தா... திரும்ப அடிக்க வசதியா இருக்கும்!'' என்றுவிட்டு, காவல் நிலையத்தை விட்டு நகர்ந்தான்.

மணி கிட்டத்தட்ட நண்பகலைக் கடந்திருந்தது!

நேராக, எஸ்.பி. அலுவலகத்திற்குச் சென்றவன், அவரிடம் தான் சேகரித்த விவரங்களைக் காட்டி, அந்தக் கும்பலைக் கைது செய்யும் ஆணையில் கையெழுத்து கேட்டான்!

அவரும், ''உயிரோடு கொண்டு வா!'' என்ற இடைச் சொருகலுடன் அவனுக்கு அனுமதி வழங்கினார்!

அவரது அனுமதியைப் பெற்ற கையோடு, ஓர் தனிப்படை அமைத்து, பத்து காவலாளிகள் துணையுடன், ரபின் குற்றவாளிகளைப் பிடிக்கச் செல்லும் வழியில், அவனது கைப்பேசி சிணுங்கியது!

''என்ன விவேக்... சொல்லு!'' என ரபின், அதை எடுத்துக் காதில் வைக்க,

அவனது ''விவேக்'' என்ற அழைப்பை வைத்தே, வெளி வேலையாய் இருக்கிறான் என்று கணித்த விவேக், ''இல்லடா... நாலரை மணிக்கு... பொண்ணு வீட்டுக்கு வரோம்ன்னு சொல்லியிருந்தோம் இல்லையா? மணி நாலாச்சு... நீ எப்ப வரேன்னு தெரிஞ்சுக்கிறதுக்காக கால் பண்ணினேன்...'' என்றான்.

''ஹோ!'' என ஒரு நிமிடம் திகைத்தான் ரபின்! இன்று பெண் பார்க்கும் படலம் இருக்கிறது என்பதே அவனுக்கு மறந்து விட்டிருந்தது!

''என்னடா? வர லேட்டாகுமா?'' என்று விவேக், மீண்டும் கேட்க,

''ஹ்ம்ம்! நான் ஒரு கேஸ் விஷயமா வெளிய இருக்கேன்... நா நேரா பொண்ணு வீட்டுக்கு வந்துடுறேன் விவேக்! நீங்க முதல்ல போய்டுங்க!'' என்றான் ரபின்.

''ஹ்ம்ம்... சரி! அம்மாகிட்ட கேட்டுட்டுச் சொல்லுறேன்...'' என்று அழைப்பை வைத்த விவேக்கைத் தொடர்ந்து, அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் வேலு நாச்சியார் அழைத்தார்.

''ரபின்!'' என அவர் ஆரம்பிக்க,

''அம்மா... சாரிம்மா! ரொம்ப முக்கியமான வேலை... எனக்குக் கொடுத்த வேலையோட கடைசி கட்டம்மா! இப்ப டிலே பண்ணிட்டா... அப்புறம் அந்த செயின் பறிக்கிற கும்பலைப் பிடிக்கவே முடியாது! அதான்!'' என்றான் ரபின், தன் விளக்கிவிடும் தப்புணர்ந்த குரலில்.

''பரவாயில்லை ரபின்! எனக்குப் புரியுது! பொண்ணு வீட்டுக்காரங்களும் புரிஞ்சுப்பாங்க! நீ நல்லபடியா வேலையை முடிச்சிட்டு வா.. ஆறு மணிக்குள்ள வரதா இருந்தா பொண்ணு வீட்டுக்கு வா... இல்லைன்னா நம்ம வீட்டுக்கே வந்திடு! சரியா?'' என்றார் அவனது தொழிலை மதிக்கும் தாயாக.

இதுதான் வேலு நாச்சியார்! 'நான் இவ்வளவு ஏற்பாடு செய்திருக்கையில்... நீ எப்படி வராமல் போகலாம்?' என்று மூர்க்கத்தனமாய் ஆட மாட்டார்!

'பல தொழில்களை நிர்வகிக்கும் எனக்கு... உனது வேலையின் தேவை புரியும்! புரிகிறது!' என்பதை இதமாய் கூறிவிடுவார்!

தாயின் ஆளுமைக்குள் ஓர் அழகான புரிதல் புதைந்து கிடப்பதை ரசித்தவனாய் ''முடிஞ்சளவு சீக்கிரமா வரப் பார்க்கிறேன்மா... பொண்ணு வீட்டு அட்ரஸ் சொல்லுங்க! நோட் பண்ணிக்கிறேன்!'' என்றான் ராபின், தன் கை டைரியை எடுத்தபடியே.

''நான் விவேக்கை மெசேஜ் அனுப்பச் சொல்றேன்! நீ... வேலையைக் கவனி!'' என்ற வேலு நாச்சியார், கைப்பேசியை வைத்துவிட்டார்.

தன் பொன்னான நேரத்தை வீணடிக்கக் கூடாது என்று எண்ணத்துடன் செயல்பட்ட தாயார், மனதிற்குள் கொஞ்சியபடியே, கவனத்தை வேலையில் திருப்பினான் ரபீந்திரநாத்!

அடுத்த மூன்று மணி நேரமும், அவன் வாழ்வில் மிகவும் திகிலான நேரங்களாய் கடந்தன!

செந்தூர் பாண்டியன் மற்றும் மொக்கைசாமியின் குணநலன்களை முன்னிறுத்தி, அவர்களுக்குப் பின்னணியில் செயல்படும் கும்பலும் சாதாரணமான ஆட்களாய் தான் இருப்பர் என்றெண்ணி, சற்றே மிதப்பாய் இருந்துவிட்ட ரபினுக்கு, அவர்களது தோற்றமும்... அவர்களது தோரணையும்... முக்கியமாய் அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களும் வேறு பாடம் புகட்டின!

செந்தூர்பாண்டியனையும் மொக்கைசாமியையும் கைது செய்த விவரம், வெளியே யாருக்கும் தெரிந்து விடா வண்ணம் தான், அவர்களைக் கையாண்டிருந்தான் ரபின்!

ஆனால், அந்த நகை பறிப்பு கும்பல்... செந்தூரும் மொக்கையும் நகையுடன் திரும்பவில்லை என்றதுமே, சுதாரித்து விட்டிருந்தனர்.

அதன் விளைவாக, அவர்களில் பாதி பேர் தலை மறைவாகிவிட, மீதி பேர் தேனியை விட்டு ஓட்டமெடுக்கும் முன்னர், ரபினின் படை அவர்களை மடக்கியது!

அவர்கள் மூலமாக, மற்றவர்கள் சென்ற இடங்களைக் கண்டு பிடித்து, அங்கே விரைந்தது ரபினின் குழு!

கிட்டத்தட்ட... முழு கும்பலும் பிடிபட்ட நேரம், அக்கும்பலின் தலைவனான ''ரவி'' மட்டும், பெரியகுளம் அருகே உள்ள கிராமத்தில் இருப்பதாய் தகவல் சிக்கியது!

''இவனுங்க எல்லாரையும்... எஸ்.பி. ஆபீஸ்க்குக் கொண்டு போயிருங்க! அங்க இன்ஸ்பெக்டர் தனபாண்டியன் இருப்பார்... அவர்ட்ட கேட்டு... எம்ப்.ஐ.ஆர். போட்டுட்டு... வேற வேற ஸ்டேஷன்ல லாக்கப்பில அடைச்சிடுங்க!'' என்று தன் குழுவிற்கு ஆணை பிறப்பித்தவன்,

''நான்... அந்த ரவியை அர்ரெஸ்ட் பண்ணிட்டு வந்து... எஸ்.பி.யை மீட் பண்றதா சொல்லிடுங்க!' என்றதோடு, வண்டியை எடுத்துக் கொண்டு பெரியகுளம் நோக்கிப் பறந்தான்.

அப்போதே, மணி - 'ஆறு ஐம்பத்தியைந்து!' என்கையில், அவன் பெண் வீட்டிற்கா சென்றிருப்பான்?

பெரியகுளம் தாண்டி, வண்டி ரவி பதுங்கியிருக்கும் ஊருக்குள் சீறிப் பாய்ந்தது!

போலீஸ் ஜீப் ஊர் எல்லைக்குள் வந்ததுமே, ''எலேய்... போலீஸ் டேய்! ஓடு!'' என்ற குரல் கேட்க, பிரேக்கை வேகமாய் அழுத்தி, வண்டியை நிறுத்தினான் ரபின்.

குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தால், அங்கே மரத்தடியில் சிறு குடிசை போட்டு... சாராயம் காய்ச்சிக் கொண்டிருந்தனர்!

அங்கு குடித்துக் கொண்டிருந்த ''குடி'' மகன்களுள், ரவியும் ஒருவனாய் தென்பட, ரபின் ஜீப்பினுள் இருந்து குதித்தான்.

ரவியின் கூட்டாளிகளைப் பிடிப்பதற்காக நடத்தப்பட்ட வேட்டையில், ரவியின் புகைப்படம் ஒன்றை எடுத்து பாக்கெட்டில் வைத்திருந்தான் ரபின்.

அதை ஒரு முறை பார்த்து, சாராயக் கடையில் இருப்பவன் ''ரவி'' என்பதை உறுதி செய்து கொண்டவனின் கால்கள் வேகமாய் அங்கே ஓடின.

''கள்வன் பெரிதா? காப்பான் பெரிதா?'' என்ற வேட்டையில், காப்பானை விட உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் கலையில் வல்லவனாய் விளங்கிய கள்வன், காப்பானின் கையில் தன் கத்தியால் கோடு போட்டான்!

தோள்பட்டைக்குக் கீழே முழங்கைக்கு மேலே... அவன் போட்ட கோடுகளில் வலி உயிர் போனது ராபினுக்கு!

உதிரம் ஆறாய் வெளியேற, உயிர் வரை சென்ற வலியை, கையை உதறிக் கொண்டு மறைத்தவன், முன்னைவிட, அதிகக் கோபத்துடன் அவன் மீது பாய்ந்தான்.

திருடர்களின் தலைவனும், தன் பலம் முழுதையும் திரட்டி... ரபினைத் தாக்க, அங்கே ஓர் யுத்தம் ஆரம்பமாகியது!

குடி போதையில் இருந்த ரவி, ''பணத்தைப் போட்டா பொறுக்கிட்டுப் போற போலீஸ்கார நாயி... என்னையாவாடா பிடிக்க வந்தே?'' என்று உறும,

''பணத்துக்கு அலையுற பன்னி எல்லாம் நாயைப் பத்திப் பேசக்கூடாதுடா!'' என்று பதிலுக்கு உறுமிய ரபின்,

''நான்... நீ நினைக்கிற மாதிரி நாயில்லைடா! சிங்கம்! எல்லாருக்கும் ராஜா!'' என்றான், கர்ஜனையாய்.

தன் கர்ஜனையை நிரூபிக்கும் வண்ணம், தன் பலம் முழுதையும் தன் வலது உள்ளங்கையில் ஒன்று திரட்டியவன், அதை மடக்கி, ரவியின் முகத்தில் ஓங்கி ஓர் குத்து விட்டான்!

ரவிக்கு, உலகமே தட்டாமாலை சுற்றியது!

''கிர்ர்ர்!'' என சுற்றிய தலையை அவன் தாங்கிப் பிடிக்க, ரபினின் கரங்கள், அவன் சட்டையைக் கொத்தாய் பிடித்து, தன் பிடிக்குள் கொண்டு வந்து சேர்த்திருந்தன!

அவனிடமிருந்து எப்படியாவது தப்பிவிட வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே மூளைக்குள் ரீங்காரமிட, ரபின் யோசிப்பதற்குள், ரபின் இடுப்பில் சொருகியிருந்த பிஸ்டலை எடுத்து.. ரபினைச் சுட்டான் ரவி!

ஆனால், பொறி கலங்கியிருந்த சித்தம் அவனது குறியை... தவறச் செய்துவிட, ரபினின் தோள்பட்டையில் அது பதிந்து சென்றது!

ஏற்கனவே, கத்தியால் பட்ட காயங்களால் துவண்டிருந்த ரபின், இந்த துப்பாக்கி சூட்டில் தடுமாறிய போதும், ரவியின் பிடியைத் தளர்த்தவில்லை.

''போலீஸ்காரனையா சுட்டே? அதுவும் டி.எஸ்.பி.யை?'' என்றவன்,

இமைக்கும் நேரத்திற்குள், அவன் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கி, அவனது முழங்காலுக்கு அடியில் சுட்டான்!

வேலை முடிந்தது! ரவி பிடிபட்டான்!

நகர முடியாமல், துவண்டு விழுந்த ரவியை, அங்கிருந்தோரின் உதவி கொண்டு கயிற்றால் கட்டியவன், எஸ்.பி.அலுவலகத்திற்கு அழைத்து விவரம் கூறி, ஆம்புலன்ஸ் மற்றும் காவல்துறையை வர வழைத்தான்.

ரவியை காவல் துறையினரிடம் ஒப்படைத்து, அரசு மருத்துவமனையில் சேர்க்கச் சொன்னவன், தான் விவேக்கின் மருத்துவமனையில் இறங்கிக் கொண்டான்.

அடுத்த பத்தாவது நிமிடம், விவேக் மட்டுமல்லாது வேலு நாச்சியாரும் யுகவீணாவும் அங்கே விரைந்து வந்திருந்தனர்!

மூவருள், வேலுவின் முகம் அதிக வாட்டத்தைக் காட்டியதோ என்று சந்தேகமாய் இருந்தது ரபினுக்கு!

அந்தளவுக்கு, முகமே களையிழந்து வாடிப் போயிருந்தது! தனக்கு குண்டடி பட்டதால் தானோ என்றெண்ணியவனுக்கு, யுகாவின் முகத்திலிருந்த கலக்கத்திற்கும் வேலுவின் முகத்திலிருந்த கவலைக்கும் வித்தியாசம் இருப்பது நிச்சயமாய் பட்டது!

விவரம் கூறும் படலமும், வைத்தியமும் ஒரு சேர நடைபெற, "பொண்ணு வீட்டில என்ன சொன்னாங்கம்மா? நா வரலைன்னு வருத்தப்பட்டாங்களா?" என்றான் ரபின், கேள்வியாக.

தனக்கு அடிபட்டதைத் தாண்டி, வேறு ஏதோ ஒன்று அவரைக் குடைகிறது என்பதை உணர்ந்திருந்த ரபின், பெண் வீட்டார் விஷயமாக இருக்குமோ என்ற ஊகத்தில் தான், அந்தப் பேச்சை ஆரம்பித்தான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை!" என்று பட்டென கூறிய வேலு நாச்சியார்,

"அந்தப் பொண்ணு உனக்கு வேண்டாம்டா! அவங்க வீட்டுக்கு வரதா எந்த நேரத்தில சொன்னோமோ... இப்படி கத்தி குத்து... குண்டடி... படுத்த படுக்கையா கிடக்க! அந்த சம்பந்தம் நமக்கு வேண்டாம்!" என்றார் தீர்மானமாய்.

தன் வலியையும் மீறி, ரபின் சிரித்து விட்டான்.

"ஹஹஹா! சும்மா காமெடி பண்ணாதீங்கம்மா... வேலு நாச்சியார்... அதுவும் திருமதி. சங்கரன்... ராசியை முன்னிறுத்தி தன் மகனுக்கு வந்த வரனைத்

தள்ளி வைக்கிறார்ன்னு சொன்னா... ஊரில நம்பக் கூட மாட்டாங்க! ராசி... நட்சத்திரம்... குலம்.. கோத்திரம் எல்லாம்... நீங்க பேசும்போது... நல்லாவே இல்லம்மா காமெடி ட்ராக் ஓடுற மாதிரி இருக்கு!" என்றவன்,

விவேக்கின் முகத்திலும், யுகாவின் முகத்திலும் சிரிப்பைக் காணவும்,

"வேற எதுவோ... பெருசா நடந்திருக்கு! அது என்னன்னு சொல்லுங்க! சும்மா... காமெடி பண்ணாம!" என்றான், தாயின் கையைச் சுண்டி விட்டு.

"போடா லூசு! நிஜமா தான் சொல்லுறேன்..." என்று வேலு நாச்சியார் ஆரம்பிக்க,


"நான் சொல்லுறேன்டா... அந்தப் பொண்ணு நம்ம வீட்டு மருமகளா... அதாவது வேலுநாச்சியார் குடும்பத்தோட மருமகளா வரணும்ன்னா... அந்தக் குடும்பத்தில பிறக்காத... அதாவது வேலுநாச்சியாரோட வயித்தில பிறக்காத கீழ் ஜாதி விவேகானந்தன்... அந்த வீட்டை விட்டுப் போகணுமாம்!" என்றான் விவேக், ஏற்ற இறக்கத்துடன்.

"என்னது???" என்று ரபின் அதிர,

"எனக்குக் கூட அதான் சரின்னு படுது! அந்தப் பொண்ணு... பார்க்க அழகா இருக்கா ரபின்! நல்லா படிச்சிருக்கா! நல்ல குடும்பம்! நல்ல மரியாதை! அதை நான் ஏன் கெடுக்கணும்? நான் போயிடுறேன்னு சொன்னேன்... அதான் அம்மா செம மூட்

அவுட்!'' என்றான் விவேக், வேலு நாச்சியாரின் அதீத கவலையின் காரணத்தை விளக்கி,

வேலு நாச்சியார், விவேக்கை முறைக்க, ரபினோ ''அடச்சீ! பெரிய தியாகின்னு நினைப்பாடா உனக்கு? லூசு! லூசு! அவ எப்பேர்ப்பட்ட ரதியா இருந்தாலும்... எனக்கு வேணாம்டா!'' என்றான், சீற்றம் பொங்க.



7

ஒரு வாரம் கழித்து

''இந்தா... நாளனைக்கு ஊர் திருவிழா வருதில்ல... அதுக்குப் புதுத் துணி!'' என்று ஒரு கவரை, ரோஜாவின் முன்னே வீசி எறிந்தார் அவளது தந்தை.

புது உடை கிடைத்த சந்தோஷத்தை விட, தந்தை அதைக் கொடுத்த முறை மனதில் பெரும் வலியை உண்டு பண்ணியது கண்மணி ரோஜாவிற்கு!

'உனக்கெல்லாம் வாங்கிக் கொடுக்கணும்ன்னு எனக்குத் தலையெழுத்து!!!' என்ற சலிப்பு, அவரது ஒவ்வோர் செயலிலும் வெளிப்பட்டுக் கொண்டே இருப்பதை, இத்தனை காலம் பொறுத்த ரோஜாவிற்கு, இன்று ஏனோ கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது!

'ஏன்? ஏன்? ஏன் என்னைப் பிடிக்கவில்லை?' என்ற கேள்வி, இரண்டாயிரம் கோடியாவது

முறையாகத் தோன்ற, அவர் எறிந்துவிட்டுப் போன கவரை எடுத்துப் பார்த்தாள்.

கை எடுக்கும்போதே, 'எதுக்கு அதைப் போய்ப் பிரிச்சுப் பார்த்திட்டு இருக்கே? எப்பவும் போல... அரக்குப் பாவாடையும்... மஞ்சள் தாவணியும் தான் இருக்கப் போவுது! என்ன... அதோட நிறம் கொஞ்சம் மட்டுப்படும்... இல்லைன்னா தூக்கலா இருக்கும்! அவ்வளவு தானே வித்தியாசம்? இதுக்குப் போய்... அதைப் பிரிச்சுப் பார்த்திட்டு...' என்று மனம் குரல் கொடுத்தது!

நெஞ்சத்தின் சலிப்பையும் மீறி, 'இந்த வருஷமாவது வேற கலர் பாவாடை இருந்தா நல்லா இருக்கும்!' என்ற ஆசை மின்னத் தான் செய்தது!

என்ன மின்னி... என்ன பயன்?!

உள்ளே, குங்கும வண்ணத்தில் மாம்பழ வண்ண பார்டர் போட்ட பாவாடையும், மாம்பழ வண்ணத்தில் ஜார்ஜெட் தாவணியும், ரோஜாவைப் பார்த்து ஏளனம் செய்தன!

ரோஜாவின் கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் உருண்டோடி, புதுத் துணியை ஈரமாக்கின!

என்ன தோன்றியதோ, வேகமாய் கண்ணீரைச் சுண்டி விட்டவள், துணியை எடுத்துக் கொண்டு சமையலறை நோக்கி விரைந்தாள்.

அங்கே, அடுப்புடன் அடுப்பாக வெந்து கொண்டிருந்த தாய் - பொன்மாரியிடம் சென்றவள், ''அம்மா...!'' என்றாள் இரைச்சலாக.

அவளது அழைப்பில் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு திரும்பிய பொன்மாரி, ''ஏண்டி... ஏன் இப்புடி இரையுரவ?'' என்றார் வேகமாய்.

''எனக்கு இந்த டிரஸ் பிடிக்கல...!'' என்றாள், தன் கையிலிருந்த உடையை அவர் முன்னே தூக்கி விட்டெறிந்தவாறே.

மகளது செயலில் பதறியவராய், கண்களை வேகமாய் சுழற்றிச் சுற்றுப்புறத்தை ஆராய்ந்தார் பொன்மாரி.

கண் தெரியும் தொலைவில், கணவனையோ... மகனையோ காணாமல், நிம்மதிப் பெருமூச்சு விட்டவர், மகள் தூக்கியெறிந்த உடையைக் கையில் எடுத்து, ''ஏண்டி? இதுக்கு என்ன புள்ள வந்துச்சு?'' எனக் கேட்டது தான் தாமதம்.

''போம்மா! எனக்குப் பிடிக்கவே இல்லை! வருஷா வருஷம்... இதே கலர்ல எடுக்காட்டா என்ன? எம்புட்டு கலர் இருக்கு... அதில வாங்கிட்டு வந்தா என்னம்மா? ரேவதி... மீனா... மல்லிகா எல்லாரும்... விதவிதமா போட்டு வர்றாங்கம்மா... எனக்கு மட்டும் பாவாட... தாவணியே வாங்கித் தராரு! சரி... அதையானும் வேற கலர் எடுத்தாந்தா என்னம்மா? எல்லா வருஷமும்... இதே அரக்கு தானா? எனக்குப் பிடிக்கலம்மா...'' என்றாள் ரோஜா, அழுகையும் கோபமுமாய்.

''ரோசா... நீ நல்ல நெறம்டி... அரக்கு கலரு ஒனக்கு எடுப்பா இருக்கும்ன்னு தான் அப்பாரு எடுத்தாரு...

அதுக்குப் போயி...'' - பொன்மாரியை முடிக்க விடவில்லை ரோஜா.

''போம்மா! சும்மா சப்பைக்கட்டு கட்டாத! ராசுவ மட்டும் கடைக்குக் கூட்டிப்போய்... துணி வாங்கிக் கொடுக்கிறாரு! என்னைய கூட்டிப் போனா என்ன?'' என்ற ரோஜாவின் குரல், நிராகரிப்பில் நடுங்கியது.

''என்ன ரோசா இது? அவரு கொணம் தெரியாதா? இத்தினி நாளில்லாம... இன்னைக்கு என்னடி வந்துச்சு! ஏன்... இப்படி காளியாட்டம் ஆடிட்டு இருக்குதே?'' என்றார் கண்டிக்கும் குரலில்.

''எத்தனை நாளு தான்... இப்படியே இருக்கது? இன்னைக்கு... இந்தத் துணி விஷயத்தில நா பேச ஆரம்பிச்சா தான்... அடுத்து ஏதாவது பெரிய விஷயம் வந்தா... தைரியமா பேச முடியும்!'' என்றாள் ரோஜா, செந்தூருடனான தன் காதலை மனதில் வைத்துக் கொண்டு.

''என்னடி பெரிய விஷயம்? என்ன சொல்லுதே? ரோசா... எந்தலையில பெருசா ஏதும் குண்டைப் போட்டுறாதடி!'' என்று பொன்மாரி, பதறித் தான் போனார்.

''அச்சோ! நீ ஏன்மா அழுவுறே? அதெல்லாம் ஒண்ணுமில்லை!'' என்று தாயிடம் அடித்துப் பேசியவள்,

''எனக்கு... இந்த வருஷம் திருவிழாவுக்கு... வாடாமல்லி கலர் பாவாடையும்... பச்சை கலரு

தாவணியும் தான் வேணும்! இது வேணாம்!'' என்ற வள், தாய் வைத்திருந்த கவரை வாங்கி, அதிலிருந்த அரக்கு வண்ண உடையை வெளியே எடுத்து, தூக்கி எறிந்தாள்!

அடுத்த நிமிடம், ரோஜாவின் கூந்தல் கொத்தாய் பற்றப் பட்டது!

அவள் என்ன ஏது என்று சுதாரிக்கும் முன்பே, ''பெரிய படிப்பு படிக்கிற திமிரோ... பொட்ட நாயி...'' என்ற கர்ஜனையுடன், அவளது கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விழுந்தது!

பொறி கலங்கி நின்றாள் கண்மணி ரோஜா!

''ஐயோ! புள்ள தெரியாம பேசிப்புடுச்சுங்கிறேன்... விட்ருங்க... உங்க மொரட்டு அடியைத் தாங்காது!'' என்று பொன்மாரி இடைப்புகும் முன்னர்,

ரோஜாவின் இரண்டு கன்னங்களிலும், மாறி மாறி அடித்துக் கொண்டிருந்தார் பொன்மாரியின் கணவர்.

''ஆஆஅ... அம்மா.... வ... வலிக்குது...'' என்று ரோஜா அலறியது எல்லாம், அங்கே செல்லுபடி யாகாமல் போனது.

''வெளிய போய்... அவனவன்ட்ட ஏச்சு பேச்சு வாங்கி... நாயா பேயா அலைஞ்சு... நாலு காசு சம்பாதிச் சிருந்தா... இந்தத் துணியோட அரும தெரியும்! சீவி சிங்காரிச்சு... வயிறு ரொம்ப கொட்டிக்கிட்டு... அப் பன் சம்பாதிக்கிற பணத்தில படிக்கிற கழுதைக்கு எங்க இருந்து... இந்தத் துணியோட அருமை தெரியும்!'' என்று மேலும் கத்தியவர்,

''இந்தத் துணி கூடக் கிடைக்காம... எம்புட்டு பேரு கிழிசலையும்... கந்தலையும் போட்டுட்டு இருக் காங்க தெரியுமா? இந்தக் கழுதைக்கு... வாடாமல்லி கலரு கேக்குது!'' என்றார், கொத்தாய் பிடித்திருந்த ரோஜாவின் கூந்தலை விடுவித்தபடியே.

அவர் விடுவித்த வேகத்தில், தரையில் போய் விழுந்தாள் ரோஜா.

நெருப்பில் காட்டப்பட்ட இரும்பென, கன்னம் தகதகவென எரிய, அதைத் தேய்த்துவிட்ட ரோஜா வின் உடல், அழுகையிலும் தேம்பலிலும் விம்மியது!

வலியில் சுருண்ட மனதையும் உடலையும் பெரு முயற்சி செய்து, அடக்க முயன்றபோதும், கீழ் கண் வழியே தெரிந்த கன்னக் கன்றல்கள் அவளது அழு கையைக் கூட்டின.

தந்தையின் கை விரல்கள் ஐந்தும், அழுத்தமாய் பதிந்திருக்க, ரோஜாவின் ரோஜாப்பூ கன்னங்கள்... அடுப்பில் காய்ந்த இருப்புச் சட்டியாய் தகதகத்தன!

''ஏண்டி... ஏண்டி... இன்னைக்கு ஒனக்கு என்னடி வந்து தொலைஞ்சது? அந்தாளு கையால அடிபட ணும்ன்னே செய்யுதியா?'' என்று புலம்பிக் கொண்டே வந்த பொன்மாரி, மகளின் 'தோள் பிடித்து எழுப்பி விட்டார்.

''ஏம்மா... இப்படி பேசுறாரு? நா... அதிக விலை கொடுத்து... பட்டுப் பாவாடையா கேட்குறேன்? இதே பாவாடை - தாவணியை எனக்குப் பிடிச்ச

கலர்ல எடுத்துக் கொடுத்தா என்னம்மா? அதானே கேட்டேன்!'' என்று ரோஜா தன் மன உளைச்சல் தாங்காமல், உடைந்து அழவும்,

''என்னடி செய்யச் சொல்லுறே? அவருக்குப் பிடிச்ச மாதிரியே வாழ்ந்து பழகிட்டோம்... இனி மிச்ச வாழ்க்கையையும் அப்படியே வாழ்ந்திட்டுப் போயிருவோம்! எதுக்கு வீணா... அடியும் உதையும் பட்டுக்கிட்டு...'' என்றார் 'இதுதான் வாழ்க்கை! வாழப் பழகிக்கோ!' என்ற செய்தியைத் தாங்கிய குரலில்.

''என்னால முடியலம்மா... அவருக்குப் பிடிச்ச மாதிரி அவரு வாழட்டும்... எனக்குப் பிடிச்ச மாதிரி நா வாழுறேனே...'' என்று ரோஜா, இறைஞ்சுவது போல் கெஞ்ச,

''ரோசா! என்னடி... புதுசு புதுசா பேசுறே? பள்ளிக் கூடத்தில... கூடப் படிக்கிற புள்ளைகளைப் பார்த்து படிச்சுக்கிட்டு வந்தியா?'' எனக் கேட்ட பொன்மாரி,

''நீ பேசுறதெல்லாம்... நம்ம வீட்டில நடக்காது ரோசா! நம்ம வீட்டில... அப்பாரு வச்சது தான் சட்டம்! அதை மீறினா... அம்புட்டுத் தேன்! மாட்டடிக்கிற மாதிரி அடிச்சுப் போடுருவாரு! வேணாம் கண்ணு! புஸ்தகத்தில படிக்கிறதையும்... பக்கத்து வீட்டில நடக்கிறதையும் வச்சு... இங்க வாய விடாத கண்ணு! நம்ம ஒடம்பு தான் புண்ணாப் போகும்!'' என்றார் பெண்ணின் அடிபட்டுக் கன்றிய கன்னங்களைத் தடவிக் கொடுத்தவாறே.

தாய் சொல்லிய வார்த்தைகளை விட, தந்தையின் அடிகள் அதிகமாய் பாடம் கற்பிக்க, கண்ணீரை விழுங்கிக் கொண்டு கல்லூரி சென்றாள் கண்மணி ரோஜா.

போகும் வழியாவும், ''ச்சை... இந்த செந்தூரையும் ஒரு வாரமா ஆளைக் காணோம்? எங்க போனாருன்னே தெரியலையே!'' என்ற எரிச்சல் ஒரு பக்கமும்,

''இன்னைக்காவது அவங்க காலேஜ்க்கு வந்திடணும் கடவுளே! என்னாச்சு தெரியலையே? அவங்க கூட படிக்கிற கணேசனையும் காணல... திருமூர்த்தியையும் காணல...'' என்று நெஞ்சம், நேசம் கொண்டவனைத் தேடியது!

ஒரு வாரமாய் அவனைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை.

அவன் வகுப்பில் பயிலும் கணேசன் மற்றும் திருமூர்த்தியைத் தவிர வேறு யாரிடமும் ரோஜா பேசியதே இல்லை என்பதால்... சரியான விவரமும் தெரியவில்லை.

தன் வகுப்புத் தோழிகள் மூலமாக, விசாரிக்கச் சொன்னதிலும்... சரிவர விவரம் தெரியவில்லை.

தன் வகுப்புத் தோழி ரேவதியின் கைப்பேசியிலிருந்து, செந்துருவின் எண்ணிற்கு அழைத்தால், ''உபயோகத்தில் இல்லை'' என்றே வந்தது! கணேசனோ அழைப்பை எடுக்கவில்லை! திருமூர்த்தியிடம் கைப்பேசியே இல்லை!

'இன்றாவது... அவனை நேரில் கண்டு விட மாட்டோமா?' என்று ஏங்கிய நெஞ்சத்தின் பாரம் தாங்காமல், கல்லூரியில் அடியெடுத்து வைத்த ரோஜாவின் காதுகளில் ''ரோஜா!'' என்ற செந்தூரின் அழைப்புத் தேனாய் வந்து பாய்ந்தது!

அவனது குரலைக் கேட்டதுமே, நெஞ்சத்தின் காயமெல்லாம் மாயமாய் மறைந்தது போன்ற உணர்வு தோன்றியது ரோஜாவிற்கு!

''எங்க போனீங்க?'' என்று தொண்டையடைக்கக் கேட்டவளின் கைகளை இறுகப் பற்றியவன், ''என் னோட வா!'' என்ற சொல்லோடு அவளை அழைத்துக் கொண்டு, தங்கள் ஆஸ்தான மரத்தடிக்குச் சென்றான்.

''உங்களைப் பாக்காம எனக்குத் தலையே வெடிச் சிடும் போல இருந்துச்சு தெரியுமா?'' என்று அவள் விம்ம,

''எனக்கும் தான் ரோஜா!'' என்றான் அவன், குரல் தாழ.

''ரேவதி போனுக்கு... ஒரு போன் பண்ணக் கூடாதா? என்ன விஷயம்ன்னே தெரியாம... பயந்து போயிட்டேன்!'' எனக் கூறியவளை, அங்கிருந்த இருக்கையில் அமர வைத்தான் செந்தூர் பாண்டியன்.

அமர்ந்தவளின் எதிரே வந்து நின்றவனின் பார்வை அவளது முகத்தில் நிலைக்க, ''ஹே என்ன இது? யாரு அடிச்சா?'' என்று குரல் கத்திற்று.

சட்டென, அழுகை முளைத்து விட்டது ரோஜா விற்கு!

''யாரு அடிச்சா ரோஜா? ஐயோ... என்னம்மா கன்னிப் போயிருக்கு! யாரு... யாருன்னு சொல்லு!'' என்று அவன் துரிதப்படுத்த,

''அப்பா தான்!'' என்றாள் ரோஜா, கன்னத்தில் வழிந்த கண்ணீரை, புறங்கையால் துடைத்தபடி.

''ச்சை! மனுஷனா! அவனெல்லாம்! மிருகம்! மனுஷமிருகம்! எப்படிப் போட்டு அடிச்சிருக்கான்! பாவி பாவி!'' என்று பொரிந்தவனின் கையைப் பற்றி தன் கன்னத்தில் வைத்துக் கொண்டவள்,

''அதை விடுங்க! நீங்க எங்க போனீங்க?'' என்றாள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து.

''ஹ்ம்ம்! போலீஸ் ஸ்டேஷன்க்கு!'' என்றான் அவன், குரலில் கடுமை பரவ.

''ஹா! என்னது? போலீஸ் ஸ்டேஷனா? ஐயோ! என்னது? எதுக்குங்க?'' என்று ரோஜா பதற,

''என்ன செய்றது ரோஜா... ஏழையா பிறந்துட் டேனே? ஏதோ திருட்டுக் கேசாம்... அதை செஞ்ச வனைப் பிடிக்கத் துப்பில்லாம... பொய் கேசைப் போட்டு என்னை உள்ள தூக்கி வச்சிட்டான்... அந்த போலீஸ் பொறுக்கிப் பய!'' என்றான் செந்தூரு ஆவேசத்துடன்.

''ஐயோ! பொய் கேசா? அய்யயோ!'' - ரோஜா விற்கு இதற்கென்ன பதில் சொல்வதென்றே தெரிய வில்லை. இப்படியுமா நடக்கும் என்ற ஆச்சரியம் தான் அவளுக்கு!

''ஆமா! ஏதோ ஒரு பெரிய பணக்காரன் வீட்டிலே நகை திருட்டுப் போயிருச்சாம்... அந்தாளு... போலீஸ்ல கம்ப்ளைன்ட் பண்ணி, பத்து நாளகியும் திருடனைப் பிடிக்கலையான்னு மேலிடத்தில் புகார் மேல புகார் பண்ணியிருப்பான் போல! இவனுங்களுக்கு... என்ன செய்றதுன்னு தெரியல! அதான்... சும்மா ரெகார்ட்-க்காக நாலு பேரைப் பிடிச்சு உள்ள போட்டுட்டானுங்க!'' என்றான் செந்தூர், கோர்வையாக.

அவன் பேச்சில் தென்பட்ட அடக்கப்பட்ட கோபத்தை, உண்மையின் வெளிப்பாடு என்று நம்பிய ரோஜா,

''ச்சை! இப்படியுமா இருப்பாங்க!'' என்றாள் வெறுப்புடன்.

வீடே உலகமென்றும்... தந்தையே ராஜாவென்றும் வளர்க்கப்பட்டவளுக்கு, 'சம்பந்தமே இல்லாமல்... எப்படி செந்தூரைப் பிடித்து ஜெயிலில் வைக்க முடியும்? போலீஸ் கையில்... செந்தூரின் பெயர் எப்படிச் சிக்கியது?' என்ற யோசனை கூட வரவில்லை.

வீட்டுக் கிளியாய் வளர்ந்தது ஒரு புறமெனில், செந்தூர் மீது வைத்த காதலும் நம்பிக்கையும், 'போதிய சாட்சியமோ... ஆதாரமோ இல்லாமல்.. ஒருவரைக் கைது செய்ய முடியாதே?' என்ற சந்தேகத்திற்கு இடமே இல்லாமல் செய்தது!

அவன் மீது கொண்ட நேசம், ''ஐயோ... அப்புறம் எப்படி வெளிய வந்தீங்க?'' என அவளைப் பதற வைத்ததே ஒழிய, சிந்திக்க விடவில்லை!

''ஏழைன்னாலும்... எனக்கு எங்கப்பாவும் அண்ணனும் இருக்காங்க இல்ல! அவங்க... அங்க இங்க கன்னு ஆளைப் பிடிச்சு... என்னை வெளிய எடுக்க இவ்வளவு நாள் ஆகிடுச்சு!'' என்றான் அவன், லேசாய் எட்டிப் பார்த்த கர்வத்துடன்.

''ஹோ!'' என்று உள்வாங்கிய ரோஜா,

''போலீஸ் ஸ்டேஷன்ல அடிச்சாங்களா?'' என்றாள் பாவமாக.

''அடிச்சாங்களாவா? கட்டி வச்சு அடிக்கிற ஈனப் பயலுங்க தானே அவனுங்க..! அவங்களோட வீர... சூரமெல்லாம்... நம்மள மாதிரி சாதாரண ஆளுங்க கிட்ட தான் வெளிவரும்! தீவிரவாதி... கொலைகாரன்... கொள்ளைக்காரனை எல்லாம் விட்டுருவானுங்க!'' என்றான் வெறுப்புடன். ரபினிடம் வாங்கிய அடி மறக்குமா என்ன? அடி ஒண்ணு ஒண்ணும் இடி மாதிரி இல்ல இருந்திருக்கும்!

''ஹய்ய்யையோ!'' - ரோஜாவின் கண்களில் ஓர் தாயின் பரிதவிப்புத் தெரிந்தது!

''அதை விடு! நான் ஒரு முக்கியமான விஷயம் பேசணும்ன்னு தான் வந்தேன்...'' என்றான் அவன், அவள் கவனத்தைத் திசை திருப்பும் போர்வையில்.

அவன் பேச்சை விடுத்து, ''ரொம்ப அடிபட்டுடுச்சாபா? ஹய்யோ! என்னப்பா?'' என்று ரோஜா மீண்டும் புலம்ப,

''அவன் அடிச்ச அடியில நாலு நாளு எந்திரிக்க முடியல தான்... ஆனா... இப்போ பரவாயில்லை!''

என்று தன் மீது 'பரிதாபப் போர்வை' அழுத்தமாய் விழும்படி, வார்த்தைகளைக் கோர்த்தான் அவன்.

''ஹய்யோ! கட்டையில போறவன்... எப்படி அடிச் சிருக்கான்! ச்சை!'' என்று புலம்பிய ரோஜாவை,

''ரோஜா... அதை விடுன்னு சொல்றேன்னில்ல! விடு!'' என்ற அதட்டலில் தடுத்தவன்,

''நாம ரெண்டு பேரும்... இன்னும் ரெண்டு நாளில இந்த ஊரை விட்டு ஓடிப் போறோம்! போய்... கல்யாணம் பண்ணிக்கிறோம்!'' என்றான் முடிவு போல்.

''என்னது?'' என ரோஜா அதிர்ந்து நிற்க,

''ஆமா! இங்க இருந்தா... இந்த கேஸ் இல்லாட்டி... இன்னொரு கேஸ்ன்னு... என்னைய கிரிமினல் லிஸ்ட்ல சேர்த்துடுவானுங்க! அதனால... எங்க யாவது போய்டணும்!'' என்றான் அவன் தீர்மானமாக.

''இல்ல... இன்னும் உங்க படிப்பு முடியலையே!'' எனக் கூறிய ரோஜாவிற்கு, தன் படிப்பும் தான் முடியவில்லை என்ற எண்ணமே எழவில்லை.

''அதுக்கெல்லாம் பார்த்தா... முடியாது, ரோஜா! போயே ஆகணும்!'' என்று பிடிவாதமாய் இருந்தான் செந்தூர்.

''இல்ல... தப்பா எடுக்காதீங்க! படிப்பு முடியாம என்ன வேலை கிடைக்கும்? அப்புறம் பணத்துக்கு என்ன செய்றது?'' என்று ரோஜா தயங்கிக் கொண்டே கேட்க,

''ஏதாவது ஒரு வேலை கிடைக்கும்! ஆயிரம் ரெண்டாயிரத்துக்குக் கிடைச்சா கூட சரி தான்! அந்த வேலை கிடைக்கிற வரைக்கும்... செலவுக்குக் கொஞ்சம் பணம் வேணும்! ஹ்ம்ம்... அதை... நீ எடுத்திட்டு வரியா?'' என்றான் அவன், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல்.

''நானா? எப்படி?'' என்று ரோஜா விழித்தாளே ஒழிய, ''ஏன்? எதற்கு?'' என்று கேள்வி கேட்கும் அள விற்கு அவள் மூளையோ... மனமோ பக்குவப்பட வில்லை.

''நாளனைக்கு உங்க ஊரில திருவிழா இல்ல? அன்னைக்கு... புது டிரஸ் போட்டு... வீட்டில இருக்க நகையெல்லாம் போட்டுத் தானே உங்கப்பா கூட்டிப் போவாரு? அப்படியே என்னோட ஓடி வந்துடு! அந்த நகையை வச்சு நாம பிழைச்சுக்கலாம்!'' என்றான் அவன் நயமாக.

ஒவ்வோர் ஊர் திருவிழாவிலும், 'எனக்கு ஓர் அழகான மகள் இருக்கிறாள்! அவளுக்கு நான் இவ்வளவு நகை சேர்த்து வைத்திருக்கிறேன்!' என்று ஊர் கூடி நிற்கும் சந்தையில் அறிவிப்பு விடுப்பதற் காகவே, ரோஜாவின் தந்தை அவளை அழைத்துச் செல்வார். ரோஜாவை அவருக்குப் பிடிக்கவில்லை என்றாலும், 'என்னிடம் இவ்வளவு பணமிருக்கிறது' என்று டமாரம் அடித்துக் கொள்ள அவருக்குப் பிடிக்கும்!

விவரம் முழுதும் சேகரித்த பின்னரே, அவன் இந்த ஓடிப் போகும் படலத்தைத் திட்டமிட்டிருக்கிறான்

என்பது புரியாமல்.. ''ஹான்! ஆனா... ஆனா... எப்படி ஓடி வரது? பயமா இருக்கே?'' என்றாள் ரோஜா, முகம் வெளுக்க.

''என்ன பயம் வேண்டிக்கிடக்கு? நான்... உங்க ஊரு திருவிழாவுக்கு வண்டி எடுத்துக்கிட்டு வரேன்! கொஞ்சம்... உங்க வீட்டாளுங்ககிட்ட போக்குக் காட்டிட்டு... வண்டில வந்து ஏறிடு! அப்புறம் நான் பார்த்துக்கிறேன்!'' என்றான் அவன் அலட்சியமாக.

''ஆனா...'' என அவள் அப்போதும் தயங்க,


''என்ன ரோஜா... ஆனா... ஆவன்னாங்கிற? என்னை லவ் பண்ற தானே? இல்ல... நா மட்டும் தான் உன் பின்னாடி நாயி மாதிரி சுத்துனேனா?'' என்றான் அவன், பிரமாஸ்திரத்தை சரியாக பிரயோகித்து.

''ஐயோ... என்ன இப்படிக் கேட்டுட்டீங்க! உங்களை விட்டா... எனக்கு யாரு இருக்கா?'' என்று பதறிய ரோஜாவிற்கு, காலையில் தந்தை அடித்த அடி இன்னமும் வலித்ததன் காரணமாய், 'என் உலகமே இவன்தான்' என்று எண்ண வைத்து அவனது திட்டத்திற்கு செவி சாய்க்க வைத்தது!

என்ன வண்டியில் வருவான்... எங்கே நிற்பான்... எத்தனை மணிக்கு வருவான்... அவள் எத்தனை மணிக்கு வர வேண்டும்... என்னென்ன எடுத்து வர வேண்டும்... யாருக்கும் தெரியாமல் எப்படி வருவது என்றெல்லாம் பாடம் எடுத்தவன், இரண்டு நாட்

களில் கண்மணி ரோஜாவுடன் ஊரை விட்டு ஓடிப் போனான்!

8



ரோஜா, செந்தூர் பாண்டியுடன் ஓடி வந்து அரை நாள் ஆகியிருந்தது!

ஊர்த் திருவிழாவிற்காக, அந்த ஊரின் ரங்கநாயகி அம்பாள் தேரேறி உலா வந்து கொண்டிருந்தாள்.

அவளது அருங்காட்சியில் அனைவரும் உருகி நின்ற வேளையில், ''அம்மா... வயித்தை பிரட்டி... பிரட்டி வலிக்குதும்மா! வெளிய கிடக்கப் போறேன்னு நினைக்குதேன்... நா வீட்டுக்குப் போறேன்ம்மா...'' என்று பொன்மாரியின் காதைக் கடித்தாள் ரோஜா.

''என்னடி இது? காலையில எழுந்திருச்சு... ரெண்டு கை பொட்டுக்கடலையைத் தின்னிருக்க வேண்டியது தானே? இப்ப வந்து...'' என்று கடிந்து கொண்ட போதும்,

''சரி சரி வெருசா போ! தீட்டு.... கீட்டு பாவாடையில பட்டுற போவுது! சாமி குத்தம் ஆகிடும்!'' என்று மகளை 'நம்பி' அனுப்பி வைத்தார், பொன்மாரி.

தன் குடும்பத்தாரின் கண் பார்வையை விட்டு விலகி வந்து விட்டோம் என்று உறுதி செய்து கொண்டவள், தாவணியை எடுத்து, முக்காடு

போட்டுக் கொண்டு, ஊர் எல்லையில் உள்ள ஆல மரத்தின் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாருதி வேனில் ஏறினாள்.

''என்ன ரோஜா... இவ்வளவு நேரம் பண்ணிட்டே? ரெண்டு பேர் வந்து... யாரு என்னன்னு விசாரிச்சிட்டுப் போய்ட்டானுங்க!'' என்று செந்தூர் கடிந்து கொள்ள,

''அய்யயோ! விசாரிச்சாங்களா? என்ன சொன்னீங்க?'' என்று பதறியவள்,

''நான் வரும்போதும்... ரெண்டு மூணு பேர் பார்த்தாங்க... ஆனா... எங்க ஊரு ஆளுங்க மாதிரி தெரியல! என்ன நடக்குமோன்னுட்டு பயமா இருக்குதுங்க!'' என்றாள் குரல் நடுங்க.

''ஒண்ணும் நடக்காது! சீக்கிரம் வண்டில ஏறு! வேற எவனும் பார்க்கிறதுக்குள்ள... இங்க இருந்து போய்டலாம்!'' என்று அவசரப்படுத்தினான் செந்தூர் பாண்டியன்.

ரோஜா, கண்ணைத் திருப்பி வந்த வழியை வேகமாய் துழாவினாள்! எட்டிய தூரம் வரை யாரையும் காணவில்லை. தேருக்கு முன்னால், தீச்சட்டி ஏந்திய பக்தர்கள் பரவச ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தது கண்ணில் பட, ஊர் மக்கள் அனைவருமே அந்தத் தெய்வீக நிலையில் தங்களைத் தொலைத்து நின்றிருந்தனர்.

ஓரிரு வெட்டி ஆபிசர்கள் மட்டும், சாமியைப் பார்க்காமல்... சாமியைப் பார்த்த ஆசாமிகளை வேடிக்கை

பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்களது கண்ணும் கூட்டத்தை விட்டு வெகு தூரம் ஓடிவந்து விட்டிருந்த தன் மீது இருக்கவில்லை என்பதே ரோஜாவிற்கு நிம்மதியைக் கொடுத்தது!

ஆனால், வழியில் பஞ்சு மிட்டாயும்... குச்சி ஐஸும்... கலர் பலூனும்... ரங்க ராட்டினமும் வைத்திருந்த வியாபாரிகள் பலரது கண்கள் தன் மீது பதிந்து மீண்டதோ என்ற பயம் ரோஜாவை நடுங்க வைத்தது!

அதையெல்லாம் போட்டு மனதை வருத்திக் கொள்வதற்கு இடம் கொடுக்காமல், வண்டியைக் கிளப்பிக் கொண்டு ஊரை விட்டுப் பறந்தான் செந்தூர் பாண்டியன்! கண்டமனூர் கிராமத்தை விட்டு, தேனி நெடுஞ்சாலையில் வண்டி பறந்து!

அவனது வேகத்தில் மிரண்டு போனாள் ரோஜா!

''ஏன்... ஏன் இவ்வளவு வேகமா போறீங்க... மெதுவா ஓட்டுங்க!'' என அவள் குரல் நடுங்கச் சொன்னது, காற்றைக் கிழித்துக் கொண்டு மாயமாய் போனதே ஒழிய, செந்தூரின் வேகத்தைக் குறைக்கவில்லை.

தேனி - சென்னை நெடுஞ்சாலையில் ஓரிடத்தில் வண்டியை அவன் நிறுத்தும் வரை, ரோஜாவின் உயிர் அவள் கையில் இல்லை.

அவன் வண்டியை நிறுத்தியதும், ''ஏன் நிறுத்திட்டீங்க?'' என்றாள் பார்வையைச் சுழல விட்டபடி.

சர்... சர்ரென வாகனங்கள் இரைந்து... விரைந்து கொண்டிருக்க, வேறு ஆள் அரவமே இல்லை. கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும், ஒரு டீக்கடை

கூட இல்லை. அப்படியிருக்கையில்... ஏன் நிறுத்தினான் என்று ரோஜா யோசிக்கும்போதே,

''ரோஜா உன் நகையை எல்லாம் கழட்டி... இந்தப் பையில போடு...'' என்றான் அவன்.

''எ... எதுக்கு?'' என்று ரோஜா திக்க,

''என்ன எதுக்கு? தேர்ல உலா வர அம்மன் மாதிரி அவ்வளவு நகையையும் அள்ளிப் போட்டுக்கப் போறியா என்ன? ஒரு செயினை மட்டும் போட்டுக்கிட்டு... மத்ததைக் கழட்டி வை! நாம... இந்தக் காரை இங்கேயே விட்டுட்டு... பஸ்ல ஏறிப் போகப் போறோம்! பஸ்ல இவ்வளவு நகையையும் போட்டுட்டுப் போறது பாதுகாப்பு இல்ல!'' என்றான் அவன், அவசரக் குரலில்.

''பஸ்லையா? ஏன்?'' என்று ரோஜா ஐயம் கொள்ள,

''உங்க ஊர் ஆளுங்கல்ல... ஒருத்தன் இல்லாட்டியும் இன்னொருத்தன் நீ இந்த வண்டில ஏறினதைப் பார்த்திருப்பான்! அதை மோப்பம் பிடிச்சு... நம்மளை பிடிச்சாலும் பிடிச்சுடுவானுங்க! அதான்... இங்க வண்டியை நிப்பாட்டிட்டு... பஸ்ல போய்டலாம்! ஹ்ம்ம் சீக்கிரம்... நகையைக் கழட்டி வச்சுட்டு... சீக்கிரம் வா!'' எனத் தன் திட்டத்தை விளக்கினான் செந்தூர்.

அவன் சொல்லும் கருத்தில், தானும் உடன்பட்டமையால், நகைகளைக் கழட்டி, அவனது பைக்குள் போட்டாள் ரோஜா.

அடுத்த ஐந்தாவது நிமிடம், வண்டியை ஓர் புதர் மறைவில் விட்டவன், அவளை இழுத்துக் கொண்டு நெடுஞ்சாலைக்கு விரைந்தான்.

அந்த வழியாய் சென்ற அனைத்து பேருந்துகளையும் அவன் மறித்துக் கை காட்ட, ஒன்றுமே நிற்கவில்லை.

எழுபது கிலோ மீட்டர் வேகத்தில் செல்பவன், சடன் பிரேக் போட்டு எப்படி நிற்பான்? அதுவும்... வாகனங்கள் பறக்கும் நெடுஞ்சாலையில்? தான் வண்டியை திடீரென நிறுத்தினால், பின்னால் வரும் வண்டிக்காரன் என்ன செய்வான்?

நேரம்... போய்க் கொண்டே இருந்தது!

ரோஜாவின் கைகள், பயத்தில் வேர்வையைக் கக்கின!

''எனக்குப் பயமா இருக்குங்க! இந்நேரத்துக்கு... நா வீட்டில இல்லைங்கிற விஷயம் தெரிஞ்சிருக்கும்! ஊரே கூடித் தேட ஆரம்பிச்சிருப்பாங்க!'' என்றாள் அவள், பீதியில் உறைந்த குரலில்.

''பயப்படாத ரோஜா! சீக்கிரம் போய்டலாம்!'' என்று கூறிய செந்தூரின் நெற்றியிலும் வேர்வைத் துளிகள் ஆறாக ஓடின.

''ஒரு பஸ்சும் நிக்க மாட்டேங்குதே...'' என்று அவள் பதற,

''ஹ்ம்ம்... பாப்போம்... அடுத்த பஸ்க்கு.. நீ கை காட்டி நிப்பாட்டி பாரு... அப்படி இல்லைன்னா...

வண்டியை எடுத்திட்டுப் போயிறலாம்!'' என்றான் செந்தூரும், அவளது பயத்தின் நியாயம் உணர்ந்த வனாக.

''ஏங்க... பக்கத்து ஊரு எதுக்காவது போயி... அங்க இருந்து பஸ் ஏறிக்கலாம்ல! எதுக்கு... இப்படி பொட்ட வெயில்ல நிக்கணும்?'' என்ற ரோஜாவிற்கு, கால்கள் வலுவிழப்பது போல் தோன்றியது!

''புரியாம பேசாத ரோஜா! ஊருக்குள்ளன்னு போனா... நிறைய பேர் கண்ணில படற மாதிரி ஆகிடும்! இங்கன்னா... ஆள் நடமாட்டம் அதிகமிருக் காது!'' என்றவன், அடுத்த வண்டி வருவது தெரிந் ததும், ''வா.... வா.... வந்து கை காட்டு!'' என்றான் அவசரமாய்.

ரோஜா மூன்று நாலு பேருந்துகளை வழிமறித் ததில், ஆறாவதாய் வந்த பேருந்து நின்றது!

''ஹப்பாடா!'' என்ற நிம்மதி பெருமூச்சு வெளி யேற்ற அவர்கள் ஏறிய பேருந்து தான், அவர்களது வில்லனையும் சுமந்து வந்திருக்கிறது என்பதை அந்த இளம் ஜோடிகள் அறியவில்லை.

அடுத்த ஆறாவது மணி நேரத்தில், அவர்கள் சென்னையில் இறங்கியபோது, மாலை மயங்கத் தொடங்கியிருந்தது!

ஐந்து மணி பத்து நிமிடங்கள் என்று கடிகாரம் குறி சொன்னது!

''ஷப்பா! எவ்வளவு தூரமா இருக்கு?'' என்று ரோஜா ஆயாசப்படும்போதே, ''ரோஜா... இங்க

என்னோட பிரண்டு ஒருத்தன்... பழைய வண்ணாரப் பேட்டையில இருக்கான்... அங்க போய்டலாம்! அவங்க ஏரியால இருக்க ஒரு கோவில்ல... நம்ம கல் யாணத்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கானாம்! அதை முடிச்சிட்டு... அவன் வீட்டிலேயே தங்கிடலாம்!'' என்று செந்தூர் கூற,

''இன்னைக்கே கல்யாணமா? அதுவும் சாயந் திரமா?'' என்று அயர்ந்து போனாள் ரோஜா.

''ஆமா... இன்னைக்கே தான்! உன் கழுத்தில தாலியைக் கட்டினாதான்... நீ எனக்குங்கிற நிம்மதி எனக்கு வரும்! அதுக்கு அப்புறம்... உங்க ஊர்ல இருந்து எவன் வந்தாலும்... இவ என் பொண்டாட்டி... முடிஞ்சா கூட்டிட்டுப் போடான்னு நெஞ்சை நிமிர்த்தி சொல்லலாம்! தாலி கட்டுறதுக்கு முன்னாடி... உன் மேல எனக்கு எந்த உரிமையும் இருக்காது!'' என அவன் குரலில் பிடிவாதத்துடன் சொல்ல,

''அய்யயோ! இங்கேயே தேடி வந்துடுவாங்களா? நாம இங்க இருக்கோம்ன்னு எப்படித் தெரியும்?'' என்று தந்தையை எண்ணியே பயந்து போனாள் ரோஜா.

''இன்னைக்கு வராட்டியும்... இன்னும் கொஞ்ச நாளில வந்துடுவானுங்க!'' என்று செந்தூர் சொல்ல,

''எப்படியும் கொஞ்ச நாள் ஆகும்ல... அப்புறம் எதுக்கு இன்னைக்கே?'' என்ற ரோஜாவிற்கு, அந்தி சாய்ந்த நேரத்தில் திருமதி ஆவதற்கு இஷ்டமிருக்க வில்லை!

''ஐயோ! சும்மா... சொன்னதையே சொல்லாத ரோஜா! புருஷன் - பொண்டாட்டியா போனா தான்...

வீடு... வேலை... எல்லாமே ஈஸியா கிடைக்கும்!'' என்று எரிச்சலாக மொழிந்த செந்தூர்.

''என்னைக்கு இருந்தாலும்... நா உனக்கு... நீ எனக்குங்கும்போது... இன்னைக்கு பண்ணா என்ன? நாளைக்குப் பண்ணா என்ன?'' என்றான் கேள்வியாக.

''இல்ல... சாயந்திரத்தில...'' என்று ரோஜா இழுக்க,

''ரோஜா... இதோ பாரு... என்னை நீ லவ் பண்றியா இல்லையா?'' என்றான் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்து.

''என்னங்க இது? பண்றேன்ங்க! நீங்க தாங்க எனக்கு எல்லாமே!'' என்ற ரோஜாவின் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

''ஹே! எதுக்கு இப்ப அழறே?'' - செந்தூரால், அவளது கண்ணீரைக் காண முடியவில்லை. அவன் திருடன் தான். ரோஜாவின் நகைகளின் மீது ஆசை கொண்டவன் தான். பொய்யன் தான். ஆனால், அவன் ரோஜாவை விரும்பினான்! மனதார விரும்பினான்! அவளுடன் வாழ உவகை கொண்டான்!

திருட்டுக் கேஸில் ஜாமீனில் வெளியே வந்தவனுக்கு, எப்படியும் மீண்டும் உள்ளே சென்று விடுவோம் என்று உறுதியாகத் தெரிந்தது! நீதிமன்றத்தில், எப்படியும் வழக்கு அவனுக்கு எதிராய் தான் தீர்ப்பாகும்! மூன்று ஆண்டுகளோ... நான்கு ஆண்டுகளோ சிறைத் தண்டனை நிச்சயம்! அவன் உள்ளே சென்று விட்டால், ரோஜாவின் கதி? பிறந்த வீடு எனும் சிறையிலிருந்து புகுந்த வீடு எனும்

நரகத்திற்குச் சென்று விடுவாள்! இந்தக் கைதில் அவன் வாழ்க்கை மட்டுமல்லாது ரோஜாவின் வாழ்க்கையும் அடங்கியிருப்பது அவனுக்கு நன்றாகவே புலப்பட்டது! அவனும் தண்டனையிலிருந்து தப்ப வேண்டும்...

ரோஜாவையும் மணந்தாக வேண்டும்! அதற்கான வழியாய் தான், ஊரை விட்டு ஓடி வந்ததே!

காதலித்து ஓடி வந்ததன் கடைசிக் கட்டம் - 'கல்யாணம்!' என்ற இளவட்ட நம்பிக்கையே, மாலை நேரக் கல்யாணத்திற்கான ஏற்பாட்டை செய்ய வைத்தது!

அதற்கு, ரோஜா ஒத்துக்கொள்ளவில்லை என்பது அவனுக்குப் பெருத்த வருத்தத்தைக் கொடுக்க,

''ஏன் ரோஜா? என் மேல நம்பிக்கை இல்லையா ரோஜா? உன்னோட நகையை எடுத்திட்டு வரச் சொன்னேன்ங்கிறதுக்காக என்னைய நம்ப மாட்டேங்கிறியா? எனக்கு ஒரு வேலை கிடைக்கிற வரைக்கும் தான்... இந்த நகை தேவைப்படும்! அதுக்கப்புறம்... நான் உன்னை நல்லா வச்சுப்பேன்... ரோஜா! என்னை நம்பு! இப்பக்கூட... அந்த போலீஸ் கேஸ்ல மாட்டலைன்னா... ஊரை விட்டு ஓடியே வந்திருக்க வேண்டாம்! எல்லாம்... அந்தப் போலீஸ் நாயால வந்தது!'' என்று உருக்கத்தில் ஆரம்பித்து, உக்கிரத்தில் அவன் முடிக்க,

ரோஜாவால் அதற்கு மேல் மறுத்திருக்க முடியுமா என்ன?

''நீங்க என்ன சொன்னாலும் சரி!'' என்று தலை ஆட்டினாள் ரோஜா.

அடுத்த இரண்டாவது மணி நேரம் - ரோஜாவின் கழுத்தில் செந்தூர்பாண்டியன் தாலி கட்டினான்!

அடுத்த நான்காவது மணி நேரம் - ரோஜாவுடன் செந்தூர் பாண்டியன் தங்கியிருந்த வீட்டிற்கு, ரோஜாவின் தந்தை மற்றும் தம்பி தலைமையிலான படை வந்து சேர்ந்தது!

அடுத்த எட்டாவது மணி நேரம் - எஸ்.பி. அலுவலகத்தில் ரபின் என்ற ரபிந்த்ரநாத் (DSP) முன்னிலையில், 'எனக்கும் ரோஜாவுக்கும் இனிமேல் எந்த சம்பந்தமும் இல்லை' என்று எழுத்து மூலமாய் உறுதி கொடுத்தான் செந்தூர்!



9

ரோஜாவும் - செந்தூரும் ஏறிய பேருந்தில் ஏற கனவே அமர்ந்திருந்த வில்லனின் பெயர் - 'தென்னரசு!'

தென்னரசு - ரோஜாவின் தமக்கையின் கணவனின் தம்பியின் நண்பன்!

இவனுக்கு ரோஜாவைத் தெரியும்! ஆனால், ரோஜாவிற்கு இவனைத் தெரியாது!

அதனாலேயே, பேருந்தில் ஏறியதும், தனக்குத் தெரிந்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்று ரோஜா பார்த்தபோது, இவனது முட்டைக் கண் அவளது மூளைக்குள் மின்னவில்லை!

'ஹப்பாடா! யாருமில்ல!' என்று அவள் மூச்சு விடும்போதே, முட்டைக் கண்ணின் முருங்கைமரக் கைகள், கைப்பேசியை எடுத்தன.

ரோஜாவின் தமக்கையின் கொழுந்தன் கைப் பேசியை எடுத்ததும்,

''டேய்... மாப்ள! நா தென்னரசு பேசுறேன்டா...!'' என ஆரம்பித்தவன், தன் 'நாரத' வேலையை செவ்வனே செய்து முடித்தான்.

''என்னடா... சென்னைக்குப் போகலையா... நீயி?''

''போயிட்டுத் தான்டா இருக்கேன்... நா வேற விஷயமா கூப்பிட்டேன்...''

''என்ன விஷயம்டா... நா எங்க மதினியோட அம்மா ஊர் திருவிழாவுக்குப் போயிட்டு இருக்கேன்டா...''

''போயிட்டியா? போயிட்டு இருக்கியா?''

''டேய்! ஏன்டா படுத்துறே? எங்க வீட்டில எல் லாரும் போய்ட்டாங்க... நா இப்பத்தான் போறேன்!''

''நீ என்ன விஷயமா போறேன்னு எனக்குத் தெரியும்! அந்த ரோசாவை லுக்கு விடத் தானே? அது நடக்காது!'' என்றான் தென்னரசு, செந்தூரின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த ரோஜாவையே பார்த்தபடி.

''ஏன்டா நாயே.. அபசகுனமா பேசித் தொலையுறே?'' என்று எதிர்ப்புறம் எரிச்சல் குரல் ஓங்கி ஒலிக்க,

''உண்மையைச் சொல்றேன்டா! அந்தப் புள்ள... இங்க வேற ஒருத்தனோட வண்டியைக் கட்டிருச்சு!'' என்றான் தென்னரசு, ரோஜாவின் தோள் மீது படர்ந்த செந்தூரின் கரங்களில் பார்வையைப் பதித்து.

''என்னடா சொல்றே?'' என அடுத்தவன் பதற,

''ஆமா மாப்ள! நா போற பஸ்ல தான் இருக்காங்க...'' என்றான் இவன்.

''டேய்! உளறாதடா! அந்தப் புள்ள... ரொம்ப நல்ல புள்ளடா... குனிஞ்ச தலை நிமிராது!'' என்று அலுத்துக் கொண்டவன், ''வேற யாராவதா இருக்கும்டா லூசு! நீ அந்தப் புள்ளையை ஒரே ஒரு வாட்டி தானே போட்டோல பார்த்தே? அதான்... வேற யாரையோ பார்த்திட்டு... ரோஜான்னு உளறுறே!'' என்று முடித்தான்.

''டேய் டேய்! இல்ல மாப்ள! உங்க மதினியோட வளைகாப்பு போட்டோல காட்டினியே... அந்தப் புள்ள தானேடா? எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... அதுக்கு நீ ரூட்டு விடுறதும் நல்லாவே தெரியும்.. உங்க அண்ணன்ட்ட சொல்லி அந்தப் புள்ளையைப் பொண்ணு கேட்கப் போறேங்கிறதும் எனக்கு நல்லாவே தெரியும்! ஒரு வாட்டி பாத்தாலும்... நெஞ்சில பச்சக்குன்னு ஒட்டிக்கிற முகம்டா அந்தப் புள்

ளைக்கு! அதைப் போய்... நா மாத்தி சொல்லுவேனா?'' என அவன் 'விம்' போட்டு விளக்க,

அடுத்த முனையில் இருந்தவனுக்கு, முகம் முழுதும் வேர்த்தது!

ரோஜாவா? ரோஜாவா? அவளா? ஹய்யோ! மூளையே கலங்கும் போலிருந்தது!

''டேய்... அப்படியே லைன்ல இரு... இன்னும் அஞ்சு நிமிஷத்தில நான் ஊருக்குள்ள போயிருவேன்... அங்க நிலவரம் என்னன்னு பார்த்திட்டு... நீ சொல்றது உண்மையா பொய்யான்னு சொல்லுறேன்...'' என்றான் அவன்.

''போய்ப் பாருடா... எல்லாரும் லபோ திபோன்னு கத்திட்டு இருப்பாங்க...'' என்று தென்னரசு, குறி சொல்வது போல் அடித்துக் கூறினான்!

அவனது கூற்றை மெய்யாக்கும் வண்ணம், அடுத்தவன் ஊர் எல்லையை மிதிக்கும் போதே, 'குய்யோ முறையோ!' என்று ஒரே கூச்சல்! பெரும் கும்பல்!

அதில், தன் அண்ணனும் இருப்பதைக் கண்டு, ''என்னண்ணே... ரோஜாவைக் காணோமா?'' என்று எடுத்ததுமே விஷயத்திற்குத் தாவினான்.

அவ்வளவுதான்! அங்கே பெரும் நிசப்தம்!

''டேய்.. பாவி.. அவ ஓடிப் போனது உனக்குத் தெரியுமாடா? குடியைக் கெடுத்திட்டியேடா! என்கிட்டே கேட்டிருந்தா... நானே பரிசம் போட்டிருப்

பேனே... இப்படி யாருக்கும் தெரியாம...'' என்று அவன் தாய், ஒப்பாரி வைக்க,

''அடச்சை நிறுத்தும்மா! ஓடிப்போறவன்... அவளோட ஓடியிருக்க மாட்டேன்... இங்கன நின்னுட்டு, அவ ஓடிட்டாளான்னு கேட்டுட்டா இருப்பேன்?'' என எரிந்து விழுந்தவனை,

''தம்பி... ரோசாவை எங்கேயும் பார்த்தீகளா? எங்க? சீக்கிரம் விவரம் சொல்லுங்க...'' என்று துரிதப்படுத்தினார் ரோஜாவின் தந்தை.

''நா பாக்கலை மாமா! என் கூட்டாளி ஒருத்தன்... சென்னை போயிட்டு இருக்கான். அவன் போற பஸ்ல இன்னொரு பையனோட ரோஜா இருக்காம்!'' என்றான் அவன் சுருக்கமாய்.

''தெருப்பொறுக்கி கழுத!'' என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பிய அந்த ஜாதிக் கட்சியின் முக்கிய உறுப்பினருக்கு, கழுத்து நரம்புகள் புடைத்தன!

''வண்டி எங்க இருக்குன்னு கேளுங்க தம்பி... மடக்கிப் பிடிச்சு... அந்தக் கழுதையை அங்கேயே கொன்னு போட்டுடலாம்!'' என்று அவர் எகிற,

கைப்பேசி கைமாறியது!

விவரம் தெரிந்ததும், ''நாங்க பின்னாடியே வாரோம் தம்பி! நீங்க... பஸ் எங்க இருக்குதுன்னு விவரம் சொல்லிட்டே இருங்க!'' என்று அவர் தென்னரசுக்கு உத்தரவு கொடுத்தார்.

அதற்குள், ரோஜாவின் அக்கா கணவர், ''ஏன் மாமா... பஸ்ஸ அப்படியே நிறுத்தச் சொல்லுவோமா? தென்னரசு மடக்கிப் பிடிச்சு வச்சிருந்தா... நாம போய் ரோசாவைக் கூட்டியாந்துடலாம் இல்ல!'' என்று யோசனை கூறினார்.

''இல்ல மாப்பிள்ள! ஒத்த ஆளால பஸ்ஸை நிறுத்தி, அவுங்களைப் பிடிச்சு வைக்க முடியாது! பஸ்காரனும்... வண்டியை நிறுத்த மாட்டான்! அந்தக் கழுதையை இழுத்திட்டு ஓடினவன்... ஆளு எப்படியோ? தென்னரசை அடிச்சுப் போட்டுட்டு... பொண்ணை வேற எங்கேயும் கூட்டிட்டுப் போய்ட்டா... நம்மளால கண்டு பிடிக்க முடியாது!'' என்று முடித்து விட்டார், பெரியவர்.

அவர் சொல்வதும் சரியென்று பட, ரோஜா மற்றும் செந்தூரின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் ஒற்றனானான் தென்னரசு.

ஊரே கூடி, ரோஜாவின் வாழ்வை சீர் குலைக்கக் கிளம்பியது!

''நம்ம ஜாதிப் பெருமைய குழி தோண்டிப் புதைச்சுட்டாளே! பாவி!'' என்று ஆளாளுக்கு, தங்கள் 'ஜாதி' பற்றை முன் வைத்தனர்!

''நம்ம குல பெண்டுக... எதுவாவது வாசலைத் தாண்டிப் போயிருக்கா? இந்தப் புள்ள இப்படி பண்ணிப்புடுச்சே? அதுவும்... ஜாதில முக்கியஸ்தரா இருக்க வேலுச்சாமி மவ இல்ல இப்படிப் பண்ணிருச்சு! நெஞ்சு நிமிர்த்தி நின்ன மனுஷன்... இப்ப

நிலம் பாக்க நிக்காரே!'' என்று இலை மறைகாயாக, ரோஜாவின் தந்தையின் ஜாதி வெறிக்கு எண்ணெய் ஊற்றினர்.

வெகு சிலரே, ''ஓடிப் போன பையனும் நம்ம சாதியா இருந்தா... போனது போகட்டும்ன்னு விட்டிருங்கண்ணே!'' என்று தங்களது சிபாரிசை முன் வைக்க,

அதற்கு, ''நம்ம சாதி ஆளா இருந்தா... தகிரியமா பொண்ணு கேட்டிருப்பான்ய்யா! எனக்கு என்னவோ *** ஜாதி நாயா தான் இருக்கும்ன்னு தோணுது! அவைங்க தான்... முதுகில குத்துவாய்ங்க!'' என்ற அனுமானமும்... ஆத்திரமும் பரிசாய் வந்தது!

சென்னை செல்வதற்கு முன்னரே, ரோஜாவை இழுத்துக் கொண்டு ஓடியவன் ஓர் வேற்று ஜாதிக்காரன் என்ற முடிவுக்கு அனைவருமே வந்து விட்டிருந்தனர்!

உடலில் ரத்தம் ஓடுவதற்குப் பதிலாக, சாதியெனும் சாக்கடையை கரைத்து ஊற்றியிருக்கும் சதைப் பிண்டங்களுக்கு, தன் உடம்பில் ஓடும் ரத்தமே பெரிது என்ற மூட எண்ணம்!

ரத்தத்தில் கூடக் குறிப்பிட்ட பிரிவுகள் தானுண்டு! ஆனால்... இந்தப் பாழாய்ப் போன ஜாதியில் தான் எத்தனை எத்தனை பிரிவுகள்! கோட்பாடுகள்! கொள்கைகள்! குருதிப் பகுப்பினத்தில் கூட, குருதிகள் ஒன்றோடு ஒன்று ஒத்துப் போகும்! ஆனால், இந்த ஜாதிப் பகுபினத்தில்?

எந்த ஜாதியுமே... 'O' குருதி வகையாகவும் இருக்க விரும்புவதில்லை! 'AB' குருதி வகையாகவும் இருப்பதில்லை! (O - Universal donor; AB - universal receipient).

ஆனால்... இந்தச் சாதிகள் மட்டும் சாக்கடையைக் கூடக் கலக்க விடுவதில்லை!

''ஜாதிகள் இல்லையடி பாப்பா!'' என்று அந்த முறுக்கு மீசைக் கவிஞன் பாடியதை, ஏடுகளில் மட்டுமே படித்து, ஏறக்கட்டி வைத்திருக்கும் இந்த சமூகம் என்று தான் மாறுமோ? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது! என்ற பழமொழியைக் கண்டுபிடித்தவனை கைது செய்தால், ஒருவேளை மாறலாம்! ஹ்ம்ம்!

கௌரவத்தின் ஆணி வேராய் ஜாதியைக் கருதும் சமூகத்தில் பிறந்த பாவம் போலும், ரோஜா சென்று கொண்டிருந்த பேருந்தைத் துரத்திக் கொண்டு ஆறேழு வண்டிகள் வீறு கொண்டு பாய்ந்தன!

பேருந்து சென்னையை அடைந்ததும், தென்னரசுக்கு பொறுமை பறந்தது!

''டேய்... நானே என் ஆளைப் பார்க்க வந்திருக்கேன்டா... அது நைட் டியூட்டிக்குப் போறதுக்கு முன்னாடி... நா பார்த்தாகணும்! அவங்க சென்னையில தான் இருக்காங்க... நீங்க கண்டு பிடிச்சுக் கோங்க!'' என்று அவன் சலிப்பு கொள்ள,

''டேய் தென்னரசு! இப்படி நட்டாத்துல விட்டா எப்படிடா? ப்ளீஸ்டா... சென்னையில எங்க

இருக்காங்கன்னு கண்டு பிடிக்கவே ஒரு மாசத்துக்கு மேல ஆகிடும்டா... ப்ளீஸ் மச்சான்! கொஞ்ச நேரம்டா...'' எனக் கெஞ்சினான் அடுத்தவன்.

''ஹ்ம்ம் உனக்காக செய்றேன்... ஆனா... அவங்க எங்க போறாங்கன்னு ஒட்டுக்கேட்டு... உன்கிட்ட சொல்லிட்டுப் போயிடுவேன்! இப்பவே... என் ஆளு நூறு வாட்டி கூப்பிடுடுச்சு! நீங்க... பண்ற அலப் பறையில... அது செகண்ட் காலிலேயே போகுதுடா! ஏன் போனை எடுக்கலைன்னு காளியாட்டம் ஆடப் போகுது! அய்யோ!'' எனத் தனது கவலையை முன் வைத்தான்.

''என்னடா இது? இப்பப் போய்... இதைப் பேசிட்டு இருக்கே? ஒரு ஊரோட கௌரவம்டா இது! எங்க மாமாவோட கௌரவமே... மண்ணுல புதைஞ்சு போச்சுடா! அது... முழுசா போறதுக்கு முன்னாடி... அந்தப் புள்ளையை ஊருக்குக் கூட்டியாரணும்!'' என்று வெறி வந்தவன் போல் பேசினான், ஜாதி பற்று கொண்ட ''நல்லவன்.''

''ஏய்! உங்களுக்கு அந்தப் புள்ள காதலை அழிக் கணும்! எனக்கு என் காதலை வளக்கணும்! அழிக் கிறதைவிட வளக்கிறது பெருசுடா! நா அந்த வேலையைப் பாக்கப் போறேன்!'' என்று தத்துவம் பேசினான் அடுத்த நல்லவன்.

''டேய் தென்னரசு!'' என அவன் மேலும் பேசும் முன்னர்,

''அவங்க ரெண்டு பேரும் வண்ணாரப்பேட்டை போறதா பேசிக்கிறாங்க! இதுக்கு மேல நீங்க

பார்த்துக்கோங்க! என் ஆளுகிட்ட இருந்து... இதோட அம்பது மெசேஜ் வந்திருச்சு! இப்பவும் நா போக லைன்னா... இதான் நாங்க சந்திக்கிற கடைசி நாளுன்னு சொல்லிருச்சு! நா வாரேன்!'' என்றவன், கைப்பேசியை அணைத்துவிட்டு, ஓடியே போனான்! அவன் கவலை அவனுக்கு!

அதன் பின்னர், தன் காதலியின் எண்ணைத் தவிர்த்து எந்த எண்ணிலிருந்து அழைப்பு வந்தாலும், அதை அவன் எடுக்கவில்லை! அதான்... வேண்டிய வில்லங்கம் செஞ்சாச்சே! இதுக்கு மேல என்ன செய் யணும்?

ஊரிலிருந்து கிளம்பும் முன்னரே, காவல் நிலை யத்தில் போய் ''ரோஜாவை யாரோ கடத்தி விட் டார்கள்'' என்று கம்ப்ளைன்ட் கொடுத்து விட்டுக் கிளம்பியிருந்தனர்.

அதுவும், குறிப்பிட்ட ஒரு காவல் நிலையத்தில் கொடுத்தால் பிரச்சனை வரும் என்றெண்ணினரோ என்னவோ, ''எஸ்.பி.'' அலுவலகத்திலேயே முறை யீட்டைப் பதிவு செய்தனர்!

அவர்கள் வந்த நேரம், ரபின் அங்கு இல்லை!

அவன் வந்த பின்னரும் கூட, அந்த வழக்கு பற்றிய செய்தி அவன் காதை எட்டவில்லை! அவன் தான், நகை பறிப்பு வழக்கில் தீவிரமாய் செயல் பட்டுக் கொண்டிருந்தானே!

ரோஜாவின் தந்தை வேலுச்சாமியும்... அவரது குழுவும் சென்னையை அடைந்து, வண்ணாரப்

பேட்டை ஏரியாவை சல்லடை போட்டு சலித்ததில், இரண்டே மணி நேரத்தில், ரோஜா இருக்கும் இடம் தெரிந்து போயிற்று!

திருமணம் முடிந்த கையோடு, செந்தூரின் நண்பன் பிரபாகரன் வீட்டில் தங்கியிருந்தனர் தம் பதியர், தனியாக அல்ல! நண்பனின் குடும்பத்தோடு தான்!

இரவு உணவு முடித்து, ''காலையில இருந்து பஸ்ல வந்தது... படுங்க!'' என்று பிரபாகரனின் தாயார் கூறும்போதே,

கதவு படபடவென தட்டப்படும் ஓசை கேட்டது!

உடல் தூக்கி வாரிப்போட, ''ஹய்யோ!! அப்பாரு தான் வந்துட்டாரு!'' என்று ரோஜா பதற,

''இவ்வளவு சீக்கிரம் வர வாய்ப்பே இல்லையே! எப்படி?'' என்று செந்தூர் யோசிக்கும் போதே, கதவு உடைந்துவிடும் போல் இடிக்கப்பட்டது!

ரோஜா செந்தூரின் அருகே சென்று, அவனது கரங்களை இறுகப் பிடித்துக் கொண்டாள்!

''எனக்குப் பயமா இருக்குங்க!'' என்று வாய் கூற, கண்கள் பயத்தைக் கண்ணீராய் வழிய விட்டன!

கதவு தொடர்ந்து இடிபட்டது!

அக்கம் பக்கத்தார் கூடிவிட்ட சத்தமும் கேட்டது!

சென்னை போன்ற ஓர் ஊரில்... வாடகை வீட்டில் வசிப்பவருக்குத் தான் தெரியும்! வாடகைதாரரின் கஷ்டம்! சின்ன ஆணிக்கே... 'ஆடி' காரை இடித்தது

போல் பேசும் வீட்டு உரிமையாளர்கள்... கதவு உடைந்து கிடந்தால், வெள்ளை மாளிகையின் சொந்தக்காரர்கள் போல் ஆடி விடமாட்டார்கள்?

வெளியே நிற்கும் மிருகங்களுக்கு... 'ஜாதி வெறி' என்றால், ஒண்டுக்குடுத்தன வாசிகளுக்கு 'வீட்டுக் காரர் போபியா!'

வெளியே இருப்பவனைவிட, வீட்டுக்காரன் வில்லனாய் தெரிய, பிரபாகரின் தாய், வேகமாய் சென்று கதவைத் திறந்துவிட்டார்.

உள்ளே நுழைந்தவர்களைப் பார்த்து, ரோஜா அப்படியே மயங்கிச் சரிந்தாள்!

முதலில் வீட்டினுள் பேயென நுழைந்த வேலுச் சாமியின் கண்களில், சொந்த மகள் கூடப் பட வில்லை! அவளது கரங்களைப் பற்றியிருந்த ஆண் தான் பட்டான்!

''பார்த்தாலே தெரியல! இந்த நாயி... *** ஜாதி ஆளுடா! கொல்லுங்கடா இவனை!'' என்று அவர் கர்ஜிக்க,

அவருடன் வந்தவர்கள் அனைவரும், செந்தூரை நோக்கி விரைந்தனர்.

அதற்குள், ''ஏய்... சண்டாளக் கழுத! எனக்குன்னு வந்து பிறந்தியே!'' என்று கத்தியபடியே, கீழே சரிந்து விழுந்திருந்த ரோஜாவின் முடியைப் பிடித்துத் தரதரவென இழுத்தார் வேலுச்சாமி.

''அவளை விடுங்க... அவ உங்க மகளா இருந்திருக்கலாம்... ஆனா இப்ப என்னோட பொண்டாட்டி!

அவ மேல ஒரு அடி விழுந்துச்சு... நா மனுசனா இருக்க மாட்டேன்!'' என்று செந்தூர் குரல் கொடுக்க,

வந்திருந்தோர் அனைவரும் ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்றனர்!

அந்த மௌனத்தைக் கலைத்த உரிமை வேலுச் சாமியையே மீண்டும் சேர்ந்தது!

''பொண்டாட்டியா? அடிப்பாவி... இவனைக் கல்யாணமே பண்ணிட்டியா? மூளி!'' என்று இரைந்தவர்,

மகள் மயங்கிக் கிடக்கிறாள்! உணர்வற்றுப் போயிருக்கிறாள்! புலன்கள் செயலிழந்து இருக்கிறாள்! என்ற நினைப்பு சுத்தமாய் இல்லாமல்,

அவளது முடிக்கற்றையை விட்டவர், கீழே தொப்பென்று தரையில் மோதி விழுந்த ரோஜாவின் உடலை ஓர் உதை விட்டார்.

''அம்மா...'' என்று முனங்கிய ரோஜாவின் உணர்வு திரும்பும் முன்னர், குனிந்து அவளது கழுத்தைப் பலம் கொண்ட மட்டும் திருப்பியவர்,

அதில் தொங்கிக் கொண்டிருந்த தாலியை ஒரே இழுப்பில் பிடித்து இழுத்தார்!

கழுத்தில் ரத்தம் கீற்றாய் பெருக, ரோஜாவின் தாலி, வீட்டை விட்டு வெளியே தூரப் போய் விழுந்தது!

''அய்யோஒஒ! அம்மா!'' என அலறினாள் ரோஜா!

அந்த அலறல் - கழுத்தில் பட்ட காயத்தினாலா? இல்லை - தாலி ஏறிய இரண்டாவது மணி நேரமே அது பறித்து எறியப்பட்ட கொடூரத்தினாலா?

நம் குலப்பெண்களைப் போலவே, ரோஜா தன் காயத்திற்காய் அழுதிருக்கவில்லை!

ஆசை கொண்டு மணந்தவன், அன்பு கொண்டு கட்டிய தாலி!

வாழ்வு விடிந்துவிட்டது என்ற நம்பிக்கையுடன் பெற்றுக் கொண்ட தாலி!

உனக்கு நான் - எனக்கு நீ என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்து இடவைத்த தாலி!

ஐயோ! போய்விட்டதே! போயே போய்விட்டது!

கழுத்தில் ஏறி முழுதாய் ஓர் நாள் கூட ஆக வில்லை! ஏன் அரை நாள் கூட ஆகவில்லை! அதற்குள் ஹய்யகோ!

ரோஜாவிற்கு, தலைக்குள் ரத்த நாளங்கள் வெடிப்பது போல் சத்தம் கூடக் கேட்டது! அந்த அளவுக்கு அதிர்ச்சி!

''ஹய்யோ! என் தாலி... செந்தூர் கட்டின தாலி!'' என்று மீண்டும் அலறியவள், தன்னைப் பற்றிய தந்தையின் கைகளை வேகம் கொண்டு உதறினாள்!

''என் தாலி!'' என்று அவள் கதறிக் கொண்டு ஓட, அவளது முடியைப் பிடித்து, ஓட முடியாதபடி நிறுத்தினார் அவளது தந்தை!

''ஐயோ! விடுங்கப்பா! தாலி... என்னோட தாலி!'' என்று அலறியவள்,

''எதுக்குடி உனக்குத் தாலி... அதான் கட்டினவனே சாகப் போறான்... எப்படியும் அத்து எறிய வேண்டியது தானே!''என வேலுச்சாமி கத்தியதற்கு ஏற்ப, செந்தூரின் மேனியை புண்ணாக்கிக் கொண்டிருந்தனர், அனைவரும்.

அதைத் தடுக்க வந்த அவனது நண்பர்கள் பலரும், பற்பல காயங்களுடன் கீழே விழுந்து கிடந்தனர்.

''ஐயோ வேணாம்பா! அவரை விட்ருங்க! வேணாம்ப்பா!'' என்று ரோஜா கெஞ்ச,

''அவனுக்கு உனக்கும் இனிமேல் சம்மந்தமில்ல! மரியாதையா போய் காரில் ஏறு! போற வழியில ஏதாவது குளத்தில தள்ளி விட்டுட்டுப் போய்டுறேன்!'' என்றவர், அவளைத் தரதரவென இழுத்துக் கொண்டு, தான் வந்த வண்டிக்கு விரைந்தார்.

''அவனைத் தூக்கிட்டு வாங்கடா! ஹைவேல எங்கயாவது தூக்கி வீசிட்டுப் போயிறலாம்!'' என அவர் குரல் கொடுக்க,

அவரது தம்பி மொக்கையன் ''அண்ணே! அவனை முடிக்கிறது ஒண்ணும் பெரிய விஷயமில்ல... ஆனா... போலீஸ்ல வேற கம்ப்ளைண்ட் கொடுத்திட்டு வந்திருக்கோம்... அது நம்ம பக்கம் திரும்பிடக் கூடாது! அதான் பார்க்கிறேன்! அவனைக் கவனிக்கிற விதத்தில கவனிச்சு... நம்ம பொண்ணுக்கும் அவனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லைன்னு எழுதி வாங்கிடலாம்!'' என்று யோசனை கூறினார்.

அது சரியென்று பட, செந்தூரின் உடம்பில் உயிரை மட்டும் விட்டு வைத்துவிட்டு, உதிரம் உறைய அடித்தனர் அந்தக் காட்டுமிராண்டிகள்!

ஒரு கட்டத்தில் ''இனி உனக்கு ஒரு நாளும் ரோஜா கிடைக்க மாட்டா? கிடைக்காத ஒண்ணை நினைச்சிட்டு... உயிரை விடப் போறியா? இல்ல... எனக்கும் அவளுக்கும் சம்மந்தமில்லைன்னு எழுதிக் கொடுத்திட்டு... உயிரை விடாம இருக்கியா?'' என்று நிபந்தனை வைத்தான், ரோஜாவின் தம்பி. மனம் 'ரோஜா!' என்றபோதும், மூளை 'உயிர்' என்றது!

அதிலும், உருட்டுக் கட்டையால் அடிவயிற்றில் ரோஜாவின் தம்பி குத்தியபோது, சிறுகுடல் கிழிந்து... நார் நாராய் தொங்குவது போல் உயிர் வரை வலித்தது! சிங்கத்தின் ஒரு அடியையே தாங்க முடியாமல், நான்கு நாட்கள் மருத்துவமனையில் இருந்த செந்தூருக்கு, பல பன்னிகள் ஒன்றாய் கூடி அடித்த அடிகளைத் தாங்கும் திராணி இருக்க வில்லை!

அவன் அடுத்த அடி வைக்கும் முன்னரே, வலியின் செய்திகளைப் பதிவு செய்யும் மூளை, ''நா எழுதிக் கொடுத்துடுறேன்!'' என்று சொல்ல வைத்தது!

'உயிரை விட காதல் முக்கியமல்ல!' என்ற உன்னத முடிவு அங்கே எடுக்கப்பட்டபோது, ரோஜாவை அழைத்துக் (இழுத்துக்)கொண்டு, பாதி தூரத்தைக் கடந்திருந்தார் வேலுச்சாமி!

செந்தூரை அழைத்துக் கொண்டு, எஸ்.பி. அலுவலகத்துக்குள் மற்றவர்கள் நுழைந்தபோது, ரபின் அங்கே இருந்தான்!

அவனுக்கு செந்தூரை அந்த நிலைமையில் பார்த்ததும் ஒன்றுமே புரியவில்லை! ஜாமீனில் போனவன்... இங்கே எப்படி வந்தான்? அதுவும்... பலமா அடி வாங்கின தகர டப்பா மாதிரி? என யோசனை ஓடியது!

உதடு கிழிந்து, மண்டையில் இரண்டு அடி நீளத்திற்கு வெட்டு விழுந்து, கால் ஒடிந்து... நடக்கவே முடியாமல்... என்ன இது? என்று அவனைக் கண்ணால் அளந்து கொண்டே வந்தவன், ''என்ன பிரச்சனை? எதுக்கு... இவனை அடிச்சீங்க?'' என்று விசாரிக்க,

காலையில் பதிவான புகாரின் நகலைக் காட்டியவர்கள், ''எங்க பொண்ணைக் கடத்திட்டுப் போய்... கல்யாணம் பண்ணப் பார்த்தான்! இவன்ட்ட இருந்து... எங்க பொண்ணைக் காப்பாத்திட்டோம்! இவனை இங்க ஒப்படைக்க வந்தோம்!'' என்றனர் ஊர்க்காரர்கள்!

''ஹ்ம்ம்!'' என்று அதை உள்வாங்கிய ரபினுக்கு வேறு ஏதோ பிரச்சனை என்று மனதில் மணி அடித்தது!

''ஒரு நிமிஷம் இருங்க... வரேன்!'' என எழுந்தவன், ''அவன் கொடுத்த வாக்குமூலத்தை டேபிள் மேல வச்சுட்டு... நீங்க எல்லாம் போகலாம்!

அவனையும் இங்கேயே விட்டுட்டுப் போங்க... நா அவங்க வீட்டில ஒப்படைச்சுக்கிறேன்!'' என்று அவர்களை அனுப்பி விட்டே, அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

காங்கேயத்தை (கான்ஸ்டபிள்) அழைத்து, ''என்ன காங்கேயம் சார்... கடத்தல்... கல்யாணம்ங்கிறானுங்க? என்னவோ சரியில்லையே?'' என்றான் துருவும் பாவனையில்.

''கடத்தல் இல்ல சார்... காதல்! அந்தப் பொண்ணும்... இவனும் லவ் பண்ணியிருப்பாங்க! இந்தக் காட்டுமிராண்டிகளுக்கு பயந்து ரெண்டும் ஓடியிருக்கும்! இந்த நாய்ங்க... மோப்பம் பிடிச்சிட்டுப் போய் பிடிச்சிட்டு வந்திருச்சுங்க! அதைத் தான்... இப்படி திரிச்சு பேசுறானுங்க!'' என்றவர்,

''இவனையாவது அரை உயிராக்கி விட்டுட்டானுங்க சார்! அந்தப் பொண்ணை... முழுசா கொன்னு புதைச்சிருவானுங்க சார்! வெறியனுங்க!'' என்றார் கோபமும், இயலாமையுமாய்.

''என்ன சார் சொல்றீங்க?'' என ரபின் பதற,

''ஆமா சார்! நீங்க வேணும்னா பாருங்க... அந்தப் பொண்ணை ரெண்டே நாளில கொன்னுடுவானுங்க! ப்ச்ச்!'' என்றார் அவர் உறுதியாக.

''ஏன் கொல்லணும்? அதான்... மீட்டுட்டு வந்துட்டானுங்க இல்ல!'' என்றான் ரபின் குழப்பமாய்.

''என்ன கிறுக்கோ தெரியாது சார்! ஆனா... ஓடிப் போன பொண்ணு... அதுவும்... இந்தப் பொண்ணு...

ஜாதில பெரிய ஆளோட பொண்ணு...! அதுவும் ஓடிப் போச்சுங்கிறதே பெரிய கௌவரக் கொறைச்சல்! அதிலையும்... ஓடிப்போன பொண்ணை எவனும் கட்டவும் மாட்டான்! இந்தாளுக்கு வேற... அடுத்து ஒரு மவன் இருக்கான்... அவன் கல்யாணம் ஒழுங்கா கூடி வராது! அதையெல்லாம் மனசில வச்சு... அந்தப் பொண்ணை பலி கொடுத்துடுவானுங்க!'' என்றார் அவர் விளக்கமாய்.

''ஹய்யோ! அந்தப் பொண்ணைக் கொல்றதால என்னய்யா வரப் போவுது இவனுங்களுக்கு? போன கௌரவம்... போனது தானே?'' என்று ரபின், லாஜிக் பேச,

''பொண்ணு ஓடிப் போனதில போன கௌரவம், ஓடிப்போன பொண்ணால நம்ம சாதி தலை தாழக் கூடாதுன்னு... அய்யா... தான் பெத்த மகளையே கொன்னுட்டாருன்னு ஊரு பேசையில மீண்டு வந்திடும் இல்ல... அதான்!''

''அடப்பாவிகளா!'' என்று நிஜமாகவே வாயைப் பிளந்தான் ரபின்.

''ப்ச்ச்! என்ன சார் செய்றது? நாம போய் கேட்டோம்ன்னு வைங்க... அந்தப் பொண்ணு தான் அவமானம் தாங்காம தற்கொலை பண்ணிக்குச் சுன்னு சொல்லுவானுங்க! ஒண்ணுமே செய்ய முடியாது சார்!'' என்று அவர் விலகி நடக்க,

''இல்ல ஏதாவது செய்யணும்!'' என உறுதி கொண்டு, கூவியது ரபினின் மனம்!

ஒரு வினாடிக்கும் மேலாய், கண்களை இறுக மூடி யோசித்தவன், ''இவனுங்க என்ன ஜாதி... காங்கேயம்?'' என்றான் ரபின், உரக்க.

அவர் ''****'' எனக் கூறியதும், ''ஹோ!'' என ஒரு நிமிடம் யோசித்தான்.

மேசையில் அமர்ந்து, இரு கரங்களாலும் தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டவன், ''அந்தப் பொண்ணு பேரு... என்ன?'' என்றான் மீண்டும்.

''ஹான்! என்னமோல்ல... ஹ்ம்ம்'' என யோசித்த காங்கேயம், ''அந்த கம்ப்ளைன்ட்ல இருக்கு சார்... அந்தப் பொண்ணு போட்டோ கூட இருக்கு!'' என்று கோப்பை எடுத்து நீட்டினார்.


அதைப் புரட்டியவனின் கண்மணிகள், ''கண்மணி ரோஜா!'' என்ற பெயரில் பத்து வினாடிகளுக்கு மேலாய் நிலைத்தன என்றால், அவளது புகைப் படத்தில் இருபது வினாடிகள் நிலைத்தன!

வேகமாய் கோப்பை மூடிவிட்டு எழுந்த ரபின், மேசையில் கையை ஊன்றி, ஆழமாய் ஓர் பெரு மூச்சை எடுத்துவிட்டான்.

அடுத்த அரை மணி நேரத்தில், ரபின் அவனது வீட்டில்... அவனது தாய் மற்றும் தமையனின் முன் னிலையில் நின்றிருந்தான்! ஓர் கோரிக்கையுடன்!

அதற்கு அடுத்த இரண்டு மணி நேரத்தில், வேலு நாச்சியார் தன் மகன்களுடன் கண்டமன்னூர் வேலுச் சாமியின் வீட்டில் நின்றிருந்தார்!

10



ரபின், ரோஜாவின் புகைப்படத்தைப் பார்த்த நிமிடம், உள்ளே ஓர் சிலிர்ப்பு ஓடி மறைந்தது!

அது... ஓர் நிமிடம் வெட்டிய மின்னலாலோ... கண்ணில் தோன்றிய ஸ்பார்க்காவோ... நெஞ்சில் பரவிய "இவள் என்னவள்" என்ற உணர்வினாலோ... கணடதும் உள்ளம் உணர்ந்த காதலாலோ இல்லை!

இந்த அழகிய ரோஜா முகம்... தீயில் இட்ட மலராய் கருகிப் போவதா என மனம் துடித்துப் போனது!

பனியில் குளித்த புது வெள்ளை மலராய் இருப்பவள், தீயில் குளிப்பதா? பச்சை இலையாய்... புத்துணர்வோடு மிளிர்பவள்... காய்ந்த சருகாய் எரிக்கப்படுவதா? என நெஞ்சம் பதறியது!

'என்ன செய்வது? என்ன செய்வது?' என்று பதறிய எண்ணங்களுக்கு விடையாய் தான், ரபின் ரோஜாவின் ஜாதியைக் கேட்டறிந்தது!

அதற்கான விடை கிடைத்ததும், வீட்டிற்கு விரைந்தான் அவன்.

வேலு நாச்சியார் வீட்டில் தான் இருந்தார். விவேக்கை வீட்டில் காணவில்லை.

நேரே அவரிடம் சென்றவன், "உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்மா! விவேக் எங்க?" என்றான்.

என்றைக்குமே, அந்த வீட்டில்... எந்த இருவருக்குள்ளும் ரகசியம் காக்கப்பட்டதில்லை! எந்தவொரு விஷயம் என்றாலும், மூவரும்... இப்போது நால்வரும் சேர்ந்தே பேசுவதுண்டு! விவேக்கின் காதல் முதல் கல்யாணம் வரை... ரபின் உடனிருக்க வேலு நாச்சியாரிடம் பேசப்பட்டவை தான்!

அப்படியிருக்கையில், விவேக் இல்லாமல் தாயிடம் பேச ரபினுக்கு இஷ்டமில்லை.

இளைய மகனின் முகத்தில் தெரிந்த தீவிரம், அவன் அவனது சுயத்தில் இல்லை என்பதை உணர்த்த, "ஒரு முட்டி மாற்று ஆபரேஷன் இருக்குன்னு போயிருக்கான்! போய் இரண்டு மணி நேரமாச்சு! இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்துடுவான்!" என்றார் நாச்சியார்.

"ஒரு மணி நேரமா?" என்று அதிர்ந்தான் ரபின். அந்த ஒரு மணி நேரத்தில், என்னென்ன நடந்து விடுமோ என்ற பயம் அவனைத் திகில் கொள்ள வைத்தது!

"என்ன ரபின்? என்ன பிரச்சனை?" என்று அவர் மகனின் நெற்றியைத் தொட்டபடி கேக்க,

அவரது கைகளைப் பற்றி, தன் கன்னத்தோடு அணைத்துக் கொண்டவன், "பெரிய பிரச்சனை தான்மா... ஆனா... அதை என்னால தீர்த்துட முடியுமான்னு பயமா இருக்கு!" என்றான் அவன்.

"ரபின்!" - நாச்சியாருக்கு, மகனின் பதற்றம் சிறு திகைப்பைக் கொடுத்த போதும், அவனை உலுக்கிப்

போடும் வண்ணம் ஓர் நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்பது புரிந்தது!

இதை ஓர் சாதாரண குடிமகனாய் மகன் கூறியிருந்தால் அவரால் ஒத்துக் கொள்ள முடிந்திருக்கும்! ஆனால், அவன் ஓர் காவல்துறை உயரதிகாரி! குற்றங்களைத் தட்டிக் கேட்கும் ஓர் முக்கியப் பொறுப்பில் இருப்பவன்!

அவனே, இப்படிப் பயம் கொள்வது அவரைச் சிந்திக்க வைத்தது!

''ரபின்! தீர்வு இல்லாத பிரச்சனைன்னு எதுவுமே இல்லை கண்ணா! சில விஷயங்களுக்கு... உடனடியா கிடைக்கிற தீர்வு, பல விஷயங்களுக்கு ஆறப் போட்டால் தான் கிடைக்கும்!''

''இந்த விஷயத்தில... உடனடியா கிடைக்கிற தீர்வு... பிரச்சனைக்குரிய ஆளையே அழிச்சிடும்மா! அதான்... லேட் ஆக... ஆக பயம் ஜாஸ்தியாகுது!'' என்றான் ரபின், கண்ணில் ஒருவித இயலாமையுடன்.

''ஒரு போலீஸ்காரன் மாதிரி பேசுடா!'' என அதட்டிய நாச்சியாரின் குரலில் லேசான சிரிப்பு இருந்தது! மகனின் மனநிலையை மாற்றிவிடும் எண்ணமோ என்னவோ?

ஆனால், அவன் அதிலெல்லாம் மாறவில்லை!

''போலீஸ்கிட்ட வராத பல விஷயங்கள் இருக்கும்மா! நா... இப்ப போலீஸ்காரனா பேசல... ஒரு சக மனுஷனா பேசுறேன்! ஒரு உயிரைப் பத்திக் கவலைப்படுற ஒரு சராசரி மனுஷனா பேசுறேன்!''

என்றான் அவன், உள்ளம் திறந்து வெளி வந்த குரலில்.

''என்ன விஷயம், ரபின்?'' என்று கேட்டபோது, நாச்சியாரின் முகத்தில் திகைப்பை மீறி தீவிரம் படரத் தொடங்கியிருந்தது! குரலில், குழைவு மாறி... அழுத்தம் குடி வந்திருந்தது!

''விவேக் வந்துடட்டும்ன்னு நினைச்சேன்...'' என்று இழுத்த ரபின், ''ஹ்ம்ம்!'' என்று பெருமூச்சை இழுத்துவிட்டுக் கொண்டு, அன்று நடந்த விஷயங்கள் முழுதையும் சொல்லி முடித்தான்.

''எனக்கு... அந்தப் பொண்ணோட போட்டோவைப் பார்த்ததில இருந்து மனசே சரியில்லைம்மா! அவனுங்க கண்டிப்பா... அந்தப் பொண்ணை எதுவோ செஞ்சுடுவாங்கன்னு எனக்குத் தோணிட்டே இருக்கு!'' என்றான் முடிவாய்.

''ஐயோ பாவமே!''

''ச்சை... இப்படியுமா மனுஷங்க இருப்பாங்க!''

''நம்ம சமூகத்திலேயே இப்படிப்பட்ட காட்டுமிராண்டிங்க இருக்காங்கன்னு நினைக்கும் போது, இந்த சமூகத்தில பிறந்திருக்கோமேன்னு வெட்கமா இருக்கு!''

''காதலிக்கிறது என்ன கொலைக் குற்றமா? அதுக்குப் போய்... ச்சை...''

இப்படியான விஷயங்களைப் பேசியிருந்தால், வேலு நாச்சியார் ஓர் சாதாரண தாயாக இருந்திருப்பார் அல்லவா?

உயர்ந்த சிந்தனைகளும், அவற்றைச் செயல் படுத்தும் துணிவும், ஆண்களின் கை ஓங்கி நிற்கும் சமூகத்தில்... அரசியாய் வீற்றிருக்கும் நிமிர்வும், வேலு நாச்சியாரை "இதைத் தடுக்க... நீ என்ன செய்ய லாம்ன்னு நினைச்சிருக்கே?" என்று தன் நேரடி கேள்வியை மகனிடம் கேட்க வைத்தது!

தாயின் நேரடிக் கேள்வியில் ரபின் திகைக்கவில்லை!

அவர் இதைக் கேட்பார் என்று எதிர்பார்த்தே இருந்தவன் போல், "அந்தப் பொண்ணை கல் யாணம் பண்ணிக்கலாம்ன்னு இருக்கேன்!" என்றான் அவனும், நெற்றிப் பொட்டில் அடித்தார்போல்! தாயின் குரலிலேயே!

வேலு நாச்சியார் அப்போதும் திகைப்பைக் காட்ட வில்லை!

"இப்படி... எத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிறதா உத்தேசம், ரபின்?" என்றார் நிதானமாய்.

ரபினும் திகைத்து விடவில்லை: இதே கேள்வியை அவனது உள்மனமும் அவனிடம் கேட்டிருந்தமை யால், அவனிடம் விடை இருந்தது!

"இப்போதைய பிரச்னைக்கு இதான் ஒரே தீர் வுன்னு எனக்குத் தோணுதும்மா!" என்றவன், 'அது ஏன்?' என்றும் விளக்க ஆரம்பித்தான்.

"இதுவே... ஊரை விட்டு ஓடிப் போறதுக்கு முன்னாடி... அவங்க ரெண்டு பேரும் என்கிட்டே... அதாவது போலீஸ்கிட்ட உதவி கேட்டு வந்திருந்தா... தீர்வு வேற மாதிரி இருந்திருக்கும்!"

"அது நடக்கல! அடுத்ததா... அந்தப் பையன்... அதான் செந்தூர் பாண்டியன்... 'எனக்கும் ரோஜாக்கும் இனி சம்மந்தமே இல்லை'ன்னு எழுதிக் கொடுக்காம, "என்னையும் ரோஜாவையும் எப்படியாவது சேர்த்து வைங்க சார். என்னை... அடிச்சு மிரட்டி... இதை எழுதிக் கொடுக்க வச்சாங்க"ன்னு சொல்லியிருந்தா... அதுக்கான தீர்வு வேற மாதிரி இருந்திருக்கும்!"

"அதுவும் நடக்கல! அவனுக்கு... உயிர் மிஞ்சினா போதும்கிற உணர்வு மட்டும்தான் இருந்தது! கையெழுத்துப் போடும் போதும் சரி... ஸ்டேஷனை விட்டு வெளியப் போகும்போதும் சரி... 'இந்தக் காட்டுமிராண்டிங்ககிட்ட தப்பிச்சா போதும்ங்கிற' மனநிலை தான்மா அவன்ட்ட இருந்துச்சு! அதில... அய்யோ... அந்தப் பொண்ணுக்கு என்னவாகுமோங்கிற பயமோ... அந்தப் பயத்துக்கு வித்தா இருக்க காதலோ இல்லை!"

"நான் காதலிச்சவன் இல்லை தான்! ஆனா... காதலைப் பார்த்தவன்! அதுக்கும் மேலா... நான் ஒரு போலீஸ்காரன்! எங்களோட ஐ.பி.எஸ். ட்ரைனிங்ல... குற்றவாளிகளோட பாடி லாங்குவேஜ் வச்சே... அவங்களோட குற்றங்களின் அளவையும்... அவங் களோட மனநிலையையும் படிக்கிற சைக்காலஜி கிளாஸ் இருந்துச்சும்மா! முழுசா இல்லாட்டியும்... என்னால ஓரளவுக்கு... அவனோட மனநிலையைப் புரிஞ்சுக்க முடிஞ்சது! அவன் மனசில... முழுசா

வியாபிச்சு இருந்தது உயிர் மட்டும்தான்! காதல்ங்கிற உணர்வு அதில இல்லம்மா... ஏன்... அந்தப் பொண்ணுக்கு எதுவும் ஆகிடுமோங்கிற பதட்டம் கூட இல்லை! இந்தக் காட்டுமிராண்டிங்ககிட்ட இருந்து எப்படா தப்பிப்போம்ங்கிற தவிப்பு மட்டும்தான் இருந்துச்சு!''

''அதுவுமில்லாம... அவன் ஒரு கிரிமினல்! நானே அவனை... செயின் ஸ்னாட்ச்சிங் கேஸ்ல அரெஸ்ட் பண்ணியிருக்கேன்! ஜாமீன்ல போனவன்... அந்தப் பொண்ணைக் கூட்டிட்டு ஓடிப் போயிருக்கான்! இன்னைக்கு இல்லாட்டியும்... இன்னும் ஒரு வாரத்திலயோ... இல்ல ஒரு மாசத்திலையோ... அந்த கேஸ்ல தீர்ப்பு வந்து... அவன் உள்ள போய்டலாம்! அப்படிப்பட்டவனை நம்பி... அந்தப் பொண்ணை ஒப்படைக்கிறது 'எனக்கு சரியா படல!''

''அப்படியே ஒப்படைச்சாலும்... இன்னைக்கு இல்லாட்டியும்... இன்னொரு நாள், அந்தப் பொண்ணை இவனுங்க கொன்னுடுவானுங்க!''

''எல்லாத்தையும் யோசிச்சு தான்... இந்த முடிவுக்கு வந்தேன்!'' என்றான் அவன், கடைசியாக.

அவன் பேசும் வரை குறுக்கிடாமல் கேட்டிருந்த நாச்சியார், ''நா கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லலை, ரபின்! இப்படி... எத்தனை கல்யாணம் பண்ணிப்பே?'' என்றார் மீண்டும், தீர்க்கமாகவே.

''அம்மா'' என ரபின் திகைக்க,

''இப்படிப்பட்ட சூழ்நிலை... நூத்தில ஒருத்தருக்கு நடக்கலாம்! நடக்கும்! நம்ம நாட்டில ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூறுகள் இருக்காங்கன்னு நினைக்கிறேன்! அப்பன்னா... ஆயிரம் பேரையா கல்யாணம் பண்ணிக்க முடியும்?'' என்றார் அவர் நிதானமாய்.

சில நிமிடங்கள், தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த ரபின், ''எனக்குத் தெரியலைம்மா!'' என்றான் தாய் முகம் நோக்கி.

'இந்தக் கணக்குக்கு எனக்கு விடை தெரியலைம்மா...' என்று தன்னிடம் வந்து நிற்கும் சின்னஞ்சிறு சிறுவனாய் அவனை உருவகப்படுத்தின நாச்சியாரின் கண்கள்!

மெல்ல அவன் தலையை அவர் வருடிக் கொடுக்க, ''அம்மா! இந்தப் பிரச்னைக்கு என்ன தான் தீர்வுன்னு நீங்களே சொல்லுங்கம்மா!'' என்றான் அவன், பந்தை அவரது எல்லைக்குள் தள்ளிவிட்டபடி.

அவர் பதில் சொல்லும் முன்னர், ''அந்தப் பொண்ணுக்குன்னு தனியா எந்தவிதமான பாதுகாப்பும் கொடுக்க முடியாது! அப்படியே... கொடுத்தாலும், அதுக்கு... சட்டப்படி வலுவான காரணம் எதுவுமில்லை!'' என அவன் கூற,

''ஆபத்து வெளிய இருந்து வந்தா... பாதுகாப்பு கொடுக்கலாம், ரபின்! ஆபத்து உள்ளிருந்தே... பெத்தவங்ககிட்ட இருந்தே வரும்போது, எதுவுமே செய்ய முடியாது!'' என அவனது வாக்கியத்தை முடித்தார், அந்த அனுபவஸ்தர்.

தன் எண்ண அலைகளின் அலைவரிசையிலேயே தாயும் இருப்பதை ஓர் நிறைவுடன் உள்வாங்கிய வனுக்கு, அவரால் ஓர் நல்ல தீர்வைக் கொடுக்க முடியும் என்றே தோன்றியது!

சில நிமிடங்கள் அமைதியாய் இருந்தவர், ''ரபின்! வாழ்க்கை... பரிதாபத்தை அடிப்படையா வச்சு ஆரம்பிக்கக்கூடாது ராஜா!'' என்றார் வாழ்ந்து முடித்த வாழ்க்கையை எண்ணிப் பார்த்தவராய்!

''விவேக் அளவுக்கு நான் சந்தோஷமா இருந்தா போதும்மா! அவனோட வாழ்க்கைக்கு அடித்தளமும் - அனுதாபம் தானே!'' என்றான் ரபின், உறுதியாய்.

''யுகா மனசில வேறு யாரு மேலையும் காதல் இருக்கல, ரபின்!'' என்றார் வேலு நாச்சியார் கூர்மை யாக.

''எனக்கும் புரியுதும்மா! ஆனா... தகுதி இல்லா தவன் மேல வைக்கிற காதல்... உயிரைப் பறிக்கும்ங் கிற போது... அதை காதலா எடுத்துக்கவே வேண் டாம்ன்னு சொல்றேன்!'' என்றான் ரபின், தெளி வாகவே.

''நீதான் அவனைத் தகுதி இல்லாதவன்னு சொல்றே... ஆனா... அந்தப் பொண்ணு என்ன நினைக் கிறான்னு தெரியல இல்லையா?'' எனக் கேட்டவர்,

''ஒரு கொலைகாரன் கூட நல்ல காதலனா இருக் கலாம், ரபின்!'' என்றார்.

''அம்மா! நா... அவன் செஞ்ச குற்றத்தை வச்சு... அவனைத் தகுதி இல்லாதவன்னு சொல்லலை!

அவனையே நம்பி ஓடி வந்த ஒரு பொண்ணோட காதலை விட... தன் உயிரை பெருசா மதிச்சு போயிட் டான்கிறது தான்... அவனோட 'காதலன்' தகுதியை இழக்க வைக்குது!'' என்றான் அவன், புரிய வைத்து விடும் வேகத்தில்.

''உயிர் இருந்தா தான் ரபின்... காதலிக்க முடியும்!'' - சுருக்கென தைத்தார் வேலு நாச்சியார்.

''அதைத் தான்மா நானும் சொல்றேன்! காதலை விட... உயிர் முக்கியம்ன்னு!'' என்றான் ரபின், பிடிவாதமாய்.

மேலும், ''உயிருக்கு நிகரா அவன் காதலை மதிச் சிருந்தா... அவன் என்கிட்ட ஒரு கம்ப்ளைன்ட் கொடுத் திருந்தாலே போதும்! அவங்களை மட்டுமில்லை... அவங்க காதலையும் நான் சேர்த்து வச்சிருப்பேன்! அது நடக்கலைங்கும்போது... அடுத்த தீர்வா இதான் எனக்குத் தோணுது!'' என்று முடித்தான் அவன்.

வேலு நாச்சியார் பல நிமிடங்கள் பதிலேதும் சொல்லவில்லை.

மகனின் கண்களையே ஊடுருவிப் பார்த்தார்.

அந்தக் கண்களில், காவல்காரனின் கடுமையோ... கணக்கிடலோ... தெரியவில்லை!

மாறாய், அதில் ஓர் தவிப்பு! படபடப்பு! 'ஹய்யோ! அங்கே என்ன நடக்கிறதோ?' என்ற பரிதவிப்பு! பார்த்தே இராத ஓர் பெண்ணுக்காக நெஞ்சம் துடிக் கும் துடிப்பு! 'அந்தப் பெண்ணிற்கு எதுவும் ஆகி

விடக் கூடாது!' என்ற வேண்டுதல்! இவை மட்டுமே, அக்கண்களை நிரப்பியிருந்தன!

எத்தனையோ கொலைகள்! ஏகப்பட்ட கொள்ளைகள்! எண்ணிலடங்கா குற்றங்கள்! என்று பார்த்துச் சலித்தவனின் மனம், நடக்கவிருக்கும் ஒரு குற்றத்தை எண்ணி குமுறுவது நாச்சியாருக்கு, சிறு சிரிப்பைக்கூட உண்டாக்கியது!

தனது 'ப்ராக்டிகல்' கேள்விகளுக்கு விடை சொல்ல முடியாமல், அவனது மனம் அந்தப் பெண்ணின் உயிரிலேயே கட்டுண்டு கிடப்பது, அவருக்கு சிலவற்றை உணர்த்தியது!

ஓர் காவலனின் கண்டிப்பு போய், ஓர் காதலனின் கரகரப்பு அவன் உள்ளத்தில் குடி வந்திருப்பது அவருக்குப் புரிந்தது!

'இது எப்படி சாத்தியம்?' என்ற கேள்விக்கு விடை கண்டுபிடிப்பது கடினமாய் இருக்க, அது இப்போதைக்கு அவசியமற்றது என்றும் தோன்றியது!

அதனாலேயே ''இப்படியே... விவேக் ஹாஸ்பிடலுக்கு போய்... அவனைக் கூட்டிட்டு, கண்டமன்னூர் போகலாம்!'' என்றார் வேலு நாச்சியார், அங்கிருந்து நகர்ந்தபடி.

''அம்மா!'' என ரபின் அதிர, கிளம்பு! போலீஸ் ஜீப்ல வேண்டாம்... நம்ம கார்லேயே போய்டலாம்! நீயும்... இந்தப் போலீஸ் யூனிஃபார்மை மாத்திட்டு வா!'' என்றார் கட்டளையாய்.

ரபினுக்குப் பரம திருப்தி! இனிமேல், இந்தப் பிரச்சனை அவனது அல்ல! நாச்சியாரின் பிரச்சனை இது! இதற்கொரு தீர்வு கிடைக்காமல் அவர் ஓய மாட்டார் என்பது புரிந்ததும், அவனது பாரம் பறந்தே போனது! ஆனால், வாழும் வாழ்க்கை தனது என்பதை அவன் அப்போது உணரவில்லை!

முகத்தில் நிம்மதியின் ரேகை ஓட, அவன் திரும்பியபோது, ஹாலின் ஓரத்தில் நின்று அவர்களது சம்பாஷணைகளைக் கவனித்துக் கொண்டிருந்த யுகவீணா, வேகமாய் ஓடி வந்து அவனது கைகளைப் பற்றிக் கொண்டாள்!

அந்தத் தொடுகையில் அவன் கண்டது ஒரே ஒரு உணர்வை மட்டும்தான்! புரிதல்! பெருமிதம் கலந்த புரிதல்!

''நா செய்றது சரியா யுகா பேபி?'' என்று சிறு கவலையுடன் கேட்க,

யுகா 'வெற்றி' என்பது போல், கட்டை விரலை உயர்த்திக் காட்டினாள்!

யுகவீணாவை வீட்டில் இருத்திவிட்டு, நாச்சியார் அவரது மகன்களுடன் கண்டமன்னூர் சென்றது, அங்கே தலைப்புச் செய்தியானது!

''நாச்சியார் அம்மா வண்டி... நம்ம ஊருக்கு வருது!'' என்ற சேதி, ஊர் பெரியதனக்காரரான வேலுச்சாமியின் வீட்டை முதலில் எட்டியதில், வியப்பேதும் இருக்கவில்லை!

வேலு நாச்சியார் என்ற பெயரைக் கேட்டதுமே, ஓர் மரியாதை படரக் காரணம், அவரது சொத்துக்கள் மட்டுமல்ல! அவரது சுயகௌரவமும், தன்னம்பிக்கையும் தான்!

என்னதான், ஜாதிப் பற்றுக் கொண்டவர்களாய் இருந்தபோதும், தங்களது சமூகத்தின் முக்கியஸ்தரான நாச்சியாரின் ''பேதமற்ற'' கொள்கைகள் மீது, அனைவருக்குமே ஓர் மரியாதை உண்டு!

'ஒரு பொம்பளைக்கே இவ்வளவா?' என்ற எண்ணம் உருவாகாமல், 'தனி ஒரு மனுஷியாய் எவ்வளவு உயர்ந்து நிற்கிறார்!' என்ற பிரமிப்பு அவர்களிடத்தில் விரவி இருந்தது, நாச்சியார் என்ற தனி மனுஷிக்குக் கிடைத்த வெற்றி!

''நாச்சியார் அம்மாவா?'' என்று வேலுச்சாமி வியக்கும்போதே,

''நம்ம வீட்டுக்குத் தான் வராங்க!'' என்ற செய்தி, அவரைத் திகைக்க வைத்தது!

ஊரே அவர் வீட்டில் கூடியிருக்க, நாச்சியாரின் வருகை பெரும் பரபரப்பை உண்டு பண்ணியது!

அந்தப் பரபரப்பு அடங்கும் முன்னர், நாச்சியாரின் வண்டி நின்றிருக்க, வேலுச்சாமி வீட்டு வாயிலுக்கு ஓடினார்.

ஓர் ராணியின் கம்பீரத்துடன், நாச்சியார் இறங்க, விவேக்கும் ரபினும் காரின் இரு புறத்திலிருந்தும் இறங்கினர்.


அவருடன், ரபினைக் கண்டதும் மீண்டும் ஓர் அதிர்ச்சி அலை அங்கே சிலருக்குள் பரவி அடங்கியது!

''வாங்க... வாங்கம்மா... என்ன இந்தப் பக்கம்?'' என்று வேலுச்சாமி பதற,

''என்னோட சின்ன மகன்... ரபீந்திரநாத் தெரியும் இல்லையா? டி.எஸ்.பி.யா இருக்கான்... அவனுக்கு உங்க மூணாவது பொண்ணு கண்மணி ரோஜாவைப் பொண்ணு கேட்டு வந்திருக்கேன்!'' என்று நாச்சியார், தன் கம்பீரம் மாறாமல் நேர்பார்வையால் விஷயத்தைப் பட்டெனப் போட்டு உடைத்தார்.

அங்கே, கடுகு விழும் சத்தம் கூட கேட்குமளவிற்கு பேரமைதி நிலவியது!

11



வேலுநாச்சியார் வருவதற்கு முன்னர், ரோஜா எனும் இளம் குருத்து அங்கே உருக்குலைந்து கொண்டிருந்தது!

''ஊரை விட்டு ஓடிப்போற அளவுக்கு... உம் பொண்ணுக்கு தகிரியம் வந்திருச்சுடி! எல்லாம்... நீ வளத்த வளப்பு!'' என்ற காட்டுக் கத்தலுடன், ரோஜாவின் அன்னையே அடிகளால் தாக்கப்பட்டார் எனும்போது, ஓடிப்போன ரோஜா என்னவாகி இருப்பாள்?

"இவள எல்லாம்... கொல்லணும்! ஓடிப்போன காலை உடைச்சு அடுப்பில வைக்க வேணாம்!" என்று ஒரு கூச்சல் எழும்ப,

அது கொடுத்த உந்துதலில், வேலுச்சாமியின் கரம் ரோஜாவின் கன்னத்தை அப்பின.

ரோஜாவால் வாயைத் திறந்து, வலியால் கத்த முடிந்ததே தவிர, எதையும் பேச முடியவில்லை!

"வேணாம்பா! வேணாம்பா!" என்ற வார்த்தைகளைத் தவிர அவளை எதையும் பேசவிடவில்லை அவர்களும்!

"என்னடி அப்பா? நீ... எனக்கு பிறக்கவே இல்லைடி! இப்படியொரு பொண்ணை நான் பெக்கவே இல்லைன்னு நினைச்சுக்கிறேன்! உன்னைக் கொன்னா தான்... என் குலம் வாழும்!" என்றவர், அவளது முடியைப் பிடித்து தன் பலம் கொண்ட மட்டும் தள்ளி விட்டார்.

தள்ளி விட்ட வேகத்தில், அங்கிருந்த நாற்காலியின் முனையில் பட்டுத் தெரித்தது ரோஜாவின் தலை!

"அம்மாஆஆஆ!" என அலறியவளின் முடியைப் பற்றி இழுத்தவர், தன் கோபம் முழுதையும் தன் காலில் செலுத்தி, அவளை ஓங்கி மிதித்தார்! அடித்தார்! அறைந்தார்! மொத்தத்தில்... அணுஅணுவாய்க் கொன்றார்!

ஏற்கனவே, ஓர் பற்றற்ற... பாசமற்ற... அன்பற்ற குடும்பத்தில் வாழ்ந்த ரோஜாவிற்கு, தன்னையும்

செந்தூரையும் அவர்கள் ஒன்றாய் பிடித்ததுமே, இனி உயிர் வாழ மாட்டோம் என்பது உறுதியாய் தெரிந்து விட்டது!

எப்படியும் கொன்று விடுவார்கள் என்பது நிச்சயம்!

ஆனால், இந்த உயிர் வதம்? அவளால் முடியவில்லை!

ஒரோர் அடிக்கும்... உயிர் வரை வலித்தது!

செந்தூரைப் பிரிந்துவிட்டோம் என்ற வேதனையை விட, "ஐயோ... இவர்களிடம் மீண்டும் மாட்டி விட்டோமே!" என்ற பயம் தான் அவளை ஆட்டி வைத்தது!

செந்தூரின் மீது தான் கொண்ட காதல், தன்னை இந்த ஜாதிக் கூட்டிலிருந்து விடுவித்து, சுதந்திரப் பறவையாய் மாற்றிவிடும் என்ற எண்ணத்தில் இருந்த வளுக்கு, தானே வெறும் கூடாகப் போகிறோம் என்ற எண்ணமே, உயிரைப் பிடித்து வைக்கவிடவில்லை!

'சீக்கிரம் செத்துடணும்! இந்த வலியைத் தாங்க முடியலையே... சீக்கிரமா செத்துடணும்!' என்பது மட்டுமே அவளது மனதில் ஓடியது!

ஆனால், உயிர் அவ்வளவு சீக்கிரமாய் போக வில்லை!

தந்தை... தம்பி... சித்தப்பா... பெரியப்பா என்று உறவுகளில் பாரபட்சம் இல்லாமல், அவளை ஒவ்வொருத்தரும் அடிக்க... அடிக்க... வலி அதிகமானதே ஒழிய, முற்றிலுமாய் மறையவில்லை!

''மூத்த ரெண்டும்... இப்படியா இருந்துச்சுங்க! வீட்டுக்கு அடக்கமா... எனக்குப் பிறந்ததுங்கன்னு சொல்லாம சொல்லிட்டு... புகுந்த வீட்டில பதவிசா வாழுதுங்க! ஆனா... இந்த ஓடுகாலி நாயி... உடம்பு தெனவெடுத்து போய்... ச்சை! போனது தான் போனே... நம்ம சாதிப் பயலோட ஓடியிருக்கக் கூடாது! அந்தத் தட்டுக்கெட்டவன் தான் கிடைச்சானா? போயும் போயும்... சாக்கடையோட கலந்திட்டியே! உன்னை... சாக்கடையிலேயே போட்டு மூடினா கூட என் ஆத்திரம் அடங்காதுடி!'' என்று ஆங்காரமாய் கத்திய வேலுச்சாமி, தன் இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டை உருவி, கண் மண் தெரியாமல் அடிக்க ஆரம்பித்தார்.

அவரது பெல்ட் விளாசப்பட்டதில்... ரோஜாவின் கண்ணருகே பட்டுத் தெறிக்க, பெல்ட்டின் கொக்கி... அவளது கண்ணோரச் சதையைப் பெயர்த்துக் கொண்டு போனது!

ரோஜாவின் கண் பார்வை மங்கத் தொடங்கியது!

அந்த நிமிடத்தில், 'இந்த உயிர் வாதனை படுவதற்கு... செந்தூரைக் காதலிக்காமலே இருந்திருக்கலாம்!' என்று ரோஜாவால் எண்ணாமல் இருக்க முடியவில்லை!

உயிருக்கு உயிராய் எண்ணிய காதலை விடவும், இப்போது உயிரைத் தாங்கும் உடலின் வலி... அவளுக்குப் பெரிதாய் இருந்தது!

உயிர் இருந்தால் தானே, காதல் எனும் உணர்விருக்கும்!

அந்த உயிரைத் தான்... உடலின் வலி சிறுகச் சிறுக கொண்டு போய்க் கொண்டிருந்ததே!

இந்த அன்பில்லா இடத்திலிருந்து எட்டிப் போய் விடலாம் என்ற நம்பிக்கையில் அவனுடன் சென்ற வளுக்கு, அது எட்டாக் கனியாகி விட்டது என்பதி லேயே பாதி உயிர் போய்விட்டிருந்தது!

மீதி உயிரை, அவளது தந்தை எனும் ஜாதிப் பிசாசு எடுத்துக் கொண்டிருந்தது!

அந்த நேரத்தில், ''ரோஜாவைப் பெண் கேட்டு வந்திருக்கிறார்கள்'' என்ற செய்தியே அங்கே பெரும் அதிர்வை உண்டு பண்ணியிருக்க,

அவர்களது முகத்தில் தென்பட்ட அதிர்ச்சியை சட்டை செய்யாதவர் போல், ''என்ன வேலுச்சாமி... சம்மந்தம் பேச வந்திருக்கேன்! வெளியவே நிக்க வச்சுப் பேசுறீங்களே?'' என்றார் வேலு நாச்சியார், முகத்தில் ஓர் அர்த்த சிரிப்பு இருந்தது!

''ஹய்யோ! வாங்கம்மா... வாங்க! வாங்க!'' என்று அவர் காட்டிய பணிவில், ரபினுக்கு கோபமாய் வந்தது! கூடவே சிரிப்பும்!

''ச்சை... என்ன மனிதர்கள் இவர்கள்?'' என்ற எண்ணம், சிறு வறட்சி சிரிப்பை உண்டு பண்ண,

''டேய்! ரபின்!'' என அடக்கினான் விவேக். அவனுக்கு, தம்பியின் சிரிப்பை பார்ப்பவர்கள் தப்பாய் எடுத்துக் கொள்வார்களோ என்ற பயம்.

அதனாலேயே, அவன் ரபினின் கையைப் பிடித்து இழுத்தான்.

மெல்ல அவன் புறம் குனிந்த ரபின், ''இல்லடா விவேக்! இந்தப் பெருசு... அன்னைக்கு நான் கல வரத்தை அடக்க வந்தப்போ... என்ன எகிறு எகிறு னுச்சு தெரியுமா? இப்பப் பாரேன்! மனுஷனோட தலை இடுப்பைத் தொட்டுடும் போல...! பேசாம... அம்மாவே போலீஸ் ஆகியிருக்கலாம்டா!'' என்றான் தீவிரமாய்.

''அறிவு கெட்டவனே! எவ்வளவு பெரிய விஷயம் பேச வந்திருக்கோம்! அடி பிச்சுடுவேன்!'' என்று விவேக் பல்லைக் கடிக்க, நாச்சியார் இருவரையும் ஓர் பார்வை பார்த்தார்!

பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போயினர் இருவரும்! வீட்டில் எவ்வளவுக்கு எவ்வளவு கிண்டல் செய் கின்றனரோ... அதே அளவுக்கு அவரிடம் பயமுண்டு அவர்களுக்கு! பயம் காட்டும் வேளையில் பயம்! கிண்டல் செய்யும் வேளையில் கேலி!

எதிர்கொள்ளப் போகும் சூழ்நிலையைப் பற்றி விவேக்கிற்கு இருந்த கலக்கம், ரபினுக்கு அறவே இருக்கவில்லை! நாச்சியாரின் கையில் காரியம் சென்ற பின்னர், அது கை மீறிப் போய் விடாது என்ற அவனது நம்பிக்கை, இப்போது வேரூன்றி இருந்ததே அதற்கான காரணம்!

அதற்கும் மேலாய், கண்மணி ரோஜாவிற்கு ஏதேனும் ஆகியிருந்தால்... வேலுச்சாமியோ... அவரது ஆட்களோ அதை ஏதோ ஒரு விதத்திலாவது வெளிக்காட்டி இருப்பர். அது இல்லையெனும்போது,

அவள் உயிரோடு தான் இருக்கிறாள் என அவனுக்கு உறுதியாய் தெரிந்தது!

இதுவரை உயிரோடு இருப்பவளை, இனிமேலும் உயிருடன் காத்துவிட முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு உதித்தது!

''வாங்கம்மா... வாங்க!'' என்று வேலுச்சாமி மட்டு மில்லாமல், ஊரே அவரை உள்ளே அழைத்தது!

அங்கே நடுநாயகமாய் போடப்பட்டிருந்த நாற் காலியின் நடுவே அமர்ந்தார் அவர்.

கால் மேல் கால் போட்டுத் தான் அவர் தன் கம் பீரத்தைக் காட்ட வேண்டியிருக்கவில்லை.

நடுநாயகமாய் அவர் சாதாரணமாய் அமர்ந்திருந்த பாணியே, அவரது ஆளுமையை கூட்டியது! (ராணியம்மா!)

''நீங்க... நீங்களும் உக்காருங்க தம்பி!'' என்று வேலுச்சாமி தடுமாறினார்.

அவரது முகச்சாயலில் இருந்த இளைஞன், தூசியே இல்லாத இரு பிளாஸ்டிக் நாற்காலிகளை, நன்றாக துடைத்து, விவேக்கிற்கும்... ரபினுக்கும் போட்டான்.

அவர்கள் அமர்வதற்காகவே காத்திருந்தவர் போல, விவேக்கை கை காட்டிய நாச்சியார் ''இவனைத் தெரியும் இல்லையா? என்னோட மூத்த மகன்... விவேகானந்தன்! டாக்டரா இருக்கான்! இவங்க அப்பா போல ஒரு ஆஸ்பத்திரி வச்சு நடத்துறான்!

இவன் பொண்டாட்டி... யுகவீணா! இப்பத்தான்... ஒரு வருஷம் ஆச்சு கல்யாணம் முடிஞ்சு!'' என்றார் அறிமுகமாய்.

வேலுச்சாமியோ ''தெரியுங்கம்மா! நம்ம வீட்டைப் பத்தி... தெரியாதா!?'' என்றார் பணிவுடன்.

அதை கவனிக்காதவர் போல, ''இவன் என்னோட சின்ன மகன்!'' என அவர் ஆரம்பிக்க,

''தெரியுங்கம்மா! தம்பி... நம்ம ஊருக்கு வந்திருக்கு!'' என அவசரமாய் கூறியவரின் குரலில் சிறிதாய் குற்ற உணர்வு விரவி இருந்தது

''ஹ்ம்ம்! அதான் அவனுக்குன்னு கொடுத்த முதல் வேலை! அதை நல்லபடியா முடிச்சதால... அவங்க டிபார்ட்மெண்ட்ல அவனுக்கு நல்ல பேரு! முதல்ல போடிக்கு போகச் சொன்னவங்க... அதுக்கப்புறம் வேணாம்ன்னுட்டாங்க! இப்ப எல்லாம்... எங்க பிரச்சனைன்னாலும்... ரபின் எங்கன்னு கேட்கிற அளவுக்கு... அவன் மேல மக்களுக்கு ஒரு பயம் கலந்த மரியாதை!'' என்ற நாச்சியாரின் குரலில் பெருமிதத்தோடு லேசாய் நக்கல் கலந்திருந்ததோ என்று ரபினுக்கு சந்தேகமாய் இருந்தது!

'என்ன சம்பவம்' என்று அவர் குறிப்பிட்டுச் சொல்லாததிலேயே, அந்த சம்பவம் தனக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை என்பதை எடுத்துரைத்துவிட்ட அவரது சாமர்த்தியத்தை மகன்கள் இருவராலும் மெச்சாமல் இருக்க முடியவில்லை!

கண்ணாலேயே இருவரும் தங்களுக்குள் தாயைப் பாராட்டிக் கொள்ள, அவரோ நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.

''பெரியவனுக்குக் கல்யாணம் முடிச்சு ஒரு வருஷம் ஆச்சு... அதான் இவனுக்கும் செஞ்சுடலாம்ன்னு பார்த்தேன்! நம்ம... பொன்ராசு மக கீதாஞ்சலியைத் தான் முதல்ல கேட்டேன்! நா ரெண்டு குடும்பம் ஒண்ணாகணும்ன்னு கேட்டேன்! அவங்க... ஒரு குடும்பம் ரெண்டாகணும்ன்னு கேட்டாங்க! அடிப்படையே ஒத்து வரல! அதான்...

வேண்டாம்ன்னு முடிவு பண்ணிட்டேன்!'' என்று தான் பேசிய முதல் சம்பந்தத்தை விவரித்தவர், அந்தக் கூட்டத்தில் நின்றிருந்த கீதாஞ்சலியின் அப்பாவை ஒரு பார்வை பார்த்தார்.

அந்தப் பெரிய மனிதர், கைப்பேசியை எடுத்துக் கொண்டு வெளியே நழுவ, வேலுச்சாமியின் தம்பி ''எங்களுக்குக் கொடுத்து வச்சிருக்கு போல! அதான்!'' என்றார் பல்லே வாயாக.

ரோஜா வீட்டை விட்டு ஓடிப் போனது, நாச்சியாருக்குக் கண்டிப்பாகத் தெரிந்திருக்கும் என்று நம்பினார் வேலுச்சாமி! ரபின் சொல்லியிருப்பான்! அவன் சொல்லித் தான், அவரும் பெண் கேட்டு வந்திருக்கிறார் என்பதையும் அவர் ஊகித்து இருந்தார்! ஆனால், ரோஜா ஓடிப் போன விஷயம் தெரியாதது போலவே அவர் பேசவும், வேலுச்சாமியும் அதைத் தவிர்த்தே பேசினார்! எதற்கு வீணாய் நாமே வாய்விட வேண்டும் என்ற எண்ணம் போலும்!

தன் எண்ணங்களிலிருந்து வெளிவந்த வேலுச் சாமி, ''உங்க குடும்பத்தில பொண்ணு கொடுக்க, நாங்க கொடுத்து வச்சிருக்கணும்மா!'' என்றார் சந்தோசம் போங்க.

இதுவே, வேறோர் சமயத்தில் தான் பெண் கேட்டு வந்திருந்தால், கீதாஞ்சலியின் தந்தையை விட மோசமாய் பேசக் கூடியவர் தான் இந்த வேலுச்சாமி என அறிந்திருந்த நாச்சியாரின் இதழ் கடையில், இகழ்ச்சியாய் ஓர் சிரிப்பு உதயமானது!

தன் வீட்டிலேயே... கிணரளவிற்கு ஓர் ஓட்டை இருக்க, என் மகன் விவேக்கின் ஜாதி அவருக்கு சிறு பொந்தாய் காட்சியளிக்கிறது போலும் என்று சிரிப்புடன் எண்ணினார் வேலுநாச்சியார்!

ஆனால், நாச்சியார் வேறெந்த பேச்சிற்கும் வழி வகுக்கவில்லை.

''பொண்ணை கூட்டிட்டு வாங்க! பார்த்திடு வோம்!'' என்றார் உள்பக்கமாய் பார்வையைச் செலுத்தியபடி.

'ஓர் உயிரைக் காப்பாற்ற வேண்டும்!' என்ற ரபினின் உந்துதலும், 'அந்தப் பெண்ணின் உயிரைக் காப்பாற்ற இதைத் தவிர வேறு வழியில்லை' என்ற கணக்கிடலும், ரபினின் முகத்தில் தெரிந்த பரி தவிப்பும் அவரை இங்கே அழைத்து விட்டிருந்தது!

ஆனால், அப்பெண்ணின் மனநிலையைப் பற்றி அவருக்கு ஏகப்பட்ட சந்தேகங்கள்!

'ஒருவனைக் காதலித்து... ஊரை விட்டு ஓடிப் போகும் அளவிற்கு... அவன் மீது காதல் கொண்டிருந் தவள்... இந்தத் திருமணப் பேச்சை எப்படி எதிர் கொள்வாளோ?' என்ற சந்தேகம் ஒரு புறம்,

'என்ன தான் உயிரைக் காப்பாற்ற இந்தத் திருமணம் என்றாலும், அவளுக்கு இந்தத் திருமணம் ஆயுள் தண்டனையாய் இருந்துவிடக் கூடாதே?' என்ற பயம் மறுபுறம் என அவருக்கு ஏகப்பட்ட குழப் பங்கள்! ரோஜாவை ஒரு முறை, கண்ணால் பார்த்து விட்டாலே, விடையின்றிக் கிடக்கும் கணக்குகள் பலவற்றுக்கு விடை தெரியும் என்றெண்ணினார் அவர்.

அதனாலேயே, ரோஜாவை அழைத்து வரச் சொன் னார்.

ரபினுக்குமே, அப்பெண்ணை நேரடியாகப் பார்த்து விட மாட்டோமா என்ற தவிப்பு இருந்தது!

முழுதாய் அவளைப் பார்த்து விட்டால், மனம் அமைதியடையும் போல் தோன்றியது!

அவளது உயிருக்கு ஆபத்தில்லை என்ற உத்திர வாதத்தை, அவனுக்குத் தன் கண்கள் மூலமாகப் பெற வேண்டியிருந்தது!

ரபினுமே, ரோஜாவின் வருகையை எதிர்பார்த்து, உள்ளறையை எட்டிப் பார்த்தான்! அவனுக்குப் பரபரப்பும்... படபடப்பும் தாங்க முடியவில்லை!

அவன், இருக்கையை விட்டு லேசாய் எழுந்து பார்க்கவும், விவேக் அவனது கைப் பிடித்து அமர்த்தி வைத்தான்!

''மானத்தை வாங்காதடா!'' என்று விவேக் பல்லைக் கடிக்க,

''நீ வேற... ஏன்டா! நா என்ன... அந்தப் பொண்ணோட அழகுல மயங்குறதுக்காக கூப்பிடுறேனா என்ன? அது மயங்கி விழாம... திடமா இருக்கான்னு பாக்காத் தான் கூப்பிடுறேன்!'' என்றான் ரபின், தன் நிலைமையைச் சலிப்புடன் விளக்கி.

''சரி... சரி உக்காரு!'' என்று விவேக், அவனைச் சமாதானப்படுத்தும்போதே,

''ஒரு அஞ்சு நிமிஷம்மா! இந்தாக் கூட்டியாறோம்!'' என்று உள்ளே விரைந்த வேலுச்சாமி, ''வந்தவங்களுக்கு... குடிக்க ஏதாவது கொடுங்க! டேய்... ராசு... ஏதாவது காரம்... இனிப்பு வாங்கியா!'' என்று பலரையும் ஏவினார்.

அவர் சொன்ன ஐந்து நிமிஷம்... முப்பது நிமிஷம் ஆனபோது, ரபினுக்கு உள்ளுக்குள் திகில் கிளப்பியது!

இருப்பே கொள்ளவில்லை அவனுக்கு! விட்டால், உள்ளே ஓடிப் போய் பார்த்து விடலாமா என்று கூடத் தோன்றியது!

நாச்சியாருக்கும் அப்படியே! எடுத்ததுமே, பெண்ணைக் கூட்டி வாருங்கள் என்று கூறியிருக்கலாமோ? திருமணம் பேச வந்தது போல் இருக்க வேண்டும் என்றெண்ணி, குடும்ப விவரங்களைப் பேசி நேரத்தைக் கடத்தியது தவறோ? என்று மனம் தட தடத்தது!

என்னதான் தைரியமானவர் என்றாலும், ஓர் உயிர் விஷயத்தில் தாமதம் செய்து விட்டோமோ என்று சக உயிராய் தவித்தார் அவர்!

விவேக்கிற்கும்... திக்... திக் என்று மனம் தட தடத்தது!

அரை மணி தாண்டிய பின்னரும், பெண் வராமலிருக்க ''என்னம்மா!'' என்று பொறுக்க முடியாமல், நாச்சியாரைக் கேட்டு விட்டான் ரபின்!

''இரு...'' என்பது போல் அவர் சைகை செய்ய,

''வா... ரோசா! வந்து... அம்மா காலில விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக்கோ!'' என்ற வேலுச்சாமியின் குரல் கேட்கவும் தான், நாச்சியாரும் அவரது மகன்களுக்கும் உயிரே வந்தது!

அதிலும் ரபின், வெளிப்படையாகவே பெருமூச்சு விட்டான்!

ஆனால், அந்தப் பெருமூச்சு ஐந்தே வினாடியில் மடிந்தே போனது!

அவர்கள் எதிரே வந்து நின்ற உருவத்தைப் பார்த்து, ரபின் மட்டுமல்ல நாச்சியாரும் அதிர்ந்தே போனார்! அதை விட விவேக்!

அரக்கு பட்டுச்சேலையும், ஆரஞ்சு கலர் ரவிக்கையுமாய் வெளியே தகதகத்தாள் தான்!

ஆனால், அவளது உடம்பு!

நெற்றியில்... புருவத்துக்கு மத்தியில் ஒரு கோலிக் குண்டு அளவிற்கு புடைத்து இருந்தது!

இடது கண்ணின் புருவங்கள் முடியும் இடத்தில், ஓர் வெட்டு! அதிலிருந்து கசிந்த ரத்தம், காதின் ஓரம் சுருண்ட மயிர் சுருளில் மறைந்திருந்தது!

கன்னங்கள் இரண்டிலும், ரோஜா நிறத்தையும் மீறி ஓர் அடர் சிவப்பு! உடலின் உள்ளே ஓடும் ரத்தம், உறைந்து... கட்டிப் போகும் வண்ணம், கன்னம் பழுத்து... காய்ந்திருந்தது!

இரண்டு உதடுகளா... நான்கு உதடுகளா என் றெண்ணும் அளவிற்கு, வெட்டுப் பட்டுப் போயிருந்த உதடுகள்! கிழிந்த உதடுகளின் வழியே கசிந்த ரத்தம், எச்சிலில் கலந்து... காயாமல் இருந்தது!

கைகளும் கால்களும்... நான் ஏகப்பட்ட அடி வாங்கியிருக்கேன் என்று அப்பட்டமாய் காட்டின!

அவள் எடுத்து வைத்த ஒரோர் அடியும், அவளது உடல் பலவீனத்தையும்... அவள் வாங்கிய அடியை யும் அப்பட்டமாய் படம் பிடித்துக் காட்டின!

'இன்னும் ஐந்து நிமிடத்தில் நான் செத்து விடுவேன்!' என்பதுபோல், அவள் தள்ளாட, ரபின் உயிர் துடித்துப் போனான்!

அதிலும், அவளது இடுப்பு! அவனுக்கு என்னவோ வித்தியாசமாய் இருந்தது!

உயிர் போகும் வலியைத் தாங்கிக் கொண்டு, அவள் ஒரோர் அடியையும் எடுத்து வைப்பது போல் தோன்றியது!

கண்கள் இரண்டும் குளமாய் நிரம்பியிருக்க, மூக்கு விடைத்து, பற்களால் ஏற்கனவே கிழிந்திருந்த உதடுகளை அழுத்தி, ஒரோர் அடியையும் அவள் பிரம்மப் பிரயத்தனப்பட்டு எடுத்து வைக்க, ரபின் பயந்து போனான்!

அவர்களது அதிர்ச்சியைக் கண்ட வேலுச்சாமி, "அது ஒண்ணுமில்லைம்மா... காலேசுல இருந்து வரையில கீழ விழுந்திருச்சு!" என்று சமாதானமாய் ஏதோ சொன்னதை யாருமே காதில் வாங்கவில்லை!

கூடவே, அவரது "ம்ம்ம்... வந்து ஆசிர்வாதம் வாங்கிக்கோ!" என்ற அவரது அதட்டலைக் கேட்டு, கண்மணி ரோஜா ஓரடி எடுத்து வைக்கவும், விவேக் எழுந்தே விட்டான்.

"அம்மா! அந்தப் பொண்ணோட இடுப்பு எலும்பு உடைஞ்சிருக்கும்மா! இனியொரு அடி... அந்தப் பொண்ணு எடுத்து வச்சாலும்... அவ்வளவுதான்! வாழ்நாள் முழுசா முடமாகிடுவா! உடனடியா ஹாஸ் பிடல் போகணும்!" என்றான் மூச்சைப் பிடித்துக் கொண்டு.

ரபின் தாயையும் ரோஜாவையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருக்க, நாச்சியார் ஒரு வினாடி கூடத் தாமதிக்கவில்லை.

"சீக்கிரம்... அவளை ஆஸ்பத்திரிக்குத் தூக்குங்க!" என்றார் கட்டளையாக.

ரோஜாவிடம் விரைந்த ரபின், வேலுச்சாமியை பார்த்து லேசாய் தயங்கவும்,

''என்ன வேலுச்சாமி! மருமகனா என் மகனை ஒத்துக்காட்டியும் பரவாயில்லை... உறவுங்கிற முறையில தூக்கலாம்ல!'' என அவரைக் கேட்டார் நாச்சியார்.

''இல்லம்மா இல்லம்மா! மருமவனாவே தூக்கட்டும்!'' என்று வேலுச்சாமி பதற, கண்மணி ரோஜா, விவேக்கின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள்!

அடுத்து வந்த ஒரு வாரத்தில், அவளது இடுப்பு எலும்புக்கான சிகிச்சை நடைபெற, அதன் முடிவில் கல்யாணம் என்று நிச்சயிக்கப்பட்டது!

ஆனால், கல்யாணத்தைத் தவிர... வேறோர் குண்டும் அங்கே காத்திருந்தது!

அது - ரோஜா தனது கேட்கும் திறனை முழுமையாய் இழந்தாள்!

ரோஜா வாங்கிய அடிகளின் காரணமாய், செயலிழந்து போன அவளது காது நரம்புகள், அவளை நிரந்தர செவிடாய் ஆக்கி விட்டிருந்தது!

உயிரைப் பாதுகாக்க எண்ணி விரைந்தவர்கள், உணர்வைப் பாதுகாக்க முடியாததில் உடைந்து போயினர்!

ஜாதிக்கு பலிகடா உயிர் என்பது போய், உணர் வென்று ஆகிவிட்டிருந்தது!

ஜாதி எனும் பேய்... உடலைக் கூறாக்காமல்... உறுப்பை ஊனமாக்கி விட்டிருந்தது!

12



ரபின் கிட்டத்தட்ட நொறுங்கிப் போனான்!

அவனால், ரோஜாவின் நிலைமையை ஜீரணிக்கவே முடியவில்லை! அவளது இந்த நிலைக்கு... செந்தூர் மட்டுமல்ல தானும் ஓர் காரணம் என்று மனம் அவனையே சுட்டது!

தான் செய்த ஒரோர் நிமிடத் தாமதமும், அவளது ஊனத்திற்கு வித்திட்டு இருக்கிறது என்பது புரிந்தது! புரிந்த செய்தி, வலிக்கவும் வைத்தது!

அதிலும், ''இடது காது நரம்பு கம்ப்ளீட்டா செயலிழந்து போச்சு... அதில் ஹியரிங் வரதுக்கான வாய்ப்பு கிட்டத்தட்ட பூஜ்யம் தான்! வலது பக்கம் அவ்வளவா பாதிப்பு இல்லை... ஆனாலும், அவங்களால முன்ன மாதிரி எதையும் கேட்க முடியாது! வலது பக்கமா கேட்கிற சத்தங்களை... அதுவும் அதிகமாய் கேட்கும் சத்தங்களை மட்டும் தான் அவங்களால உணர முடியும்!'' என்று காது - மூக்கு - தொண்டை நிபுணர் கூறியதிலிருந்து, ரபினால் உண்ண முடியவில்லை! உறங்க முடியவில்லை! வேலைக்குச் செல்ல முடியவில்லை! ஏன், சிந்திக்கக் கூட முடியவில்லை!

தன் மீதே கோபம்! ஆத்திரம்! ஆற்றாமை! 'ஹய்யோ!' என்ற இயலாமை!

ரோஜா அனுமதிக்கப்பட்டிருந்த அறையிலேயே தவம் செய்தவனை, அங்கிருந்து அசைக்க முடியவில்லை.

அன்றும் அப்படித் தான், ரோஜாவின் படுக்கையருகே போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்து, கைகள் இரண்டையும் கட்டிலின் விளிம்பில் ஊன்றி, தலையை அதில் தாங்கியபடி உட்கார்ந்திருந்தவனுக்கு, கண் மூடி... வதங்கிய மென்மலராய் உறங்கும் ரோஜாவைக் காண்கையில் கண்கள் தாமாய் கண்ணீரைச் சொரிந்தன.

இந்த ஒரு வாரமும், ரோஜா விழித்திருந்த நேரங்களை எண்ணி விடலாம்!

இருபத்தி நாலு மணி நேரத்தில், இருபத்தி யிரண்டு மணி நேரம் உறக்கம்! உறக்கம்! உறக்கம் மட்டுமே!

விழித்திருக்கும் நேரங்களில் வலி! வலி! வலி மட்டுமே!

வலியில் சுருங்கும் அவளது கண்மணிகளைப் பார்க்கையில், அவள் உறங்கிய நிலையிலேயே இருக்கலாம் என்று தோன்றும் ரபினுக்கு!

அதிலும், அவனைக் காண்கையில் அவள் பார்க்கும் ஓர் புரியாத பார்வையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அப்பார்வையில் பயமில்லை! தவிப்பில்லை! வலியில்லை! வேதனையில்லை! கேள்வியில்லை! ஏன்... கோபம் கூட இல்லை!

அதிலிருந்து, ஓர் புரியாத பாவனை மட்டுமே! ஏன் என்ற கேள்வி மட்டுமே!

அவளிடம் என்னவென்று விளக்குவது? உன் உயிரைக் காக்க வந்தேன்... ஆனால் உணர்வைத் தொலைத்து விட்டு நிற்கிறேன் என்று சொல்வதா என்று ரபினின் நெஞ்சம், படபடத்தது!

அவளது பார்வையின் பொருளைத் தாங்குவதை விட, அவள் உறங்குவதே மேல் எனறெண்ணும் அளவிற்கு ரபின் வந்து விட்டிருந்தான்.

அவள் கண்களைச் சந்திக்க முடியாமல், அறையை விட்டுச் செல்வதற்கு பதிலாக, அவள் உறங்கும் வேளையில் அவளையாவது கண்ணாரப் பார்த்துக் கொண்டிருக்கலாமே என்ற நிலைக்கு ரபின் வந்து விட்டிருந்தான்!

ஆனால், நாட்கள் நகர்ந்து நகர்ந்து வாரமாய் வடிவம் பெற்றபோது, அவளது துயில் கூட அவனுக்குத் துயரத்தைக் கொடுத்தது!

''விவேக்... அவளுக்கு வேற எதுவும் பெருசா பாதிப்பாடா?'' என்று அவன் குரலடைக்க விவேக்கை வினவ,

''இதை விடவும் பெருசா என்னடா வந்திட முடியும்?'' என்று கேட்ட விவேக்கின் கேள்வி, ரபினைக் கொன்றது!

''விவேக்!'' என்று ரபின் அதிர,

''பின்ன என்னடா? இடுப்பு எலும்பை உடைச்சிருக்காங்க... காங்கரீட்டை விட நம்மளோட எலும்பு எட்டு

மடங்கு உறுதியானது! அதையே உடைச்சிருக் காணுங்க! நாயிங்க! எனக்கு வர ஆத்திரத்துக்கு...'' என்று பல்லைக் கடித்த விவேக்.

''நீயெல்லாம் போலீஸ்ன்னு வெளிய சொல்லிக் காத! அவனுங்களைத் தூக்கிப் போட்டு நாலு மிதி மதிப்பியா? இங்க வந்து... பாதிப்பு அதிகமா கம்மி யான்னு அளந்துட்டு இருக்கான்!'' என்றான் எரிச்சல் மிகவுற.

ரபினுக்கு அவமானமாய் இருந்தது!

தலை குனிய நின்றவன், ''என்னால அவங்களை அடிக்க முடியாம இல்லடா! இந்த கேஸ்ல இல்லைன் னாலும்... வேற கேஸ்ல உள்ள தள்ளி, ஒரொருத்தன் கையையும் சுக்கு சுக்கா அடிக்கணும்ன்னு தான் வெறி வருது! ஆனா... இவ... நம்ம வீட்டுக்கு வந்திடட் டும்ன்னு பொறுமையா இருக்கேன்! அவ... அவங்க பொண்ணா இருக்க வரைக்கும் பிரச்சனை தான்!'' என்றான் ரபின், தன் கோபத்தை அடக்கிக் கொண்டு.

விவேக்கால் அதை ஏற்றுக் கொள்ள முடிய வில்லை என்பது அவனது சலிப்பேறிய முகபாவத் திலிருந்தே தெரிந்தது!

அது, மனதை இன்னமும் பிசைய ''விவேக்...'' என மெல்ல அவன் கை பற்றினான் ரபின்.

அந்தத் தொடுகை என்னவோ செய்ய, அவனைத் தோளோடு அணைத்தவன், ''சாரிடா... எனக்கு... எனக்கு... மனசே ஆரலைடா! என்னையும் வீணா

வையும் மாதிரி நீ வாழணும்ன்னு சொன்னது... அப்படியே அப்பட்டமா நிஜமாகியிருக்க வேணாம்ன்னு தோணுது! ச்சை! நம்ம குடும்பத்துக்கு வர... மரு மகள்ங்க எல்லாருக்குமே இந்த சாபக்கேடு போல! ச்சை! மனசே தாங்க மாட்டேங்குதுடா!'' என்றான் அடைத்த தொண்டையை செருமும் திராணி கூட இல்லாமல்.

ரபினாலும் கண்ணீரை அடக்க முடியவில்லை!

அண்ணன் - தம்பி இருவரும் ஒருவரை ஒருவர் தேற்ற முடியாமல் அரற்றிக் கொண்டிருக்க, கட் டிலின் பக்கமாய் சிறு அசைவு தெரிந்தது!

அப்போது தான், ரோஜாவின் அறையில் நின்று பேசிக் கொண்டிருக்கிறோம் என்பது புலப்பட்டது இருவருக்கும்!

வேகமாய் அவள் பக்கம் சென்றனர் இருவரும்.

அவளது கண்களைப் பரிசோதித்த விவேக், அவளது நாடியைப் பிடித்துப் பார்த்தபடியே ''உனக்கு ஒண்ணுமில்லை ரோஜா! பயப்படாதே!'' எனக் கூறினான்.

ரோஜாவுக்கு எதுவுமே காதில் விழவில்லை.

எதிரே இருப்பவன் மருத்துவன் என்பது அவனது ஸ்டெதஸ்கோப்பைப் பார்க்கையில் தெரிந்தது!

ஆனால்... என்ன சொல்கிறான் என்பது சுத்தமாய் கேட்கவில்லை!

''ஹான்?'' என அவள் விழிக்கவும்,

அவளது வலப்பக்கமாய் குனிந்த ரபின், ''பயப்பட ஒண்ணுமில்லைன்னு சொல்றான்!'' என்றான் சற்றே சத்தமாக.

இப்போது ஓரளவுக்குக் கேட்டது!

ஆனால், முன்னர் ஏன் கேட்கவில்லை?

வலப்பக்கமாய் குனிந்து பேசினால் மட்டும் ஏன் கேட்கிறது?

இடது பக்கம் எதுவும் பிரச்சனையா? கட்டெதுவும் போட்டிருக்கிறதோ?

கையை உயர்த்தி... மெல்ல தலையைத் தடவிப் பார்த்தாள்.

கட்டு இருந்தது! ஆனால், காது பக்கம் இல்லை! கண்ணோரத்தில்... சின்னதாய் ஓர் பிளாஸ்டர் மட்டுமே இருந்தது!

பின்னர் ஏன்?

ரோஜாவுக்குப் புரியவில்லை.

மெல்லத் தலை திருப்பி, தன் வலப்பக்கமாய் நின்றிருந்தவனைப் பார்த்தாள்.

பார்த்தவள், சற்றே அதிர்ந்தாள்!

முதலில், காது ஏன் கேட்கவில்லை என்ற ஆராய்ச்சியிலேயே இருந்தவளுக்கு, தன் வலக்காதில் பேசியவன் யாரென்று பார்க்கத் தோன்றவில்லை! தன் காதுகளின் திறனைப் பற்றி மட்டுமே சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது!

ஆனால், இப்போது? வெகு அருகில் அவன் முகத்தைப் பார்த்ததும், என்னவோ செய்தது!

இவன்... இவன்... தன்னைப் பெண் பார்க்க வந்தவன் அல்லவா?

ஏன் பெண் பார்க்க வந்தான்?

இவனுக்கு... நான் செந்தூருடன் ஓடிப் போனது தெரியுமா?

அவனை மணந்து கொண்டது தெரிந்துமா... என்னைப் பெண் பார்க்க வந்தான்?

அதெப்படி, சரியாக... அன்று வந்தான்?

விஷயம் தெரிந்து வந்தானா? இல்லை எதேர்ச்சியாக வந்தானா?

எதற்காக... ஆஸ்பத்திரிக்கு தூக்கி வந்தான்?

நான் விழிக்கும் போதெல்லாம், ஏன் என்னையே பரிதாபமாய் பார்த்துக் கொண்டு நிற்கிறான்? - ஆயிரமாயிரம் கேள்விகள், ரோஜாவின் மனத்தைக் குடைந்து எடுத்தன!

ஏதாவது ஒரு கேள்விக்கு அவனிடம் பதிலைப் பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், ''நீங்க யாரு?'' என்றாள் ரோஜா மெதுவாய்.

எப்போதும் போல், அவளது முகம் ஓர் புரியாத பாவனையை ஏந்தியதுமே ரபினுக்கு முகம் கசங்கி விட்டது!

இவள் என்ன பாவம் செய்தாள் என இந்த தண்டனை கடவுளே என்று நூறாவது முறையாக வருத்தம் கொண்டவன், அவளது கேள்வியில் முகம் கசங்கினான்.

''நா ரபின்... ரபீந்திரநாத்!'' என்றான் அவள் காதருகே.

''ஹான்... கேட்கலையே?'' என்று ரோஜா பரிதாபமாய் விழிக்கவும்,

ரபின் என்ற ஆண் மகனுக்குத் தன் கம்பீரத்தையும் மீறி அழுகை வந்தது!

பல்லைக் கடித்து அதை உள்ளே இழுத்தவன், விவேக்கை நிமிர்ந்து பார்த்தான்.

விவேக் பதிலேதும் சொல்லாமல், ''சொல்லு'' என்பது போல் தலையசைக்கவும்,

''ரபின்! ரபீந்திரநாத்!'' என்றான் இன்னமும் சத்தமாய்.

இப்போது, ரோஜாவுக்குக் கேட்டது!

''ஹோ!'' என உள் வாங்கியவள், மீண்டும் அவன் புறம் திரும்பி ''நீங்க... நீங்க... ஏன்... என்னை...'' என்றாள் தடுமாற்றத்துடன்.

எப்படிக் கேட்பது என்று புரியவில்லை அவளுக்கு!

அவள் கேட்க வருவதைப் புரிந்து கொண்டவன் போல், ''உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறேன்!'' எனக் கூறி, சிறு இடை வேளைக்குப் பின்னர், ''பண்ணிக்கிறியா?'' என்றான் இறைஞ்சுதலாய்.

அவன் சொன்ன செய்தியை விட, அவன் குரலில் தென்பட்ட கெஞ்சுதல் ரோஜாவை என்னவோ செய்தது?

அதன் விளைவாய் ''ஏன்?'' என்றாள் அவள் ஒற்றைச் சொல்லாக.

ரபின் ஒரு நிமிடம்... ஏன் ஒரு வினாடி கூட தாமதிக்க வில்லை.

''ஏன்னா... உன் பேருக்குப் பின்னாடி என் பேர் வந்தா... என்னோட பேருக்கு ஒரு தனி அழகு வரும்ன்னு தோணுது! ரோஜா ரபீந்திரநாத்! அழகா இருக்கில்ல! அதனாலதான்!'' என்றான் சிரிப்புடன்.

ரோஜாவின் இதழ்களில், வலியையும் மீறி சிறு சிரிப்பு உதயமானது!

ஆனால், உதித்த வேகத்திலேயே அது மறைந்து விட, ''செந்தூர்!'' என்ற மனிதன் அவள் கண் முன்னே தோன்றினான்! கூடவே, தன் தந்தையும்! அவரது கொடூரங்களும்!

''நா... நான் செந்தூர் பாண்டியனை...'' என அவள் தடுமாற்றத்துடன் ஆரம்பிக்க, ''தெரியும்!'' என்றான் ரபின், அவளது கரங்களை ஆதரவாய்ப் பற்றி.

''தெரியுமா? அப்புறம் ஏன்?'' - ரோஜாவால் புரிந்து கொள்ள முடியவில்லை! தான் ஓடிப் போனவள் என்று தெரிந்தும்... ஏன் திருமணம் செய்யக் கேட்கிறான் என்பதை அவளால் சுத்தமாய் புரிந்து கொள்ள முடியவில்லை!

பெற்ற தந்தையே, 'ஓடிப் போனவள் என் ஜாதிக்கு வேண்டாம்' எனக் கூறி, அடித்துக் கொல்ல நினைக்கையில், இவனுக்கு என்ன என்று மனம் வெகுவாய் கேள்வி கேட்டது!

அதை மறையாமல் அவனிடம் கேட்க எழுந்தது நா!

அதற்குள் உள்ளே வந்த நாச்சியார், ''ரோஜா... ஏன்... எதுக்குங்கிற காரணமெல்லாம் இப்ப ஆராய வேண்டாம்! என்ன நடந்திருந்தாலும்... நீ உயிரோட இருக்கே! அதுவே... இங்க பெரிய விஷயம்! சரியா? அதை மனசில வச்சுட்டு... நாளைக்கு நடக்கப் போற கல்யாணத்தில முடிஞ்சளவு சந்தோஷத்தோட இரு!'' என்ற கட்டளையை அவளது காதருகே உரைத்தபடி, அவளருகே அமர்ந்தார்.

ரோஜாவின் கண்மணிகள் தாமரையாய் விரிந்து, திகைத்து நின்றன!

இவர்... இவர்... ரபினின் தாய் அல்லவா?

என்ன ஒரு தோரணை! தைரியம்! ஷப்பா! பார்க்கும்போதே, பயம் தானாய் வந்து ஒட்டிக் கொள்கிறதே!

ஆனால், இவர் என்ன சொல்கிறார்? கல்யாணமா? எனக்கா? அதாவது எனக்கும் இவனுக்குமா?

எனக்கு இன்னொரு திருமணமா?

ஒரு திருமணத்தின் அடியையே தாங்க முடிய வில்லையே! அதற்குள் இன்னொன்றா? முன்னர் நடந்தது திருமணம் தானா? இரண்டே மணி நேரத்தில், அந்தரத்தில் தொங்கிய அந்தத் திருமாங்கல்யம் திருமணத்தின் அடையாளம் தானா?

தலை வலித்தது!

உள்ளிருக்கும் கேள்விகளின் தாக்கம் தாங்க முடியாமல், அவள் தலையைப் பிடித்துக் கொள்ள, ''எதையும் மனசில போட்டுக் குழப்பிக்காத! எல்லாமே நல்லதா தான் நடக்கும்!'' என்ற வேலு நாச்சியாரின் கரங்கள், அவளது நெற்றியை மெல்ல வருடிவிட்டன.

அவரது அழுத்தமான கைகள் கொடுத்த இதமான வருடலின் காரணமாகவோ இல்லை... விவேக் ஏற்றிய தூக்க மருந்தின் காரணமாகவோ ரோஜா உறங்கிப் போனாள்!

அவளது கண்மணிகள் தங்கள் ஆட்டத்தை நிறுத்தி, உறக்கத்தின் பிடிக்குள் சென்று சிக்கிக் கொள்ளவும், ரபின் தாயிடம் திரும்பினான்.

''என்னம்மா சொல்றீங்க? நாளைக்கே மேரேஜா? எப்படிம்மா முடியும்? அவளால... நடக்கக் கூட முடியாதே! அவ... முழுசா குணமாகி நடக்க இன்னும் ஒரு மாசமாகும்ன்னு விவேக் நேத்து தானே சொன்னான்! அப்புறம் எப்படிம்மா?'' என்றான் படபடவென.

''தாலியை கழுத்தில தானே கட்டப் போறே? காலில இல்லையே?'' என்று நாச்சியார் திருப்பிக் கேட்க,

''ஷ்! அவ...'' என ரபின் ஆரம்பிக்கும்போதே,

''வீல் சேர்ல கூட்டிப் போயிறலாம்மா!'' என்றான் விவேக்.

ரபின் இருவரையும் மாறி மாறிப் பார்க்கவும், ''உங்க கல்யாணம் எவ்வளவு சீக்கிரம் நடக்குதோ...

அவ்வளவு சீக்கிரம் நல்லது! வேலுச்சாமியையும் அவங்க குடும்பத்தையும்... நாம ரோஜாவைப் பார்த்துக்கிறதா சொல்லி, இங்க வர விடாம செஞ்சிருக்கேன்! என் மேல இருக்க மரியாதையில வராம இருக்காங்க... அவ்வளவுதான்! ஆனா... அது மாசக் கணக்கில நீடிக்கும்ன்னு சொல்ல முடியாது! அவ கழுத்தில தாலி ஏறுற வரைக்கும் அது அவங்க வீட்டுப் பொண்ணு தான்! அவனுங்க மனசு... ஒரு குரங்கு மனசு... அங்க இங்க தாவுறதுக்குள்ள கல்யாணத்தை முடிச்சிடணும்!'' என்றார் அவர் நாலையும் அலசி ஆராய்ந்தவராய்!

ரபினுமே, அவளைத் தங்கள் வீட்டு மருமகளாய் கூட்டி வரும் தருணத்திற்காக காத்திருந்தவன் தானே?

எவ்வளவு சீக்கிரம் ரோஜா தன் மனைவி ஆகிறாளோ... அவ்வளவு சீக்கிரம் அந்த ஜாதி வெறிக் கூட்டத்தை உள்ளே தள்ளலாம்!

அந்த ஒரு எண்ணத்தை மனதில் வைத்து, ரபினும் திருமணத்திற்கு சரி என்றான்.

அடுத்த நாள், திருமண நாளாய் விடிந்தது!

பட்டுச் சேலையில்லை! நகையில்லை! பகட்டில்லை! பெண் அழைப்பில்லை! மாப்பிள்ளை ஊர்வலம் இல்லை! ஆரத்தி இல்லை! கிண்டல் இல்லை! கேலி இல்லை! ஏன்... சிரிப்புமில்லை!

ஆஸ்பத்திரி உடையிலேயே, ஆம்புலன்ஸில் ஏறி... திருமணத்திற்கு வந்த ஒரே மணமகள் ரோஜாவாகத் தான் இருப்பாள்!

அவளால், நடப்பதை ஒத்துக் கொள்ளவும் முடியவில்லை!

அதே சமயம், நாச்சியாரின் கண்ணசைவுக்கு மாற்றுச் சொல்லவும் முடியவில்லை!

இந்தக் குழப்பத்தை விடவும், தன் காது பற்றிய குழப்பம் அவளை வறுத்து எடுத்தது!

அனைவரும் ஏதேதோ பேசினர்! வாய் அசைந்தது! உதடு அசைந்தது! நாக்கு லேசாய் தெரிந்தது!

ஆனால், ஒண்ணும் கேட்கவில்லை!

முழுதுமாய் ஒன்றும் கேட்கவில்லை என்று சொல்ல முடியாதபடி, வலது பக்கம் நிகழும் சத்தங்கள் மட்டும் சன்னமாய் கேட்டன!

இடது பக்கத்தில்... பல சமயங்களில் நிசப்தமாய் இருந்தது! சில சமயங்களில், ''ஒஊங்!'' என்ற சிறு ஓசை மட்டும்! அதுவும், அந்த ஓசை... காது வழியே கன்னத்தில் ஊடுருவி... தொண்டை வரை... ஏதோ ஓர் கரகரப்பை உண்டு பண்ணியது!

வெகு சில சமயங்களில், சுண்டி இழுப்பது போல்... சுருக்கென வலித்தது!

அப்படித் தான் ஒரு முறை, சுருக்கென வலிக்கவும், அதன் தாக்கம் தாங்க முடியாமல் ''ஆஆ!'' என்று லேசாய் அலறினாள் ரோஜா.

அடுத்த வினாடி அவளருகே வந்து சேர்ந்தான் ரபின்.

''என்ன ரோஜா? என்ன?'' என அவன் வலது பக்கமாய் குனிந்து கேட்கவும்,

''எனக்கு... எனக்கு... இந்தப் பக்கம் எதுவுமே கேட்க மாட்டேங்குதே! ஏன்? ஏன்... நீங்க வலது பக்கமே பேசுறீங்க?'' என்றாள் அவள் அழுகையுடன்.

ரபின் என்ன பதில் சொல்வதென்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே, அவனை விலக்கிய வேலுநாச்சியார், ''நீ எங்க வீட்டுக்கு மருமகளா வரப் போறே இல்லயா? எங்க வீட்டுக்கு மருமகளா வரவங்களுக்கு ஒரு சாபக்கேடு இருக்கு... ஒண்ணு என்ன மாதிரி பட்ட மரமா நிக்கணும்! இல்லை... புருஷனோட நல்லா வாழணும்ன்னா எதையாவது தொலைச்சுட்டு வந்து நிக்கணும்! இந்தா... இவ இருக்காளே... என்னோட மூத்த மருமக... இவளுக்கு வாய் பேச முடியாது! என்னோட சின்ன மருமக... உனக்கு... காது கேட்காது!'' என்றார் தன் ஆளுமை முழுதையும் தொலைத்த குரலில்!

ரோஜா விக்கித்து நின்றாள்!

'எனக்கு காது கேட்காதா? ஐயோ!'

'இனிமேல்... காலையில் எழுந்ததும் கோவில் மணி ஓசை கேட்காதா?'

'அம்மா... ரோசா என்று அழைப்பதைக் கேட்க முடியாதா?'

'சாப்பிட்டு போடி என்ற அவரது அன்பை உணர முடியாதா?'

'ஏய் சனி... என்று அப்பா திட்டுவதையும் கேட்க முடியாது போலவே!'

'காரின் ஹாரன் ஒலியை வைத்தே அப்பா வருவதைக் கணிக்க முடியாதா?'

'பஸ்ஸின் சத்தம்! தோழிகளின் அழைப்பு!'

'ஆசிரியர்கள் எடுக்கும் அட்டெண்டன்ஸ்!'

'அட்டெண்டன்ஸ் என்ன பெரிய விஷயம்? அவர்கள் எடுக்கும் வகுப்பு?'

'ஹய்யோ... படிப்பே போய் விட்டதா? செவிடாகி விட்டோமா?'

'குயிலின் கூவல்! கடிகாரத்தின் டிக்... டிக்! தொலைக்காட்சியின் இரைச்சல்! ரேடியோவில் வரும் பாட்டு!'


'எஸ்.பி.பி.யின் இனிமைக் குரல்! சித்ராவின் குயில் பாட்டு! ஹய்யோ!'

'செவிடு! செவிடு! செவிடு! ஹய்யோ!'

தான் இழந்த அனைத்தையும் எண்ணி, அவள் விக்கித்து நின்ற வேளையிலேயே ரபின் அவளது கழுத்தில் திருமாங்கல்யத்தை கட்டி விட்டிருந்தான்! கண்டமன்னூர் அய்யனாரின் முன்னிலையில்!

தான் இழந்தவற்றை எண்ணியே சுழன்று கொண்டிருந்த ரோஜாவிற்கு, தான் பெற்ற தாலியின் கணம் தாங்கொண்ணாததாய் இருக்க, ரோஜாவின் கண்மணிகள் மெல்ல மெல்லச் சொருகி... மயக்கத்தை எட்டின!

13



ஆயிற்று! கண்மணி ரோஜா, திருமதி. ரோஜா ரபீந்திரநாதாக மாறி, ஒரு மாத காலம் ஆயிற்று!

அதோடு அவளுக்கும்... அவளது பிறந்த வீட்டிற்கு மான தொடர்பு அறுந்து போயும், ஒரு மாத காலம் ஆயிற்று!

திருமணம் முடிந்த ஒரு வாரத்தில், ரோஜாவுக் கான சீர் வரிசையை, இரு பெரிய வண்டிகளில் கொண்டு வந்திறக்கிய வேலுச்சாமியை பேசவே விடவில்லை, வேலுநாச்சியார்.

''என்ன வேலுச்சாமி? உங்க பொண்ணை வச்சு சோறு போடுற அளவுக்கு... என் மகனுக்கு வருமானம் பத்தாதுன்னு நினைச்சிட்டீங்க போல!'' என அவர் கேட்ட குரலில் நக்கல் இல்லை... இளக்காரம் இல்லை... அலட்சியம் இல்லை... ஆத்திரம் இல்லை... அதிகாரமும் இல்லை! கேள்விக்குப் பதில் எதிர் பார்க்கும் ஓர் ஆசிரியரின் தோரணை மட்டுமே இருந்தது!

''அப்படியில்லைங்கம்மா! எங்க பொண்ணுக் குன்னு நாங்க செய்யணும்ல... ஊரே மெச்சுற வேலு நாச்சியார் அம்மா வீட்டில வாக்கப்பட்டு வந்திருக்கா! அதுக்குன்னு ஒரு மரியாதை இருக்கில்ல! ஏதோ...

எங்களால முடிஞ்சது!'' என்றார் வேலுச்சாமி, தன்மையாகவே.

''நா உங்ககிட்ட இதை எதிர்பார்க்கலை, வேலுச் சாமி!'' என்றார் வேலு நாச்சியார், நறுக்குத் தெரித்தாற் போல்.

''வேற என்ன எதிர்பார்க்கறீங்கன்னு சொன்னா... உடனே செஞ்சுடுறேன்ம்மா!'' என அவர் கூறவும்,

''ஒரு பொண்ணுக்கு... பொறந்த வீடு கொடுக்கிற முக்கியமான சீர்வரிசை என்ன தெரியுமா?'' எனக் கேட்டு சிறு இடைவேளை விட்ட வேலுநச்சியார், ''சந்தோசம்!'' எனப் பதிலையும் தானே கூறினார்.

வேலுச்சாமியின் தலை மெல்லக் கவிழ, ''அதை விட முக்கியமானது... ஆரோக்கியம்!'' என மீண்டும் தானே பதில் சொன்னவர்,

''நீங்க... ரோஜாவை... ரோஜாவா கொடுத்திருந்தா அதான் எனக்கும் என் மகனுக்கும் நீங்க கொடுக்கிற பெரிய சீதனம்! ஆனா... நீங்க அவளைக் கசக்கி... சருகாக்கி இல்ல கொடுத்திருக்கீங்க! நா எதிர்பார்த்த சீதனத்தைக் கொடுக்காத உங்ககிட்ட... இனி நான் எதையும் வாங்கிக்க விரும்பல! தயவு செஞ்சு எடுத்திட்டுப் போய்டுங்க!'' என்ற வேலுநாச்சியார், தன் இரு கைகளையும் கூப்பினார்! விடை கொடுக்கும் பாவனையில்!

அதற்கு மேல், வேலுச்சாமி அங்கே நின்றிருக்க வில்லை.

இந்த வாக்குவாதம் நடக்கையில், ரபின் வீட்டில் தான் இருந்தான்.

அவர்கள் கிளம்பிச் சென்றதும், தாயிடம் வந்தவன், "நீங்க பண்றது எதுவுமே நல்லா இல்லைம்மா!" என்றான் கோபமாய்.

லேசாய் துணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தவரின் முகம் சட்டென சிரிப்புக்கு இடம் பெயர, "என்னடா... நல்லா இல்ல?" என்றார் அதிகாரமாய்.

"இந்த அதிகாரத்துக்கு ஒண்ணும் குறைச்சலில்லை!" என்று அவர் கன்னத்தில் கிள்ளியவன்,

"இங்க நான் ஹீரோவா... இல்ல நீங்க ஹீரோவா? நா பேச வேண்டிய டயலாக் எல்லாம் நீங்க பேசி... சும்மா பறந்து பறந்து ஸ்கோர் பண்ணிட்டு இருக்கீங்க? இதெல்லாம் நல்லதில்லை சொல்லிட்டேன்!" என்றான் ரபின், கோபம் போல் ஒரு விரல் நீட்டி மிரட்டி!

"ச்சே... நா ஹீரோ எல்லாம் இல்லப்பா! அதெல்லாம் நமக்கு ஒத்து வராது!" என வேலுநாச்சியார், பிடிக்காத பாவனையில் தோளைக் குலுக்க,

"அது! அது 'நல்ல' ஹீரோவோட அம்மாவுக்கு அழகு!" என ரபின் சிரித்தான்.

ஆனால், வேலு நாச்சியாரோ "டேய் மக்குப் பையா! நா எப்படிடா ஹீரோ ஆக முடியும்? நா ஹீரோயின்டா மக்கு போலீஸ்!" என்றார் கேலியும் கிண்டலுமாய்.

"பெரிய ஜோக்கு! ஹஹஹ்ஹா! நல்லா சிரிச்சிட்டேன் போதுமா? போங்க... போய் வேலை கீல ஏதாவது

இருந்தா பாருங்க!" என்று பல்லைக் கடித்து, அவரை அனுப்பி வைத்த ரபின், காவல் நிலையம் கிளம்பிச் சென்றான்.

சரியாக ஒரு மாத காலம் முடிந்த பின்னரே, ரோஜா வீடு வந்தாள்! அவளது இடுப்பு எலும்புகள் கூடி நிற்க, ஒரு மாதம் தேவைப்பட்டது!

தனக்கு 'காது கேட்காது!' என்பதை ஜீரணிக்கவே, திருமணம் முடிந்த முதல் ஒரு வாரம் தேவைப்பட்டது ரோஜாவிற்கு.

பிறவியிலேயே முடமாய் பிறப்பது என்பது வேறு! ஆனால், சத்தங்களின் சங்கீதத்தில் வாழ்ந்துவிட்டு, நிசப்த உலகத்தில் வலுக்கட்டாயமாகத் தள்ளி விடப்படுவது என்பது வேறு!

ஒலியற்ற வாழ்வு ஒளிமயமாய் இருக்குமா என்ற சந்தேகமே, அவளது வாழ்வின் ஒளியை ஒதுக்கி வைத்தது!

சின்னதாய் ஓர் அசைவு தெரிந்தால் கூட, "ஹய்யோ... நம்மளால கேட்க முடியலையே!" என்று மனம் கிடந்து தவித்தது!

அவள் தங்கியிருந்த அறையில் ஓர் கடிகாரம் இருக்கும்! அதில், மணிக்கு ஒரு முறை, ஓர் குயில் வந்து கூவும்! மணிக்கு ஏற்றார் போல், கூவல் ஒலி இருக்கும்! ஒரு மணிக்கு ஒரு முறை! இரண்டு மணிக்கு இரண்டு முறை! இப்படி!

அன்றும் அப்படித்தான்! மாலை மணி ஐந்து! யுகவீணா, ரோஜாவிற்கான மாலைச் சிற்றுண்டியை

எடுத்துக் கொண்டு, அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தாள்.

கடிகாரத்தின் குயில் வெளியே வந்து ஐந்து முறை கூவிற்று!

அது கூவுவதற்காகவே காத்திருந்தவள் போல், ரோஜா அது வெளியே வந்ததும்... ''கூ... கூ...'' என்று தானும் கூவினாள்! அக்குயிலின் குரலுக்கு ஈடாய்!

ஒரு முறை! இரண்டு முறை! மூன்று! நான்கு! ஐந்து! - அக்குயில் தன் வேலையை முடித்துக் கொண்டு, தனக்கென ஒதுக்கப்பட்ட கூண்டிற்குள் சென்று உட்கார்ந்து கொண்டதும் தான், ரோஜாவின் கவனம் அதிலிருந்து கலைந்தது!

தலை திருப்பிப் பார்த்தவளின் விழியோரம், யுகவீணா சிறு சிரிப்புடன் நின்றிருப்பது பட்டது!

சட்டென வெட்கம் சூழ்ந்து கொள்ள, லேசாய் அசடு வழிந்தவளுக்கு, தன் செயலுக்கு அடித்தளமாய் திகழ்ந்த தனது குறை புலப்பட்டது போலும்! முகத்தை மூடிக் கொண்டு விம்மி விட்டாள், அந்த இளம் பெண்!

அவளால் தன் குறையின் தாக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

அவளது செய்கையை ஓர் சிரிப்புடன் பார்த்திருந்த யுகவீணாவிற்கு அவளது அழுகை பெரும் துன்பத்தைக் கொடுக்க, கையில் வைத்திருந்த பாத்திரத்தைக் கீழ வைத்துவிட்டு, வேகமாய் ஓடிச் சென்று ரோஜாவை அணைத்துக் கொண்டாள்.

ரோஜா விம்மி வெடித்து அழ, யுகாவிற்கும் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது!

அவளை நெஞ்சோடு அணைத்து, தலையை ஒரு கையால் வருடி விட்டவளுக்கு, ரோஜா ஓர் குழந்தை போல் தெரிந்தாள்!

'தன்னைப் போலவே!' என்ற தோழமையுணர்வும் சேர்ந்து கொள்ள, யுகாவின் கரங்கள் அவளுக்கு ஆறுதல் புகட்டின.

கிட்டத்தட்ட அரை மணி நேரத்திற்கும் மேலாய், தன் வேதனை முழுதிற்கும் அழுகையை வடிவமாக்கி, ரோஜா அழுதே தீர்த்தாள்!

யுகாவும் அவளைத் தடுக்க முற்படவில்லை! தன் அனுபவத்தின் காரணமாகவோ என்னவோ... அவள் அழுதால் தேவலாம் என்று தோன்றியது போலும்!

அவளது அழுகையைக் குறைக்கும் வண்ணம், முதுகை வருடி விட்டாளே ஒழிய, அவளது கண்ணீரைத் துடைக்கவில்லை.

ஒரு வழியாக ரோஜா தெளிந்து நிமிர்ந்தபோது, யுகாவின் அன்பு முகம் அவளை எதிர்கொண்டது!

அவளையும் அறியாமல் ''தேங்க்ஸ் அக்கா!'' என்று ரோஜாவின் உதடுகள் வார்த்தைகளை மெல்ல உதிர்த்தன.

யுகா, கைகளை மறுப்பாய் அசைத்து, ''வேணாம்!'' என்றாள்.

அப்போது தான், யுகாவின் துன்பமும் ரோஜாவின் மூளைக்குள் மின்னியது!

எனக்கு... ஒலியை உணர முடியவில்லை! அவளுக்கு ஒலியைப் பகிர முடியவில்லை!

ஒருவர் மனம் திறந்து, உணர்வு பொதிந்து, உயிரின் ஓசை கூட்டி, குரலால் வடிவம் கொடுக்கும் சொற்களைத் தன்னால் கேட்க முடியாது எனில்,

உள்ளத்தின் உணர்ச்சிகளை... உணர்வுகளின் வடிவமாய்... குரலெனும் குழலில் தேக்கி இவளால் வெளியிட முடியாதே!

ஹய்யோ! மற்றவரின் உணர்ச்சிகளை உணர முடியாத தன்னைவிட, தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத இவளது வலி எவ்வளவு பெரிதாய் இருக்கும்?

இந்தச் சிந்தனையே, ரோஜாவை திடம் பெறச் செய்தது!

அந்தத் திடம், ஊமையாய் மாற்றப்பட்ட யுகாவிடம், செவிடாய் மாறி விட்ட ரோஜாவிற்குத் தனிப் பிடிப்பை உண்டு பண்ணியது!

பிறர் பேசினால் தானே... ஹய்யோ... என்ன பேசுகிறார்கள்... தனக்குக் கேட்கவில்லையே என்று கவலையாய் இருக்கும்! இங்கு யுகா பேசுவதே இல்லையே! பேசினால் தானே... குரலைக் கேட்க முடியவில்லையே என்ற வருத்தம்! ஹய்யோ... செவிடாகிப் போனோமே என்ற துயரம்! உணர்ச்சிகளை உணர முடியவில்லையே என்ற இயலாமை!

யுகாவிடம் பேசுகையில்... வருத்தத்திற்கு வழியில்லை! துயரத்திற்கு துணைவர எதுவுமில்லை! இயலாமையை உணர வேண்டியதில்லை!

ரோஜாவிற்கு, எவ்வளவோ இதமாய் இருந்தது!

அவளது இதத்தைக் கூட்டுவது போல், யுகாவும் சிரித்த முகமாய்... அவளது வேதனையை கூட்டவில்லை!

அன்றும் அப்படித்தான்.

யுகா, ரோஜாவின் மதிய உணவை எடுத்துக் கொண்டு மருத்துவமனை வந்திருந்தாள்.

காலையில், வேலுநாச்சியார் டிபன் எடுத்து வருவார். மதியமும் மாலையும் யுகா. இரவிற்கு ரபின் வருவான். விவேக் தான்... நாள் முழுதும் மருத்துவமனையிலேயே இருக்கிறானே? அன்று, மாலை சிற்றுண்டியும்... ஃபிளாஸ்கில் சூடான காபியும் எடுத்துக் கொண்டு யுகா வந்தாள்.

இளம் ஆரஞ்சு வண்ணக் காட்டன் புடவை உடுத்தியிருந்தாள். ஆரஞ்சு வண்ணப் புடவைக்கு... கரும் பச்சை நிறத்தில் பார்டர் இருக்க, அதே நிறத்தில் ரவிக்கை போட்டிருந்தாள்! அவளது பனிப்பூ மேனியை, அந்தச் சேலை தகதகவென எடுத்துக் காட்டியது!

அவள் உள்ளே நுழைந்ததுமே, கண்களை அகல விரித்து, அவளையே பார்த்திருந்த ரோஜா, "சூப்பர்!" என்றாள் தன் இயல்பையும் மீறி, சத்தமாய்.

அதிகம் பேசாத ரோஜாவின் பாராட்டில், முகம் பிரகாசமுற, யுகாவின் கண்களில் ஆனந்தம் மின்னி மறைந்தது!

''தேங்க்ஸ்!'' என்றாள் அவள், செய்கையால்.

ரோஜா சிரிக்கவும், அவளைக் கைகாட்டி... முகத்தை ஒரு விரலால் சுற்றிக்காட்டி, ''சூப்பர்'' என்பது போல், கைகளில் முத்திரை செய்தாள், யுகவீணா.

ரோஜாவின் முகம் ஒரு நிமிடம் கூட பிரகாசமுறவில்லை.

மாறாய், ஓர் வேதனை ஓடி மறைய ''என்ன அழகிருந்து என்ன புண்ணியம்? யாருக்கும் என்னைப் பிடிக்கலை! பெத்த அம்மா... அப்பா... கூடப் பிறந்த அக்கா... தம்பின்னு ஒருத்தருக்குக் கூட என்னைப் பிடிக்கலை! அன்னைக்கு மட்டும் அத்தை வரலைன்னா... என்னைய கொன்னுருப்பாங்க! ப்ச்! ஆனா... ஒருத்தன் என்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்னான்... ஆனா... அவன்... அவன்... என்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்னதால... பாதி செத்துட்டான்!'' என்றாள் விரக்தியாய். தனது காதல் கதையை யுகாவிடம் பகிர்ந்து கொண்டிருந்தாள் ரோஜா.

யுகாவின் மனம் வேதனையில் வாடியது!

ஆனால், அதை வெளிக்காட்டாமல், ''அவங்களுக்கு எல்லாம் பிடிக்கலைன்னா என்ன? எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என சைகையில் கூறியவள், வேகமாய் வந்து ரோஜாவை அணைத்து, அவளது கன்னத்தில் ஓர் முத்தம் வைத்தாள்.

ரோஜாவின் முகம் வெட்கத்தில் மலர்ந்து, ஆனந்தத்தில் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன! ''தேங்க்ஸ்!'' என ரோஜா மெல்லச் சொல்லவும்,

''எனக்கு மட்டுமில்ல...'' என்று சைகை செய்த யுகவீணா, ரோஜாவின் தாலியைச் சுட்டிக் காட்டி, சூப்பர் என்பது போல் சைகை செய்து, தலையை நன்றாக அசைத்து, ''ரபினுக்கும் உன்னை ரொம்பப் பிடிக்கும்!'' என்றாள் கண்ணில் மின்னலுடன்.

''ஹான் அவருக்கா? என்னைப் பிடிக்குமா?'' எனக் கேட்ட ரோஜா,

''அக்கா... ஏன் அவரு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு?'' என்றாள் இன்னமும் அந்தச் சந்தேகம் தீராமல்.

யுகா அதற்குப் பதில் சொல்ல முற்படவில்லை.

தோளைக் குலுக்கிக் கொண்டவள், மீண்டும் ரோஜாவின் தாலியைக் காட்டி, ''அங்க தான் கேட்கணும்!'' என்றாள் தெரியாதவள் போல்.

''ஹ்ம்ம்!'' எனப் பெருமூச்சு விட்ட ரோஜா,

''என்னை அவங்க வேற எங்கயாவது பார்த்திருக்காங்களா என்ன? அது எப்படி... கரெக்ட்டா நா ஓடிப் போன அன்னைக்குப் பொண்ணு கேட்டு வந்தாங்க! அத்தைகிட்ட கேட்டாலும்... அவரு தான் சொல்லணும்ன்னு சொல்றாங்க... நீங்களும் சொல்ல மாட்டேங்கிறீங்க! அவர்கிட்ட கேட்கவே முடியல! முன்னாடியெல்லாம்... இங்கேயே நிறைய நேரம் இருப்பாரு... இப்ப ராத்திரி சாப்பாடு கொடுத்திட்டு... உடனேயே போயிடுறாரு! அப்படியே கேட்டாலும், ''நீ வீட்டுக்கு வா... சொல்றேன்னு'' சொல்றாரு!

எனக்கு... குழப்பமா இருக்குக்கா!'' என்றாள், தன் மனதை மறையாது வெளியிட்டு.

யுகா அவளது குழப்பத்தைத் தீர்க்க விழைய வில்லை! மாறாய், ''நீ... ஒரு நல்ல இடத்துக்கு வந் துட்டே! அதை மட்டும் நினைச்சுக்கோ! சரியா? குணமாகி வீட்டுக்கு வந்ததும்... எல்லாம் விவரமா சொல்லுவாங்க!'' எனத் தன்னால் முடிந்தளவுக்கு தெளிவாய் சைகை காட்டிவிட்டு, ரோஜாவிற்கு உண்ணக் கொடுத்தாள்.

ரோஜாவுக்குமே, தான் ஒரு நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டிருக்கிறோம் என்பது புரியத் தான் செய்தது!

தன் கண் பார்த்து நடந்து கொள்ளும் மனிதர்கள் மத்தியில் வாழ்வதே சுகமாய் இருந்தது!

தான் வாய்விட்டு வெளியிட்ட ஆசைகளைக் கூட நிறைவேற்றாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்த வளுக்கு, அவளது கண்ணோரம் சுருங்குவதைக் கூட கவனித்து, பக்குவமாய் நடந்து கொள்ளும் இந்தக் குடும்பம் ஓர் இதத்தை விதைத்து இருந்தது!

அதிலும், வேலு நாச்சியாரும் யுக வீணாவும் அவரவர் குணப்படி... அவளை ஆக்கிரமித்து இருந் தனர்!

வேலு நாச்சியாரின் அழுத்தமான கைகள் கொடுக்கும் இதமான வருடலாகட்டும்... யுகாவின் கைகள் பிடிக்கும் அபிநயமாகட்டும் அவளை வேற்று மனுஷியாய் உணரவிட்டதே இல்லை!

ஆனால், ரபின்!

திருமணம் முடிந்த நாள் தொட்டு, அவளிடம் அவன் பேசிய வார்த்தைகள் விரல் விட்டு எண்ணி விடலாம்!

அதில், ''சாப்பிடுறியா?'' என்பது தான் அதிகமாய் இருக்கும்!

அவள் ஏதும் கேட்க முற்பட்டாலும், ''நீ வீட்டுக்கு வா... பேசிக்கலாம்!'' என்று விடுவான்.

அவளாய் என்ன கேட்க முற்பட்டு இருப்பாள்? 'ஏன்... என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?' - இதுதான் அவளது தலையாய கேள்வி! அதற்கு விடை தெரியாமல், அவளும் தான் தவித்துப் போனாள்.

ஒரு வாறாக அவள் வீடு வந்து சேர்ந்தாள்.

அவளை மருத்துவமனையிலிருந்து அழைத்து வர, வேலுநாச்சியாரும் யுகாவும் வந்திருந்தனர்.

வீட்டுக்கு வரும் வழியில், ''இந்த ரபின்... ஒரு அரை மணி நேரம் ஆஸ்பத்திரிக்கு வந்துட்டுப் போயிருக்கலாம் இல்லையா? ஏன் இப்படி பண்றான்?'' என்று நாச்சியார் வருத்தம் கொண்டதற்கு,

''அவனை ஏதோ என்குயரிக்காக வரச் சொல்லி யிருக்காங்களாம்! நேரா வீட்டுக்கு வந்துடுறேன்னு சொன்னான்!'' என விவேக் கூறவும், ராபினின் பேச்சு அத்தோடு நின்றது!

ரோஜாவுக்கும் அதில் வித்தியாசமாய் எதுவும் படவில்லை.

வீட்டுக்கு வந்து அரை மணி நேரமாகியிருந்த நேரம், கையில் ஓர் ஸ்வீட் டப்பாவுடன் உள்ளே வந்த ரபின், ''ஹே... ரோஜா! வந்துட்டியா! வருக! வருக! எங்கள் வீட்டுக்கு வருக! நீ வீட்டுக்கு வந்த நேரம்... நா ஒரு முக்கியமான வேலையை வெற்றிகரமா முடிச்சிட்டேன்!'' என அவளை வரவேற்ற கையுடன், கையிலிருந்த இனிப்பு ஒன்றை எடுத்து, அவளது வாயில் போட்டான்.

அடுத்ததாய், அவன் வேலு நாச்சியாரிடமும் நீட்ட, ''என்னடா ஒரே குதூகலமா இருக்கு?'' என்றார் அவர், கேள்வியாய்.

''குதூகலமா இருந்தா உங்களுக்குப் பொறுக்காதே! கூடிக் கும்மி அடிச்சிடுவீங்களே!'' என்று அவரது குமட்டில் குத்தியவன், ''எடுத்துக்கோங்க... மேரி மாதா!'' என்றான்.

''இந்த மேரியை விட்டுட்டா நீ என்ன ஆகுறது?'' என்று கடிந்தவர்,

''என்ன விஷயம் சொல்லு?'' என்றார் அதிகார மாய்.

ரபின் மசியவில்லை. விவேக்... வீணா... வீட்டு வேலையாட்கள் என்று அனைவரிடமும் கொடுத்தவன், ''எல்லாருக்கும் ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போறேன்! நானும் சஸ்பென்ட் ஆகிட்டேன்! நானும் சஸ்பென்ட் ஆகிட்டேன்! நானும் போலீஸ் தான்! நானும் போலீஸ்தான்!'' என்று காலரை ஏற்றி விட்டுக் கொண்டு கூவினான்.

அதற்கு எதிரொலியாய் ''என்னது சஸ்பென்ட்டா? ஏன்டா?'' என்ற வேலு நாச்சியாரின் வியப்பும்,


''அடப்பாவி! என்னடா செஞ்சு தொலைச்சே?'' என்ற விவேக்கின் அதிர்ச்சியும் கேட்டது என்றால்,

அனைவரது அதிர்ச்சிக்கும் முற்றிலும் வேறுபட்ட தாய் ரோஜா அதிர்ந்தாள்.

''என்னது? நீங்க போலீஸா?'' என அவள் கூவ, அனைவருமே தங்களது அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு, ரோஜாவைத் திகைப்புடன் பார்த்தனர்.

ரபின் உட்பட!

14



ரோஜாவின் கேள்வியில் அதிர்ந்தாலும், சட்டென சுதாரித்தவன் விவேக் தான்.

''டேய்! நீயே... உன்னை போலீஸ்... போலீஸ்ன்னு கூவிக் கூவிச் சொன்னதும், ரோஜா குழம்பிட்டா போல! ஏன்டா... நீயே உனக்கு ஆப்பு வச்சுக்கிறே?'' என விவேக் சிரிக்கவும்,

''ஹே கண்மணி! நானும் போலீஸ் தான்... நானும் போலீஸ் தான்னு சொன்னதில குழம்பிட்டியா? ஹோ! கட்ஸ் பாட்!'' என்று ஏக வருத்தம் கொண்டான் ரபின்.

ரபினின் உதடு அசைவதை வைத்து, அவன் சொன்ன ''நானும் போலீஸ் தான்!'' என்பது புலப் பட்டதே ஒழிய, ரோஜாவிற்கு வேறெதுவும் புரிய வில்லை.

''என்ன சொன்னீங்க? கேட்கலையே?'' என அவள் பரிதாபமாய் சொல்லவும்,

ரபின் அவளருகே வந்து ''நானும் சஸ்பென்ட் ஆகிட்டேன்! நானும் சஸ்பென்ட் ஆகிட்டேன்! நானும் போலீஸ் தான்... நானும் போலீஸ் தான்!'' என்றான் உரக்க, அவளது வலது காதின் ஓரமாய்.

ரோஜாவோ ''என்னது நீங்க போலீஸா?'' என்றாள் மீண்டும், அதிர்ச்சியுடன்.

விவேக்கிற்கு சிரிப்பு தாங்கவில்லை.

''என்னம்மா இது? சிவாஜி செத்துட்டாரா ரேஞ் சுக்கு கேட்டுட்டு இருக்கே?'' என அவன் சிரிக்க,

அவனது சிரிப்பை வைத்தே, ஏதோ கேலி என்று புரிந்து கொண்டவள்,

''எனக்கு நிஜமாவே... இவங்க போலீஸ்ன்னு தெரியாது!'' என்றாள் பரிதாபமாய்.

அதற்கு ரபின் பதில் சொல்ல முனைய, ''ரபின்! நீ அவளை உன் ரூமுக்குக் கூட்டிட்டுப் போ! அங்க போய்... பேசிக்கோங்க!'' என்றார் வேலு நாச்சியார், சோபாவிலிருந்து எழுந்தபடியே.

அவரது தோரணையிலேயே, ரோஜாவின் அதிர்ச்சி சில பல பிரச்சனைகளைக் கொண்டு வரப் போகிறது என்று யூகித்து விட்டிருந்தான் ரபின்.

ஆனால், என்னவென்று தான் தெரியவில்லை!

தான் போலீஸ் என்பதால் என்ன பிரச்சனை வந்து விடும்? ஒருவேளை... போலீஸ்காரனைக் கல்யாணம் செய்யக் கூடாது என்று ஏதேனும் சபதம் எடுத்திருப் பாளோ? இல்லை... போலீஸால் ஏதும் பாதிப்பு வந்திருக்குமோ? இல்லை... போலீஸ் என்றாலே லஞ்சம் வாங்குபவன்... கெட்டவன் என்ற பொதுஜன சிந்தனையோ? - ரபினுக்கு ஏகப்பட்ட குழப்பமிருந்த போதும், இதுவென்று வரையறுக்க முடியவில்லை.

அதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமும், ரோஜா வின் குழப்பத்தைக் களைந்து விடும் வேகமுமாய், அவளது கை பிடித்து எழுப்பியவன், தன் அறையைக் கைகாட்டி, ''அங்க போய் பேசலாம்!'' என்றான் அவள் காதருகே.

''ஏன்... இங்கேயே?'' என ரோஜா தயங்க,

''போய் பேசிட்டு வாம்மா! இது... நீயும் அவனுமா பேசிக்க வேண்டிய விஷயம்! நாங்க நடுல இருந்தா... அங்க ஒண்ணும்... இங்க ஒண்ணுமா வார்த்தை தடுமாறிடும்!'' என அவளை அனுப்பி வைத்தார் வேலு நாச்சியார்.

அவரிடம் மறுத்துப் பேச முடியாமல், ரபினுடன் சென்றாள் ரோஜா.

அவர்கள் சென்றவுடன், தாயிடம் வந்த விவேக் ''என்னம்மா? இதில... அதாவது ரபின் போலீஸ்ங் கிறதால என்ன பிரச்சனை வரும்ன்னு நினைக் கிறீங்க?'' என்றான் கவலையுடன்.

''அதான்டா பிரச்சனைக்கான அடித்தளமே!'' என்ற வார்த்தைகளுடன் ஒரு பெருமூச்சையும் வெளியேற்றியவர், ''பாப்போம்! என்ன நடக்குதுன்னு!'' என்றபடி அங்கிருந்து நகர்ந்தார்.

அதற்குமேல், அவர் அதைப் பற்றி பேச விரும்பவில்லை என்பது அவர் விலகியதுமே புரிந்தது விவேக்கிற்கு!

உள்ளுக்குள்ளிருந்த கவலை பயமாய் வடிவம் பெற்றது விவேக்கிற்கு!

அவனது முகபாவனையை வைத்தே அவனது மனதைப் படித்த மாதரசியாய், அவனிடம் வந்த யுகவீணா, அவனது தோளை வருடவும்,

''வீணா... காமெடி பண்றேன் பேர்வழின்னு... இவன் ஏதாவது குழப்பிடக் கூடாதேன்னு பயமா இருக்குடா!'' என்றான் சகோதரனாய்.

தனக்கும் அதே பயம்தான் என்பதை, அவனது தோளில் தலை சாய்த்து எடுத்துரைத்தாள் வீணா.

அங்கே உள்ளறையில்!

ரபின் என்ற காண்டாமிருகம், ரோஜாவெனும் அணிலின் முன்னே பதில் சொல்லிக் கொண்டிருந்தது!

முன்னே இல்லை. வலது பக்கமாய் நின்று கொண்டு, அவளுக்கு அவன் பேசுவது கேட்க வேண்டுமல்லவா?

''நான் போலீஸ்ன்னு உனக்குத் தெரியாதா, கண்மணி?'' என்றான் ரபின், எடுத்ததுமே ஆச்சரிய

மாய், வலது பக்கமாய் நின்றபோதும், சற்றே உரக்கவே பேசினான். அவளுக்குக் கேட்க வேண்டுமே!

அவன் 'கண்மணி' என்று அழைத்தது வாத்தியாசமாய் பட்டது ரோஜாவிற்கு! அவளது பெயரின் ஒரு பகுதி தான் என்றாலும், இது நாள் வரையிலும் யாருமே அந்தப் பாதியை சுட்டிக் காட்டிப் பேசியதில்லை!

அந்த யோசனையிலேயே அவளிருக்க, ''என்ன கண்மணி? என்ன யோசனை?'' என்றான் ரபின் மீண்டும்.

''ஹ்ம்ம் இல்ல... கண்மணின்னு கூப்பிட்டீங்கல்ல... அதான்...'' என்றாள் ரோஜா, சற்றே தடுமாறிய குரலில்.

பேசிக் கொண்டிருந்த விஷயத்தை மறந்துவிட்டு, தன் பேரிற்கான யோசனைக்குள் சென்று விட்டவளின் பூ உள்ளம், மனதை மயக்க, புன்னகைத்தான் ரபின்!

''என்னடா இவன்... ரோஜா ரபீந்திரநாத்ங்கிற பேருக்காக கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னவன்... இப்ப கண்மணின்னு கூப்பிடுறானேன்னு பார்க்கிறியா? நிறைய பேரோட முகம் தான் நமக்கு அறிமுகமாகும்... அதுக்கு அப்புறம் தான் பேரு! ஆனா... உன் விஷயத்தில... உன் பேரு தான் எனக்கு முதல் அறிமுகமாச்சு! அதுவும்... கண்மணி ரோஜாங்கிற பேர்ல... கண்மணிக்கும்... ரோஜாவுக்கும் சம்பந்தமே இல்லாம இருந்தது என்னை நிறையவே

அட்ராக்ட் பண்ணுச்சு! எல்லாருக்கும் நீ ரோஜாவா இருந்தே... எனக்கு நீ கண்மணியா இருந்தா நல்லா இருக்கும்ன்னு தோணினதால... கூப்பிட்டேன்!'' என்றான் நீண்ட விளக்கமாய்.

''ஹோ!'' - ரோஜாவிற்கு என்ன பதில் சொல்வ தென்று தெரியவில்லை!

''ஹ்ம்ம்... அந்த மேட்டரை விடு! நா போலீஸ்ன்னு தெரிஞ்சதும்... நீ ஏன் ஜெர்க் ஆனே?'' என்றான் மீண்டும்.

''ஹான்! அது... அது... நா... காலேஜ்ல.... ஹ்ம்ம்... நீங்க ஏன் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட் டீங்க?'' - திருமணம் முடிந்த நாள் தொட்டு, கேட்டுக் கொண்டிருக்கும் அதே கேள்வியில் மீண்டும் வந்து நின்றாள் ரோஜா.

''அதை விட மாட்டே போலியே!'' எனச் சிரித்த ரபின்,

''வெளிப்படையா சொல்லணும்ன்னா... உன் உயிரைக் காப்பாத்த எனக்கு வேற வழி தெரியல! அதான்... நம்ம கல்யாணத்துக்கான அடிப்படை காரணம்!'' என்றான் அவன் மறையாமல்.

கூடவே, ''என்ன செஞ்சு என்ன புண்ணியம்? அவங்களோட மிருகத்தனத்தை என்னால தடுக்க முடியாம போச்சே!'' என்றான் அடக்கப்பட்ட ஆத் திரத்துடன்.

''ஹோ... அப்ப... நா சாகப் போறேன்னு தெரிஞ்சு தான் என்னைப் பொண்ணு கேட்டீங்களா?'' -

இதுவே அவளுக்குப் பெருத்த அதிர்ச்சியாய் இருந்தது!

''ஆமா!'' என்றான் அவன், ஒற்றை வார்த்தையாய்.

''நா சாகப் போறேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?'' - அப்பாவித் தனமாய் வந்தது ரோஜாவின் அடுத்த கேள்வி.

''என்கிட்டே தான்... செந்தூர் பாண்டியன்... உனக்கும் அவனுக்கும் எந்த சம்பந்தமில்லைன்னு எழுதிக் கொடுத்திட்டுப் போனான். அந்த லெட்டரை என்கிட்டே கொடுத்திட்டு... உன்னைக் கொல்ல ணும்ன்னு கிளம்பினாங்க! என்னமோ தெரியல... உன்னைக் காப்பாத்தியே ஆகணும்ன்னு தோணுச்சு! அதுக்கு இதான் ஒரே வழின்னு முடிவு பண்ணி... அம்மாவை கூட்டிட்டு வந்தேன்!'' என்றான் அவன் நீண்ட விளக்கமாய்.

''என்னது? செந்தூர்... செந்தூர் வந்து போலீஸ் ஸ்டேஷன்ல எழுதிக் கொடுத்தாங்களா?'' என அவள் திக்கவும்,

''ஆமா! உன் சொந்தக்காரனுங்க அடிச்ச அடியில... கையெழுத்து போட்டுக் கொடுத்திட்டு ஓடியே போய்ட்டான்!'' என்றான் ரபின்.

''ஹோ! ஆமா.. ரொம்ப அடிச்சாங்க!'' என்று வருத்தம் கொண்டவள், சட்டென எதையோ யோசித் தவளாய் நிமிர்ந்தாள்.

''நீங்க போலீஸ் தானே?'' என்றாள் மீண்டும்.

''இதென்ன திரும்பவும்?'' என்ற ரபினுக்கு சற்றே எரிச்சல் வந்து விட்டிருந்தது!

''நீங்க ஒரு போலீஸ்... உங்க முன்னாடியே ஒருத்தரை அடிச்சு... வாக்குமூலம் எழுதச் சொல்லியிருக்காங்க! அவங்களை அடிக்கிறதை விட்டுட்டு... என்னைக் கல்யாணம் பண்ணியிருக்கீங்க?'' - தனக்கும் யோசிக்கத் தெரியும் என நிரூபித்தாள் ரோஜா.

''நா என்ன செஞ்சிருக்க முடியும்ன்னு நினைக்கிறே?'' என்றான் ரபின், கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு.

''அதான் சொன்னேனே? செந்தூரை அடிச்சவங்களைத் தூக்கி உள்ள போட வேண்டியது தானே? அவங்களைத் தூக்கி உள்ள வச்சிருந்தா... நாங்க... நாங்க... நிம்மதியா இருந்திருப்போமே?'' என்றாள் அவள், அழுகையும் ஆத்திரமுமாய்.

ரபின் அசரவில்லை. ''எத்தனை நாளைக்கு?'' என்றான் நிதானத்துடன்.

சற்றே அதிர்ந்த போதும், ரோஜாவிற்கு அவனது வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

'தன் உயிரைக் காப்பாற்றுவதற்கான ஒரே தீர்வு... அவனுடனான திருமணம்!' என்பதை அவள் நெஞ்சம் ஏற்க மறுத்தது! அதுவும், ஓர் காவல்காரனாய் இருந்து கொண்டு, வேறு வழியில்லை என்று எப்படிச் சொல்லலாம் என்று கேள்வி கேட்டது மனம்!

மனதின் குமுறலுக்கு வடிவம் கொடுப்பவள் போல், ''ஹான்! அது... கொஞ்ச நாளைக்கு அவங்க

கண்ணில படாம இருந்திருந்தா... எங்களை ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் எங்களை ஏத்துக்கிட்டு இருந்திருப்பாங்க!'' என்றாள் அவள், அவனுக்குப் பதிலாக.

''ஹஹ்ஹா! இதான்... இந்த வருஷத்தாட சூப்பர் டூப்பர் ஜோக்!'' என்று கை தட்டிச் சிரித்தான் ரபின். குரலில், நக்கல் விரவி இருந்தது!

''ஏன்?'' - ரோஷமாய் கேட்டாள் ரோஜா.

''என்ன ஏன்? உங்கப்பாவும்... உங்க ஜாதி ஆளுங்களும் காலப் போக்கில் மாறுற ஆளுங்களா? ஜாதி வெறி அவங்க ரத்தத்தில ஊறிப் போயிருக்க ஒரு விஷயம்... அது... எத்தனை காலமானாலும் மாறாது! அப்படி மாறுற விஷயமா இருந்திருந்தா... பெத்த பொண்ணோட இடுப்பை உடைக்கிற அளவுக்குத் தீவிரமா இருந்திருக்காது!'' என்றான் ரபின், திடமாய்.

அவர்களது ஜாதி வெறியைக் கண் கூடாய் கண்ட பின்னரும், இப்படிப் பேசுகிறாளே என்று ஆற்றாமையே அவனுக்கு மேலோங்கி இருந்தது!

''ஹான்!'' - ரோஜாவுக்கு அவன் சொல்வதிலிருக்கும் உண்மையை ஒத்துக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை என்பது அவளது அதிர்ச்சியிலேயே தெரிந்தது!

''கண்மணி! நா... செந்தூரைக் காப்பாத்தி இருக்கலாம்... உன்னோடவும் சேர்த்து வச்சிருக்கலாம்! அது எனக்கு ஒண்ணும் பெரிய விஷயமில்ல! போலீஸ்ங்கிற பவரை யூஸ் பண்ணி... என்னால உங்க ரெண்டு

பேரையும் சேர்த்து வச்சிருக்க முடியும்! கொஞ்ச நாளைக்கு பாதுகாப்பும் கொடுத்திருக்க முடியும்! ஆனா... மாசக் கணக்கில பாதுகாப்பு கொடுக்க... நீங்க ரெண்டு பேருமே... எந்த அரசியல் கட்சிலையும் இல்ல! என்னோட பாதுகாப்பு முடியுறப்போ... நீயும் அவனும் பொணமா தான் இருந்திருப்பீங்க! இல்லைன்னு உன்னால சொல்ல முடியுமா? சொல்லு!'' என்றான் ஆணித்தரமாய்.

கூடவே, ''உங்க ரெண்டு பேரோட உயிருக்கும்... சேதாரமில்லாம ஒரு வழி கண்டுபிடிச்சேன்! அதான் இந்தக் கல்யாணம்!'' என்றான் தன் முடிவை நியாயப்படுத்தும் வண்ணம்.

பல நிமிடங்களுக்கு ரோஜாவிடமிருந்து பதிலே இல்லை!

அவள் யோசிக்கட்டும் என்ற எண்ணத்தில், அவளை விட்டு விலகி, அறையில் போடப்பட்டிருந்த கட்டிலில் அமர்ந்து கொண்டான் ரபின்.

அவனையே சற்று நேரம் பார்வையால் தொடர்ந்தவள், ''உயிரைக் காப்பாத்துறேன்னு என்னோட காதலைக் கொன்னுட்டீங்களே?'' என்றாள் காயப்பட்ட குரலில் அழுகையைக் கலந்து.

ரபினுக்கு ஆயாசமாய் வந்தது!

''உயிரோட இருந்தா தான்... காதல்ங்கிற உணர்வே இருக்க முடியும்!'' என்றான் வேகமாய்.

இப்போது, அவன் அருகே இல்லாததாலும்... வேகமாய் பேசியதாலும் ரோஜாவால் அவன் என்ன

பேசினான் என்பதைக் கேட்கவும் முடியவில்லை... உதட்டசைவை வைத்துக் கண்டுபிடிக்கவும் முடியவில்லை.

''என்ன சொன்னீங்க? எனக்கு கேட்க மாட்டேங்குதே?'' என்றாள், அழுகை மிகவுற,

அந்த நேரத்தில், அவளுக்குத் தனது குறை மிகவும் பூதாகரமாய் தெரிந்தது!

காது கேட்காத முடமாய்... செவிடாய்... பேசுபவர் ஒன்று தன் முன்னே நின்று, நிறுத்தி நிதானமாய் பேச வேண்டும் அல்லது வலப்புறம் நின்று சத்தமாய் பேச வேண்டும் என்ற கட்டாயத்தோடு... ஓர் அபலையாய் வாழ்வதற்கு, ஒரேடியாய் செத்திருக்கலாம் என்று தோன்றியது அவளுக்கு!

'இவன் என்ன பெரிய... பிரம்மாவா? உயிரைக் காப்பாற்றுவதற்கு? இவன் காப்பாற்றியதால் தானே... உயிரோடு இருந்து இத்தனை துன்பப்பட வேண்டியிருக்கிறது!' என்று கோபமாய் வந்தது ரோஜாவிற்கு!

அவளது யோசனை புரியாமல், அவளருகே வந்த ரபின், ''உயிரோட இருந்தா தான்... காதலிக்க முடியும், கண்மணி!'' என்றான் வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்து!

அவ்வளவு தான்!

ரோஜா முற்றிலுமாய் வெடித்து விட்டாள்!

''யாரு கேட்டா? இல்ல யாரு கேட்டா? இந்த உயிர் வேணும்ன்னு... நா வந்து உங்ககிட்ட பிச்சை கேட்டேனா? எதுக்கு... வந்து... என்னைக்

காப்பாத்தினீங்க? எனக்கு உயிர் பிச்சை கொடுங் கன்னு... நா உங்க காலில வந்து விழுந்தேனா என்ன?'' என்று ரோஜா ஆக்ரோஷமாய் கத்தவும், ரபின் ஒரு நிமிடம் அதிர்ந்து போனான்.

தன் பலம் முழுதையும், திரட்டி, அடி வயிற்றி லிருந்து கத்தியவள், முகத்தை மூடிக் கொண்டு அழவும், ரபினுக்கு நெஞ்சுக்குள் வலித்தது!

ஆனால், அவளது எண்ணம் தவறென்று உட னேயே உணர வைத்துவிட வேண்டும் என அவனது மூளை அறிவுறுத்த.

''ஒரு சின்ன ஊசியையே உன்னால தாங்கிக்க முடியல... உயிர் போறதை தாங்கிக்க முடியும்ன்னு நினைக்கிறியா என்ன? நிச்சயமா முடியாது!'' என் றான் ரபின், ஆணித்தரமாய்.

தொடர்ந்து ''உயிரை விடுற அளவுக்கு... உன் காதல் இல்ல... எந்தக் காதலுமே பெருசில்லை!'' என்றான் கோபமாய்.

அவனது முதல் வாக்கியத்தில், அதிர்ந்து நிமிர்ந்த ரோஜா, அவனது அடுத்த வாக்கியத்தில் வெகுண்டு எழுந்தாள்.

''என்னோட காதல் பெருசில்லைன்னு நீங்க எப்படிச் சொல்லலாம்?'' என்றாள் ஆத்திரம் விரவிய குரலில்.

''ஒரு திருடன் காதலனா இருக்கும்போது... காதல் எப்படி உசந்து இருக்க முடியும்?'' என்றான் ரபின், இளக்காரமாய்.

''என்னது? செந்தூர்... திருடனா?'' என்றாள் ரோஜா, அந்த நாளின் அடுத்த அதிர்ச்சியை வெளிப்படுத்தி! (ரோஜா, இன்றிலிருந்து நீ ''அதிர்ச்சி அருக்காணி'' என்று அழைக்கப்படுகிறாய்!)

15



''ஆஹா! இதென்ன எம்.ஜி.ஆர். செத்துட்டாரா கேள்வியா? என்ன கண்மணி நீ... பச்சப்புள்ளயா இருக்கியே?'' என்றான் ரபின், சிரித்தபடியே.

அவனது சிரிப்பு எரிச்சலைக் கொடுக்க, ''எதுக்கு சிரிக்கறீங்க?'' என்றாள் அவன் எதிரே வந்து நின்றபடி.

''இந்தக் கோபமெல்லாம் நல்லா தான் இருக்கு! ஆனா.. அதை இங்க காட்டி ஒரு பிரயோஜனமும் இல்ல!'' என்றவன், அவளைப் பற்றித் தனது பக்க வாட்டில் நிறுத்திக் கொண்டான்.

அவள் அவனது பிடியை உதறிக் கொண்டு, முன்னே வந்து நிற்கவும், ''கண்மணி! ப்ளீஸ்! இங்க நின்னா தான் பேசுறது உனக்கு கேட்கும்! இல் லைன்னா கஷ்டம்!'' என்றான் கெஞ்சுதலாய்!

அவனது வார்த்தைகளில் கோபத்தின் இடத்தை அழுகை பிடித்துக் கொண்டது!

''ப்ச்! சும்மா சும்மா அழக்கூடாது, கண்மணி!'' என அதட்டினான் ரபின்.

''நீங்க தான்... செந்தூரை பொய் கேஸ் போட்டு அரெஸ்ட் பண்ண போலீஸ்காரரா? ஏழைங்கன்னா அவ்வளவு இளக்காரம் இல்ல உங்களுக்கு! உங்களால திருடனைப் பிடிக்க முடியலைங்கிறதுக்காக... அவரை அரெஸ்ட் பண்ணியிருக்கீங்க! அதான் உங்களை சஸ்பென்ட் பண்ணிட்டாங்களா?'' என்றாள் அவள் கண்களை விரித்து.

ரபினால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. ''ஹஹ்ஹஹ்ஹா!'' என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டு அவன் சிரிக்க,

''என்ன? என்ன? என்ன அப்படிச் சிரிக்கிறீங்க?'' என்ற ரோஜாவிற்கு, சற்றே கோபம் வந்தது!

எதற்கெடுத்தாலும் என்ன சிரிப்பு?!

சொல்லப் போனால், இவனால் தான் அவளது காதல் அழிந்து போனதே!

இவன் மட்டும், செந்தூரை பொய் கேஸ் போட்டு உள்ளே தள்ளாமல் இருந்திருந்தால்... செந்தூரும் அவளும் இப்போது ஓடியிருக்கவே மாட்டார்களே! ஓடிப் போனதால் தானே... இவ்வளவும்!

எல்லாம் இவனால் தான்!

செய்வதையும் செய்துவிட்டு... உயிரைக் காப்பாற்ற திருமணம் செய்தேன் என்ற பீற்றல் வேறு!

பொய் கேஸ் போட்டதால் சஸ்பென்ட் வேறு ஆகி விட்டு... போலீஸ் தான் போலீஸ் தான்னு அலப்பறை வேறு!

ச்சை என வந்தது ரோஜாவிற்கு!

''சும்மா சிரிக்காதீங்க! எரிச்சலா வருது!'' என்றாள் அவள், மீண்டும்.

முயன்றும் முடியாமல் சிரித்துக் கொண்டிருந்தவன், ''ரெண்டு நிமிஷம்... இரு! சிரிச்சு முடிச்சிடுறேன்!'' என்றான்.

மேலும் எரிச்சல் கிளம்பியது ரோஜாவிற்கு.

ஆனால், அவளது கடுப்பை எல்லாம் கண்டு கொள்ளும் மனநிலையில் ரபின் இருக்கவில்லை.

மெதுவாய்... ரசித்து... ருசித்து சிரித்தவன், மெல்ல நிமிர்ந்து ரோஜாவின் அருகே வந்தான்.

''கண்மணி டியர்! நீ ஏன் இவ்வளவு அப்பாவியாக இருக்கே?'' என்றான் அவளது கன்னத்தை லேசாய் தட்டி.

அவன் உரக்கப் பேசியதால், எதிரே நின்றிருந்த போதும் ரோஜாவிற்கு கேட்டது!

''ப்ச்! நீங்க ஏன் பொய் கேஸ் போட்டீங்க? அதான்... செந்தூர் உடனே ஓடிப் போகணும்ன்னு அவசரப் படுத்தி... இப்ப எங்க ரெண்டு பேரோட வாழ்க்கையே நாசமா போச்சு!'' என்றாள் அவள் கோபமாய்.

''கண்மணி ப்ளீஸ்! பொய் கேஸும் இல்ல... ஒரு மண்ணுமில்லை! செந்தூர்... ஒரு செயின் ஸ்னாட்சர்! கையும் களவுமா பிடிப்பட்டான்னு சொல்லுவாங்களே... அது மாதிரி... நான் தான் அவனைப் பிடிச்சேன்!'' என்றான் அவன் பொறுமையாக.

"இல்ல... நீங்க பொய் சொல்றீங்க! செந்தூர் மேல பொய் கேஸ் போட்டு அர்ரெஸ்ட் பண்ணதா செந்தூர் சொன்னார்! அவரு பொய் சொல்ல மாட்டார்!" என்றாள் ரோஜா, ஆணித்தரமாய்.

"அப்போ நான் மட்டும் பொய் சொல்வேனா? பொய் சொல்றதால எனக்கு என்ன லாபம் சொல்லு?" என்று கேட்ட ரபினுக்கு, தன்னை விளக்கிவிடும் வேகம் தான் இருந்தது! தன்னை விட மனைவி இன்னொருத்தனை உயர்வாய் நினைக்கிறாள்... அவனை இன்னமும் விரும்புகிறாள்... அவனது காதலை இழந்ததை பெரும் துன்பமாய் எண்ணுகிறாள் என்பது புரியவில்லை! அதாகப்பட்டது, தன்னை... ரோஜாவின் கணவன் என்றே ரபின் உணர்வு பூர்வமாய் உணரத் தொடங்கவில்லை! அவளது உயிரைக் காப்பாற்றிய காவலனாய் மட்டுமே தன்னை சித்தரித்து வைத்திருந்தான் அவன்! கண்மணி என்ற அழைப்பு கூட, விவேக் யுகவீணாவை "வீணா" என்று தனித்துவமாய் அழைப்பதால்... அவர்களைப் போல் தானும் அழைக்க வேண்டும் என்று ஆர்வத்தில் தான்! காதலில் அல்ல!

தன் பால் அவனுக்கு காதலில்லை என்பது ரோஜாவையும் பாதிக்கவில்லை. அவளுக்கும்... அவன் யாரோ என்ற உணர்வு மட்டுமே! அந்த 'யாரோ' எப்படி என் வாழ்வை நிர்ணயிக்கலாம் என்ற கேள்வி மட்டுமே!

"அப்புறம்... ஏன் உங்களை சஸ்பென்ட் பண்ணாங்க!" என ரோஜா, புரியாமல் கேட்கவும்.

"ஹான்! உங்க அப்பனையும்... தம்பியையும்... கூடவே உன் சித்தப்பன் ரெண்டு பேரையும்... உள்ள தூக்கிப் போட்டு... மிதி மிதின்னு மிதிச்சிட்டு வந்திருக்கேன்! லாக்-அப்ல வச்சு... அவங்களை சாகுற அளவுக்கு அடிச்சேன்னு... சஸ்பென்ட் பண்ணிட்டாங்க" என்றான் கடிப்புடன்.

"அய்யயோ!!!

யோசித்துப் பார்க்கையில், தன் உயிரைக் காப்பதற்கு வேறு வழியென்று எதுவுமில்லை தான்!

ஆனாலும்! எதுவோ! எதுவோ ஒன்று ரோஜாவை புரிந்து கொள்ள விடாமல் தடுத்தது!

வேறொரு கோணத்திலிருந்து பார்த்தால், ரபின் அவசரமாய் யோசித்து... கல்யாணம் என்று முடிவு பண்ணி... அள்ளித் தெளித்தார் போல் வேலை செய்தது போல் தோன்றியது!

"உயிர்... உயிர்" என்று பீத்துபவன், உயிருக்குள் இருக்கும் மனதை மதிக்காமல், திருமணம் முடிந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்றெண்ணியது போல் அவளுக்குத் தோன்றியது!

திருமணம் முடிந்துவிட்டதால், ஏதேதோ காரணம் சொல்லி... அவளை சமாதானம் செய்வது போலவும் மனசிற்குப் பட்டது!

அதுவும், செந்தூரை அவன் செயின்ட் ஸ்னாட்ச்சர் என்று சொன்னதை அவளால் ஒத்துக்கொள்ள முடியவில்லை!

மனம், இல்லை... இல்லை என அடித்துச் சொன்னது!

தந்தையும் தமையனும் அடிபட்டு இருக்கிறார்கள் என்பதை விடவும், செந்தூர் திருடனாக இருக்க மாட்டான் என்பதிலேயே அப்பேதையின் மனம் சுற்றி வந்தது!

"நா செந்தூரை பத்தி... தப்பா நினைக்கணும்ன்னு தானே. அவரு செயின் திருடுறவருன்னு

சொல்றீங்க?" என ரோஜா கேட்கவும், ரபினுக்கு கோபம் வரவில்லை.

மாறாய், பாவமாய் தான் இருந்தது!

குற்றம் செய்தவர்களின் சொந்தம் வந்து "அவரு அப்படிப்பட்டவரு இல்லங்க சார்! விட்டிருங்க சார்!" என்று மன்றாடுகையில் ஒரு அலுப்பும்... பட்சாதாபமும் வருமே! அதே உணர்வு தான், இப்போதும் வந்தது!

"கண்மணி... இதெல்லாம்... வார்த்தையால சொல்லிப் புரிய வைக்க முடியாது! காலப்போக்கில நீயே தெரிஞ்சுக்க வேண்டியது தான்!" என்றவன்.

"இவ்வளவு தான்... உன்னோட அதிர்ச்சிகளின் லிஸ்ட்ன்னா... நான் வெளிய போறேன்! அம்மா இதான் நடக்கும்ன்னு கெஸ் பண்ணித் தான் நம்மளை உள்ள அனுப்பியிருப்பாங்க... சோ... அவங்க ஓகே! ஆனா... இந்த ஸ்டெத்து பையன் ரொம்ப பீதியடைஞ்சு போயிருப்பான்! அவனுக்கு பேதி ஆகுறதுக்குள்ள... நான் போய் காப்பத்தணும்!" என்றவன், அறையை விட்டு வெளியேறினான்.

அவன் சொல்வதை கிரகித்துக்கொள்ள ரோஜாவிற்கு சில நிமிடங்கள் பிடித்தன!

ஆக, அவன் விளக்கப் போவதில்லை!

கொஞ்சம் எரிச்சலாய் வந்த போதும், அவன் செந்தூரை திருடன் தான்னு அடித்துப் பேசாமல் போனது ஏனோ கொஞ்சம் நிம்மதியைக் கொடுத்தது!

செந்தூர் சரி... ஆனால் அப்பா?! தம்பி!?

''நில்லுங்க நில்லுங்க... என்ன தான் இருந்தாலும்... அவங்க என்னோட அப்பா... தம்பி தானே? என்னைத் தானே அடிச்சாங்க... நீங்க ஏன் அவங்களை அடிச்சீங்க?'' என அவள் கேட்க,

அந்த நேரத்திலும் அவளது குறையை முன்னிறுத்தி, அறை வாயிலை விட்டு நகர்ந்து அவள் பக்கமாய் வந்த ரபின், ''கத்தி போய் வாலு வந்த கதையா இது?'' என்றான் சிரிப்புடன்.

''உனக்காக அடிக்கல தாயே! அவங்களோட ஜாதி வெறிக்கா அடிச்சேன்!'' என்றான் சாதாரணமாய்.

''சும்மா சும்மா ஜாதி வெறின்னு சொல்லாதீங்க! நீங்களும் தானே ஜாதியை சொல்லிக் கல்யாணம் செஞ்சுக்கிட்டீங்க! உங்களுக்கும் தானே ஜாதி தேவையா இருந்துச்சு! அப்போ... உங்களுக்கும் ஜாதி வெறியா? உங்களுக்காக கல்யாணம் பேச வந்தாங்களே... அத்தை... அவங்களுக்கும் ஜாதி வெறியா?'' என ரோஜா கோபமாய் கேட்கவும், ரபின் பதிலேதும் சொல்லவில்லை.

'ச்சை... இவளுக்குக் கூட மூளை இருக்கு மச்சி! ஆனா... என்ன கேனப்பய... நொங்கு வெட்டின கதையா... கோணலா வேலை செய்யுது!' என்று சிரித்த மூளையை அடக்கிக் கொண்டு, மனம் உண்டு பண்ணிய கோபத்தை முகத்தில் காட்டி, அவளையே சற்று நேரம் வெறித்துப் பார்த்தான்!

''இதுக்கு நான் பதில் சொன்னேன்னு வை... அது தற்பெருமை மாதிரி தெரியும்! அதனால... நீயே

காலப்போக்கில தெரிஞ்சுக்கோ!'' என்றவன், திறந்திருந்த அறையை விட்டு வெளியேறிவிட்டான்.

ரோஜாவிற்கு, அவனது வாதத்தை எப்படி எடுத்துக் கொள்வதென்று தெரியவில்லை!

கொஞ்சம் கோபமாகவும் இருந்தது! தன்னை ஓர் தாய் போல் பார்த்துக் கொள்ளும் வேலு நாச்சியாரை குறை கூறி விட்டோமே என்று வருத்தமாகவும் இருந்தது! தன் வாழ்க்கையில் ஏன் இத்தனை அதிர்ச்சிகள் என்று குழப்பமாகவும் இருந்தது.

ஆனால்... அவளால், எந்தவொரு உணர்ச்சியையும் வெளிக்காட்ட முடியவில்லை!

சிந்தனை ரேகைகள் முகத்தை ஆக்கிரமிக்க... நின்ற இடத்திலேயே அவள் நின்றிருக்க, யுகா வந்தாள்.

''சாப்பிடா வா!'' என்பது போல் ஜாடை செய்யவும்.

''அக்கா... எனக்கு... எனக்கு... ஒரே குழப்பமா இருக்கு!'' என்றாள் ரோஜா. தன்னால் இந்தச் சூழ் நிலையை சரியாக புரிந்து கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கத்துடன்.

அவளது வயிற்றை தொட்டுக் காட்டிய யுகா. ''ஆஅ...ஆஅ'' என்று சத்தம் எழுப்பி, ரோஜாவின் முகத்தைச் சுட்டிக் காட்டி, ''இப்படித் தான் இருக்கும்!'' என்றாள் கையால்,

''இல்லக்கா!'' என மறுக்கத் தொடங்கியவளை வலுக் காட்டயமாக அழைத்துக் கொண்டு உணவறைக்குச் சென்றாள்.

இவர்கள் உணவறைக்குள் சென்ற அதே நேரம், ரபின் தன் தாயின் அறைக்குள் நுழைந்தான்.

''ஸ்டெத்... நீயும் வாடா!'' என்று அவனையும் அழைத்துக் கொண்டு.

அங்கே அறையில், கட்டிலில் அமர்ந்திருந்த வேலு நாச்சியார் ஏதோ தீவிர சிந்தனையில் இருப்பது நன்றாகவே வெளிப்பட்டது!

''என்னம்மா... பலமான யோசனையா இருக்கு?'' என்றபடியே உள்ள வந்த ரபின்.

''நீங்க... எதுக்கும்மா... என்னையும் அவளையும் ரூம்ல போய் பேசச் சொன்னீங்க? எனக்குப் புரியலையே! ரூம்ல வச்சு... எந்த மாதிரி சந்தர்ப்பத்தில அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு சொன்னதை... உங்க முன்னாடி சொன்னா... என்ன பிரச்சனைம்மா வரும்! எவ்வளவு யோசிச்சும் எனக்குப் புரியலம்மா! உங்க முன்னாடி பேசியிருந்தா... சில கேள்விக்கு... ரொம்ப சுலபமா பதில் வந்திருக்கும்ன்னு எனக்குத் தோணுது! அவ... சில சமயம் புரியாம பேசினதெல்லாம்... நீங்க இருந்திருந்தா பேசியிருக்கவே மாட்டா!'' என்றான் தன் மனதை வெளியிட்டு.

கூடவே, ''புரியாம பேசுறாம்மா! உங்ககிட்ட வந்து நான் உயிர் பிச்சை கேட்டேனான்னு கேட்கிறா? அவ உயிரைக் காப்பத்தணும்ன்னு நானும் நீங்களும் எவ்வளவு துடிச்சோம்! அதைக்கூடப் புரிஞ்சுக்காம! எனக்கு ஒரே எரிச்சலா வருது!'' என்றான் . வெளிப் படையாகவே.

ஏதோ பேசத் தொடங்கிய விவேக்கை, கை காட்டி நிறுத்திவிட்டு, ரபினை மேலே சொல்லும்படி கை அசைத்தார் வேலு நாச்சியார்.

அவரது முக பாவனை ஏதோ சரியில்லை என்பதை உணர்த்தியபோதும், ரபினால் தன் மனதில் உள்ளதை வெளியிடாமல் இருக்க முடியவில்லை.

அவனுக்கு, ரோஜாவின் கேள்விகள் குற்றச்சாட்டு களாய் பட்டன!

அவளது கேள்விகளின் பின்னணியில், தனது செயலை அவள் குறைத்து மதிப்பிட்டது போல் அவனுக்குத் தோன்றியது!

ஒரு உயிருக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்று பதைப்புடன். எவ்வளவு வேகமாய் செயல்பட்டான்... அதை அவள் கேள்விகேட்டு அசிங்கப்படுத்தியது போல் தோன்றியது!

அதன் வெளிப்பாடாய் குரலை உயர்த்தியவன், ''உயிரைக் காப்பாத்தியிருக்கேன்ங்கிறதை விட... ஒரு திருடன்... ஒரு அயோக்கியன்கிட்ட இருந்து அவளை மீட்டிருக்கேன்ம்மா! அதைக் கூடப் புரிஞ்சுக் காம... அவன் மேல பொய் கேஸ் போட்டு நான் தான் இந்தப் பிரச்சனைக்கே வழி வகுத்தேன்னு சொல் லுறது... சுத்த பைத்தியக்காரத்தனம்மா! எனக்கு... அப்படியொரு ஆத்திரம் வந்துச்சு! என்னமோ.... தெய்வீகக் காதல் ரேஞ்சுக்கு பேசிட்டு இருக்கா! ஒரு திருடன்... அதுவும்... பொம்பளைங்க தாலிக் கொடியை அறுத்துட்டுப் போறவன்... எப்படிம்மா நல்லவனா

இருக்க முடியும்? ஒரு கெட்டவன்... எப்படி காதலனாக ஆக முடியும்!? சுத்தப் பைத்தியக்காரத்தனமா இருக்கு! என்னவோ... அவனை நான் அர்ரெஸ்ட் பண்ணதால தான்... அவங்க ஓடிப்போனாங்களாம்... அதனால தான் அவங்கப்பன் அவங்களைப் பிடிச்சானாம்... பிடிச்ச அடிச்சு உதைச்சு... இப்ப காது கேட்காத வரைக்கும் நான் தான் காரணம்ங்கிற மாதிரி பேசுறா!'' என்று இடைவிடாமல் பொரிந்தான்.

''எல்லாமே ஒரு வகையில் ஓகே தான்! ஆனா... கடைசியா சொன்னா பாருங்க... எனக்கும் உங்களுக்கும் ஜாதி வெறியாம்! சுத்த லூசுத்தனம்!''

''இவளுக்காக தான்... அவங்கப்பனை ஒரு சப்பை கேஸ்ல உள்ள தள்ளி... ரெண்டு கால்... ரெண்டு கையை... நாலு கால்... நாலு கையா உடைச்சுப் போட்டுட்டு வந்திருக்கேன்! இவ என்னடான்னா... எனக்கு ஜாதி வெறியாம்! நான் பொய் கேஸ் போட்டேனாம்! உயிர் பிச்சை கொடுத்தேனாம்! லூசு மாதிரி உளறுறா!'' என்றான் கோபம் மிகவுற.

அவன் பேசி முடிக்கும் வரை அவனையே பார்த்திருந்த வேலுநாச்சியார். ''வேகம் இருக்க அளவுக்கு... உனக்கு விவேகம் பத்தாது ரபின்!'' என்றார் பட்டென.

''அம்மா!!!'' என ரபின் திகைக்கவும்.

''ஆமா... மூத்தது மோழை... இளையது காளைன்னு சொல்லுவாங்க! அது விவேகத்தை வச்சு சொல்ற பழமொழி... அப்படிப் பார்த்தா நம்ம வீட்டில மூத்தது

காளை... இளையது மோழைன்னு தான் சொல்லணும்!'' என்றார் அவர் தீர்க்கமாய்.

''அம்மா!'' - அதிர்வது விவேக்கின் முறையானது!

''சும்மா என்னடா அம்மா?! அவன் பேசினதில ஏதாவது ஒண்ணை சரின்னு பாப்போம்!'' என்றார் சவால் போல்.

''என்னது? நான் செஞ்சது தப்பா? அப்ப... நான் ரோஜாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதை தப்புன்னு சொல்றீங்களா?'' என ரபின், தன் அதிர்ச்சியைக் கோபமாய் வெளியிடவும்.

''இதைத் தான் சொன்னேன்! உனக்கு வேகம் தான் ஜாஸ்தி! விவேகம் சுத்தமா இல்லைன்னு!'' என்றார் வேலு நாச்சியார் அதட்டலாய்.

''அப்புறம் என்னம்மா? அவ உயிரைக் காப்பாத்தி...'' என ரபின் தொடங்க.

''சும்மா நிறுத்துடா! உயிரைக் காப்பாத்தினேன் காப்பாத்தினேன்னு புலம்பிட்டே இருக்கே? காப்பத்திட்ட சரி... அதுக்காக... உனக்குத் தியாகி பட்டம் கொடுத்து... மூணு ரோடு சந்திக்கிற இடத்தில சிலை வேணும்ன்னா வைக்கலாமா? ஒரு காக்கா கூட மதிக்காது சொல்லிட்டேன்! தலை பூரா எச்சிலா தான் இருக்கும்!'' என்றார் வேலு நாச்சியார் கோபமாய்.

''அம்மா!!!'' - மகன்கள் இருவருமே அவரது கோபத்தில், மேலே பேச முடியாமல் நின்றனர்.

''அப்புறம் என்ன... ஒரு திருடன் காதலிக்கக் கூடாதுன்னு உன்னோட சட்டத்தில இடமிருக்கா

என்ன? ஒரு தீவிரவாதியோட காதல்... மிக தீவிரமா இருக்கலாம்! தெரியுமா... உனக்கு?'' என்ற போது அவருக்கு... குரல் உச்சசாயிக்கு சென்றதால் நடுங்கிற்று.

ரபின் கிடுகிடுத்து போனான்!


''நீ... அந்தப் பையனை குறை சொல்றதா நினைச்சு... ரோஜாவோட உணர்வுகளை அசிங்கப் படுத்தி இருக்கே ரபின்! அது தப்பு... அவன் எப் படிப்பட்டவனா இருந்தாலும்... அந்தக் காதல் அத்தி யாயம் முடிஞ்சு போச்சு. உன்னோடான கல்யாண அத்தியாயத்தை... அவனோட காதலை அசிங்கப் படுத்தி ஆரம்பிக்கக் கூடாது ரபின். அது நிலைக் கவே நிலைக்காது! ரோஜா... அவனை நம்பிப் போற அளவுக்கு... அவன் மேல நம்பிக்கை வச்சிருந்திருக்கா! அதை... நீ அசிங்கப்படுத்தினேன்னு வை. அது உன்னோட வாழ்க்கையை நரகமாக்கிடும்! அவனோட வாழ்க்கை... அவளுக்கு சாத்தியமானது இல்லைன்னு புரியவை! உன்னோட வாழ்க்கையை... அவளுக்கு சந்தோஷமானதா மாத்திக் கொடு! அதை விட் டுட்டு... அவ உன்னோட உணர்வுகளைப் புரிஞ்சுக் கணும்... உன் தியாகத்தை மதிக்கணும்ன்னு நினைக் கிறது சுத்த... ஆண் வர்க்கத் திமிர்! அவ உன்னோட உணர்வுகளைப் புரிஞ்சுக்கணும்ன்னா... அதே மாதிரி நீயும் அவளோட உணர்வுகளை மதிக்கணும்!'' என் றார் ஓர் தலைவியின் கம்பீரத்துடனும்.... சிந்தனை ஆற்றலுடனும்.

ரபின், பதில் பேச முடியாமல் தலை குனிந்து நின்றது அந்தத் தாயை என்னவோ செய்தது போலும்.

மெல்ல அவனருகே வந்து, அவனது தலையை வருடிக் கொடுத்தவர், ''ரபின் கண்ணா... அவளை ஒரு குற்றவாளியோட வக்கீலாவும்... உன்னை குற்ற வாளியைக் கண்டுபிடிச்ச போலீஸாவும் பார்க்காத ராஜா! அவ உன்னோட மனைவி! அப்படிப் பாரு!'' என்றார் வாஞ்சையாய்.

ரபினுக்கு எதுவோ புரிவது போலிருந்தது!

விவேக்கிற்கு தான் நினைத்தது போல். தம்பி சொதப்பி விட்டான் என்பது புரிந்தது!



16

வேலு நாச்சியாரிடம் வாங்கிக் கட்டிய பின்னர். யாரோ நடு மண்டையில் நச்சென்று கொட்டியது போலிருந்தது, ரபினுக்கு!

சற்ற நேரம், ஒன்றும் பேசாமல் நின்ற தம்பியின் அருகே வந்த விவேக். ''சாப்பிடப் போகலாம் வா!'' என அழைத்தான்.

''ஹ்ம்ம்...'' என சில வினாடி நேரம் யோசித்தவன். ''இல்லடா ஸ்டெத்து! நீ போ... நா கொஞ்ச நேரம் வெளிய போயிட்டு வந்துடுறேன்!'' என்றான் வெளியே நகர்ந்தபடி.

"எங்க போறே? சாப்பிட்டுப் போயேன்டா!" என விவேக் கேட்பதற்குள்.

"இதோ... வந்துடுறேன்! நீ போ!" என்றவனின் கைகள் புல்லட்டின் சாவியைச் சுழற்றியபடி சென்று விட்டன.

கிட்டத்தட்ட அரை மணி நேரம் கழித்து வந்த வனின் கைகளில் ஒரு பெரிய பை.

"என்னடா... இது மூட்டை?" என விவேக் கேட்ட தற்கு.

"சஸ்பென்ஸ் ஸ்டெத்து! சஸ்பென்ஸ்!" என்று வாய் மேல் விரல் வைத்து சொன்னவன், தன் அறைக் குள் சென்று அதை வைத்துவிட்டு வந்தான்.

"என்னடா முகமூடிக் கொள்ளைக்காரன் கணக்கா?" என்று விவேக் தன் ஆர்வத்தை அடக்க முடியாமல் கேட்கவும்.

"நீ என்ன... சீரியல் பாக்கிற அம்மா மாதிரி பறக் கிற? விடுறா! விடுறா!" என்றான் ரபின். விவேக்கின் தோளில் தட்டியபடியே தேற்றினான்.

அங்கே, வரவேற்பறையில் பெண்கள் மூவரும் அமர்ந்திருக்க. "எல்லாரும் நல்லபடியா கொட்டிக்கிட் டாச்சா?" என்றான் சிரிப்புடன்.

அவன் சிரிப்பதைக் கேலியுடன் பார்த்திருந்த வேலு நாச்சியார். "ஏண்டா... இவ்வளவு திட்டு வாங்கின துக்கு அப்புறம்... எப்படிடா சிரிச்சிட்டு இருக்கே? வெக்கமே இல்லைன்னு நொடிக்கொரு வாட்டி நிரூ பிக்கிறியே!!!" என்றார்.

தாயின் பேச்சில் சட்டெனச் சிரித்த விவேக். "இந்த அசிங்கம் உனக்குத் தேவையாடா போலிஸ்காரா?" என நக்கலாய் கேட்க,

"நான் தான் இப்ப போலீஸ் இல்லையே!!" என்று அதிமேதாவியாய் பதில் சொன்ன ரபினின் தோளில் இரண்டு அடி விழுந்தது!

அவர்கள் என்ன பேசினார்கள் என்பது சரியாய் புரியாவிட்டாலும், ரபினின் முகத்திலிருந்த சிரிப்பும்... கலகலப்பும் ரோஜாவைக் குழப்பின.

'இவனால் எப்படி சிரிக்க முடிகிறது?' என்ற சிந்தனைக் குதிரையில் ரோஜா சவாரி செய்கையில், அதற்கு கடிவாளம் போடும் வண்ணம்.

"எல்லாரும் சாப்பிட்டீங்க தானே? எனக்கு... யாராவது வந்து சாப்பாடு போடுங்க!" என்ற ரபின். அதற்கான பதில் வரும் முன்னரே ரோஜாவின் அருகே வந்து.

"ஹலோ... பொண்டாட்டி! முறைப்படி... உன் னைத் தான் சாப்பாடு போடக் கூப்பிடணும்! ஆனா... உனக்கு உடம்பு சரியில்லைங்கிறதால விடுறேன்! பொழைச்சு போ!" என அலட்சியமாய் கூறவும் ரோஜாவின் வியப்பு கூடிக் கொண்டே போனது!

வேலு நாச்சியாரின் முகத்தில் சந்தோஷப் பூக்கள் மலர்ந்து மணம் பரப்ப, "அவங்க ரெண்டு பேரும் சாப்பிட்டாச்சு! உன்னோட உடன்பிறப்பு தான்.... நீ வந்தா தான் சாப்பிடுவேன்னு அடம் பிடிச்சுட்டு சாப்பிடல! வா... ரெண்டு பேருக்குமா சாப்பாடு

போடுறேன்!'' என்றார் இருக்கையிலிருந்து எழுந்த படி.

''ஹோ! ரியல்லி!'' எனப் போலியாய் வியந்த ரபின், விவேக்கின் தோளில் கைப்போட்டு ''அண்ணேண்டா!'' என்றான் பெருமையாய்,

விவேக்கும் தம்பியின் தோளில் கையிட்டு ''தம்பிடா!'' எனவும் ''வாங்கடா!'' என முன்னே நடந்தார் வேலு நாச்சியார்.

ஒரே வார்த்தை என்பதால், ரோஜாவால் உதட்டசைவை வைத்து, அவர்களது பேச்சைக் கிரகித்துக் கொள்ள முடிந்தது!

கேட்ட மாத்திரமில்லாமல், பக்கென சிரித்து விட்டாள். ஒரு நிமிடக் காலத்திற்கு, குழப்பங்கள் யாவும் மறைந்து போனது போலிருந்தது அவளுக்கு!

அவள் சிரித்ததும், ''குட் ஸ்மைல்!'' என்று பாராட்டியவன், தாயின் முந்தானையைப் பற்றிக் கொண்டு உணவு மேசைக்குச் சென்றான்.

''சும்மா நடிக்காம வாடா!'' என அவனிடமிருந்து தனது சேலையை விடுவித்துக் கொண்டவர், மகன்கள் இருவருக்கும் பரிமாறிவிட்டு, தானும் உணவுண்ண அமர,

''என்ன மேரி மாதா? செகண்ட் டோசா?'' என்றான் கண்களைச் சிமிட்டி.

''உன்னைச் சமாளிக்க மூணு டோஸ் சாப்பிட்டாலும் பத்தாதுடா... மவனே!'' என்றார் அவரோ.

சிரிப்புடன் சாப்பாட்டை அவர்கள் தொடர, யுகாவும் ரோஜாவும் வரவேற்பறையிலிருந்து அதைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

சாப்பாட்டின் ஊடே. ''ஹான்! ஒரு முக்கியமான விஷயம் லேடீஸ்!'' என அறிவிப்புப் பாணியில் கைகளைத் தூக்கிய ரபின்.

''என்னடா... உன்னை டிஸ்மிஸ் பண்ணிட்டாங்களா?'' என வேலு நாச்சியார் கேட்க.

''ரொம்ப ஓவரா போயிட்டு இருக்கிங்க... அடங்குங்க!'' என்றவன். ''ஹான்! மேட்டருக்கு வருவோம்! இனிமேல்... ரபினை ''லவின்'' என்று அழைக்க வேண்டும் என அறிவிக்கப் படுகிறது!'' என்றான் தீவிரமான முகபாவத்துடன்.

''எதுக்குடா?'' என விவேக் விழிக்க.

உணவு மேசையை விட்டு எழுந்து. ரோஜாவின் அருகே சென்றவன். அவளுக்குக் கேட்கும் தூரத்தில் நின்று கொண்டு, ''ஏன்னா... இன்னையில இருந்து... ஆக்சன் கிங் ரபின்... லவ்வர் பாய் ரபினா மாறுறான்! அதற்கு அடையாளமா... லவ்வோட முதல் இரண்டு எழுத்து... ரபின்ங்கிற பேரோட இணைஞ்சு.... லவின் ஆகுது!'' என்றான் குறும்பு கொப்பளிக்கும் குரலில்,

அனைவரும் சிரிக்க. ரோஜாவுக்கோ அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி!

'லூசாப்பா நீயி!?' என்று கேட்கும் அளவிற்கு, அவளுக்கு அவனது நடவடிக்கைகள் பெரும் விந்தையாய் இருந்தன!

அவள் பேந்தப் பேந்த விழிப்பதைக் கண்டவன், அவளுக்குத் திருஷ்டி கழித்து விட்டுச் சாப்பிடச் சொல்லவும், யுகாவின் முகத்தில் வண்டி... வண்டியாய் சந்தோசம்!

விவேக்கிற்கும் அப்படியே என்பதை அவனது வார்த்தைகள் வெளிப்படுத்தின.

''டேய்... லவ்வர் பாய் லவின்! காதல்ல ஏதாவது டிப்ஸ் வேணும்ன்னா என்னைக் கேளுடா! சொல்லித் தரேன்!'' எனக் கூறிய அண்ணனைக் கையெடுத்து கும்பிட்டான் ரபிந்த்ரநாத்!

''வேணாம் சாமி! வேணாம்! உன் காதலைப் பார்த்து... படிக்கிறேன்னு நான் சொதப்பினது எல்லாம் போதும்! இந்த ரபின் வழி தனி வழி... அத்த யாரா வது தொடர்ந்து வரலாமே ஒழிய... அவன் யாரையும் தொடர்ந்து போக மாட்டான்!'' என்றான் சூப்பர் ஸ்டாரின் குரலில்!

யுகா விழுந்து விழுந்து சிரிக்கவும், ''என்ன யுகாக்கா! என்ன சொல்றாங்க? ஏன் சிரிக்கிறீங்க?'' என்று பரபரத்தாள் ரோஜா.

இதை எப்படி விளக்குவது என்று யுகா யோசிக்கும் போதே, அவளருகே வந்த ரபின், ''என்ன கண்மணி பேபி! நீ தான் இந்த காதல் படத்தோட ஹீரோ யினே.... அப்படியிருக்கும் போது... கதை நடக்கும் போது உனக்குத் தெரிஞ்சிட்டு போகுது! எதுக்கு ட்ரைலர் எல்லாம் கேட்டிட்டு இருக்கே!'' என்றான் சிரிப்புடன்.

'இவனுக்கு நிஜமாவே லூசு தான் பிடிச்சிருக்கு!' என்று முடிவே செய்துவிட்டாள் ரோஜா.

ஆனால், அவளது எண்ண ஓட்டத்தை எல்லாம் மதிப்பதாய் இல்லை ரபின்.

உணவு முடிந்ததும், ''ஓகே! எனக்கு... சில பல முக்கியமான வேலையிருக்கு! நா உள்ள போறேன்!'' என ரபின் அறைக்குள் நுழையப் போக.

''டேய்... ப்பாபின்! நில்லு! எதுக்கு சஸ்பென்ட் ஆனே... அதைச் சொல்லிட்டுப் போடா!'' என்றான் விவேக். அவனது சட்டையைப் பின்பக்கமாய் பிடித்து இழுத்தபடியே.

''வேணாம்டா ஸ்டெத்து! அது... ஆபத்தான கட்டம்... அதை நான் திரும்பவும் தாண்ட விரும்பல! விட்டுடு!'' என்றவன். ஒரே இழுப்பில் அறைக்குள் ஓடியே போனான்.

''என்னமா இவன்?'' என விவேக் சலித்துக் கொள்ள.

''என்னடா பெரிய ரகசியம்!? ரோஜாவோட பிறந்த வீட்டு ஆளுங்களை... லாக்-அப்ல வச்சு அடிச்சிருப் பான்! உயிர் போற அளவுக்கு அடிச்சிருக்கான்னுட்டு சஸ்பென்ட் பண்ணியிருப்பாங்க! இதெல்லாம் ஒரு கேள்வின்னு கேட்டுட்டு! போடா!'' என்று சாதாரண மாய் கூறிய வேலு நாச்சியார்.

யுகாவிடம் திரும்பி, ''உன் புருஷன்... அடுத்த அதிர்ச்சி கேள்வியைக் கேட்கிறதுக்கு முன்னாடி... அவனை உள்ள கூட்டிட்டுப் போய் தூங்க வை!'' என்றார் கட்டளையாக.

யுகா சிரித்துக் கொண்டே எழுந்து செல்லவும், அவளையே பார்வையால் தொடர்ந்து கொண்டிருந்த ரோஜாவின் அருகே அமர்ந்தார்.

ரபினின் செயலுக்கு ஏதாவது விளக்கம் கொடுப்பாராய் இருக்கும் என்று ரோஜா காதைத் தீட்டிக் கொண்டு அமர்ந்திருக்க, "மாத்திரை சாப்பிட்டுட்டு... ரபின் ரூம்ல படுத்துக்கோ!" என்றார் அவளது தலையை வருடி.

"அவ்வளவு தானா?" என வாய் விட்டே கேட்டு விட்டாள் ரோஜா.

ஆனால், அதற்கு நேரடியாய் பதில் சொல்லாமல், "மீதியெல்லாம் ரபின் உணரவைப்பான்!" என்றார் வேலு நாச்சியார் திடமாய்.

'சொல்லுவான்!' என்று சொல்லாமல், 'உணர வைப்பான்!' என்று அவர் சொன்னது. ரோஜாவின் குழப்பத்தை அதிகமாக்கியதே ஒழிய குறைக்கவில்லை.

தன் குழப்பம் முழுதையும் முகத்தில் தேக்கி வைத்துக் கொண்டு, பாவம் போல் ரோஜா அவரைப் பார்க்கவும், "ரோஜா! இனிமேல்... இது தான் உன் வாழ்க்கை! அதை மட்டும்... நீ மனசில பதிச்சுக்கிட்டா போதும்! ரபின்... மித்தது எல்லாத்தையும் பார்த்துப்பான் சரியா? இப்ப... உள்ள போய்த் தூங்கு!" என்றார் அவளது உச்சி முடியை மெல்லக் கலைத்துவிட்டு.

பேச வாய் திறந்தவளின் உதட்டில் விரல் வைத்து, "தூங்கும்மா!" என அவளை உள்ளே அனுப்பி வைத்தார் வேலு நாச்சியார்.

அறையினுள்ளே சென்றவள், சற்று நேரம் திகைத்துப் போனாள்!

பின்னே, கட்டில் முழுவதும்... சினிமா குறுவட்டுக்கள் நிரம்பிக் கிடக்க, அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்து, திருப்பிப் பார்த்துக் கொண்டு, மும்முரமாய் எதையோ குறித்துக் கொண்டிருந்தான்.

மெல்ல கட்டிலின் அருகே சென்ற ரோஜா, சற்று நேரம்... அவனையும்... அந்தக் குறுவட்டுக்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

ஐந்து நிமிடங்கள் கழித்த, அவனாகவே நிமிர்ந்து "ஹோ வந்துட்டியா?" என்று கேட்கும் வரை ரோஜாவின் ஆராய்ச்சி தொடர்ந்தது!

"என்னது இதெல்லாம்?" என ரோஜா திகைப்புடன் வினவவும்,

"இது எல்லாம்... காதலை பேஸ் பண்ணி வந்த தமிழ் சினிமா! ஒண்ணு ஒண்ணா பாக்கப் போறேன்!" என்றான் அவன், சத்தமாய்.

"எதுக்கு?" - ரோஜாவுக்கிருந்த குழப்பங்களில் தலையாய குழப்பமாய் இந்த குறுவட்டுக்கள் குத்தாட்டம் போட.

"லவ்வர் பாய்ன்னு சொல்லிக்கிட்டா போதுமா என்ன? அதுக்கான ஸ்டெப்ஸ் எடுக்க வேணாம்?! அதான்!" என்றவன்.

"ரெண்டு நிமிஷம் வெயிட் பண்ணு! எல்லாத்தையும் கிளீன் பண்ணிடுறேன்! நீ படுத்துக்கோ!" என்றான். சொல்லில் மட்டுமல்லாமல் செயலிலும் அவசரம் காட்டி.

புதிதாய் ஓர் பெண். தனது அறைக்குள் படுக்க வந்திருக்கிறாள் என்ற எண்ணமே இல்லாமல், எப்படி இவ்வளவு சாதாரணமாய் என்று எண்ணியவளுக்கு, தானும் ஒரு புது ஆடவனின் அறைக்குள் நுழைந்திருக் கிறோம் என்பது மனதில் பதியாமல் போனது விந்தையில் சேர்த்தியோ!

அவன் படுக்கையிலிருந்து குறுவட்டுக்களை எடுத்ததும், ஓரமாய் ஏறிப் படுத்துக் கொண்டாள் ரோஜா.

அவனோ, அவனது மடிகணினியை எடுத்து வந்து, கட்டிலின் மறு ஓரத்தில் அமர்ந்து கொண்டான்.

வாகாய் காலை நீட்டி, முதுகிற்கு ஓர் தலை யணையை அண்டக் கொடுத்து, "ஹ்ம்ம் செட் அப் எல்லாம் ரெடி!" என்றபடியே அவன் கைகள் இரண் டையும் தட்டவும், ரோஜாவின் இதழ்கடையில் ஒரு சிரிப்பு உதித்தது!

முதல் படத்தை ஓடவிட்டு, அவன் அதைப் பார்க்கத் துவங்கவும், ரோஜாவின் கண்களும் அதை மேய்ந்தன!

காதல் இளவரசர்... முத்தங்களின் மஹாராஜா கமல் ஹாசனின் படம் அது!

ரோஜாவின் கண்கள் ஆர்வமாய் அதில் மேய, காதுக்கு எதுவும் கேட்கவில்லை.

"ச்சை!!!" என அவள் எரிச்சல் படும் போதே, ஹெட்போனை எடுத்து கணினியில் சொருகியவன்,

தன் இடக்காதில் ஒரு முனையையும்... அவளது வலக்காதில் ஒரு முனையையும் மாட்டினான்.

வார்த்தைகளற்ற அந்தச் செயல், ரோஜாவின் மயிர்க்கால்களைக் கூசிச் சிலிர்க்க வைத்தன!

சட்டென. அவள் விழியுயர்த்தி ரபினைப் பார்க்க, அவனோ படத்திலேயே கவனமாய் இருந்தான்.

காதலின் முதலடியை படத்தைப் பார்க்கும் முன் னரே எடுத்து வைத்துவிட்டான் என்று அவனுக்கும் விளங்கவில்லை! பார்த்திருந்த அவளுக்கும் புரிய வில்லை.

படம் ஓட ஆரம்பித்தது!

முதலில் சுவாரஸ்யமாய் சென்ற படத்தில், நடுவி லேயே காதலர்கள் இருவரும் மலையிலிருந்து குதித்து விட, அதைக் கண்டதுமே "ஹய்யே! நல்ல படத்தை முதல போட்டிருக்கீங்க!" என்றவள். தன் காதில் மாட்டியிருந்த ஹெட்போனை எடுத்து கட்டிலில் போட்டுவிட்டு, திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

ரபினின் முகத்தில் சந்தோஷத்தின் சாரல் புயல் மழையாய் வீசியது!

சீக்கிரமே, காதல் இளவரசன் இல்லையென் றாலும்... ஒரு காதல் சிப்பாயாகவாவது ஆகிவிடலாம் என்ற நம்பிக்கை அவனுள் வேர்விட்டு முளைத்தது!

அடுத்த நாள் காலை. கண்கள் இரண்டும் கோவைப் பழமாய் சிவந்திருக்க, "என்னய்யா படம் எடுக் கிறாய்ங்க!" என அவன் புலம்பியபோது, ரோஜாவின் சிரிப்பு காது வரை சென்று மீண்டது!

17



தற்காலிக வேலை நிறுத்தம் கொடுக்கப்பட்டு. வீட்டிற்கு அனுப்பப்பட்டிருந்த சிங்கம், அதை நல்லபடியாக உபயோகப்படுத்த ஆரம்பித்தது!

முதலிரண்டு நாட்கள், படம்... படம்... படம் மட்டுமே! (உனக்கு நல்ல திட சித்தம்டா!)

ரோஜாவிற்கே, சலிப்புத் தட்டிவிட்டது!

ஒரு கட்டத்தில், ''இன்னும் எத்தனை பட மிருக்கு?'' என அவள் பாவம் போல் கேட்க.

ரபின் தன் முகத்தில் தோன்றிய சிரிப்பை மறை யாது வெளியிட்டு, ''நைட்... நைட் படம் பாக்கிற உனக்கே இப்படி இருக்குன்னா... நாள் முழுசும் படம் பாக்கிற எனக்கு எப்படி இருக்கும்?'' என்றான் புருவங்களை உயர்த்தி.

''அப்புறம் எதுக்கு இந்த வேலை?'' என ரோஜா திரும்பவும் கேட்க.

''வெட்டி வேலைன்னு வெளிப்படையா சொல்ல வேண்டியது தானே?'' என சிரித்தவன், ''என்ன செய்றது... இந்த ரபினுக்குள்ள எப்பவுமே ஒரு சிங்கம் மட்டும் தான் உறங்கிட்டு இருக்கு! ஒரு மானோ... மயிலோ... குயிலோ... ரொமான்ஸ்க்குத் தேவையான எதுவுமே தூங்க மாட்டேங்குது! அப்புறம் எங்க

இருந்து... தட்டி எழுப்பினதும் எழுந்து வரது! அதான்... அது எல்லாத்தையும் உள்ள உக்கார வச்சு... தூங்கப் பண்ணிட்டு இருக்கேன்!'' என்றான் மேதாவி போல்.

''ரொமான்ஸ்க்கு... மான்... மயில்... குயில் தான் அதிபதின்னு உங்களுக்கு யாரு சொன்னது?'' என் றாள் ரோஜா. சிரிப்பை அடக்க முடியாமல்.

''அப்ப இல்லையா? வேற எது?'' என ரபின். அப்பாவியாய் அவளிடமே திருப்பிக் கேட்டான்!

அவன் தன் வாயைப் பிடுங்குகிறான் என்ற எண்ணமே இல்லாமல், ''ஹ்ம்ம்... காதலுக்கு எந்த மிருகமும் இருக்கிறதா எனக்குத் தெரியல! ஹ்ம்ம் ஒரு வேளை... லவ் பர்ட்ஸா இருக்குமோ?'' என ரோஜா, தன் மூளையைத் தட்டவும்,

'ஹய்யோ! பேக்கு!' என்று கொஞ்சத் தோன்றியது ரபினுக்கு! அதை அடக்கிக் கொண்டு, ''அப்ப... லவ் பார்ட்ஸை உள்ள தூங்க வைக்கலாம்! என்னோட சேர்ந்து நீயும் ட்ரை பண்ணு!'' என்றவன், மற்றொரு படத்தை எடுத்து ஓட விட்டான்.

இருவருக்குமே, அந்தப் படம் பிடித்திருந்தது!

ஆனால், முடிவில்... இதய நோயால் பாதிக்கப் படும் காதலிக்காக... தன் இதயத்தையே அறுத்துக் கொடுத்தான் அந்தக் காதலன்!

ரபினின் முகம் பேயறைந்தது போலிருக்க. ரோஜா வுக்கோ சிரிப்பென்றால் சிரிப்பு... பொங்கிப் பெருகி வந்து கொண்டிருந்தது!

''ஹஹ்ஹா!!!'' என அவள் வாய் விட்டுச் சிரிப்பதை, ஒரு கண்ணை இடுக்கி, ''ஹ்ம்ம்... ஹ்ம்ம்... ஹ்ம்ம்'' எனப் பெருமூச்சு விட்டுக் கொண்டு பார்த்திருந்தான் ரபின்.

அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவள், தன்னையும் அறியாமல் ''கவலைப்பாடதீங்க! உங்களோட துயத்தை எல்லாம் பிடுங்கி... நான் வச்சுக்கமாட்டேன்!'' என்றாள் சமாதானம் செய்யும் தோரணையில்.

அதில் கண்கள் பளிச்சிட. ''ஹோ! அப்போ... நானும் நீயும் லவ்வர்ஸ்ன்னு ஒத்துக்கிற! அப்படித்தானே!'' என்றான் ரபின்.

சட்டென. முகத்தில் அதிர்ச்சி படர. எழுந்து அமர்ந்தாள் ரோஜா.

செந்தூர் என்ற மனிதன் கண்ணை நிறைக்க. அவனது காதல் வார்த்தைகள் காதை நிறைத்தன!!

'எப்படி? எப்படி தன்னால் முடிந்தது? செந்தூரை காதலித்த அதே மனதால்... ரபினையும் எப்படி காதலிக்க முடியும்?'

'எப்படி ஒரு பெண் பறவையால்... இரு ஆண் பறவைகளுடன் ஜோடியாக பறக்க முடியும்?'

'இப்போது ரபினின் பேச்சில் சிரிக்கும் தான்... செந்தூரின் பேச்சிலும் மயங்கித் தானே நின்றோம்? இதெப்படி சாத்தியம்?'

'இவ்வளவு சீக்கிரம்... செந்தூர் என்பவனை மறந்து விட்டோமா அவன் மீது கொண்ட நம்பிக்கையை...

அவன் கட்டிய தாலியை... அவனுடன் பகிரவிருந்த வாழ்க்கையை... எப்படி? எப்படி? இவனது சிரிப்பும் பேச்சும்... திரையிட்டு விட்டனவா?'

'இவன் செய்யும் கலாட்டாவில்... தன் கடந்த காலத்தை மறந்து விட்டோமா என்ன?'

'எப்படி? எப்படி? எப்படி?' என்று மூளை அவளைப் படுத்தி வைக்க. ரபினோ ''எப்பவும் யோசனையில இருக்க பொம்பளையும்... எப்பவும் தண்ணில இருக்க ஆம்பிளையும் தள்ளாடிட்டே தான் இருப்பாங்க. கண்மணி பேபி! சோ... யோசனையை நிறுத்திட்டு... தூங்கும்மா!'' என்றான், மடிகனினி... அறை விளக்குகள் அனைத்தையும் அணைத்துவிட்டு.

''இல்ல... நா... நா... செந்தூர்...'' என ரோஜா, தன் மனதைச் சொல்ல முயல.

''கண்மணியா இருந்துட்டு... சிவந்து போயிருக்க என் கண்மணி மேல உனக்குக் கருணையே இல்லையாம்மா தாயே?! படும்மா!'' என்றவன். போர்வையை எடுத்து முகம் வரை போர்த்திக் கொண்டு உறங்கிப் போனான்.,

ரோஜாவும்... ஒருவாறாய் உறங்கிப் போனாள்.

அடுத்த நாள் காலையில் அவள் எழுந்ததும். அவள் கேட்ட முதல் வாசகம். ''ஹே கண்மணி பேபி! இன்னைக்குப் போய்... உங்கப்பாவை பார்த்திட்டு வந்திடலாம்! வீட்டுக்குக் கடைசி மாப்பிள்ளை... வந்து பார்க்கலைன்னா சாமி குத்தம் ஆகிடுமாம்!'' என அவன் கன்னத்தில் போட்டுக் கொள்ள.

''அடிச்சா மட்டும்... சாமி குத்தம் ஆகாதா?'' என்றாள் ரோஜா. கோபமாய்.

''அடிச்சது... ரபின்! இப்பப் பார்க்கப் போறது... லவின்ல! சோ... அதெல்லாம் ஆகாது!'' என்று தோளைக் குலுக்கியவன், ''காலையில டிபன் முடிச்சிட்டு... கிளம்பலாம்!'' என்றான் முடிவாக.

காலை உணவு முடிந்ததும், ஒரு கூடை ஆப்பிளும்... ஒரு பெரிய ஹார்லிக்ஸ் பாட்டிலும் வாங்கிக் கொண்டு, கண்டமன்னூர் போனது ரபினின் புல்லட்! ரோஜாவையும் ஏற்றிக் கொண்டு!

தன் பிறந்த வீட்டின் முன்னே வண்டி நின்றதும், ரோஜாவிற்குத் தான் திக்கென்று இருந்தது!

'ஹய்யோ... என்னவாகப் போகிறதோ?' என்று மனம் கிடந்து தவித்துப் போனது!

அடித்தவன் ரபின் என்பதால், தகப்பனும்... தம்பியும் அவன் மீது ஏகப்பட்ட கோபத்தில் இருப்பார்களே! அவனை அடித்து விட்டால் என்ன செய்வது? அவர்கள் அடிக்க... இவனும் திரும்ப அடிக்க... ஹய்யோ! கலவரமாகி விடுமோ!?

சும்மாவே, அப்பாவின் கைகளில் வீச்சரிவாள் தாண்டவமாடும்! இப்போது என்ன செய்வாரோ?

மருமகன் என்று கூடப் பார்ப்பாரோ என்னவோ?! அதுவும், அவருக்குப் பிடிக்காத மகளின் கணவன் என்கையில்... வெட்டுக் குத்து ஆவது நிச்சயம் போல் தெரிகிறதே!

இவனானால்... பெரிய மாப்பிள்ளை தோரணையில் செல்கிறானே என்று மனம் பதறியது.

அவளது பிறந்த வீட்டின் வாசற்படியில் ரபின் காலெடுத்து வைக்கவும், சட்டென அவனது முழங்கையைப் பற்றி, பின்பக்கம் இழுத்தாள் ரோஜா.

''ஹே! என்ன?'' என ரபின் திகைக்கவும்.

''இல்ல... எங்கப்பா ரொம்பக் கோவக்காராரு! அடிச்சுடுவாரோன்னு பயந் தான் வருது!'' என ரோஜா தடுமாறினாள்.

''ஒரு சிங்கத்தை துணைக்கு வச்சுக்கிட்டு... இதென்ன பேச்சு? என் முன்னாடி... உன் மேல கை வச்சிருவாரா என்ன?'' என அவள் காதருகே குனிந்து சொல்லிவிட்டு, தன் சட்டைக் கையை மடக்கி விடவும், அவனைப் பார்த்து தலையில் அடித்துக் கொண்டவள்.

''என்னை அடிக்கிறதைப் பத்தி கவலைப்படல! உங்களை அடிச்சிடுவாங்களோன்னு தான் பயந்து வருது!'' என்றாள் பயத்துடன்.

''ஹஹ்ஹா! ஒரே காமெடிப்பா கண்மணி உன்னோட!'' என்று வாய் விட்டுச் சிரித்தபடியே, அவளது கைப்பற்றி உள்ளே அழைத்துச் சென்றான்.

'இவனுக்கு சுத்தமாய் அறிவே இல்லை!' என்று உள்ளுக்குள் முனங்கியபடி, அவனுடன் நடந்து சென்றாள் ரோஜா.

அவர்களைக் கண்டதும், கட்டிலில் படுத்திருந்த அவளது தந்தை ''அடடே! மாப்பிள்ளையும் ரோசாவும் வந்திருக்காக... அடியே! வெருசா வா! டேய்

ராக்கு... நாக்காலி எடுத்துப் போடுடா!'' என்று அவர் பரபரக்கவும்.

ரோஜாவுக்கு மயக்கமே வந்துவிட்டது!

வலது காலில் ஒரு தொட்டில் கட்டி, அது பாட்டுக்கு ஊஞ்சாலடிக் கொண்டிருந்தது!

தலையில் ஓர் பெரிய கட்டு! இடது கையிலும் ஒரு கட்டு! ஆனால், எலும்பு முறியவில்லை போலும்!

இப்படிப்பட்ட நிலைமைக்கு ரபின் தான் காரணம் என்று தெரிந்தும், தந்தை அவனை உபசரிப்பது ரோஜாவுக்குப் பெருத்த ஆச்சரியத்தைக் கொடுத்தது!

'நம்ம அப்பாவா?' என ரோஜா யோசிக்கும் போதே.

''ரோசா!!!'' எனக் கதறிக் கொண்டு ஓடி வந்த அவளது தாய். ''அப்பாக்கு இப்படி ஆகிப் போச் சேடி!'' என ஒப்பாரி வைக்கத் துவங்கினார்.

''அத்தை! அத்தை! என்ன பேசுறதா இருந்தாலும்... அந்தப் பக்கம்... அவளுக்கு வலது கை பக்கமா போய் பேசுங்க! இந்த இடது காது தான் ரிப்பேரா இருக்கே! ச்சே... ரிப்பேர் ஆக்கி வச்சிருக்கீங்களே!'' என ரபின் சொல்லவும்.

அங்கே பலத்த அமைதி நிலவியது!

அவன் குரல் சாதாரணமாய் இருந்த போதும், கண்கள் கூர்மையாய் வேலுச்சாமியை முறைத்தன!

ஆனால், அது நிலைத்தது ஒரே வினாடி தான்!

சட்டென முகத்தில் புன்னகையைப் பூசிக் கொண்டவன். ''உங்களுக்கு அடி பட்டிருக்குன்னு சொன்னதும்... ரோஜா ஒரே அழுகை!! எங்கப்பாவைப் பாக்கணும்... பாக்கணும்ன்னு ஒரே பிடிவாதம்! அதான்... ஆபீஸ்க்கு லீவ் போட்டு... அவளை இங்கக் கூட்டிட்டு வந்தேன்! அப்புறம்... பொண்டாட்டியை மதிக்காத புருஷன்னு எனக்கும் உங்களை மாதிரி... பேர் வந்திடக் கூடாதில்ல! அதான்!'' என்றான் நயமாய்.

'ஹய்யோடா! ஒரே வரியில்... எத்தனை குத்தல்கள்!' என்று ரோஜாவிற்கு, சட்டென தலை சுத்தி மயக்கம் வரும் போலிருந்தது!

சொல்லப்போனால், தந்தையும் தம்பியும் அடி பட்டு இருக்கிறார்களே என்று ஒரு நிமிடம் வருத்தமாய் இருந்த போதும், அவள் அவர்களைப் பார்க்க வேண்டும் என்று நினைக்கக் கூட இல்லை! அப்படி அவர்கள் நடந்து கொள்ளவும் இல்லை! அது அவர் கட்கும் தெரியும்!

அவள் பார்க்க விரும்பியதாய் கூறினாள் என அவன் சொல்வதே பொய்யென்று புரிய, வேலுச்சாமியின் முகம் கூம்பிப் போனது!

''சரி.... மாமா! உங்களை அடிச்சது யாருன்னு ஏதாவது விஷயம் தெரிஞ்சதா? தெரிஞ்சா... சொல்லுங்க! நம்ம டிபார்ட்மெண்ட் ஆளு தானே... கொஞ்சம் அடிச்சு மிரட்டி வைக்கிறேன்!'' என்றான் கரிசனம் மேலோங்கிய குரலில்.

''எங்க மாப்பிள்ள! கண்ணையும் கையையும் கட்டிப்புட்டுல்ல அடிச்சுப்புட்டானுங்க! ஒருத்தனும்... வாய் திறக்க மாட்டேங்கிறான்!'' என அவர்

அங்கலாய்க்க. பிறரின் கவனம் தங்கள் பக்கம் திரும்பும் முன்னர். ரோஜாவைப் பார்த்துக் கண் சிமிட்டினான் ரபின்!

'அடப்பாவி! அடிச்சே காலை உடைச்சிட்டு... இப்ப வந்து இவன் போடுற சீனைப் பாரேன்!' என்று ரோஜாவால் வியக்கத் தான் முடிந்ததே ஒழிய.

'உங்க சின்ன மாப்பிள்ளை தான் உங்களை அடிச்சார்!' என்று தந்தையிடம் அவனை மாட்டிவிட மனம் வரவில்லை! அது ஏனென்றும் புரியவில்லை!

ரோஜா இருவரது வாயையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருக்கையில், அவளருகே வந்த தாய், ''ரோசா... உள்ளார வாம்மா!'' என வீட்டு முற்றத்திலிருந்து உள்பக்கம் அழைக்கவும், அவளையும் அறியாமல் அவளது கண்கள் ரபினிடம் சம்மதத்திற்காக பாய்ந்தன.

அவன் புன்னகை மன்னனாய் தலையசைக்கவும், ரோஜா மெல்ல எழுந்தாள்.

உள்ளே சென்றதும், அவளைக் கட்டிக் கொண்டு ''ஓ'' வென்று அழுதார் அவரோ!

ரோஜாவுக்கு ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரவில்லை.

''அய்யோ..: எம் மவ... இப்படி செவுடா போயிட்டாளே!'' என அவள் கதறவும் தான். தனக்காக தான் தாய் அழுகிறாள் என்பதே அவளுக்குப் பிடிபட்டது!

ஆனால், அப்போதும் ரோஜாவிற்கு அவரைத் தேற்றத் தோன்றவில்லை.

அவள் ஒன்றும் சொல்லாமல் நிற்கவும். ''என்னம்மா... இந்த அம்மா மேல கோவமா இருக்கியா? உன்னைய அடிக்க விட்டு வேடிக்கை பார்த்தவ தானேன்னு நினைக்குதியா? நா என்னம்மா செய்ய முடியும்... உங்கப்பாருக்கு இருக்கிற ஜாதி பித்து தெரிஞ்சும்... நீ ஓடிப் போயிருக்கக் கூடாது தாயி!'' என்றார் அவர். தன் நிலையை விளக்கும் வண்ணம்.

ரோஜா ஒன்றுமே சொல்லவில்லை. தன் தாயையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றவள், ''அதுவும் நல்லதுக்கு தான் போல! சீக்கிரமா இந்த நகரத்தை விட்டுப் போய்ட்டேன்ல!'' என்றாள் நிதானமாய்.

''ரோசா!!!'' என அவளது தாய் திகைக்க.

''எனக்கு கேட்டுச்சும்மா... அன்னைக்கு என்னைய எல்லாருமா சேர்ந்து அடிச்சப்ப... அப்பாரு பேசினதை விட நீ பேசினது தான் நல்லா கேட்டுச்சு! நீ ஒரு வார்த்தை கூட... எம் மவளை அடிக்காதீங்கன்னு சொல்லலை! போனது தான் போனா... ஒரு மேல் ஜாதி பயலோட ஓடிப் போயிருக்கக் கூடாது! இப்படி ஒரு கீழ் ஜாதி நாயோட ஓடிப் போய்... குடும்ப மானத்தை வாங்கிட்டாளே... பாவின்னு சொன்னம்மா! நா கேட்டேன்!'' என நிதானமாய் சொன்னவள்.

''அப்பாருக்கு மட்டும் ஜாதி பித்து இல்லம்மா! உனக்கும் தான்... ஜாதி வெறி மண்டிக்கிடக்கு!'' என்று முகத்தில் வார்த்தைகளால் அடித்து விட்டு, விறுவிறுவென.

வேகமாய் வந்து, ரபின் அருகே கிடந்த நாற்காலியை இன்னும் அவனருகே இழுத்துப் போட்டுக்

கொண்டு அமர்ந்தவளின் கைகள் லேசாய் நடுங்குவது போல் தோன்றியது!

அவளது தேவையை உணர்ந்தவன் போல், சட்டென தன் கையை நீட்டி, அவளது கையை அழுத்த மாய் பிடித்துக் கொண்டான்.

அந்தத் தொடுகை அவளுக்கு அந்த நேரத்தில் அதீதமாய் தேவைப்பட்டது போலும்!

தன்னைப் பிடித்திருந்த அவனது கைகளுக்குள் அடங்கியிருந்த தனது விரல்களால் அவனது விரல்களைக் கோர்த்துக் கொண்டாள்.

ரபின் அவளை நேராய் பார்க்கவில்லை! ஓரக்கண்ணால் ஜாடை பேசவில்லை! வார்த்தையால் கூட 'நானிருக்கிறேன்' என்று சொல்லவில்லை! ஆனால், அவனது கைகள் கொடுத்த அழுத்தம், அவன் சொல்லாதது எல்லாம் சொன்னது! கைகளை மட்டுமல்லாமல் மனதையும் மென்மையாய் வருடி!

குளத்திலிருக்கும் மீனுக்கே தாகம் எடுப்பது போல். பிறந்த வீட்டில் இருந்து கொண்டே பாசத்திற்கும் அரவணைப்பிற்கும் ஏங்கியது அந்த மனம்!

அதை உணர்ந்தவன் போல். ''சரி மாமா! நாங்க கிளம்புறோம்!'' என எழுந்தவன்.

''அப்புறம்... நீங்க ரோஜாவுக்கு சீர் வரிசை கொண்டு வந்ததை அம்மா வேணாம்ன்னு சொல்லிட்டாங்க! ஆனா... எனக்கு உங்ககிட்ட ஒரு சீர் வரிசை வேணும்! தர முடியுமா?'' என்றான் பதவிசாய்.

''என்ன மாப்பிள்ளை... இப்படி கேட்டுட்டீங்க! உங்களுக்கு இல்லாததா... கேளுங்க மாப்பிள்ள! தேனி பக்கமா இருக்க பத்து ஏக்கர் நிலத்தை.. உங்க பேர்ல எழுதிக் கொடுக்கட்டுமா?'' எனப் பறந்தார் வேலுச் சாமி.

''அதை விட பெருசா வேணும்!'' என அவன் கூறியதும், ரோஜா அதிர்ந்தாள்.

''என்ன மாப்பிள்ளை! சொல்லுங்க!'' என உந்தினார் ரோஜாவின் தந்தை.

''ரோஜாவோட சர்ட்டிபிகேட்ஸ் வேணும்! அவளைத் திரும்பவும் காலேஜ் அனுப்பலாம்ன்னு இருக்கேன்!'' என்றான் ரபின். அழுத்தமான குரலில்.

''சொத்துப் பத்து... நகை... நிலபுலன்... ஏன் உங்க ஜாதியை விட பெருசு இந்தப் படிப்பு! அதுக்கு.. அந்த சர்டிபிகேட்ஸ் வேணும்! அதைத் தந்தீங்கன்னா கிளம்புவோம்!'' என்றான் அவன், கொஞ்சம் பெருமையேறிய குரலில்!

ரோஜாவுக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவே இல்லை என்பது அவளாகவே அவனது கைகளைப் பிடித்துக் கொண்டதில் வெளிப்பட்டது!

வீட்டிற்குத் திரும்பும் வழியில், ரோஜாவின் ''தேங்க்ஸ்'' ஸும், ரபினின் ''நன்றி மறப்பது நன்றன்று, கண்மணி! சோ... நியாபகம் வச்சுக்கோ!'' என்ற கிண்டலும் மட்டுமே அரங்கேறின.

அதற்கு மேல் ரபினும் எதுவும் வாயாடவில்லை! ரோஜாவும் எதையும் கேட்கவில்லை!

ஒருவகையான நிம்மதி மட்டுமே மனதினுள் குடி வந்திருக்க, அதை அனுபவித்தபடி மௌனமாய் பயணம் செய்தாள் அவள்!

அந்த நிம்மதி, "ஹே கண்மணி பேபி! நாளைக்கு நாம ரெண்டு பேரும்... சென்னை போறோம்! வெயிட்... வெயிட்... திரும்பவும் சென்னைக்கான்னு நோ அதிர்ச்சி" என அவளது முகத்தைப் பார்த்தே சொன்ன ரபின். "சென்னையில இருக்க ஒரு பெரிய ஈ.என்.டி டாக்டர்கிட்ட அப்பாயின்மென்ட் வாங்கி யிருக்கேன்! போய்... காதுக்கு மெஷின் மாட்டிட்டு வந்திடலாம்! ஓகே!" எனக் கூறவும், சந்தோஷமாய் மாறியது!

தனக்குப் பழையபடி காது கேட்கப் போகிறது என்ற செய்தியே, ரோஜாவை பூமலராய் பூக்க வைத்தது!

இனிமேல், யாரும் சத்தமாய் பேசத் தேவையில்லை!

எதிரே இருப்பவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கூர்ந்து கூர்ந்து... அவர்கள் வாயையே பார்க்கத் தேவையில்லை.

தன்னிலை உணர்ந்து. வலது பக்கம் வந்து பிறர் பேசுகையில்... சுய பரிதாபத்தில் குன்ற வேண்டிய தில்லை!

விடியலில் கூவும் சேவலின் சத்தத்தைக் கேட்க லாம்!

கடிகாரத்தின் டிக்-டிக்கை கேட்கலாம்!

கடிகாரக் குயிலின் குரலைக் காதாரக் கேட்கலாம்!

அத்தை... ரபினை அதட்டுவதை ரசிக்கலாம்!

விவேக் மச்சான்... ரபினைக் கேலி செய்வதை ரசித்து சிரிக்கலாம்!

எல்லாமே மனதுக்கு சந்தோஷத்தையே கொடுத்தன! ஒன்றைத் தவிர! ஹியரிங் அய்ட் வாங்கி விட்டால், ரபினுடன் ஹெட்போனை பகிர்ந்து கொண்டு படம் பார்க்க முடியாதே! ஹ்ம்ம்!!! ஹியரிங் அய்டை வேண்டாம் என்று சொல்லிவிடலாமா எனத் தோன் றிய மனதை அடக்கிக் கொண்டு, சென்னைப் பயணத் திற்கு தயாரானாள் ரோஜா!

ஆனால், அந்தப் பயணத்தின் முடிவில், "எனக்கு இந்த மெஷின் வேணாம்... ப்ளீஸ்!" என அவள் சொல்லப் போவதை ரபின் அறியவில்லை! ஏன், அவளே அறியவில்லை!

அதற்கு காரணம்... ரபினின் ஹெட்போன் அல்ல என்பது குறிப்பட வேண்டிய விஷயம்!

18



அன்றிரவு தனியார் பேருந்து ஒன்றில். ரபினும் ரோஜாவும் சென்னை செல்வதாய் இருந்தது!

அன்றைய தினத்தின் காலை வேளை உணவு நேரம்.

உணவு மேசையில் அமர்ந்திருந்தனர் அனைவரும்.

''ரோஜா... இன்னைக்கு யுகா கோவிலுக்குப் போணும்ன்னு சொன்னா! ஏதோ... பூஜைக்குக் கொடுத் திருக்காளாம்! நீ அவளோட போயிட்டு .வரியா?'' தன் அருகே அமர்ந்திருந்த சின்ன மருமகளைக் கேட் டார் வேலு நாச்சியார்.

'' சரிங்க அத்தை!'' என சந்தோஷமாய் அவள் ஒத்துக்கொள்ளவும்.

''சாமி மேல ரொம்ப நம்பிக்கையாம்மா?'' என்றார் அவர். மென்குரலில்.

''ஆமாங்க அத்தை! நம்மளை மிஞ்சின சக்தின்னு ஒண்ணு இருக்கு... அந்த சக்தி கடவுள் தான்!'' என்றாள் ரோஜா பக்தியும், திடமுமாய்.

ரோஜாவின் வாக்கியம் முடியக் காத்திருந்தவர்கள் போல், ''ப்ப்ப்பூ!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!'' என வாயை மூடிக் கொண்டு சிரித்தனர் மகன்கள் இருவரும்.

''யுகா பேபி! வீட்டில எரியுற பல்ப் எல்லாத்தையும் அமத் துடா!!'' என ரபின் சொல்ல.

''ஏன்டா?'' - அங்கே ஒரு கேள்வி வர வேண்டுமே என்பதற்காக, பதிலைத் தெரிந்து கொண்டே கேட் டான், விவேக்! கேலியாக!

''பின்னே! எம்பது கிலோல ஒரு ஹெவி வெயிட் பல்ப் இங்க மின்னிட்டு இருக்கே!!!'' என்றான் ரபின். ''ப்ப்ப்பூ!!!'' என மீண்டும் சிரித்து.

''அடிங்க! ஓடுங்கடா... இங்க இருந்து!'' என அவர்களை விரட்டிய வேலு நாச்சியாரின் முகத்திலும் சிரிப்பே.

வேலு நாச்சியாரின் ஆத்திகக் கொள்கைளை சிரிப்புடன் ஒலிபரப்பி, காலைப் பொழுதை ரம்மிய மாக்கினர் அனைவரும்.

ஒரு வழியாக, யுகவீணாவும் ரோஜாவும் அருகே இருந்த சிவன் கோவிலுக்குக் கிளம்பிச் சென்றனர்.

வேலு நாச்சியார் சணல் தொழிற்சாலைக்குக் கிளம்பிச் செல்ல, விவேக் மருத்துவனைக்குப் போக, ரபின் சிங்கம் லவ் பர்ட்ஸ்க்கு தாலாட்டு பாடும் வண்ணம் படம் பார்க்க ஆயத்தமானது!

அவனைப் பார்த்து கேலியாய் சிரித்துவிட்டு, வீட்டினர் அனைவரும் வீட்டைக் காலி செய்தனர்.

யுகா, கோவிலில் குங்கும அர்ச்சனைக்கும், தொடர்ந்து அன்னதானத்திற்கும் கொடுத்திருந்தாள்.

குங்கும அர்ச்சனை... வெகு விமர்சனையாக நடந் தேறியது!

''தீர்க்க சுமங்கலியா இருக்கணும்!'' என்று அர்ச்சகர் ஆசிர்வதிக்க ரோஜாவும் யுகாவுமாய் வாங்கிக் கொண் டனர்.

மனம் நிறைந்து இருந்தது இருவருக்குமே!

அங்காளபரமேஸ்வரியாய்... புவனேஸ்வரியாய்... லோகத்தை ஆளும் திருபுரசுந்தரியாய்... உமயபார் வதியாய்... அகிலாண்டேஸ்வரியாய்... சக்தியாய்... சிம்ம வாகினியாய்... காமாட்சியாய்... மீனாட்சியாய்... கொப்புடையவளாய்... கொலு வீற்றிருக்கும் மாரியாய்... சூலியாய்... நீலியாய் அம்பிகை அருள் புரிய, அவளைப் பணிந்து எழுந்த பெண்கள்

இருவரையும் ''இன்னும் பதினஞ்சு நிமிஷத்தில அன்னதானம் போட ஆரம்பிச்சிடலாம்மா! வந்துடுங்க!'' என ஒருவர் அழைத்தார்.

கை நிறைய இருந்த தட்டுக்கள்... மாலைகளைப் பார்த்து ''அர்ச்சனை பிரசாதத்தை எல்லாம் கொண்டு போய்... கார்ல வச்சுட்டு வந்துடலாமாக்கா?'' என ரோஜா கேட்கவும்.

''ம்ம்ம்!!'' எனத் தலையசைத்து, அவளுடன் நடந்தாள் யுகவீணா.

கொடிமரத்தை சுற்றிக் கொண்டு அவர்கள் செல்லவும், டிரைவர் உள்ளே ஓடி வந்து, அவர்கள் கைகளிலிருந்ததை வாங்கிக் கொண்டான்.

அவன் சென்றதும், கோவிலைச் சுற்றிக் காட்டி, பிரகாரம் வருவோமா என வினவினாள் யுகா.

''ஹா!!! போலாமே!'' என ரோஜாவும் யுகாவுமாய் சுற்றி வந்தனர்.

அது ஒரு பழைய காலத்து கோவில். பிரகாரம் முழுதும் பாறங்கற்களால் வேயப்பட்டிருக்க, அதில் கால் பதித்து நடப்பதே சுகமாய் இருந்தது!

வெயில் என்ற போதும், காலைச் சுட்டுவிடும் அளவிற்கு சூரியனார் உக்கிரமாய் இருக்கவில்லை!

கால்கள் பதியப் பதிய... ஒரோர் அடியையும் ஓர் திருப்தியுடன் எடுத்து வைத்து, சுற்றுப் பிரகாரத்தில் இருக்கும் தெய்வங்களை தரிசித்தபடி, மெல்ல நடந்தனர் இரு பெண்களும்.

பிரகாரத்தில் ஒரு பக்கம், கொஞ்சம் கூட்டமாக இருந்தது!

ரோஜா லேசாய் எட்டிப் பார்க்க, யுகா அங்கிருந்த தட்சிணாமூர்த்தி முன்னர் கை கூப்பி நின்றிருந்தாள்.

அந்த நேரம், ரோஜாவின் சொந்தக்காரப்பெண்மணி ஒருவர் வந்தார்.

''ரோசா!!! எப்படிடி இருக்கே?'' என அவர் வரவும்.

''மதினி!'' என்றாள் ரோஜா. சம்பிரதாயமாய்.

''கலியாணம் முடிஞ்சிருச்சாமே! எப்படிடி இருக்கே?'' என அவர் வம்பு பேச ஆரம்பிக்கும் முன்னர், ரோஜா அவளைத் திசை திருப்பினார்.

அவர் என்ன பேசினார் என்பது சரியாக கேட்க வில்லை என்றாலும், அவர் குணத்திற்கு... வம்பாகத் தான் இருக்கும் என அவளே ஊகித்து இருந்தாள்.

''அங்க என்ன மதினி கூட்டமா இருக்கு? என்ன விஷயம்?'' எனக் கேட்டவள், அவரை நெருங்கி... தனக்கு காது கேட்கும் தூரத்தில் நின்று கொண்டாள். தனக்கு காது கேட்கவில்லை என்பது அவருக்குத் தெரிவது. இன்னமும் வம்பு பேச்சையே தான் இழுத்துவிடும் என்பது அவளது அனுமானம்.

''அதுவா? புதுசா ஒரு சாமியாரு வந்திருக்காரு ரோசா! அவரு சொல்ற வாக்கெல்லாம் தெய்வ வாக்கா நிறைவேறுது! வெறும் நூத்தியொரு ரூவா தான் வாங்கிக்கிறாரு!!!'' (ரொம்பக் கம்மியா இருக்கே!)

''ஒரு பொண்ணுக்கு... நாலு வருஷமா புள்ள இல்லையாம்... அவரு சொல்லி, அம்பாளுக்கு ஒரு

ஹோமம் பண்ணுச்சாம்! அடுத்த மாசமே... உண்டாகிடுச்சாம்!''

''அப்படித் தான்... ஒரு அம்மாவோட புருஷன்... பக்கவாதத்தில முடங்கிக் கிடந்தாராம்! இவரு... மந்திரிச்சு ஒரு விபூதி கொடுத்தாராம்! சரியா... நாற்பத்தியெட்டு நாளில... அவரு எழுந்து நடந்துட்டாராம்!''

''இன்னும்... என்ன என்னவோ சொல்றாங்க! அதான்... நானும்... எங்க வீடு செங்கல் பூச்சோட அப்படியே நிக்குதில்ல... அதுக்கு எதுனா பரிகாரம் கேட்டுட்டுப் போவலாம்ன்னு வந்தேன்!''

''எந்தப் பன்னாடை பயலோ செய்வினை வச்சிருக்கானாம்! விளங்காமப் போறவன்! இந்த வெள்ளிக்கிழமை வந்து... எடுக்கிறேன்னு சொல்லியிருக்காரு! இப்போதைக்கு... அவரு கொடுத்த விபூதியை வீட்டைச் சுத்தி தூவச் சொல்லியிருக்காரு! ஹ்ம்ம்... சாமி வந்து செய்வினையை எடுத்துட்டாருன்னா... எங்களுக்கு நல்ல காலம் பிறந்திரும்!'' - ஒரு பெரிய உரையை அவர் நிகழ்த்தி முடிக்கும் வரை, யுகா தன் பிரார்த்தனையை முடித்துவிட்டு வரவில்லை.

அதான் சாக்கென்று, ''ஹோ சரி மதினி!! சீக்கிரமா உங்க வீட்டைக் கட்டி முடிச்சிடுவீங்க! கவலைப் படாதீங்க! அக்கா... கூப்பிடுறாங்க. நா கிளம்புறேன்!'' என்றவள், ஒரே ஓட்டமாய் ஓடியே போனாள்.

''ஏய் ரோசா! அவரைப் போய் பார்த்திட்டு போடி! சீக்கிரமா புள்ள பிறக்கணும்ன்னு விபூதி வாங்கிட்டுப்

போ!'' என அவர் கொடுத்த இலவச அறிவுரையை காதில் வாங்கியவாறே, ரோஜா அவர் கண்ணிலிருந்து மறைந்தே போனாள்.

''யாரு?'' என யுகா கேட்கவும், கழுத்தில் கை வைத்து ''அறுவை'' என்று பதிலுக்கு சைகை காண்பித்த ரோஜா, அதோடு சும்மா இருந்திருக்கலாம்!

''யாரோ... சாமியாராம்!! செய்வினை எல்லாம் எடுக்கிறாராம்!'' என்றாள் ரோஜா, தன் போக்கில்,

அதைக் கேட்டதும், யுகாவின் முகத்தில் ஓர் தீ பரவிச் சென்றது போல், செக்கச்செவேரென சிவந்து... தகித்தது!

அதைக் கவனித்த ரோஜா, ''என்னக்கா?'' என யுகாவை உலுக்க, அவளது கையை உதறிய யுகா, சந்நிதியை விட்டு விருட்டென விலகினாள்.

யுகாவிடம் ரோஜா கண்டதெல்லாம்... அன்பு... பாசம்... பொறுமை... நிதானம்... சிரிப்பு... கனிவு மட்டுமே!

ஆனால், இப்போது?!!

தீயாய் ஜொலித்த கண்களும்... கோபத்தில் கொப்பளித்த முகமும்... மித மிஞ்சிய வேகமும்... நடையிலேயே தெறித்த ஆத்திரமும்... கைகளின் நடுக்கமும்... அவளை வேராளாய் காட்டியது!

''என்னக்கா? என்னாச்சு? எங்க போறீங்க?'' என்று பின் தொடர்ந்த ரோஜாவை அவள் மதித்ததாகவே தெரியவில்லை.

உள்ளிருந்த மகாசக்தியின் காளி அவதாரமாய், வீறு கொண்டு நடந்து கொண்டிருந்தாள் யுகவீணா.

கண்களைச் சுழற்றி... அந்த சாமியார் இருந்த பக்கம் பார்த்தவள், சூரனை வதைக்கப் போகும் வீரமாகாளி யாக உருமாறி, அங்கே நடந்து சென்றாள்.

ரோஜாவால், அவள் வேகத்திற்கு ஈடு கொடுத்து ஓடக் கூட முடியவில்லை.

ஒருவாறாய், தட்டுத் தடுமாறி... அவளை எட்டி யவள். ''அக்கா... அக்கா... அக்கா...'' என உரக்க அழைத்து, அவளைப் பின்னுக்கு அழைத்ததும், யுகா தன்னிலைக்கு மீண்டது போல், விழி விரித்தாள்!

''ஹான்!!!!!'' என அவள் திகைத்து நிற்கவும்,

''அக்கா... என்னாச்சுக்கா? அந்த சாமியாரை உங்களுக்குத் தெரியுமா என்ன? எப்படிக்கா? நீங்க... அவரைப் பார்க்கவே இல்லையே!''

''ஹா... ஹான்... ஆஅ... பப... மா... மா... ஆ... அ... ஆஅ... ஆஆஆஆ... ஹாஆஆஆன்...'' - தனக்கு வாய் பேச வராது என்பதையும் மறந்து, தன் தொண் டைக் குழியைக் கிழித்துக் கொண்டு வார்த்தை களைத் துப்ப முற்பட்டாள், யுகவீணா.

ஏற்கனவே ரோஜாவிற்கு காது கேட்காது! இதில்... இவள் வடிவமற்ற ஒலிக்கீற்றுக்களாய் கக்கினால், அவளும் தான் என்ன செய்வாள்?!

''என்னக்கா? என்னக்கா? என்னக்கா?'' எனப் பதறி னாளே ஒழிய, அவளுக்கும் ஒன்றும் புரியவில்லை.

ரோஜாவைக் கைகாட்டி... இங்கேயே இரு என்பது போல் சைகை காட்டியவள், தன்னைக் கை காட்டி... சாமியார் இருந்த பக்கம் கை நீட்டி... அங்கு சென்று வருகிறேன் என்று ஜாடை செய்தவள், ரோஜா ''வேணாம்க்கா!'' எனக் கத்துவதற்குள், புயலென பாய்ந்து சென்றே விட்டாள்.

''ஹய்யோ அக்கா... என்னக்கா...'' என ரோஜா பதறிக் கொண்டு பின்னாடியே ஓட,

அங்கே அந்த சாமியாரைப் பார்பதற்காக காத்துக் கொண்டிருந்த வரிசையைத் தள்ளிக் கொண்டு, அவரை நோக்கி முன்னேறினாள்.

''ஏய்... நில்லும்மா! நீ பாட்டுக்கு போறே?''

''வரிசையில நின்னு வாம்மா!''

''ஏய்... காலையில இருந்து சோறு தண்ணி இல் லாம... இங்க காத்துட்டு இருக்கோம்! நீ... என்னம்மா வந்தோன்ன போறே? ஏய் நில்லும்மா!'' - என்று ஏகப் பட்ட குரல்கள் அவளைத் தடுத்தன.

ஆனால், காதிலேயே விழாதவள் போல். யுகா நடந்து கொண்டே இருந்தாள்.

ஒருவழியாய், யுகா... வேப்பமரத்தடியில் அமர்ந் திருந்த அந்தச் சாமியாரைப் பார்க்கையில், கூட்டம் முழுதும் அவளைச் சுற்றித் திரண்டிருந்தது!

''சொல்லச் சொல்லக் கேட்காம வந்துருச்சு சாமி!'' என ஒருவர் முறையிட

அவரோ ''பரவாயில்லை அப்பனே!'' என ஆசிர் வாதம் செய்துவிட்டு, ''என்னம்மா? என்ன பிரச்சனை?

உன்னோட பிரச்சனையை என்கிட்டே சொல்லும்மா! அந்த ஆத்தாகிட்ட அருள் வாக்கு கேட்டு... உடனே நிறைவேத்தி வைக்கிறேன்!'' என்றார்.

ஏற்கனவே, அவர் முகத்தைப் பார்த்து, கோபம் என்ற உணர்வையும் தாண்டி... ஆத்திரம் என்ற உணர்வையும் மீறி, ரௌத்திரம் என்ற உணர்வைப் பூசிக் கொண்டிருந்த யுகாவின் முகம்.

அவரது பேச்சைக் கேட்டதும், ரௌத்திரம் என்ற உணர்வு பூதாகரமாய் கிளம்ப, ''ஏஏஏஏஏய்ய்ஈய்'' எனக் கத்தியவள், அவரது கழுத்தைத் தன் பலம் கொண்ட மட்டும் நெரித்தாள்!!!!

அனைவரும் விதிர்விதிர்த்து போயினர்.

''ஏய் என்னமா செய்றே? விடும்மா!!!!!!!!!!!!!'' என்று கத்திய பலர், அவளது கையைப் பிடித்துப் பின்னே இழுக்க.

பல ஆண்களின் பலத்தையும் மீறிக் கொண்டு, யுகாவின் கரங்கள்... அந்த சாமியாரின் கழுத்தை நெரித்துக் கொண்டே போயின.

அவரும், ''ஏய்... பொண்ணு... விடும்மா!!!!'' எனக் கத்தியபடி, தன்னை அவளிடமிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றார்.

ஆனால் முடியவில்லை!

அந்த மென்மலராளின் கரங்கள்... மிக மிக இறுக்கமாய் அவரது கழுத்தைப் பிடித்திருந்தன!

கூட்டத்தின் பின்னே நின்று, அவளை நெருங்க முடியாமல், கையைப் பிசைந்து கொண்டிருந்த

ரோஜா, எதிர்பாராமல் யுகா சாமியாரின் கழுத்தை நெறிக்கவும், அதிர்ந்தே போனாள்!

''ஹய்யோ!! அக்கா... அக்கா... விடுங்கக்கா!!'' என்று கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றவள், யுகாவின் கைகளைப் பற்றி பின்னே இழுத்தாள்.

''ஹான்... ஹா... ஹா... ஹா...'' என்று விகாரமாய் ஒலியெழுப்பிக் கொண்டு, யுகா தன் கோபத்தை யெல்லாம் கையில் கொட்டி, அவரது கழுத்தை நெரிப்பதை விடுவதாய் இல்லை!

''அட... ஊமச்சி போல!!!'' என ஒருவன் கூவ,

''ஏய்... ஊமை... தள்ளு!!!'' என மற்றவன், யுகாவை இழுக்க,

''பேச்சு வராதப்பவே... இதுக்கு இருக்க ராங்கியைப் பாரேன்!''

''எவ்வளவு பெரிய மனுஷன் அவரு... அவரைப் போய்.... இழுங்கய்யா... அந்தப் பொண்ணை!''

''சாமிகிட்ட அருள் வாக்கு கேட்டு சொல்றவரு... அவரைக் கொல்லப்பாக்குதே!''

''அவருக்கிருக்க நல்ல மனசுக்கு... இந்த ஊமைப் பொண்ணை பேச வச்சிருவாரு பாரேன்!!!'' என்றாள் ஒரு பெண்மணி.

அவ்வளவு தான்! சாமியாரின் கழுத்தை விட்டு விட்டு, அந்தப் பெண்மணியின் தோளைப் பிடித்து உலுக்க ஆரம்பித்தவள், ''ஆ... ஆ... ஆந்ன்ன்... மா... மா... மா... ஈஈ... ஈ... ஊ... ஊ... ஆஆ... ஆஅ...

த்..... ஈஈஈஈஈஇ... ஆஆஆஆஆ...'' என்று ஆவேசமாய் கத்தினாள்.

யுகா உலுக்கிய உலுக்கலில்... அந்தப் பெண்மணி தள்ளாடி விழ.

''ஏய்... அந்த ஊமைச் சனியனை தள்ளிப் போகச் சொல்லுங்கப்பா!!!'' என்று ஒருவன் கத்த, பத்து பேர் சேர்ந்து அவளை இழுக்க.

ரோஜா ''ஏய்... ஊமைன்னு சொல்லாதீங்க!! ச்சை!!!'' என்று தன் போக்கிற்கு கத்தினாள்.

சட்டென, ஏதோ நினைவு வந்தவளாய் ''நாங்க ரெண்டு பேரும் யாருன்னு தெரியுமா? வேலு நாச்சியார் அம்மாவோட மருமகள்ங்க! என் வீட்டுக்காரர்... இந்த ஊரு டி.எஸ்.பி! இன்னொரு வாட்டி... அவங்களைப் பிடிச்சு இழுத்தீங்க... அவங்க மேல கை வச்ச எல்லார் மேலையும் கம்ப்ளைன்ட் கொடுத்து... உள்ள போட வச்சிடுவேன்! எடுங்கடா கையை!!!'' என்று ரோஜா, பலம் முழுதையும் திரட்டி, அடி வயிற்றிலிருந்து கத்தினாள்.

யுகாவைப் பற்றியிருந்த பத்து கைகளில், எட்டு கைகள், படபடவென கீழ விழ, கூட்டம் இரண்டடி விலகி நின்றது!

அந்த நேரம் பார்த்து, ரபின் உள்ளே நுழைந்தான்!!

''இங்க என்ன பிரச்சனை?'' என்ற அவன் தோரணையும், அவனது முடி திருத்தமும், சரிந்து விழாத தொப்பையும், உடம்பை இறுக்கிப் போட்டிருந்த டி-ஷர்ட்டுமே... அவனை போலீஸ்காரன் என்று

எடுத்துக் கூற, காக்கி உடை போடாமலே அவனுக்கு மரியாதை வந்து சேர்ந்தது!

அவனை அங்கே எதிர்பார்க்காத ரோஜா, திகைத்து நின்றது ஒரே வினாடி தான்!

''என்னங்க!!!'' என ஓடி வந்து அவளது இடது முழுங்கையைப் பற்றி, அவனை ஒட்டி நின்று கொண்டு, ''அக்கா... அக்கா... இவங்க... அந்த சாமியார்...'' என்று கோர்வையாய் பேச முடியாமல் தடுமாறினாள்!!

அதற்கு ''ம்ம்ம்ம்... ம்ம்ம்... ர...ய்...''(ரபி) என்று அழைத்துக் கொண்டு... ம்ஹூம் கதறிக் கொண்டு, அவனிடம் வந்து நின்று கொண்டாள் யுகா.

''ர.... ஈ... ய்... மா... மா... த்... ஈஈ... பபப... ஆஅ... ஆஅ... ஆஆ...'' என அவள் தேம்பிக் கொண்டே அழவும்.

ரபினின் பார்வை, வேப்பமரத்தின் அந்தப் பக்கமாய் நின்று, கழுத்தை நீவிவிட்டுக் கொண்டிருந்த சாமியாரின் மீது படிந்தது!

நடுவே, ''நீங்க எப்படி... இங்க?'' என்ற ரோஜாவின் திகைத்த கேள்விக்கு. ''சங்கிலியண்ணே போன் பண்ணினார்'' என்று ஓட்டுனரின் பெயரைக் குறிப்பிட்டு, பேச்சைக் கத்தரித்தான்.

யுகாவின் முகத்தில் படர்ந்த அதே தீ... ரபினின் முகத்திலும் படரக் கண்டாள் ரோஜா. கை முஷ்டிகள் இறுகி. நரம்புகள் முறுக்கேற, கண்கள் சிவந்து... பார்க்கவே பயங்கரமாய் தெரிந்தான் அவன்!

"என்னங்க..." என அவள் திகைக்க.

அவளது கையை உதறியவன், யுகாவிடம் திரும்பி, "நா பாத்துக்கிறேன்... யுகா பேபி! நீ டென்ஷன் ஆகக் கூடாத சரியா?" என்றான்.

அவளும், அவன் மேல் நம்பிக்கை வைத்தவளாய் சரியென மண்டையாட்டவும், ரோஜா கண் இமைக் காமல் பார்த்திருந்தாள்.

அடுத்த நிமிடம், வேப்பமரத்தின் பின்னே அமர்ந் திருந்த சாமியாரின் முதுகில் ஓங்கி ஓர் மிதி மிதித் தான் ரபின்!

"ஹய்யோ!!!!!!!!!!!!" என ரோஜா அலற.

அவனைக் கொத்தாய் பிடித்த, மேலே எழுப்பிய ரபின், "ஏன்டா நாயே? ஜெயிலுக்கு போயிட்டு வந்தும் உனக்கு அறிவு வரலையாடா?" என்றான், அவனை ஓங்கி ஓர் அறை விட்டு,

"என்னது ஜெயிலுக்குப் போயிட்டு வந்தவரா?" எனக் கூட்டமே அதிர.

"ஆமா... இவன் ஒரு போலி சாமியார்! எட்டு வருஷம்... ஜெயில்ல இருந்துட்டு... ரெண்டு மாசம் முன்னாடி தான் ரீலீஸ் ஆனான்!" என்ற ரபின்.,

"உங்களை மாதிரி முட்டாளுங்க இருக்க வரைக் கும்... இவன் திரும்பத் திரும்ப வந்துட்டே தான் இருப் பான்! ச்சை... நாயே!!" என அவனை ஓங்கி அறைய.

"யோவ்! யாருய்யா நீ? அதான்... தண்டனை எல்லாம் முடிஞ்சது இல்ல... அப்புறம் என்ன கை வைக்கிறே?" என சாமியார் எகிறினான்.

"அடி செருப்பால! நா யாரு தெரியும்ல... கஞ்சா கேஸ்ல உள்ள தள்ளிடுவேன்... ராஸ்கல்!" என்ற ரபின், அவனது வயிற்றில் ஒரு குத்து விட,


"இவன் என்ன கேஸு... சாமி!" என்று பகிரங்கமாய் கிசுகிசுத்தான் எடுபிடி.

"என்ன கேஸா? டேய் நாய்களா? ஒரு ஊமைப் பொண்ணைப் பேச வைக்கிறேன்னு... அவங்க அம்மா கையில சூடத்தை ஏத்தி... அந்த அம்மாவோட கையைக் கருக்கி... அந்தம்மாவை ஓரடியா சாவடிச் சீங்களே! அந்த கேஸுடா!! நாய்களா!!!" என்ற ரபினின் பலம் முழுதும், அந்தச் சாமியாரின் முதுகை பிளவுபடுத்த உபயோகப் படுத்தப்பட்டது!

ரபின், சொன்னதைக் கேட்ட யுகா

"ம்ம்ம்.... மா ஆஆஆஆஆஆஆஆஆஆஆ!!!" எனக் கதறி அழ, ரோஜா உறைந்து நின்றாள்!

19



எட்டு வருடங்களுக்கு முன்னர்.

"அம்மா... நாளைக்கு மட்டும் வேலைக்கு வர முடியாதுங்கம்மா! நாளனைக்கு வெள்ளனவே வந்துடு தேன்மா!" என மிகவும் தயங்கிய குரலில், வேலு நாச்சியார் முன்னர் நின்றிருந்தாள் சம்பங்கி.

"எனக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லை! ஆனா... எங்க போறே? என்ன விஷயம்?" என்றார் வேலு நாச்சியார், ஆச்சரியமாய்.

கிட்டத்தட்ட பத்து... பன்னிரண்டு வருடங்களாகிறது சம்பங்கியும் அவளது கணவரும் வேலு நாச்சியாரிடம் வேலைக்கு வந்து. ஏன். அவர்களது ஒரே மகளுக்கு "யுகவீணா" என்று பெயர் வைத்ததே வேலு நாச்சியார் தான்!

சம்பங்கி, நாச்சியாரின் வீட்டில் சுத்து வேலை செய்ய, அவளது கணவரோ மில்லில் வேலைக்கு இருந்தார். தங்களது சொந்த ஊரை விட்டுப் பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் என்பதால், சம்பங்கி விடுமுறை கேட்பது மிக மிக அரிது! அதிலும், அவளது கணவர் இறந்த இந்த இரண்டு வருடங்களாய், விடுமுறை என்பதே இல்லை! ரபின் கூட, "பெஸ்ட் எம்ப்ளாயி ஆஃப் தி இயர்!" கொடுக்கலாம் என்று கிண்டல் செய்வான்!

அப்படிப்பட்டவர் இன்று விடுமுறை கேட்கவும். வேலு நாச்சியாருக்கு மிகவும் ஆச்சரியமாய் இருந்தது!

"அதும்மா! அது..." என சம்பங்கி இழுக்கும் போதே. தனக்குப் பிடிக்காத ஏதோ ஒன்றைச் செய்ய விருக்கிறார் என்பது நாச்சியாருக்குப் புரிந்தது! ஆனால், என்னவென்று தான் கணிக்க முடியவில்லை.

"அந்த உவா புள்ளைக்கு... வாய் பேச வரவில்லை..."

"எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்... அவ பேரு... யுகா, சம்பங்கி! நீயே ஒழுங்கா கூப்பிடலைன்னா எப்படி?" என நாச்சியார் அதட்ட,

"என்னவோம்மா! அந்தப் பேரு... வாய்க்குள்ளாரவே நுழைய மாட்டேங்குது! நம்ம வூரு பேராட்டம் இல்லையில்ல... அதேன்! உவா... உகாவாம்மா... அதுவும்... அம்மா எம்புட்டு அழகா பேரு வச்சிருக்காங்க... இப்படி அதை கொலை பண்றியேன்னு வையுதும்மா! ஆனா... எனக்குத் தேன்..." என்று தலையைச் சொரிந்தார் சம்பங்கி!

"சரி சரி விடு! விஷயத்துக்கு வா... நான் தான் யுகாவை சென்னையில இருக்க ஸ்பீச் தெரபிஸ்ட்கிட்ட கூட்டிப் போறேன்னு சொன்னேன் இல்ல!" என நாச்சியார் வினவ,

"நீங்களும்... உங்க கை காசைப் போட்டு... எம்புட்டோ வாட்டி கூட்டிப் போயிட்டீங்கம்மா! ஆனா.. அந்தப் பாவி மவளுக்குத்தேன் பேச்சே வர மாட்டேங்குது!" என மனம் நொந்தார் சம்பங்கி.

"யுகாவுக்கு பிறவிலேயே... பேச்சுக் குழாய்ல ஏதோ அடைப்பு இருக்கு. சம்பங்கி! அதை... கொஞ்சம் கொஞ்சமா சரி பண்ணலாம்! இப்ப... ரெண்டு வருஷமா தானே... அந்த டாக்டரை கண்டுபிடிச்சு அங்க போறோம்! இன்னும் ஒரு வருஷம் போகட்டும்!" என்றார் வேலு நாச்சியார் தன்மையாய்.

"ஹய்யோ! உங்களைக் குத்தம் சொல்றதா நினைச்சுப்புட்டீங்களா? ஹய்யோ! அப்படி நினைச்சா என் நாக்கு அழுகிப் போவும்மா! போக்கத்து போய் வந்த... அநாதைகளுக்கு... வாழ்க்கை கொடுத்தவுகம்மா... நீங்களும் அய்யாவும்! உங்களைப் போய்... நா குத்தம் சொல்வேனா?" எனப் பதறிப் போனார், சமபங்கி!

"நானும் அப்படி நினைக்கல... சம்பங்கி! சரி... அதை விடு! இப்ப... யுகாவுக்கு... நீ வேலைக்கு வரா துக்கும் என்ன சம்பந்தம்? ஏதாவது ஹாஸ்பிடலுக்கு போறீங்களா?" என நாச்சியார் கேட்க.

"இல்லீங்கம்மா! அது... அது வந்து..." - சம் பங்கியால் சொல்லவே முடியவில்லை.

அவரது தயக்கத்தை வைத்தே. "என்ன ஏதாவது கோவிலுக்கா? சாமியைப் பார்க்கவா?" என்று நாச்சி யார் சிரிப்புடன் வினவ,

'சாமியை அல்ல... சாமியாரை!' என்று சம்பங்கி அப்போதே உடைத்துச் சொல்லியிருந்தால்... பற்பல விபரீதங்களைத் தடுத்திருக்கலாமோ!?

ஹ்ம்ம்! வேலு நாச்சியாரின் ஆத்திகக் கோட்பாடு களைப் பற்றி அறிந்தவர் என்பதால். 'யாரை' விட் டுட்டு, "சாமியை" என்று பொய் சொன்னார் சம்பங்கி!

ஆனால், அந்த விடுபட்ட 'யார்'... அவரை "ஹய்யகோ!!!" என்று கதற வைக்கப் போவதை அவரும் அறியவில்லை! வேலு நாச்சியாரின் கூர் அறிவுக்கும் எட்டவில்லை!

ஏதோ கோவிலில் பிரார்த்தனை என்றெண்ணி, கையில் இருநூறு ரூபாயைக் கொடுத்து அனுப்பி வைத்தார் வேலு நாச்சியார்.

யுகவீணாவிடமும், கோவிலில் வேண்டுதல் என்று சொல்லியே அழைத்துச் சென்றார் சம்பங்கி.

காலை பதினோரு மணிக்கு கோவிலுக்குச் சென் றனர் தாயும் மகளும். முதலில், தாய் சம்பங்கி... தலை முதல் கால் வரை தண்ணீரை ஊற்றிக் கொண்டு, அங்கப்பிரதட்ஷணம் செய்தார்!

பின்னர், மண் சோறு!

அடுத்து, அங்கேயே நடைபெற்ற அன்னதானத்தில் உணவு!

சற்று நேரம், தாயும் மகளும் அங்கேயே உறங் கினர்.

பின்னர் கோவில் திறந்ததும், பெண்ணை ஐம்பத் தொரு தடவை கோவிலைச் சுற்றி வரச் சொன்னார். அவளும், தாய் சொல்லலைத் தட்டாமல் செய்யவும், அவள் பெயரில் ஒரு அர்ச்சனையை வைத்தார்கள். கோவிலை விட்டுக் கிளம்பினர்.

மணி ஆறரை ஆகியிருந்தது! வீட்டிற்குத் தான் போகிறோம் என்றெண்ணி, பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்தாள் யுகவீணா.

ஆனால், தேனி செல்லும் பேருந்தில் ஏறாமல், தாய் சாலையையே பார்த்துக் கொண்டிருக்கவும். அவளது தோளைத் தொட்டு. "என்னம்மா?" என்று சைகையால் வினவினாள் மகள்.

"இனிமேல் தான் முக்கியமான வேண்டுதல் இருக்கு கண்ணு! அதை முடிச்சதும்... நீ பேசிடுவே!" என்று அவளது கன்னம் தொட்டுக் கொஞ்சிய தாயைப் பார்க்கையில், கண்களில் கண்ணீர் நிரம்பியது அச் சிறுமிக்கு!

இவரது ஏக்கத்தையும்... கவலையையும் தீர்க்க வாவது தான் பேசிட மாட்டோமா என்று ஆசையாய் இருந்தது!

ஆனால், வேலும்மா... கூட்டிச் சென்ற டாக்டர்... பேசுவதற்கு ஐம்பது சதவீதம் மட்டுமே வாய்ப்புள்ளது என்று கூறியது உடனுக்குடன் நினைவு வந்து, அவளை நோகச் செய்தது!

கூடவே, "உடம்பில ஒரு பாகம் தான் கண்ணம்மா பேசணும்! உனக்குத் தான் கண் பேசுதே! அப்புறம் எதுக்கு வாய் பேசணும்?" என்று வேலு நாச்சியார் அவளது கன்னத்தை வருடிச் சொல்கையில், கண்கள் பெருமையில் அப்படியே ததும்பும்! 'பேச்சு எதற்கு?' என்று கூடத் தோன்றிவிடும்!

பெற்றவர்கள்... சுற்றியிருப்பவர்களில் பலரும் அவளது குறையைப் பற்றி அவதூறாய் பேசாததால், யுகாவிற்கு தன் குறை பெரிதாய் தோன்றியதில்லை! வேலு நாச்சியார் தோன்ற விட்டதுமில்லை!

சம்பங்கி ஏதாவது சொன்னால் கூட, "அவளுக்கு என்னடி குறைச்சல்? இதோ... இந்த ரபின் பையன் இருக்கானே... ஹய்யோ... ஏன்டா இப்படிப் பேசித் தொலைக்கிறான்னு நினைக்கிற அளவுக்கு லொட... லொடன்னு பேசிக் கொட்டுறான்! அதுக்கு... இந்தக் குட்டி தேவலைடி!" என்று யுகாவின் நெற்றியில் அன்பாய் ஓர் முத்தம் வைப்பார். அங்க சுத்தி... இங்க சுத்தி... சிங்கத்தையே டேமேஜ் பண்ணுங்க!

அந்த முத்தத்தின் சக்தியோ என்னவோ... யுகாவிற்கு பேசியே ஆக வேண்டும் என்று தோன்றியதே இல்லை!

ஆனால், இப்போது தாயின் வருத்தத்தைப் போக்க வேணும்... தான் பேசிவிட்டால் தேவலாம் என்றெண்ணினாள். அந்தப் பாசப்பறவை!

ஆதலால், எங்கே என்று கேட்காமல், தாய் ஏறிய பேருந்தில் ஏறி, அவர் கை காட்டிய இடத்தில் இறங்கி, அவர் கூட்டிச் சென்ற இடத்திற்குச் சென்றாள்.

அந்த இடம், ஒரு கூறை வேய்ந்த வீடு! வீட்டு முற்றத்தில், மஞ்சளும் குங்குமமும் தாராளமாய் தடவப்பட்டு, வேப்பிலைத் தோரணமும்... பூக்களின் பந்தலும், கோவிலைப் போல் அந்த இடத்தைக் காட்டின! ஆம், கோவிலைப் "போல்" காட்டின!

அவர்கள் வருவதைக் கண்டதும், இரண்டு பேர் ஓடி வந்தனர்.

"என்னம்மா... இவ்வளவு நேரம் பண்ணிட்டீங்க? சீக்கிரம் வாங்க... சாமி உங்களுக்காக தான் வெயிட் பண்ணிட்டு இருக்காரு!" என்று அவசரமாய் பேசினார்.

"அப்படியாய்யா? எம்புட்டு சக்தி வாய்ந்தவரு அவரு... எங்களுக்காகவா காத்திட்டு இருக்காரு?" என சம்பங்கி கன்னத்தில் போட்டுக் கொள்ள.

"அவரு... சொன்ன சொல்லைக் காப்பாத்துரவரு! உங்க பொண்ணை பேச வைக்காம... சோறு தண்ணி கூட சாப்பிடுறதில்லைன்னு... காலையில இருந்து பச்சைத் தண்ணி கூட பல்லில படாம இருக்காரு தெரியுமா?" என ஒருவன் கண்ணை உருட்டினான்.

சம்பங்கி, அதி வேகத்துடன் கன்னத்தில் போட்டுக் கொள்கையில். யுகவீணா குழம்பினாள்.

"பேச வைக்கப் போறாரா? என்னையா? எப்படி?" என்று யோசித்த மூளையின் கட்டளைபடி, அவள் சம்பங்கியைக் கூப்பிடும் முன்னர்.

மகளின் கையை அழுத்தமாய் பிடித்த சம்பங்கி, அந்த வீட்டை நோக்கி விரைந்தார்.

யுகவீணா, அவரை மற்றொரு கையால் தடுக்க முயல, வந்தவர்களில் ஒருவன் "அம்மா... சொன்ன பணத்தைக் கொண்டு வந்திருக்கீங்க இல்ல?" என மெதுவாய் கேட்க.

"இந்தா... இந்தாங்க தம்பி! சாமி கேட்ட பணத்தில ஒத்த பைசா கூடக் குறையாம இருக்கு தம்பி!" என்று தன் இடுப்பில் முடிந்து வைத்திருந்த பணத்தை, கத்தையாய் எடுத்துக் கொடுத்தார்.

"ஆஆ... மா... பப... பப பப பப" என யுகா. தாயைத் தடுக்க முயல, அவளது பேச்சு எடுபடவே இல்லை! ஒரு வேளை, அது பேச்சே இல்லை என்பதாலோ?!

"தம்பி... நா பழம்... பூ... தேங்காய் எல்லாம் பக்கத்து கடையில வாங்கியாந்துறேன்! அஞ்சே நிமிசம்!" என்று சம்பங்கி நகர முற்பட,

"அதெல்லாம் வேணாம்மா! எல்லாம்... சாமியே வாங்கி வச்சுட்டாரு! நீங்க வந்தா... பூஜையை ஆரம்பிச்சிட வேண்டியது தான்!" என்று அவரைத் தடுத்து, உள்ளே அழைத்துச் சென்றான்.

யுகவீணா, உள்ளே வர மாட்டேன் என்று பிடிவாதமாய் நகர மறுக்கவும், "உவா... இந்த சாமியாரு... ரொம்ப சக்தி வாய்ந்தவரும்மா! நடக்க முடியா

தவங்களை... எல்லாம் நடக்க வச்சிருக்காரு! போன வாரம் கூட... ஒரு பையனைப் பேச வச்சிருக்காராம்! உன்னையும் பேச வச்சிருவாரு கண்ணு!" என்று கெஞ்சிய தாயின் சொல்லை விடவும், "எனக்காக கண்ணு... பேச்சு வந்தா நல்லது தானே? இந்த ஒரு வாட்டி தான்.. முடியலைன்னா அம்மா... சாமிகிட்ட வரவே மாட்டேன்! சத்தியம் உவா!! வா தாயி!" என்ற அவரது அழுகை யுகாவை உள்ளே இட்டுச் சென்றது.

"பாரேன்... இந்த வாட்டியே நீ பேசிருவே! என்னைய "அம்மா" ன்னு வாயாரக் கூப்பிட்டுருவ! நீ அம்மான்னு கூப்பிடுரதை... இந்த சென்மம்... சாவுறதுக்கு முன்னாடி கேட்டுருவேன் கண்ணு! ஒரு தாய்க்கு... வேறென்ன கண்ணு வேணும்... வயிறு மலரணும்... பொறக்கிற புள்ள அம்மா அம்மான்னு வாயாரக் கூப்பிடணும்... அதானே வேணும்! அதை அனுபவிச்சுட்டு... உன்னைய பெரியம்மாட்டா விட்டுட்டுப் போயிருவேன்!" என்று அவர் கெஞ்சவும், யுகா ஒரேடியாய் உருகிப் போனாள்.

அதை விடவும், "உங்கப்பாரு தான்... நீ அப்பான்னு கூப்பிடுறதைக் கேட்க முடியாம செத்துப் போயிட்டாரு! எனக்காவது... அந்தப் பாக்கியம் கிடைக்கட்டும் தாயி!" என அவர் கையேந்தி கெஞ்சுகையில் எங்கிருந்து மறுப்பது! அந்தப் பாக்கியம். கணவன் மனைவி இருவருக்குமே இல்லை என்று சாமி எழுதி வைத்திருக்கையில், சாமியார் என்ன செய்ய முடியும்?

தாயும் மகளும்... அந்தச் சிறு வீட்டின் உள்ளே சென்றனர்.

உள்ளே, ஒருவர் வயிறு வரை நீண்ட தாடியுடன், கண்களில் குங்குமம் அப்பியது போல் சிவப்புடன், நெற்றியில் விபூதி பட்டையுடன், பட்டையின் நடுவே ஓர் பெரிய குங்குமப் பொட்டுடன், காவி வேஷ்டியும்... ருத்திராட்சக் கொட்டையுமாய் அமர்ந்திருந்தார்!

சம்பங்கி ஓடிச் சென்று அவர் காலில் விழுந்து எழ, அவரோ கைகளால் ஆசிர்வாதம் செய்தார்.

வெறுமனே, அவரையே பார்த்துக் கொண்டு நின்ற யுகாவை, ''சாமியைக் கும்பிட்டுக்கோ, உவா!'' என்று சம்பங்கி பிடித்து இழுக்க, ஏனோ அவளுக்கு அவரை வணங்கத் தோன்றவில்லை!

கோவிலில் வீற்றிருக்கும் தெய்வத்தின் மீது வந்த பக்தி... இவரைக் கண்டதும் சுத்தமாய் வரவில்லை! பயம் தான் வந்தது!

பயம் வேறு பக்தி வேறு அல்லவோ! பக்தி என்பது அன்பு கலந்த மரியாதை! எந்த தெய்வமுமே... பக்தனைப் பயப்படுத்துவதில்லை! பக்தியால் அரவணைக்க மட்டுமே செய்கிறது! அந்தப் பக்தியை புரிந்து கொள்பவள், கடவுளுக்குப் பயப்படுகிறான்! அவ்வளவே!

யுகாவை இழுத்து, அவரது காலில் விழ வைத்தார் சம்பங்கி.

அடுத்த ஒரு மணி நேரமும், அந்த இடமே புகை மண்டலமாய் இருந்தது!

ஹோம குண்டலத்தில், ஹோமம் வளர்த்து... ஏதேதோ சுலோகம் சொல்லியபடி இருந்தார் அந்தச் சாமியார்.

உடனிருந்த இருவரும், எடுபிடி வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஹோமத்தின் ஒரு பக்கம் சாமியார் அமர்ந்திருக்க, மறு பக்கம் சம்பங்கியும் யுகாவும் அமர்ந்திருந்தனர்.

ஒருவாறாய், ஹோமம் முடிய ''அம்மா... இனிமேல் தான் உங்க பொண்ணைப் பேச வைக்கப் போறோம்!'' என்றார் அந்தச் சாமியார்.

சம்பங்கி, கண்ணீருடன் அவரைக் கையெடுத்து கும்பிட, யுகா அவரைப் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ம்ம்... உங்க கையை நீட்டுங்கம்மா!' என அவர் சொல்லவும், வலது கையை சேலையில் அழுந்தத் துடைத்துக் கொண்டு, அவர் முன்னே கையை நீட்டினார் சம்பங்கி!

''வீரா... நீ அந்த அம்மா பின்னாடி நில்லு!'' ''டேய்... மாரி! நீ அந்தப் பொண்ணு கிட்ட நின்னுக்க!'' என்று ஆணையிட்டார் சாமியார்.

'என்ன செய்யப் போகிறார்?' என்று யோசிக்கும் முன்னர், எரிந்து கொண்டிருந்த ஹோமத்தீயில் ஒரு பெரிய கட்டி சூடத்தைப் பற்ற வைத்த சாமியார். அதை சம்பங்கியின் கையில் வைத்து விட்டார்!!

''ஆஆஆஆஆஆ!!!!!!!!!!!!!!!'' என சம்பங்கி துடிக்க.

'' ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ . . . ம்ம்ம்ம்...ஆஆஆஆஆஆஆஆஆ!!!'' என்று தன் தொண்டைக்குழியைக் கிழித்துக் கொண்டு கத்தினாள் யுகா.

அதற்கு அந்த சாமியார். ''அப்படித் தான்ம்மா! ஹ்ம்ம்... சொல்லு அம்மான்னு சொல்லு! உங்கம்மா கையில சூடம் எரியுது பாரு! அவங்க உனக்காக தான்... சூடம் ஏத்தி... அந்தக் காளியை குளிர்ச்சிப் படுத்துறாங்க! ஹ்ம்ம் பேசும்மா! பேசும்மா!'' என்று யுகாவை 'உற்சாகப்படுத்தினார்' அந்த சாமியார்!

அங்கே, சம்பங்கியோ... கையில் வைக்கப்பட்ட சூடத்தின் உஷ்ணம் தாங்க முடியாமல், ''அம்மா... எரியுதே... எரியுதே...'' என்று கத்த, அவர் பின்னாடி நின்றிருந்த வீரன், அவரை இறுக்கிப் பிடித்து, அவர் கையிலிருந்து சூடம் விழாமல் அவர் கையை அழுத்தமாய் பற்றினான்.

தாயின் கையிலிருந்த சூடத்தை தட்டி விட முயன்ற யுகாவை. பின்னால் இழுத்து, இறுகப் பற்றிக் கொண்டான் மற்றொருவன்.

சற்று நேரத்திற்கு, ''அம்மா.... ஆஆஆஆஆஆஆஆஆ!'' என்ற சம்பங்கியின் அலறலும்.

யுகாவின் ''ப்ப்ப்பப்ப்பப்ப்ப் ஆஆஆஆஆஆஆ ஆஆஆ... ஆஆ....பபபபப'' என்ற விகார ஒலியுமே கேட்டுக் கொண்டிருந்தது.

சூடம் தீரத் தீர, அதில் புதிதாய் ஓர் கட்டியை வைத்துக் கொண்டே இருந்தார் அந்தச் சாமியார்.

ஒரு கட்டத்தில், கையில் சூடு தாங்க முடியாமல் சம்பங்கி ''சாமி... முடியலைங்க... எரியுதுங்க! எரியுதுங்க! சூடத்தை எடுங்க!'' என்று கத்திக் கொண்டு, கையை உதற முற்பட, சாமியாரும்... வீரனும் சேர்ந்து அவரை இறுக்கிப் பிடித்தனர்.

''ஏய்... உங்கம்மா அலறுறாங்க பாரு... பேசு... பேசு!'' என்று கத்தினான் அந்தச் சாமியார்.

யுகாவால் அலற மட்டுமே முடிந்தது!

தன் கையைப் பற்றியிருந்தவனை உதற முடியாமல், காலை உதறிக் கொண்டு, விகாரமாய் அலறினாள் யுகா.

அவளால், அவள் தாய் துடிப்பதைக் கண் கொண்டு பார்க்க முடியவில்லை!

கையெல்லாம் தகதகவென எரிவதை காண்கையில், கண்கள் கண்ணீரால் நிறைந்தன!

''ஹய்யோ!!! அம்மா!!!'' என்று நெஞ்சம் அழுதது!

ஆனால், வாயால் தான் அழ முடியவில்லை!

தான் பேசிவிட்டால், தாயின் இந்தத் துன்பம் தீர்ந்து விடுமல்லவா என்ற வேகத்தில், தன் சக்தி முழுதையும் தொண்டைக்குள் செலுத்தி, ''ஆம்மா ஆஆஅ!!!!'' என்று கத்தினாள்! ம்ஹூம்! கத்த முயன்றாள்! அவ்வளவே, அவளது கத்தல் வடிவம் பெறவே இல்லை!

வடிவம் பெறுவதற்கு பதிலாய் ''ஆஆஆஆஆஆஆ... ஆஆஆஆஆஆஆ'' என்று விகார ஒலியாய் வடிவம் பெற்று வெளியே வந்தது!

மீண்டும் ஒரு முறை!

''அம்மா!!!'' என சொல்லச் சொல்லி, தொண்டைக்குக் கட்டளை இட்டாள்!

ம்ஹூம்!'' ஆஆஆஆஆஆஆ!!!'' என்று தான் வந்தது!

மீண்டும்!

மீண்டும்!

''ஹய்யோ!! அம்மான்னு சொல்லு! சொல்லு! ஆ... ம்...ம்...மா...'' என்று அவள் பரிதவித்தது எல்லாம் தொண்டைக்குப் புரியவே இல்லை!

'என்னால் வேலை செய்ய முடியாது!' என்று சண்டித்தனம் செய்தது, அது!

சூழ்நிலை புரியாமல், பிடிவாதம் பிடிக்கும் தொண்டையை என்ன செய்வது என்றும் அவளுக்குப் புரியவில்லை!

தொண்டைக் குழியில் கை வைத்து, அதை இறுக்கி... அதைக் கிள்ளி... 'அம்மா... சொல்லு... சொல்லு...' என்று மூளை அவசரம் காட்டியது!

ம்ஹூம்!!! தொண்டைக்குழி வடிவம் கொடுக்கும் வேலையை செய்வதாய் இல்லை!

அதற்குள், சம்பங்கியின் கை... தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது!

''அம்மா ஆஆஆஆஆஆஆஆஆஆஆஆஆஆ!'' என்று நெஞ்சம் கத்தியது!

குரலோ, ''ஆஆஆஆஆஆஆஆஆஆஆஆஆ!'' என்ற வடிவத்தைத் தவிர, புரிந்த வடிவம் பெறுவதாய் இல்லை!

யுகாவின் முயற்சி... அந்தச் சாமியாருக்கு எரிச்சலைக் கொடுத்ததோ என்னவோ.

வேகமாய் அவளருகே வந்தவன். யுகாவின் கன்னத்தில் மாறி மாறி அடித்தான்!

''ஏய்... பேசுடி! பேசுடி! பேசு! பேசுடி! உங்கம்மா கதறுவது கேட்கலை! பேசுடி! அம்மான்னு சொல்லு!'' என்று அவன் மாறி மாறி அறைய யுகா துவண்டு போனாள்! இதென்ன, சினிமாவா? இல்லை புராணமா? தாயின் கையில் சூடம் எரிவதைப் பார்த்து விட்டு, குழந்தை அம்மா என்று அழைப்பதற்கு?!

அந்த மூடனின் மூர்க்கத்தனத்தில், கை முழுதாய் எரிய, சம்பங்கி மயங்கிச் சரிந்தார்.

அத்தனை நேரம், தாய் போராடுவதைப் பார்த்த தவிப்போ... தன்னைப் பற்றியிருந்தவனிடம் இருந்து விடுபட போராடிய களைப்போ... தொண்டையைக் கிழித்துக் கொண்டு கத்தியதில் உண்டான சோர்வோ... இல்லை அந்த மூர்க்கனின் அடியோ... யுகாவும் மயங்கி விழுந்தாள்!

மயங்கி விழுந்த பெண்கள் இருவரையும் விட்டு விட்டு, அங்கிருந்து ஓடிப் போயினர் அந்த மூவரும்!

அடுத்த நாள் காலை, யுகா தானாய் கண் விழித்து, வேலு நாச்சியாரை அணுகி, விவரம் சொல்லும் போது, சம்பங்கி இறந்து போயிருந்தார்!

இதைச் சொல்லி முடித்த ரபினின் கண்கள். குள மாய் இருந்தன!

''அன்னைக்கு... யுகா துடிச்ச துடிப்பு! ஹய்யோ!! எனக்கு இன்னைக்கு நினைச்சாலும் முடியல... கண்மணி! மனசில நினைக்கிறதை வெளிய சொல் லவும் முடியாம... மனசுக்குள்ளயும் வச்சுக்க முடி யாம.... ஹய்யோ!!'' எனக் கூறியபோது, அவனது மேனி நடுங்கியது வெளிப்படையாகவே தெரிந்தது.

''அன்னையில இருந்து... எந்தச் சாமியாரைப் பார்த்தாலும்... யுகா வெறி பிடிச்ச மாதிரி ஆகிடுவா! இன்னைக்கு... அவங்க அம்மா சாவுக்கு காரணமான சாமியாரைப் பார்த்ததும்... வெறி அதிகமாகிடுச்சு!'' என அவன் சொன்னபோது.

''அக்காங்கிறதால... அவன் கழுத்தை நெரிக்க மட்டும் தான் செஞ்சாங்க! நானா இருந்தா... ஏதாவது கல்லைப் போட்டு அவனைக் கொன்னிருப்பேன்!'' எனப் பல்லைக் கடித்தாள் ரோஜா.

அவளால், தாங்கவே முடியவில்லை!

என்ன கொடுமை இது?

பெற்ற மகளின் முன்னிலையிலேயே, தாய் கை எரிந்து சாவது என்றால் எவ்வளவு பெரிய கொடுமை? ச்சை!

தனக்கு 'ஜாதி'யால் காது கேட்கவில்லை!

யுகாவிற்கு 'சாமியாரால்' தாயில்லை!

உறுப்பை இழப்பதை விட உறவை இழப்பது எவ்வளவு பெரிய வேதனை! அதுவும் கண் முன் னால்! தனக்காக... தான் பேசுவதற்காக... அவர் இறந்து போனார் என்ற எண்ணமே மனதை வதைக் காதோ?!

இழந்த உறுப்பை மீட்க. எத்தனையோ மருத்துவ முன்னேற்றங்கள் வந்துவிட்டன! இதோ... இந்த ஹியரிங் அய்ட் மாதிரி!

ஆனால், இறந்து போன யுகாவின் தாயை மீட்க எந்த விஞ்ஞானமும் வரவில்லையே!

ஹய்யோ! கடவுளே!!! கடவுளே!


ஜாதி... சாமியார் என்று மூட நம்பிக்கைகள் நிரம்பிய மூடர் உலகத்தில் வாழ்கிறோம் என்பதே ரோஜாவை அருவெறுப்புக்கு உள்ளாக்கியது! இந்த உலகமே ''மூடர் கூடம்'' அல்லவோ!

உள்ளுக்குள் மண்டியிருந்த வேதனையை மறை யாமல் முகத்தில் காட்டி ''எனக்கு இந்த ஹியரிங் அய்ட் வேணாங்க! நா மட்டும் ஹியரிங் அய்ட் மாட்டிட்டு... என் குறையை மறைக்க விரும்பலை! யுகாக்கா மாதிரியே இருக்கேன்!'' என்றாள் திடமான குரலில்!

அவளின் அருகே அமர்ந்து, யுகாவின் பாதிப்பைச் சொல்லிக் கொண்டிருந்தவன், சட்டென எழுந்து,

ரோஜாவைத் தன் வயிற்றோடு அணைத்துக் கொண்டான்!!

கண்களில் உற்பத்தியான கண்ணீர். ரோஜாவின் உச்சந்தலையில் நதியானது!



20

எந்தவொரு பிரச்சனைக்குமே... உணர்வுப் பூர்வமான முடிவு, நடைமுறைக்கு ஒத்துவரும் முடிவு என்று இரண்டு முடிவுகள் உண்டு!

உணர்வுப் பூர்வமான முடிவை மனது எடுக்கிறது என்றால், நடைமுறைக்கு ஏற்ற முடிவை மூளை சொல்கிறது! இதில், மனம் பெரிதா? மூளை பெரிதா? என்ற விவாதத்தை விட, பாசம் பெரிதாகிறது! அன்பால் பின்னப்பட்ட அந்த முடிவு அரிதாகிறது!

எப்போது, மூளை மனதை வென்று விட்டதோ, அங்கே திரும்ப மனதிடம் முடிவு கேட்கப்படுவ தில்லை! அதாகப்பட்டது, நடைமுறைக்கு ஏற்ப என்று மூளை முடிவு செய்து, முன்னிலை வகித்து விட்டால், மனதின் உணர்வுகள் பின்னுக்குத் தள்ளப் படுகின்றன.

ஆனால், எங்கு மனம் தனது முன்னிலையை நிலைநாற்றி, உணர்வுகளைக் கோர்கிறதோ, அங்கே மூளையின் ஆலோசனைக்கும் இடம் உண்டு! அந்த

ஆலோசனையின் பெயரில், முடிவு மாறலாம்! மனம் விரும்பினால்!

உணர்வுப் பூர்வமான முடிவை எடுத்து, அதி லேயே பயணம் செய்பவன், ஒரு கட்டத்தில் அதற் காக வருந்துவான்!

உணர்வுகளின் பிணைப்பின்றி, நடைமுறை முடிவை முதலிலேயே எடுப்பவன், ஒரு கட்டத்தில் பாசத்தை இழப்பான்!

ஆனால், உணர்வுப் பூர்வமான முடிவில் தத்தளிக்கும் மனதை... நடைமுறை நெறி காட்டி வழி நடத்தும் மூளை கொண்டவனே வெற்றி கொள்கிறான்!

இங்கே, யுகாவின் நிலையை மனதில் வைத்து, தானும் வாழ்நாள் முழுதும் செவிடாகவே இருக் கிறேன் என்று கூறிய ரோஜாவின் வார்த்தைகள்... உணர்வுப் பூர்வமான முடிவுக்கு நிகரானவை!

அதை, குடும்பத்தாரின் முன்னிலையில் அவள் சொல்லவும், அங்கே பலத்த அமைதி நிலவியது!

முதலில், அந்த அமைதியைக் கலைத்தது யுகா தான்!

வேகமாய் வந்து, ரோஜாவைக் கட்டிக் கொண்டவள், தன் பாசத்தை ஒற்றை முத்தத்தால் வெளிப்படுத் தினாள்.

''டேய் ஸ்டெத்து! அண்ணன்-தங்கச்சி பாசத் துக்கு... பாசமலர் படம் எடுத்துட்டாங்க! அக்கா - தங்கச்சி பாசத்துக்கு... ரோஜாமலர்ன்னு வேணும்ன்னா

படம் எடுக்கலாமாடா?'' என்று அந்த சூழ்நிலைக்குப் பொருந்தாமல் கிண்டல் செய்தான் ரபின்.

''ச... சும்மா இருடா!'' என்று மகனை அடக்கிய வேலு நாச்சியாருக்கே கண்களில் கண்ணீர் தளும்பி நின்றது எனக் கூறினால், அது வெறுமனே கற்பனை யல்ல!

பொங்கி வந்த தன் உணர்வுகளை, முயன்று உள்ளே அடக்கிக் கொண்டு, மெல்ல மருமகள்கள் அருகே வந்தவர். இருவரையும் ஒரு சேர அணைத்துக் கொண்டார்.

''டேய்... இப்ப நாம மாமியார் மருமக பாசத்துக்கு ஒரு படம் எடுக்கணும் போலவே! பட்ஜெட் கொஞ்சம் பெருசா இருக்கும் போலவே! மேரி மாதாவும் பேரிக்காய்களும்... டைட்டில் சூப்பர்ல!'' என்று ரபின், கன்னத்தை உப்பி வைத்துக் கொண்டு, கையைக் குண்டு போல் அபிநயம் செய்து சிரிக்கவும்.

ரபினின் முதுகில் ஓர் அடி விழுந்தது! வைத்தது. சந்தேகமே இல்லாமல் நாச்சியார் தான்!

''ஹோ! பேரிக்கா நல்லாயில்லையா? அப்ப... மாம்பழங்களும்ன்னு வச்சுக்கலாம்!'' என்ற ரபினைப் பார்வையால் அடக்கியவர்.

''ரோஜா...'' என்றார் மெல்ல.

அதற்குள், நாச்சியாரின் கைகளைப் பற்றிய யுகவீணா, தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டி, ''நான் சொல்கிறேன்'' என்பது போல் சைகை செய்தாள்.

நாச்சியார் ஓர் புன்னகையுடன் தலையசைக்கவும், ரோஜாவின் கன்னம் பற்றி நிமிர்த்திய யுகவீணா, இரண்டு கைகளையும் பிள்ளையை ஏந்தி வைத் திருப்பது போல் காட்டி, தன் தொண்டையையும்... நாக்கையும் காட்டி, அறுப்பட்டு விட்டது என்றாள் சைகையால்!

ரோஜா ஏதோ சொல்ல வரவும், அவளைக் கைய மர்த்தி தடுத்தவள், ரோஜாவைக் கைகாட்டி, அவளது செவிகளைத் தொட்டு, பின்னர் குழந்தை போல் இரண்டு கைகளையும் குழந்தை போல் பாவித்து, ''உனக்கு குழந்தைல இருந்து... காது கேட்கும்!'' என்பதை உணர்த்தினாள்.

ரோஜாவின் கண்களில் கண்ணீரைக் காணவும், அவளது முடியை மெல்ல வருடியவள், தன் தொண் டையைக் காட்டி, அடுத்ததாய் பேசுவது போல் சைகை செய்து, இரண்டு கைகளாலும் இல்லை எனச் சொன்னாள்.

பின்னர், ரோஜாவின் காதுகளைக் காட்டி, கேட்பது போல் பாவனை செய்து, இரண்டு கைகளாலும் பாதை போல் செய்து காட்டியவள், கண்களாலேயே ''ஏன் கூடாது?'' என்றாள்.

''என்னோட குறையை நிவர்த்தி செய்ய வழியே இல்ல. ஆனா... உன்னோட குறையை நிவர்த்தி செய்ய ஒரு வழி இருக்கும் போது, அதில போகாம இருக்கிறது தப்பில்லையா?'' என்று அவள் கேட்ட

தற்கு, ரோஜாவின் பதில், யுகாவின் வயிற்றைக் கட்டிக்கொண்டு, குலுங்கி அழுவதாய் இருந்தது!

''நானும் எவ்வளவோ சொல்லிட்டேன்! யுகாவுக்கு பேச்சு வரவைக்கிறதுக்காக... நாங்க எல்லா முயற்சியும் செஞ்சிட்டோம்! அதுக்கு... வழியில் லைன்னு ஒண்ணுக்கு பத்து டாக்டர் சொன்னதுக்கு அப்புறம் தான்... விட்டோம்! ஆனா... உனக்கு... ஹியரிங் எய்ட்ன்னு ஒரு சொல்யூஷன் இருக்கும் போது, போகாம இருக்கது தப்புன்னு சொல்லிட் டேன்! ஆனா... அவ தான் கேட்கிறதா இல்ல!'' என்று கையை விரித்தான் ரபின்.

ஆனால், யுகா விடுவதாய் இல்லை!

ரோஜாவின் கை பற்றி எழுப்பி, வேலு நாச்சியார் முன்னிலையில் சென்று நிறுத்தியவள், கைகளைச் சுழற்றி, அவரையும்... அவரது தாலியையும்... அடுத்து அவரது மகன்களையும்... கூடவே தன் நாக்கையும்... பின்னர் ரோஜாவின் காதையும் காட்டி, உணர்வுப்பூர்வமாய், கைகளை ஆட்டி... கண்களில் நீர் திரள... நாசிகள் இரண்டும் நடுக்கத்தில் விடைக்க... நெஞ்சம் விம்மலில் ஏறி இறங்க... ''ப்ப... பப... ஆஅ... ஆஅ...ஆஆஆஆஆஆஆஅ'' என்று ஏதோ சொல்ல முயன்றாள்.

உள்ளிருந்து உணர்ச்சி பெருக்கில், யுகா தன் மனதிலிருந்ததை ஒழுங்காய் சொன்னோமா என்று தடுமாறி நிற்கையில், ''அக்கா சொல்றதும் சரி தான்...

அத்தை! நம்ம குடும்பத்து சாபம்ன்னு நீங்க நினைக்கிறதை... என்னால மாத்த முடியும்ங்கும் போது, நான் மாத்தறேன்! இன்னைக்கே மெட் ராஸ்க்குப் போறோம்... அத்தை!'' என்றாள் வேலு நாச்சியாரின் கைகளைப் பற்றிக் கொண்டு.

வேலு நாச்சியார். அவளைத் தோளோடு அணைத்துக் கொள்ளவும், ''டோட்ட... டொட்ட... டொட்டடொயிங்! ஒரு விக்கிரமன் படத்து... பி.ஜி.எம் கேட்கல!'' என்று கை தட்டி சிரித்த ரபினின் கண்ணோரமும், கண்ணீரைத் துளிர்த்துவிடாமல் இருக்க, சுருங்கி இருந்தது!

இவ்வகையில், திரு மற்றும் திருமதி. ரபிந்த்ரநாத், சென்னை பயணப்பட்டனர்!

ரோஜா, யுகாவிடம் சொல்லிக் கொள்கையில், இன்று காலையில் கோவிலில் வாங்கி வந்த குங் குமத்தை அவள் நெற்றியில் இட்டு, கண் மூடி பிரார்த்தனை செய்து, அவளை வழியனுப்பி வைத்தாள் யுகவீணா.

அப்போது ''இந்த சாமியை நம்புறதை... நீ விடப் போறதில்ல?'' என்று சிறு கிண்டலும், மனத்தாங் கலுமாய் கேட்டார் வேலு நாச்சியார்.

சம்பங்கியின் சாவுக்கு... முற்றுமுதல் காரணம் ''சாமி'' என்ற அசைக்க முடியாத எண்ணம் வேலு நாச்சியாருக்கு! ''சாமி'' என்று ஒன்று இருந்தால், தன் மேல் உண்மையான நம்பிக்கை வைத்திருந்த ஒரு

வெள்ளை மனுஷியைப் பறித்துக்கொண்டே இருந்திருக்காது அல்லவா என்பது அவரது வாதம்!

ஆனால், யுகாவின் எண்ணம் வேறு! அதை அவளது கணவன் பிரதிபலித்தான்!

''சாமி யாருன்னு கேட்கிறவங்களுக்கு ''சாமி யாரோ!'' ... சாமியாருன்னு சொல்லிக்கிறவங்களுக்கு ''நானே சாமி!'' ஆனா, சாமியை முழுசா நம்புறவங்களுக்கு... அவன் ஒரு துணை! அதை... அவ விடவிரும்பல! விட்டுடுங்களேன்மா!'' என்றான் கெஞ்சுவது போல்.

தான் சொல்ல நினைத்ததை, கணவன் சொல்லி விட்டதும், வேகமாய் ஓடிச் சென்று, அவனது தோள் வளைவில் நின்று கொண்டு, 'என் புருஷன்... என்னைப் புரிந்தவன்!' என்று பெருமை பொங்கப் பார்த்தாள் யுகவீணா!

ரபின் கேலியாய் சிரிக்கவும், ''பொண்டாட்டிடா!'' என்று சொல்லி, வீணாவின் தோளில் கைபோட்டு இறுக்கினான் விவேக்.

அவளும், சற்றே எம்பி, தன் கையைத் தூக்கி, கணவனின் மறு தோளில் போடவும், ''நீ லிப்பை மட்டும் அசை வீணா!! நான் சொல்றேன்!'' என்று துணைக்கு வந்த அவளது கணவன், வீணா வாயசைக்கவும் ''புருஷன்டா!'' என்று சொல்ல.

''தாங்கலடா!'' என்று தலையில் அடித்துக் கொண்டு, ரோஜாவின் கைப்பற்றி வெளியே அழைத்துக் கொண்டு சென்றான் ரபின்.

ரபினும், ரோஜாவும், ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்டிருந்த தனியார் பேருந்தில் ஏறி அமர்ந்தனர்.

ரோஜாவுக்கு, ஒரொரு நிமிடமும்... செந்தூர்பாண்டியனுடன் பயணம் செய்ததே நினைவில் வந்து இம்சை செய்தது!

அதை உணர்ந்தவன் போல், ரபினும் எதுவும் பேசவில்லை!

ஆனால், தன் இருப்பை அவளுக்கு உணர்த்தாமலும் இருக்கவில்லை!

பேருந்தில் ஏறியதும், ''நீ ஜன்னல் சீட்ல உக்காந்துக்கோ!'' என்றவன், அவளை முன்னே விட்டான்!

அதுவே, அவர்களுக்கு ஏதோ நெஞ்சுக்கு இனிதாய் தெரிந்தது!

அவசரமில்லாமல், பதட்டமில்லாமல், பயமில்லாமல்... இருப்பதே பெரும் வித்தியாசத்தை உணர்த்தியது!

ஆனாலும், செந்தூர்!!?!

தண்ணீர் பாட்டில் எடுத்து, அவளுக்கு முன்னே இருந்த சீட்டில் மாட்டியிருந்த பையில் வைத்து, ''வேணும்ன்னா குடிச்சுக்கோ! ஆனா... ரொம்ப குடிக்காத! இன்புட்க்கு வழியிருக்கு... ஆனா அவுப்புட்டுக்கு வழியில்லையேமா வழியில்லையே!'' என்று மேஜர் சுந்தராஜன் குரலில் மிம்க்ரி செய்ய, ரோஜாவின் குழம்பிய முகம், சிறிதாய் சிரிப்பைக் காட்டியது!

பேருந்து கிளம்பியதும், ''படுத்துக்கிறியா?'' எனக் கேட்டவன். அவள் குத்துமதிப்பாய் ''வேணாம்'' என்று தலையசைக்கவும். ''ஓகே! பாட்டு கேட்கலாமா!'' என்று சொல்லி, கைப்பேசியில் பாட்டை ஓடவிட்டு, ஹெட்ஃபோனை அவளது காதில் மாட்டி விட்டான்!

எல்லாம், எண்பதுகளில் வந்த இளையராஜாவின் மனதை மயக்கம் மெலோடிகள்! எஸ்.பி.பியும்... ஜானகியும்... சுசீலாவும்... சித்ராவும்... ஜேசுதாஸும்... குரலைப் பிழிந்து காதல் ரசத்தைக் கொட்டிக் கொண்டிருந்தனர்!

ரோஜாவின் மனக்குழப்பங்கள் அனைத்தும், அப் பாடல்களில் கரைந்து... கொஞ்ச கொஞ்சமாய் மறைந்து, செந்தூரின் முகத்தை அகத்தை விட்டு எடுத்துக் கொண்டிருந்தன!

ஒரோர் பாட்டும் ஓர் அமுதம்!

தன் இசையால், கேட்போரை இட்டுச் செல்லும் ஓர் நதி!

தன்னுள் வந்தவர்களை, தன்னுள்ளேயே வைத்துக் கொள்ளும் நீலக்கடல்!

குடிக்கக் குடிக்க, தித்திப்புக் குறையாத பனங் கற்கண்டுப் பால்! தித்திப்பிற்கும் குறைவிருக் காது! உடல் ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிக் காது!

வரிகள் எனும் பெண்மேனிக்கு, மெட்டு எனும் பொன்னகை பூட்டி, தங்க உலா வந்து கொண்

டிருந்தது! நகையற்ற பெண்ணும் அழகு தான்! பெண் அணியா நகையும் அழகு தான்! ஆனால், நகை அணிந்த பெண்.... அழகோ அழகல்லவா? அதே போல், வரியும் அழகு தான்... மெட்டும் அழகு தான்! ஆனால், மெட்டில் மிளிரும் வரிகள் அழகோ அழகல்லவா?!

கணவன் மனைவி இருவருமே, மிதந்து வந்த பாட்டில் தங்களைத் தொலைத்திருந்தனர்!

கிட்டத்தட்ட ஒரு மணி நேரமிருக்கும்!

பேருந்தில் எரிந்து கொண்டிருந்த விளக்குகள் எல்லாம் அணைக்கப்படவும், தன் காதில் வைத் திருந்த ஹெட் போனை எடுத்த ரபின், ''தூங்குறியா கண்மணி?'' என்றான்.

சும்மாவே கேட்காது! இதில் ஹெட்போன்! உள்ளே, ஓர் காதல் பாடல்! ரோஜா மெய் மறந்து போயிருந் தாள்!

மீண்டும் ஒரு முறை கேட்டவன், லேசாய் கண் மணியின் தோளை உலுக்கினான்.

கனவிலிருந்து விழிப்பவள் போல் அவள் விழிக் கவும், தூங்குவது போல் கை காட்டி, அவன் வினவ, ''ஹ்ம்ம்'' என ஒரு மாதிரி மண்டையாட்டினாள் ரோஜா!

அவள் தன் முழியை மாற்றிக் கொள்வதற்குள், அவளது இடுப்பின் குறுக்கே கை விட்டு, அவளது

இருக்கையின் மறுபுறமிருந்த புஷ்பாக் ஹாண்டிலை இழுத்தான் ரபின்!

அந்த நேரம்... அந்த நிமிடம்... அந்த நொடி... மியூசிக் ப்ளேயரில் ''என்னைத் தொட்டு அள்ளிக் கொண்ட மன்னன் பேரும் என்னடி! எனக்குச் சொல்லடி!'' என்ற பாட்டு இசைத்தது!

ரோஜா, மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

ரபின் இன்னமும் கையை எடுத்தபாடாய் இல்லை!

''ச்சை... இதென்ன இவ்வளவு டைட்டா இருக்கு!'' என்று முனங்கியவன், சட்டென இழுத்தான்.

ரோஜாவின் இருக்கையை ஒட்டி நின்றவன், இடது கையால் அவளது சீட்டைத் தள்ளிக் கொண்டு, வலது கையால் புஷ்பாக் ஹாண்டிலை பலம் கொண்டு தள்ளினான்.

அந்த நேரம்... ''நெஞ்சைத் தொட்டு அள்ளிக் கொண்ட கண்ணன் ஊரும் என்னடி! எனக்குச் சொல்லடி!'' என்று பாட்டு ஒலிக்க.

ரோஜாவிற்கு ''நெஞ்சைத் தொட்டு அள்ளிக் கொண்ட கள்ளன் ஊரும் என்னடி'' என்று கேட்டது!

அதைக் கேட்ட வினாடி, ''கள்ளன் இல்ல! போலீஸ்!'' என்றன அவளது உதடுகள் அவளையும் அறியாமல்.

''என்னது? போலீஸ்?'' என்று ரபின் கேட்டது கூட அவளுக்குக் கேட்கவில்லை!

அவள், பாட்டு கேட்பதில் படு பிஸியாய் இருந்தாள்! அதை விடவும், தன்னருகே... மிக அருகே தெரிந்த அவனது முகம் அகத்தை விட்டு அகல மறுக்க, பாட்டின் ஓரோர் வரிக்கும்... அவனை சம்பந்தப்படுத்திக் கொண்டிருந்தது மூளை! ஏன், எப்படி போன்ற கேள்விகளும், செந்தூரின் முகமும் தூரமாய் எங்கோ போயிருந்தது! உடலின் அருகேயும்... மனதின் அருகேயும் இருப்பவன் மட்டுமே அவளை ஆக்கிரமித்து இருந்தான்!

அவளது நிலை உணர்ந்தோ... இல்லை நிஜமாகவே புஷ்பாக் செய்த மக்கரின் காரணமாகவோ, வேலையை முடிக்க ரபின் முழுதாய் ஐந்து நிமிடங்கள் எடுத்துக் கொண்டான்!

ஒருவழியாய், அவன் சீட்டைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, தன் இருக்கையில் ''ஷப்பா!'' என்று சாய்ந்த போது, அவன் கழட்டிவிட்டிருந்த ஹெட் போனின் ஒரு முனையை எடுத்து, அவன் காதில் சொருகிவிட்டாள் ரோஜா.

சட்டென திரும்பி, மனைவியைக் கண்ணோடு கண் நோக்கினான் ரபின்!

அவனது பார்வையை ஒரு வினாடி சந்தித்த ரோஜா, சட்டென தலை குனிந்து, ஹே ராம் படத்திலிருந்து ''நீ பார்த்த பார்வைக்கொரு நன்றி!'' என்ற பாடலைத் தேடி ஓட விடுவதில் மும்முரமாய் இருந்தாள்!

அது ஓடி முடித்ததும். ''எப்படி இருக்குல்லங்க?'' என அவள் சிலாகிக்க, அதை லூப்பில் ஓடவிட்டான் ரபின்! அதாவது எண்ணிலடங்கா தடவை ஓடுவது போல், செட் செய்தான்! (லவ் இஸ் இன் தி ஏர்!)

கணவன் - மனைவி இருவருக்குமே அந்த இசை சலிக்காமல் போக, அந்த இசையின் தாக்கத்திலேயே கண் மூடியவர்கள். காலையில் கண் விழித்தபோதும், அப்பாடல் ஓடிக்கொண்டே இருந்தது!!

ஹ்ம்ம். சென்னையில் இறங்கியாயிற்று!

கிண்டி... கத்திபாரா சந்திப்பில், வண்டி நின்றதும், மனைவியைக் கூட்டிக்கொண்டு, வண்டியை விட்டிறங்கினான் ரபின்.

''இது பஸ் ஸ்டாண்ட் மாதிரி இல்லையே'' என்ற ரோஜாவின் நினைவுகள், செந்தூருடன் வந்திறங்கிய கோயம்பேடு பேருந்து நிலையத்தையே வட்ட மடித்துக் கொண்டிருந்தன.

''நாம எங்க போகணுமோ... அங்க தான் இறங்கணும். கண்மணி!'' என்று ரபின் சொன்னது, சாதாரணமாய் தெரிந்த போதும், உள்ளே வேறேதோ ஓர் அர்த்தம் இருப்பது போல் தோன்றியது ரோஜாவிற்கு!

அவளை ஆர அமர யோசிக்கவிட்டு, அருகே உள்ள ஒரு விடுதிக்கு அழைத்துச் சென்றான்.

குளித்துக் கிளம்பியதும், ''நமக்கு ஒன்பது மணிக்கு அப்பாயிண்ட்மெண்ட், கண்மணி! சாப்

பிட்டுப் போகணும்!'' என்று அவளை அழைத்துக் கொண்டு ஒரு பிரபல உணவகத்திற்கு சென்றான்.

அவளுக்குப் பிடித்தது கேட்டு ஆர்டர் செய்தவன். மருத்துவமனைக்கு சென்றபோதும், அவளது ஒரோர் அடியையும் கவனித்துக் கொண்டான்!

வந்தாகிற்று!

அவர்கள் எடுக்கச் சொன்ன டெஸ்ட்களை எடுத்துக் கொண்டு பெரிய மருத்துவரின் அறைக்குள் காலடி வைத்தாயிற்று.


ரிப்போர்ட்களை ஒவ்வொன்றாய் பார்த்த மருத்துவர். சற்றே கோபமாய் முகத்தை வைத்துக் கொண்டு ''பார்க்க இவ்வளவு டிசன்ட்டா இருந்துக் கிட்டு... பொண்டாட்டியோட செவிப்பறை கிழிஞ்சு போற அளவுக்கு... அவங்களை அடிச்சிருக்கீங்க?! நீங்கெல்லாம்... எத்தனை காந்தி வந்தாலும்... எத்தனை பாரதி வந்தாலும் திருந்தவே மாட்டீங்களா சார்? பாவம்... அந்தப் பொண்ணு... எவ்வளவு கனவோட அவங்க பிறந்த வீட்டில இருந்து வந்திருப் பாங்க! ச்சை... ஒரு தாலியைக் கட்டிட்டா... அவங் களை அடிச்சிடுவீங்களா? அதுவும்... காது செவுடா குற அளவுக்கு! ச்சை!'' என்றார் பெண்ணாய் பிறந்த அந்த மருத்துவர்.

டெஸ்ட் எடுப்பதற்காக, காதில் பல திரவங்களை ஊற்றி, அதை சுத்தம் செய்திருந்ததால். ரோஜாவுக்கு முன்பை விட காது நன்றாகவே கேட்டது!

அதிலும், அந்த மருத்துவர் குரலை உயர்த்திப் பேசவும், வார்த்தைகள் ஓரளவுக்கு தெளிவாகவே புரிந்தன.

ரபினின் முகத்தைத் திரும்பிப் பார்த்தவள், அதில் கோபமோ ஆத்திரமே இல்லாமல்... ஒரு விதமான ஏற்றுக்கொள்ளல் தன்மையே தெரியவும்,

''டாக்டர், கல்யாணம்ங்கிறது... எல்லா பொண்ணுங்களையும்... சொர்க்கத்தில இருந்து நரகத்திற்கு தள்ளுறதில்லை! நரகத்தில் இருந்தும் சொர்கத்துக்கு வருவாங்க! முதல்ல புரிஞ்சுக்கோங்க!'' என்றாள் பட்டென.



21

ரோஜாவின் அதட்டலில், மருத்துவர் திகைத்து நின்றார் என்றால், ரபினின் நிலையைச் சொல்லவும் வேண்டுமா என்ன?

சார், ''ஹே... டன்டனக்கா... டனக்கு நக்கா! ஹே... டன்டனக்கா.. டனக்கு நக்கா!!!!'' என்று கற்பனையில் குத்தாட்டம் போட்டுக் கொண்டிருந்தார்.

திகைப்பிலிருந்து சட்டென சிரிப்புக்கு மாறிய மருத்துவர். ''என்னம்மா.. புருஷன் மேல பெரிய லவ்வோ?'' என்றார்.

கோபத்திலிருந்து திகைப்புக்கு மாறிப் போனது ரோஜாவின் முகம்!

மருத்துவரின் கேள்விக்குப் பதிலாய் ''இதெல்லாம் கேட்பாங்களா மேடம்?'' என்றான் ரபின்.

''ஹ்ம்ம்!!!'' என்று அவர் சிரிக்க, காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு, ''தீயா வேலை செஞ்சிருக்கேன் மேடம்'' என்றான் ரபின். காது வரை நீண்ட புன்னகையுடன்.

''உங்க வேலையோட அறுவடை தான் இங்க தெரியுதே!'' என்று மருத்துவர், ரோஜாவின் கன்னத்தை லேசாய் தட்டவும்.

ரோஜாவின் உதடுகள், '' ஒரு நாளைக்கு பத்து படம் பார்த்தா... கண்ணு தீயா தான் எரியும்!'' என்று சன்னமாய் முனங்கின.

''என்னம்மா சொன்னே?'' என்று மருத்துவர் கேட்க.

''என்னோட வேலையைப் பாராட்டுறா மேடம்! பாராட்டுறா!'' என்று சமாதானம் செய்தான் ரபின்.

கையால் வாயை மூடிக் கொண்டு சிரித்தாள் ரோஜா.

''ம்ஹ்மம்ம்ம்!'' என்று சிரிப்புடன் தலையசைத்த மருத்துவர், ரோஜாவின் காதுகளை பரிசோதனை செய்ய ஆரம்பித்தார்.

சோதனைகள் அனைத்தும் முடிந்து, செவித் திறனை அதிகப்படுத்தும் கருவியை மாட்டியவர்.

ரோஜாவுக்கு அதை உபயோகப்படுத்தும் முறை பற்றிச் சொல்லிக் கொடுத்தார்.

முடிவில். "அவங்களை நல்லா பார்த்துக்கோங்க. மிஸ்டர்.ரபின்!" என்ற மருத்துவர்.

"எதனால அவங்களுக்கு இப்படியாச்சுன்னு நான் பழசைக் குடைய விரும்பல... ஏன்னா அவங்க இப்ப சந்தோஷமா இருக்காங்க! அதை நான் கெடுக்கவும் விரும்பல! பட்... இப்படியொரு சம்பவம் அவங்க பிறந்த வீட்டில நடந்திருக்குன்னு மட்டும் புரியது! அது... ரிபீட் ஆகாம பார்த்துக்கோங்க! பலமா இன்னொரு அடி விழுந்தா... அவங்களுக்கு சுத்தமா காது கேட்காம போகக் கூட வாய்ப்பிருக்கு!" என்றார் அந்த மருத்துவர், எச்சரிக்கும் குரலில்.

"சரி மேடம்!" என பவ்யமாய் சொல்லிவிட்டு, ரபின் வெளியே வர, ரோஜா மருத்துவருக்கு நன்றி சொல்லிவிட்டு. காதில் மாட்டியிருந்த கருவியைத் தடவியபடியே வெளியே வந்தாள்.

"அதையேன்... தொந்தரவு பண்றே! சும்மா வா!" என்று அவள் கையைத் தட்டிவிட்டவன், பிடித்த கையை விடாமல் நடந்தான்.

"ஒரு மாதிரி... எதையோ... தூக்கி காதில வச்ச மாதிரி இருக்குதுங்க! காதுக்குள்ள வேற ஒரு கம்பி போகுதா... அது வேற ஒரு மாதிரி இருக்குது!" என்றாள் ரோஜா, சங்கடத்துடன்.

"புதுசா இருக்கா எல்லாமே... கொஞ்ச நாளைக்கு சங்கடத்தை தான் கொடுக்கும். கண்மணி பேபி! போகப் போக... உனக்கே பழகிடும்!" என்றான் சிரிப்புடன்.

"எப்படி... உங்க லொள்ளை பழகிகிட்ட மாதிரியா?" என்றாள் ரோஜா, சிரிப்புடன்.

'ஹே! இதென்ன... கவுன்ட்டர் எல்லாம் கொடுக்கிறே? தப்பு கண்மணி... தப்பு! எங்கம்மாக்குன்னு செட் பண்ண ரோலை நீ பறிச்சுக்கக் கூடாது!" என ரபின், ஒரு விரல் நீட்டி சீரியசாக மிரட்டவும், கலகலவெனச் சிரித்தாள் அவனது மனைவி!

"சரி... இதே சந்தோஷத்தோட... எங்கேயாவது வெளிய போலாமா?" என்றவன்.

"உனக்கு காது நல்லா கேட்க ஆரம்பிச்சதில... எனக்கு சில பலப் பிரச்சனைகள் என்றாலும்... உலகம் அதுக்கு சந்தோஷப்படுதே! சோ... கொண்டாடிடுவோம்! எங்க போகலாம்?" எனக் கூடுதலாய் சிலவற்றை சேர்த்து, ஒரு கேள்வியில் முடித்தான்.

ரோஜா பதில் சொல்வதற்கு முன்னர். "சினிமா?!!" என்று அவன் கூவ,

"ஹய்யோ!!!" என்று தலையில் அடித்துக் கொண்டாள் ரோஜா.

"இப்ப எதுக்கு... நீ தலையில அடிச்சுக்கிற? இப்பத் தான் காதில மெஷின் மாட்டியாச்சே... ஹெட்போன் இல்லாமயே படம் பார்க்கலாமேன்னு

சொன்னா... ரொம்பத் தான்!'' எனக் கோபம் கொண்ட ரபினைப் பார்த்துச் சிரித்தாள் ரோஜா.

''சிரிக்காத ரோஜா! எங்க போகலாம்ன்னு சொல்றே?'' என்றான் அவனோ, கோபம் சிறிதும் குறையாமல்,

''கோவிலுக்குப் போகலாம்! அப்புறம்... சினிமாக்குப் போவோம்!'' என முடிக்கையில், குரல் கொஞ்சிற்றோ என்று அவளுக்கே சந்தேகமாய் தெரிந்தது!

''கோவிலுக்கா?'' - வேப்பங்காய் தின்றது போல் கசந்தது ரபினுக்கு.

ஆனாலும், மனைவி கேட்டு இல்லையென்று சொல்ல முடியுமா என்ன? சொல்லித் தான் பாரேன்!

அருகே இருந்த கபாலீஸ்வரர் கோவிலுக்கு வண்டியை விடச் சொன்னான்.

''ஹப்பா... எவ்வளவு பெரிய குளம்? சென்னையில எல்லா இடத்தையும் பிளாட் போட்டு வித்துட்டாங்கன்னு சொல்றாங்க... ஆனா... இவ்வளவு பெரிய கோவில்... எவ்வளவு பிரம்மாண்டமா இருக்கு!'' என வியந்த ரோஜாவை.

''பண்ற தப்பையெல்லாம்... கழிச்சு கட்ட ஒரு இடம் வேண்டாம்? முன்னாடிய விட... இப்ப எல்லாம் ஏன் கோவிலுக்கு அதிகமான ஆளுங்க வராங்கன்னு நினைக்கிறே? உலகத்தில தப்பு நிறைய நடக்குது...

சோ கோவில் குளம் வளருது!!'' என்ற ரபினின் பதில், அவளை மீண்டும் சிரிக்க வைத்தது!

''நாம என்ன தப்பு பண்ணிட்டு கோவிலுக்கு வந்திருக்கோம்ன்னு நினைக்கிறீங்க?'' என அவள் திரும்ப.

''அதான்... சினிமாக்கு போகலாம்ன்னு சொன்னேன! நீ தான் கோவிலுக்குப் போகணும்ன்னு சொன்னே!'' என்று அவள் பக்கமே திருப்பிவிட்டான் அவளது கணவன்.

''இப்பக் கூட... டாக்டர் சொன்னாங்களே... ஒரு பொண்ணுக்குப் பிரச்சனைன்னா... அது புருஷனால தான் வரும்... வர முடியும்ன்னு... அதுக்கு ஒரு விதி விலக்கா நான் இருக்கல! அது மாதிரி... கோவிலுக்கு வரவங்க எல்லாருமே தப்பு பண்ணிட்டு வரதில்ல... சில பேர் நன்றி சொல்றதுக்கும்... சில பேர் மன அமைதிக்கும்... சில பேர் போக்கிடம் இல்லாமலும் வராங்க!'' என்றாள் ரோஜா. அவனுக்கு விளக்கி விடும் நோக்கத்தில்.

''யுகாவுக்கு ஏற்ற ஜால்ரா!!!'' என்று கை தட்டினான் ரபின்.

இருவருமாய், கோவிலுக்குள் சென்றனர்.

ரோஜா, பயபக்தியுடன் கோவிலை வலம் வர, ரபின் கண்களை இங்கேயும் அங்கேயும் மேய விட்டுக் கொண்டு, கடைவீதியில் நடப்பது போல் நடந்து வந்தான்.

கபாலீஸ்வரரையும்... கற்பகாம்பாளையும் கண் மூடி தரிசித்தான்! பிரசாதம் வாங்கி இட்டுக் கொண்டான்!

ஆனால், ரோஜாவைப் போல்... அந்த ஈஸ்வரனின் ஓங்கி வளர்ந்த உருவத்தில் லயித்து அங்கேயே நிற்கவில்லை! அதற்காக அவளைத் தொந்தரவும் செய்யவில்லை!

தரிசனம் முடிந்ததும், அமைதியாய் அவன் வெளியேறி விட, ரோஜா அந்த அகிலாண்டேஸ்வரியின் அருள் வடிவத்தில் மெய் மறந்து நின்றாள்.

மூக்கின் நடுவே மின்னிய அந்தப் பெரிய கல் மூக்குத்தியாகட்டும்! ஒன்பது கஜம் புடவையை அவள் உடுத்தியிருந்த அழகாகட்டும்! கற்சிலைப் பாதங்களில்... கொட்டப்பட்டிருந்த குங்குமமாகட்டும்! வடிவான நெற்றியில் வட்டமாய் வீற்றிருந்த மஞ்சள் - குங்கும பொட்டாகட்டும்! அவளை ராணியாய் எடுத்துக் காட்டிய கிரீடமாகட்டும்! அனைத்துமே ரோஜாவைக் கொள்ளை கொண்டன!

தன் சிந்தனை யாவையும், பூமகளின் பூச்சுற்றிய பொற்கொடியே சூழ்ந்திருக்க, சந்நிதியை விட்டு வெளியே வந்தவளின் கண்கள் கணவனைத் தேடின.

சார். அங்கே விற்கும் புளியோதரை பிரசாதத்தை வாங்கி, உள்ளே தள்ளிக் கொண்டிருந்தான்.

தன்னை நோக்கி வேகமாய் வந்த மனைவியிடம் "ஒரு புளியோதரைக்காக... பீ.டி. உஷா அவதாரம்

எல்லாம் எடுக்கக் கூடாது. கண்மணி பேபி!" என்றான் ரபின், விரலில் ஒட்டியிருந்த புளியோதரையை சுவைத்தபடி.

"ஹய்யோ! நா அதுக்காக வரல... எனக்கு கொஞ்சம் பூ வேணும்! வாங்கிட்டு வாங்க!" என அவனை ஏவினாள்.

"பூ வேணும்ன்னு இவ்வளவு அதிகாரமா கேட்ட ஒரே ஆளு நீ தான் பேபி!" என்று அலுத்துக் கொண்டவன். "சீரியஸாவே உனக்கு இந்த புளியோதரை வேணாவா? நா சாப்பிட்டுடவா?" என்றான். அவளுக்காக வாங்கி வைத்திருந்த இன்னொரு புளியோதரைப் பொட்டலத்தைக் காட்டி.

"ஷ்! நல்லா சாப்பிடுங்க! ஆனா... பூ வாங்கிட்டு வந்து கொடுத்திட்டு சாப்பிடுங்க!" என்று அப்பொட்டலத்தை வாங்கிக் கொண்டாள் ரோஜா. ம்ஹூம், பிடுங்கிக் கொண்டாள் ரோஜா!

"ஹூம்ம்ம்ம்ம்ம்" என்று அவளைப் பார்த்து ஒரு கோபப்பெருமூச்சு விட்டுவிட்டு, அவன் நகர,

'இவனெல்லாம்... எப்படித் தான் ஐ.பி.எஸ் எக்ஸாம் எழுதினானோ?' என்று ஆயாசமாய் வந்தது ரோஜாவுக்கு.

அடுத்த ஐந்தாவது நிமிடம், கையில் இரண்டு முழம் பூவுடன் வந்து சேர்ந்தான் ரபின்!

"என்னது இது?" என்று கண்மணி, முறைக்காத குறையாகக் கேட்க.

"பூ... பேபி... பூ! நீ பார்த்ததில்ல!" என்றான் ரபின். அதை ஒற்றைக் கையில் தொங்க விட்டப்படியே.

"ஹய்யோ! இதென்ன அரளிப் பூ வாங்கிட்டு வந்திருக்கீங்க! எனக்கு மல்லிகைப் பூ வேணும்!" என்றாள் ரோஜா, சற்றே சலிப்பு வெளி வந்த குரலில்.

"ஹோ! மல்லிகைப் பூவா? சொல்றதைத் தெளிவா சொல்ல வேண்டியது தானே? சும்மா... மொட்டையா பூவுன்னா... நான் இருக்கிறதிலேயே கொஞ்சம் விலை கம்மியா இருந்த இந்தப் பூவை வாங்கிட்டு வந்துட்டேன்!" என்றான் அவன், சாதாரணமாய்.

"ஆமா... விளக்குறாங்க! நூறு காதல் படம் பார்த்திட்டு... பூ வாங்காம புளியோதரை வாங்கிட்டு நின்ன உங்ககிட்ட விளக்கிட்டே இருக்காங்க!" என்று வாய்க்குள் முனங்கிய ரோஜாவை, கண்ணை இடுக்கி ஒரு விரல் நீட்டி மிரட்டிவிட்டு, மீண்டும் பூ வாங்கச் சென்றான்.

இப்போது வருகையில், கையில் ஒரு முழம் மல்லிகைப் பூ இருந்தது!

அதை ஆசையாய் வாங்கிக் கொண்ட ரோஜா. அருகே இருந்த தூணில் பூச்சரத்தை இரண்டாய் வெட்டினாள். ஒரு பகுதியைத் தலையில் வைத்துக் கொண்டவள். தாலியை வெளியே எடுத்து மற்றொரு பகுதியை, அதில் கோர்க்க எத்தனித்தாள்.

தாலிக்கொடியைத் தொட்டதும், நெஞ்சம் உறைந்து போனது!

இல்லை! இல்லை! பார்வதியாளின் தாலியைப் போலல்ல அவளது தாலி!

இரண்டு தாலி ஏந்திய கழுத்து அல்லவா?!

"ஹய்யோ! எப்படி? எப்படி மறந்தேன்? ஏன் மறந்தேன்? என்னால் செந்தூரை அடிக்கடி மறக்க முடிகிறதே எப்படி? ஏன்? ஏன்? ஏன்?" என்ற கேள்விகள், அவளை ஆட்கொள்ள, சற்றே மயக்கம் வரும் போலிருந்தது!

என்னவோ, தான் கொலைக்குற்றம் செய்துவிட்டது போல் உடம்பெல்லாம் எரிந்தது!

காதலித்தது ஒருவனை, கல்யாணம் செய்தது மற்றொருவனை என்று நினைக்கையிலேயே, தான் களங்கப்பட்டுப் போனது போல் நெஞ்சம் கூனிக் குறுகியது!

செந்தூரை விரும்பிய அதே மனதால், இப்போது ரபினையும் விரும்ப ஆரம்பித்து விட்டோமோ என்ற ஐயம் அவளைத் துன்புறுத்தியது!

அதெப்படி முடியும்? ஒரு மனதால்... இரு மனிதர்களை நேசிக்க முடியுமா? என்ற கேள்விக்கு. 'இல்லை முடியவே முடியாது!' என்று அடித்துப் பதில் சொன்னது மனம்.

செந்தூர் என்பவன், தன் கண்ணை விட்டும்... வாழ்க்கையை விட்டும் அகன்று விட்டதால், அருகே இருக்கும் ரபின் மீது ஈர்ப்பு வந்து விட்டதோ என்ற சந்தேகம் எழுந்தது!

அந்தக் கோணதில் பார்த்தால், தான் ஒரு நல்ல குடும்பப் பெண்ணே இல்லையோ என்ற சந்தேகம் பூதாகரமாய் எழுந்து நிற்க. அருகே இருந்தத் தூணை இறுகப் பற்றியவள், அப்படியே கீழே அமர்ந்தாள்.

அவளது முகத்தில் தோன்றிய மாற்றங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ரபின், அவள் தோய்ந்து அமர்ந்ததும், வேகம் கொண்டு அவளைத் தாங்கினான்.

''கண்மணி... எழுந்திரும்மா... அங்க போய் உட்காந்துக்கலாம்!'' என்றவன், அவளது கையை அழுத்த மாய் பற்றி, அங்கே இருந்த மண்டபத்திற்குள் அழைத்துச் சென்றான்.

ஒரு தூண் மீது சாய்ந்து அமரும்படி, அவளை உட்கார வைத்தவன், தானும் அருகே அமர்ந்தான்.

''என்னாச்சு? ஏன்.... திடீர்ன்னு?'' என்றான் தலையும் காலும் இல்லாத கேள்வியாக.

''என்ன என்னாச்சு? என்ன திடீர்ன்னுன்னா?'' என்று குழம்பியது போல் தெரிந்த ரோஜாவின் முகத்தில், தான் மனதில் எண்ணியது இவனுக்குத் தெரிந்திருக்குமோ என்ற குழப்பம்!

சற்று நேரம், அவளது முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த ரபின், பக்கவாட்டில் அமர்ந் திருந்த நிலையிலிருந்து மாறி, அவளுக்கு எதிரே அமர்ந்து கொண்டான்.

ரோஜாவின் முகத்தில் அவனது பார்வையின் தாக்கம், பெரும் கலக்கத்தை உண்டு பண்ணியிருந்த போதும், உள்ளே இருந்த குழப்பமும்... தன் மீதே ஏற்பட்ட அவப்பெயரும் மறையவில்லை!

எதிரே அமர்ந்து, அவளது வலது கையை எடுத்துத் தன் இரு கைகளுக்கு நடுவேயும் அவன் வைத்துக் கொள்ளவும். ரோஜாவின் மேனி ஒரு முறை நடுங் கியது!

அதை உணர்ந்தவன் போல், கைகளை அழுத்த மாய் பற்றிக் கொண்ட ரபின்.

''சில விஷயங்களைப் பேசாமலேயே... நம்ம வாழ்க்கையை சரி பண்ணிடலாம்ன்னு நினைச்சேன்! ஆனா... முடியாது போல! ஒரு நேரம் இல்லாட்டி ஒரு நேரம்... உனக்கு அந்த விஷயம் ஞாபகம் வந்துட்டே இருக்குன்னு நினைக்கிறேன்!'' என்றான், ஒரு விதமான முடிவுக்கு வரவழைக்கப்பட்ட மனநிலை யுடன்.

''ஹான்!!'' என ரேஜா பார்த்திருக்கும் போதே,

''நேத்து... பஸ்ல வரும் போதும் சரி... இன் னைக்கு... இதோ இப்பவும் சரி... நீ எதையோ நினைச்சு ரொம்பவே குழம்புற மாதிரி எனக்குத் தோணுது!'' எனக் கூறியவன்.

''எதையோ... அந்த விஷயம்... இந்த விஷயம்ன்னு எதுக்கு சுத்தி வளைக்கணும்? செந்தூர் பாண்டிய

னோடான உன்னோட காதல் உன்னைக் குழப்புது... சரியா?'' என்றான்.

ரோஜாவுக்கு மறைக்கத் தோன்றவில்லை!

தலை தானாக ஆடியபோதும், கண்களில் சிறிதாய் ஒரு நீர்ஊற்று ஒன்று உற்பத்தியாகி, சட்டென கன்னத்தில் உருண்டது!

ரபின், அதைத் துடைக்கவில்லை.

''உனக்கு என்ன குழப்பம்ன்னு நான் சொல்லவா? செந்தூர் பாண்டியனைக் காதலிச்ச அதே மனசுக்கு... எப்படி என்னையும் பிடிக்குதுங்கிற குழப்பம்? கரெக்ட்டா?'' என்றான் நேருக்கு நேராய்.

கண்ணீர் வழிந்த கண்களின் இமைகள், ரோஜாவின் பூவிதழ்களாய் விரிந்தன!

''இங்க பாரு... கண்மணி! நான்... என்னவோ பெரிய மகான் மாதிரி உனக்கு பெரிய பெரிய அட்வைஸ் எல்லாம் பண்ணப் போறதில்லை!''

''முக்கியமா... செந்தூர் மேல வந்ததும் வெறும் ஈர்ப்பு... காதல் இல்லை... அப்படின்னு எல்லாம் உளர மாட்டேன்! சரியா?''

''ஜஸ்ட் ஒன் திங்! இப்போ... நான் அரளிப்பூ வாங்கிட்டு வந்தப்போ... அது உன்னோட தேவைக்கு சூட் ஆகலைன்னு... மல்லிகைப்பூ வாங்கிட்டு வரச்சொன்ன பாத்தியா? அது மாதிரி தான் லைஃப்! உனக்கு... செந்தூர் சூட் ஆக மாட்டான்னு முடிவு பண்ணி... என்னை அனுப்பியிருக்கு! தட்ஸ் இட்!

ஹய்யோ... காசு கொடுத்து வாங்கிட்டோமேன்னு... அந்த அரளிப்பூவை நினைச்சுட்டே... மல்லிகைப் பூவை தலையில வச்சுக்காமவா இருப்பே? இல்லையில்ல... வச்சுப்ப தானே?! அது மாதிரி தான்... இதுவும்! இதான் லைஃப்! வாழ்ந்து தான் ஆகணும்ங்கும் போது... அதை சந்தோஷமா வாழலாமே? கூடவே, இந்தப் புளியோதரையை சாப்பிட்டுட்டே வாழ்ந்தேன்னு வையய்யு... நல்ல காரசாரமா... ச்ச்... புளிப்பா சூப்பரா இருக்கும்!!'' என்றான் கண்ணை உருட்டி, நாக்கை வெளியே நீட்டி.

'எப்படி இப்படியெல்லாம் யோசிக்ககறான்?!' என்று ஓர் பிரம்மிப்புடன் அவனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ரோஜா, அவனது கடைசி வாக்கியத்தில் திகைத்தாள்.

''ச்சை! எவ்வளவு அழகா... அத்தை மாதிரி பேசிட்டு இருந்தீங்க? கடைசில... ச்சை!!!'' என்று சலித்தவளின் முகத்தில் சிரிப்பு உதயமாகி விட்டிருந்தது!

என்ன மாதிரியான மனநிலையில் இருந்தாலும், சிரிக்க வைத்து விடுகிறானே என எழுந்த வியப்பை அடக்கிக் கொண்டு, அவனையே பார்த்திருந்த மனைவியைப் பார்த்துக் கண்ணடித்த ரபின்.

''ஒரு வீட்டுக்கு ஒரு மேரி மாதா போதும் தாயே?! எல்லாரும் அவங்களை மாதிரியே பேசிட்டு இருந்தோம்ன்னு வையய்யு... டாக்குமெண்டரி படம்

பார்க்கிற மாதிரி ஆகிடும்! அதுவும்... நீ... யுகா... மேரி மாதா எல்லாரும் ஒண்ணா சேர்ந்தா... ஒரே செண்டிமெண்ட்ல் சினிமா பார்க்கிற மாதிரி... கண்ணில தண்ணி விழவா வேணாமான்னு நிக்குது! அதை ஈடு கட்டத் தான்... ரபின் தனது லவின் அவதாரத்தை எடுத்து விடுறான்!'' என்றான் சிரிப்புடன்.

ரோஜா தலையில் லேசாய் அடித்துக் கொள்ளவும், ''சரி... சரி... போய் ஒரு சோடா வாங்கிட்டு வா! லெக்ச்சர் கொடுத்துக் கொடுத்து... எனக்குத் தெண்டையெல்லாம் காயுது!'' என்றான்.

இப்படிப் பேசிப் பேசியே, தான் எண்ணியது.... குழம்பியது... வருந்தியது எல்லாம் போன பிறவியிலோ என்று எண்ண வைத்தவன், ''ஹே ஒரு முக்கியமான வேலையை மறந்துட்டோமே?'' என்றான் தலையைத் தட்டிக் கொண்டு.

''என்ன?'' எனக் கேட்ட ரோஜாவின் கையிலிருந்த மல்லிகைப் பூச்சரத்தை வாங்கியவன்,

அவளது மார்பின் மீது, தொங்கிக் கொண்டிருந்த பொன் தாலியை வலது கையால் லேசாய் தூக்கினான்.

ரோஜாவின் மூச்சு சட்டென நின்று போனது!

''நா.... கையை எடுக்கிற வரைக்கும் மூச்சு விடாம இருக்கப் போறியா என்ன? ரிலாக்ஸ் கண்மணி!'' என அவன் சிரிக்கவும்.

நெஞ்சம் வேகமாய் ஏறி இறங்கியது!

''அதுக்காக இப்படியா? ட்ரைன்ல போற மாதிரி... டக்கு... டக்குன்னு கை நடுங்குது இல்ல! மெதுவா மூச்சு விடு!'' என்றான் அதற்கும்.

ரோஜாவின் இதயத்துடிப்பு, அவனது பேச்சுக்குக் கட்டுப்பட்டது போல் சட்டென நேரானது!

''ஹ்ம்ம்! குட் கேர்ள்!'' என்று சான்றிதழ் வழங்கியவன், ரோஜா சாய்ந்திருந்த தூணின் மேல் கொட்டப்பட்டிருந்த குங்குமத்தை எடுத்து, அவளது தாலியில் வைத்தான்!

மீண்டும், ரயிலாய் தடதடத்தது நெஞ்சம்!

''எதுக்கு... இந்த ஓவர் ரியாக்சன்! சும்மா இரு!'' என்றவன், அவள் கையிலிருந்த பூச்சரத்தை, அந்தத் தாலிக் கொடியில் சுற்றிவிட்டான்.

அந்தப் பூச்சரம். ரோஜாவின் பொன்தாலியை மட்டுமில்லாமல் அவளது பூமனதையும் சுற்றிப் பெருவட்டம் இட்டது!

வட்டத்திற்கு முடிவுமில்லை... ஆரம்பமுமில்லை என்ற விதியை மீறி, அந்தப் பூவட்டத்தின் ஆரம்பம் ரபினாய் இருக்க, அதை முழுமை பெறச் செய்யும் நூலாய் ரோஜா இருந்தாள்!

22



ரோஜாவின் மனம் சற்றே தெளிந்திருந்தது!

அதை மேலும் தெளியவைக்கும் வண்ணம், ரபின் என்ற ரபிந்த்ரநாத் நடந்து கொண்டான்!

''ஓகே! கண்மணி... கோவிலை டிக் பண்ணி, வாழ்க்கைக்கான நிறைய டிப்ஸ் வாங்கியாச்சு! இப்ப... சினிமாக்குப் போலாமா?'' என்றான் ரபின், ரோஜாவின் கன்னத்தில் லேசாய் தட்டி.

''சரி!'' என எழுந்தவளுக்கு, வாயெல்லாம் சிரிப்பு!

வண்டியில் ஏறி, ஓர் பிரபல திரையரங்கின் பெயரைச் சொல்லி அங்கே போகச் சொன்னான் ரபின்.

''நேரா... தியேட்டருக்கா? சாப்பிட வேண்டாமா? நீங்க மட்டும்... இரண்டு புளியோதரைப் பாக்கெட்டையும் சாப்பிட்டீங்கல! நா சாப்பிட வேண்டாமா?!'' - பேசுவது தான் தானா என்ற சந்தேகம் ரோஜாவுக்கு வருமளவுக்கு, அவளது குரலில் அதட்டல் தெறித்தது!

''பாத்தியா? சொல்லிக் காட்டிட்ட பாத்தியா?'' என்று தலையை ஆட்டி, மூக்கைச் சுருக்கி, கை நீட்டிக் குற்றம் சாட்டியவன்.

''விடுறா! விடுறா! எவ்வளவோ பார்த்துட்டோம்... இதைப் பார்க்க மாட்டோமா?'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

ரோஜாவின் முகத்தில் மலர்ந்த சிரிப்பு அவனை ஈர்க்க, அவளது கன்னத்தை நிமிண்டி விட்டவன்.

''நம்ம ஊரு மாதிரி... இருக்கும்ன்னு நினைச்சியா? இந்தத் தியேட்டர்... ஒரு மாலுக்குள்ள இருக்கு... அங்கேயே ஃபுட் கோர்ட் இருக்கும்! சாப்பிட்டுக்கலாம்!'' என்றான் அவன்.

போகும் வழியில், ''ஹய்யோ! அத்தைகிட்டப் பேசவே இல்லையே?! யுகா அக்கா... என்ன ஆச்சோ... ஏதாச்சோன்னு நினைச்சிட்டே இருப்பாங்களே?! ஃபோன் தாங்க!'' எனப் பரபரத்தாள்.

''அதெல்லாம் நாங்க சொல்லிட்டோம்!'' என்ற படியே, கைப்பேசியை மனைவியிடம் நீட்டினான் ரபின்.

முதலில் நாச்சியாரின் கைப்பேசிக்கு அழைத்தவள், ''அத்தை!!!!'' என்றாள் ஆசையும் ஆர்வமுமாய்.

''என்னம்மா... புருஷன் மேல பாசம் பொங்கி வழியுதாமே? பார்த்தும்மா... அவனும் வழுக்கி விழுந்து... உன்னையும் கவுத்துடப் போறான்!!'' என்ற கேலியுடன் ஆரம்பித்தவரிடம் சற்று நேரம் பேசிவிட்டு வைத்தாள் ரோஜா. மகனைப் புரிஞ்ச மகராசி!

''யுகாக்காக்கு?'' என வாய் விட்டே யோசித்தவள்.

''விவேக் அத்தானுக்கு போன் பண்ணி சொல்லி... அக்காட்ட சொல்லச் சொல்லவா?'' என்றாள் கணவனிடம்.

கணவனின் கண்ணசைவில், விவேக்கின் எண்ணிற்கு அழைத்தாள்.

தம்பியின் கைப்பேசியலிருந்து அழைப்பு வந்த துமே, ''என்னடா பாபின்? பூமில இருக்கியா? இல்ல வானத்திலயா? இப்ப... ரோஜா உனக்காக யார்கிட்ட சண்டைக்குப் போனா? சார்... வானத்தில... எந்த மேகத்துக்குப் பக்கமா பறக்கிறீங்க?'' என்று சிரிப் புடன் வினவ,

பதிலுக்கு, ''நா... நா... கண்மணி பேசுறேன்!'' என்ற ரோஜாவின் கண்களின் ஓரத்தில், அவளது கணவனின் பிம்பம் பளிச்செனப் பட்டு, நெஞ்சுக்குள் புதைந்தது!

ரோஜா சொன்ன, ''கண்மணி பேசுறேன்!'' என்ற வாசகம், தான் அவளது மனதிற்குள் நுழைந்து விட்டோம் என்ற அவனுக்கு அறிவிப்பு விடுத்தது!

அந்த அறிவிப்பு கொடுத்த ஆனந்தத்தில், அவளைப் பார்த்து தன் சிங்காரக் கண்களைச் சிமிட்டி, நெஞ்சுக்குள் மஞ்சம் கொள்ள முயன்றான்!

அதற்குள், விவேக் ''ஹோ! நீயாம்மா?! நான் ரபின்னு நினைச்சுட்டேன்! சொல்லு ரோஜா!'' என்றான்.

தனக்கு காது கேட்கும் விஷயத்தை அவனிடம் சொல்லி, யுகாவிடம் சொல்லச் சொன்னாள்!

''நீயே சொல்லிடுமா!'' எனச் சொல்லி, யுகாவிடம் கைப்பேசியைக் கொடுத்தான்.

யுகாவின் கைகளுக்கு, கைப்பேசி போய்விட்டது என்பது அறிகுறியாய், ''ஹ்ஹா...'' என்ற ஒலி கேட்க,

''அக்கா... நா கண்மணி பேசுறேன்! எனக்கு... காதில மெஷின் மாட்டிட்டாங்க அக்கா... இப்போ நல்லா காது கேட்குது!!!!'' என்றாள் சந்தோஷமாய்.

ரோஜாவின் சந்தோஷத்தை அவளது குரல் வழியே கேட்ட யுகா. தனக்கு அவளை மிஞ்சிய சந்தோசம் என்பதை தன் பாணியில் வெளியிட்டாள்.

அழுத்தமாய் ''உம்ம்மா!!!!'' என ஒரு முத்தத்தைக் கைப்பேசியின் வழியே, ரோஜாவின் உயிர் தீண்டி னாள் யுகவீணா! தனது பாசத்தில்!

ஒரே ரத்தம் இல்லையென்றாலும், ஒரே முத் தத்தில் தங்களது பாசத்தை வெளியிட்டு, பாசமழை பொழிந்து, அழைப்பை வைத்தனர்!

நேராய் வண்டி, சென்னையின் பிரபல மால் ஒன்றுக்குச் சென்றது!

அங்கிருந்த ஓர் சைவ உணவகம் ஒன்றுக்குள் ரபின். அவளை அழைத்துக் கொண்டு நுழையவும், ''நீங்க என்ன போலீஸ் மாதிரியே நடந்துக்கிட மாட்டுறீங்க?'' என்றாள் ரோஜா, திடீரென்று.

''என்ன திடீர்ன்னு?'' என சிரித்தவன், மேஜை ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அவளுக்கு எதிரே அமர்ந்து கொண்டான்.

''இல்ல போலீஸ்ன்னா... நல்லா நான்-வெஜ் சாப்பிடுவாங்க! எப்பவும்... முகத்தை உர்ர்ன்னு வச்சிருப்பாங்க! பார்த்தாலே... ஒரு மாதிரி பயமா...

மரியாதையா இருக்குகிற மாதிரி இருப்பாங்க! அப்பப்ப... மீசையை நீவி விட்டுப்பாங்க!. நெஞ்சை விறைப்பா வச்சுட்டே நடப்பாங்க! ஏதாவது தப்பு நடந்தா... ஏய்... ஏய்ன்னு கத்திட்டே இருப்பாங்க! ஆனா... இதில ஒண்ணு கூட, நீங்க செய்ய மாட்டன்றீங்களே! அதான் கேட்டேன்!'' என்றாள் ரோஜா சரளமாய்.

''ஹ்ஹஹா!!!!'' என்று வாய் விட்டுச் சிரித்தவன், ''இதெல்லாம்... சினிமால வர போலீஸ் செய்றதும்மா! போலீஸ்ன்னாலே... இதான் அவனோட கேரக்டரா இருக்கும்ன்னு தீர்மானிக்கிறது எல்லாம் தப்பு பேபி தப்பு! ஒரு மனுஷனுக்கு... இருக்கிற அடிப்படை குணம் தான்.. எப்பவும் பிரதிபலிக்கும்! போலீஸும்... ஒரு சாதாரண மனுஷன் தான்!'' என்றான் விளக்க மாய்.

''ரொம்ப அறுவையா இருக்கு!!!'' என்று கழுத்தில் கை வைத்து சிரித்தாள் ரோஜா.

''கொழுப்பு! இந்த ஸ்டெத்தோட கூட்டு சேரா தன்னா கேட்கிறியா?!!'' என்று லேசாய் எம்பி, ரோஜாவின் தலையில் தட்டிவிட்டு அமர்ந்தான் ரபின்.

''அடிக்கிறதுக்கு கஷ்டமா இருந்தா... நா வேணும்ன்னா அங்க வந்து உக்காந்துக்கவா?'' என்று கேட்டுவிட்டு, நாக்கைத் துருத்தி அதைக் கடித்துக் கொண்டாள் ரோஜா.

''ஆஹா!!! ஒரு முழம் மல்லிகைப்பூ... இவ்வளவு ரியாக்ஷனை அள்ளிக் கொடுக்கும்ன்னு தெரிஞ் சிருந்தா... பத்து முழமா வாங்கியிருக்கலாமேடா லவின்! மிஸ் பண்ணிட்டியே!'' என்று தனக்குத் தானே பேசிக் கொண்ட ரபினின் தோளில் தட்டிய படி, அவன் அருகே வந்து அமர்ந்து கொண்டாள் ரோஜா.

அதன், சாப்பாடு நன்றாக இருந்தா? ரபினின் பேச்சு நன்றாக இருந்ததா? ரோஜாவின் சிரிப்பு நன்றாக இருந்ததா? என்பதற்கு சாலமன் பாப்பையா விடம் சென்றால் கூட, சரியான தீர்ப்பு வராது!

உணவின் நடுவே, ''ஆக்சுவலி... நான் ஒரு டாக்டர் ஆகலாம்ன்னு தான் இருந்தேன்! ஆனா... இந்த மேரி மாதா தான் நடுல புகுந்து... பிளேட்டில பிரியாணி பரிமாரிருச்சு!'' என ரபின் சொல்ல.

''நல்லவேளை... உலகம் தப்பிச்சுடுச்சு!'' என்ற வார்த்தைகளை மெலிதாய் சொல்லிவிட்டு, ''ஏன்... டாக்டர் ஆகலை?'' என்று சத்தமாய்க் கேட்டாள் ரோஜா.

''பெரிய அப்பாவி மாதிரி... கண்ணை உருட் டாத!'' என அவளது தலையில் கொட்டியவன்.

''எனக்கு ரத்தத்தைப் பாத்தா ரொம்ப்ப்ப்பப்பப்பயம் தெரியுமா? அதான்.. நான்-வெஜ் கூட சாப்பிடுற தில்லை!'' என்று பதிலுக்குக் கண்ணை உருட்டி னான் ரபின்.

''நம்பிட்டேன்!'' என்ற ரோஜா, ''எங்கப்பா படுத்திருந்த கோலத்தைப் பார்த்தும்... உங்களுக்கு ரத்தத்தைப் பார்த்தா பயம்ன்னு சொன்னா... ஹான்ன்னு கண்ணை மூடிட்டு கேட்டுட்டு இருப்பே னாக்கும்?'' என நொடித்துக் கொள்ள. காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு சிரித்தான், அவளது கணவன்.

''எங்கப்பா'' என்ற வார்த்தையை உதிர்த்த பின்னர் தான், தனக்குக் காது கேட்க ஆரம்பித்ததை, தன் பிறந்த வீட்டுக்குக் கூடச் சொல்லத் தோன்றவில்லை என்பது ரோஜாவுக்குப் புரிந்தது!

கொண்டாடும் இடத்தில் தான் தெய்வமும்... குழந்தையும் என்ற சொல்லடை, முதிர்ந்த மனம் கொண்ட கடவுளுக்கும், பிஞ்சு மனம் கொண்ட பிள்ளைக்கும் மட்டுமே உரித்தானது இல்லையே! உயிரும் உணர்வும் கொண்ட எல்லா மனிதனுக்குமே அது உரித்தானது தான்!

அவளது முகத்தின் தீவிரத்தை வைத்தே. அவளது மனதின் எண்ணங்களைக் கணக்கிட்டவன், ''கண்ணை மூடிட்டு... கேட்டாலும், கண்ணைத் திறந்துட்டே கேட்டாலும்... உனக்கு இப்போ காது கேட்கும்!'' என்று அவளைத் திசை திருப்பினான்.

''உங்க மொக்கையை... அந்த சப்பாத்தியோட சேர்த்து உள்ள தள்ளுங்க! எனக்கு... ஒரு டவுட்! எங்கப்பாக்குத் தான்... யாரு அவரை அடிச்சாங்

கன்னே தெரியலையே! அப்புறம் எப்படி... நீங்க சஸ்பென்ட் ஆனீங்க?'' என்றாள் தாடையில் தட்டி.

சட்டென திரும்பி, ரோஜாவின் காதில் மாட்டி யிருந்த மெஷினை வெளியே எடுத்து, இப்படியும் அப்படியுமாய் பார்த்துவிட்டு, லேசாய் குனிந்து அவளது காது ஓட்டை வழியே ஏதோ இருக்கிறதா என்பது போல் காதை இழுத்து இழுத்துப் பார்த்தான் ரபின்.

''ஹய்யே என்ன செய்றீங்க?'' என ரோஜா கேட்கும் போதே, அவளது மெஷினை மாட்டி விட்டவன், ''இல்ல.. காதில இருந்து மூளைக்கு ஏதாவது வயர் போகுதான்னு பார்த்தேன்!'' எனக் கூறிவிட்டு, அவளது முறைப்பில் அடங்கி ''அடி வாங்கினவனுக்குத் தான் யாரு அடிச்சான்னு தெரி யாது! ஆனா... அடிக்கிறதைப் பார்த்தவனுக்குத் தெரியும்ல! அறிவுக் கொழுந்து! முழு ஸ்டேஷனும் வேடிக்கை பார்க்கும் போது தான்... உங்கப்பாவை அடிச்சு நொறுக்கினேன்!'' என்றான் அவன்.

''யாராவது அப்பாட்ட சொல்லிட்டா?'' எனப் பயந்தாள் ரோஜா.

''ப்ச்!!! பார்த்துக்கலாம்!'' என்று அசால்ட்டாய் தோளைக் குலுக்கிவிட்டு, உணவைத் தொடர்ந்தான்! இந்த அலட்சியம், அவனது வாழ்க்கையை அலட் சியமாய் பந்தாடி விடுமோ என்று ரோஜா பயந்தாள்! பயம் பலிக்குமா?!

உணவு முடிந்ததும், திரைப்படத்திற்கு சென்றார்கள்!

இதற்கு முன்னரும், ரோஜா திரைப்படத்திற்கு சென்றிருக்கிறாள்! ஆனால், அப்போதெல்லாம்... முகத்தை மறைத்துக் கொண்டு, யாரும் பார்த்து விடுவார்களோ என்ற பயத்தில், ஆளே இல்லாத தியேட்டரில் ஓரமாய் ஒரு இருக்கையில் அமர்ந்து, செந்தூரின் தொடுகைக்கு ஆட்பட்டு... படத்தின் மீது சுத்தமாய் கவனம் பதியாது!

ஆனால், இன்று! சுதந்திரக் காற்றை சுவாசிப்பது போல, ஓர் நிம்மதி உணர்வுடன், படத்தோடு ஒன்றி ரசித்துப் பார்க்க முடிந்தது!

அதுவும், சில்லறைத்தனமா சில்மிஷங்கள் இல்லாமல், அணைத்தாற் போல் தோளைச் சுற்றி கை போட்டுக் கொண்டு, படத்தை ரசித்த ரபினின் அருகாமை அவளுக்குள் ஓர் ''ஃபீல் குட்'' உணர்வை நிலைநாட்டியது!

நடு நடுவே ''காது மெஷின்ல எதுவும் பிரச்சனை இல்லையில்ல கண்மணி? ஏன்னா... இன்னைக்குத் தான் புதுசா மாட்டியிருக்கு... ரொம்ப ஹை டெசிபெல் சவுண்ட் கேட்கிறதால... வலி எதுவும் வந்திடப் போகுது! லேசா வலிச்சா கூட சொல்லிடு... வெளிய போய்டலாம்!'' என அவன் கேட்ட போது, மனதிற்கு இதமாய் இருந்தது!

அதே இதம், அடுத்த நாள் தேனிக்கு வந்த போதும் நீடித்தது!

ஏன், கல்லூரிக்கு ரபினின் புல்லட்டில் போய் இறங்கும் போது, அந்த இதம் பெருமிதமாய் கூட ஜொலித்தது!

முன்னர் வந்திறங்கிய போது, மனதிற்குள் இருக்கும் ஒரு வித பயத்தன்மையும்... குற்ற உணர்வும் போய், சுதந்திரமாய்... ஓர் தனி மனுஷியாய்... சுயமாய் வந்திறங்குவது போல். நிமிர்ந்த நடையுடன் உள்ளே நுழைந்தாள்.

தோழிகள் அனைவரும் வந்து, ''ரோசா... காதுக்கு என்னடி ஆச்சு?'' என்று வருத்தம் தெரிவித்த போது கூட,

''அதெல்லாம் இப்ப சரியாகிடுச்சுப்பா! அதான் மெஷின் மாட்டியிருக்கேனே!'' என்று சாதாரணமாய் சொல்ல முடிந்தது!

தொண்டை அடைக்காமல், நாசி விடைக்காமல், கண்ணிலிருந்து ஒரு சொட்டு கண்ணீர் விழாமல், குரல் நடுங்காமல், தன்னால் இந்த விஷயத்தை இவ்வளவு இயல்பாய் சொல்ல முடியும் என ரோஜா நினைத்திருக்கவே இல்லை!

ஒருவேளை, அவளைக் கல்லூரி வாசலில் இறக்கி விட்ட ரபின் ''ஒழுங்கா போய்... ஏ.பி.சி.டி படிச்சிட்டு வரணும் சரியா? அழுகாம... சமத்து புள்ளையா வந்தா... மாமா குச்சி மிட்டாயும் குருவி ரொட்டியும் வாங்கிட்டு வருவேன்! இல்லைன்னா... குச்சியால ரெண்டு போடு போடுவேன்! ஓடிப்போ!'' என்று

அவளது முதுகில் தட்டியதால், விளைந்த சந் தோஷமோ என்னவோ?!

அனைத்தையும் விட, அவளது நெருங்கிய தோழி, ''ஏதோ கேஸ்ல அர்ரெஸ்ட் ஆனதால... செந்தூரை காலேஜ்ல இருந்து டிஸ்மிஸ் பண்ணிட்டாங்க! ஆனா.. ஊரில தான் இருக்கான் போல... ஜாமீனில இருக் கான்னு கேள்விப்பட்டேன்!'' என்று செந்தூர் பாண் டியனைப் பற்றிக் கூறியபோது, ஏனோ அரளிப்பூவும்... கூடவே மல்லிகைப்பூவும் நினைவில் ஊஞ்ச லாடி, தான் சூடிக் கொண்ட மல்லிகைப்பூவின் வாசனையை நெஞ்சில் உணர்ந்தாள் கண்மணி ரோஜா!

எல்லாமே, சரியாகத் தான் சென்று கொண் டிருந்தது!

பத்து பக்கத்திற்கு அறிவுரை வசனம் எழுதியிருந் தாலும் தெளிந்திராத ரோஜாவின் நெஞ்சம், அந்தப் பூ மேட்டரில் ஒரேடியாய் கவிழ்ந்து விட்டிருந்தது!

எப்போது, செந்தூரின் நினைவு நெஞ்சில் உதித் தாலும்... அரளிப்பூவும்... ஓட்டினார் போல மல் லிகைப்பூவும் நினைவில் வந்து, தன் தலையில் தொங்கி... கழுத்தில் குறுகுறுத்த மல்லிகைப் பூச்சரமே முடிவில் மலரும்!

ஆனால், குடிகொண்ட மலல்லிகைப்பூச்சரத்தின் வாசனையைக் குறைக்க, அந்த அரளிப்பூச்சரம் கண் முன்னே தானே இருந்தது!

அதுவும், அந்த அரளிப்பூச்சரம் ''பூஜைக்கு உகந்த தல்ல'' என்பது போல், ரபின் செந்தூர் மீது திருட்டுப் பட்டம் கட்டியது நினைவில் வந்து கொண்டே இருந்தது!

அவனுக்கும் தனக்குமான காதல் அத்தியாயம் முடிந்து விட்டது என்பது புரிந்தாலும், அவன் மீது திருட்டுப்பட்டம் கட்டியது ரபின் என்பது அவளது உள்மனதை உறுத்திக் கொண்டே இருந்தது!

போலீஸ் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஓர் ஏழையின் மீது திருட்டுப்பழி போட்டுவிட்டானோ என்று மூளை குடைந்தது!


ஆனால், மனமோ 'ச்சே! அப்படியெல்லாம் இருக் காது!' என்று அடித்துச் சொன்னது!

மூளை அரளிப்பூவை ஆதரிக்க, நெஞ்சமோ தன்னுள் மணம் பரப்பும் மல்லிகைப் பூவை சூடச் சொல்லிக் கெஞ்ச, ரோஜாவின் மனம் இதற்கொரு தீர்வு வாராதா என்று தவிக்க ஆரம்பித்தாள்!

அதற்கொரு தீர்வும் வந்தது!

ஆனால், அந்தத் தீர்வு... கருகிய செடியில் முளைத்த அவளது செவிப்பூக்களைத் தீண்டிச் சென்றது தான் வினையாகிப் போனது!

23



ரோஜா கல்லூரியில் சேர்ந்த சில நாட்களில், ரபின் தன் ஆக்சன் கிங் அவதாரத்தை மீண்டும்

கையிலெடுத்தான்! அதாவது, சார் சஸ்பென்ஷன் முடிந்து, டியூட்டியில் சேர்ந்தார்!

''ஷப்பா! ஒரு வழியா கிளம்பிப் போய்ட்டான்! இனிமே வீடு வீடா இருக்கும்!'' என்று வேலு நாச்சியார் சந்தோஷமாய் சொல்லும் போதே.

'ப்ச்! வேலைக்குப் போயிட்டானே!!' என்று ரோஜாவிற்கு ஏகப்பட்ட வருத்தமாய் இருந்தது!

''ஏன்க்கா! இப்பப் போனா... சாயந்திரம் தான் வருவாரோ?'' என்று யுகாவிடம் ரோஜா கேட்கவும், யுகா கண் சிமிட்டி, ரோஜாவின் கன்னத்தில் லேசாய் தட்டினாள்.

''ச்ச! போங்கக்கா!!'' என்று அசடு வழிந்தவள். ''நா காலேஜ் கிளம்புறேன்!'' என்று ஓடியே போனாள்.

''ரோஜா கிளம்பியாச்சாம்மா? உன்னை காலேஜ்ல விட்டுட்டு... நான் ஹாஸ்பிடல் போணுமாம்! ஐ.பி.எஸ். ஆர்டர்!'' எனக்கூறி, அவளைக் கல்லூரிக்குக் காரில் அழைத்துச் சென்று இறக்கி விட்டான், விவேகானந்தன்.

''அத்தான்! சாயந்திரம் வரும்போது... நா பஸ்ல வந்திடுறேன்...'' என ரோஜா விடைபெற.

''இல்லம்மா! மாரிமுத்து தாத்தா கார் எடுத்திட்டு... அஞ்சு மணிக்கு வருவாரு... அவரோட வந்திடு!'' என அவன் சொல்லவும்.

'ச்சை! சாயந்திரமும் அவன் வரமாட்டானா?' என்று வருத்தமாய் இருந்தது ரோஜாவிற்கு!

காரை விட்டு இறங்கி, கல்லூரிக்குள் நடக்கையில், இது நாள் வரையில்... அவனது புல்லட்டின் பின்னே அமர்ந்து, அவனது தோளில் லேசாய் கை வைத்து, அவனது பேச்சுக்கு எல்லாம், 'கெக்கே... பிக்கே!' என்று சிரித்துக் கொண்டு வருவதில் இருக்கும் இன்பம், சொகுசு காரில்... ஏ.சியின் குளிரில்... குஷன் சீட்டில்... நன்றாய் தலை சாய்த்துக் கொண்டு அலுங்காமல் குலுங்காமல் வந்த போது சுத்தமாய் இருக்கவில்லை!

மாறாய், எதையோ இழந்துவிட்டது போல் ஓர் உணர்வு!

மாலையில் எப்படியும் அவனுடன் தான் செல்ல வேண்டும் என்று மனம், உறுதியே பூண்டது!

ஆனால், எப்படிச் செல்வது என்று ஒரே சிந்தனையாக இருந்தது!!

தீவிர சிந்தனையின் விளைவாக, மதியம் உணவு இடைவேளையின் போது, தன் தோழியின் கைப்பேசியில் இருந்து ரபினுக்கு அழைத்தாள் ரோஜா.

மூன்று மணிகளுக்குப் பின்னர், ''டி.எஸ்.பி ரபிந்த்ரநாத் ஹியர்!!'' என்ற குரல் கேட்டபோது, ரோஜா ஒரு நிமிடம் விதிர்விதிர்த்துப் போனாள்.

''ரபினா இவன்?'' என்று அவள் திகைத்துக் கொண்டிருக்கும் போதே.

''ஹலோ! யார் பேசுறது?'' என்ற அதட்டல் மறுபுறம் இருந்து வர,

''நான் கண்மணி பேசுறேன்!'' என்று வேகமாய் பதில் சொல்லி, அந்த அதட்டலை மாற்ற முயன்றாள் கண்மணிரோஜா!

''ஹே போண்டாமணி! நீயா?'' என்று ரபின் சந்தோஷமாய்க் கேட்கவும்.

''என்னது? போண்டா மணியா? ஐயோ!!'' முன்னர் ஏற்பட்ட அதிர்ச்சியை விடவும் இந்த அதிர்ச்சி பயங்கரமாய் இருந்தது!

''நீ என் பொண்டாட்டி... உன் பேரு கண்மணி! சோ... ரெண்டையும் சேர்த்து போண்டாமணின்னு கூப்பிடலாம்ன்னு... இன்னைக்குக் காலையில முக்குக்கடையில டீ குடிக்கும் போது முடிவு பண்ணினேன்! எப்படி அய்யாவோட செலக்ஷன்?'' என சிரித்த கணவனை, ஓங்கி ஒரு கொட்டு வைக்க வேண்டும் போல் கையும் காலும் பரபரத்தது ரோஜாவுக்கு!

''வேணாம்!! அப்புறம்... நானும் பேரு வைப்பேன்!'' என்று பதிலுக்கு இவள் மிரட்ட.

''ஹோ! வையேன்! வேணும்ன்னா... உனக்கும் அந்தக் கடையில இருந்து ஒரு சூப்பர் ஸ்ட்ராங் டீ வாங்கி அனுப்பி வைக்கிறேன். போண்டாமணி! குடிச்சிட்டு யோசி!'' என்றவன்.

''என்ன... ஏ.பி.சி.டி. ஒழுங்கா சொல்லாம டீச்சர்கிட்ட அடி வாங்கிட்டியா? நா வந்து டீச்சரை அடிக்கணுமா? இல்லை... ஏ.பி.சி.டி கண்டு

பிடிச்சவனை அடிக்கணுமா. சொல்லு... போண்டா... சொல்லு! ஓடோடி வரேன்!'' என்றான் அவசரம் காட்டி.

'ச்சை... டி.எஸ்.பி.ரபீந்த்ரநாத்ன்னு கம்பீரமா சொல்றானேன்னு ஒரு நிமிஷம் குழம்பிட்டேன்! இவன் வாயெல்லாம்... என்னைக்காவது குறையுமா என்ன?' என்று மனதிற்குள் சலித்துக் கொண்டவளுக்கு, தான் கேட்க வந்ததைக் கேட்காமல் அழைப்பை வைக்க மனம் வரவில்லை.

என்ன தான் கிண்டல் செய்தாலும், அவன் வர வேண்டும் என மனம் ஏங்கியதே!

''யாரையும் அடிக்க வேணாம்... ஆனா...'' எனத் தயக்கமாய் ரோஜா இழுக்க.

''சொல்லு கண்மணி... ச்சே போண்டாமணி! சொல்லு!'' என்று உற்சாகப்படுத்துகிறேன் என்ற போர்வையில் அவளை எரிச்சல் படுத்திக் கொண்டிருந்தான் ரபின்.

''ஹய்யோ! அப்படிக் கூப்பிடாதீங்க... ஒரொரு வாட்டி சொல்லும் போதும்... கன்னமெல்லாம் உப்பி... உருளைக்கிழங்கு போண்டா மாதிரி உருண்டையாக இருக்க மாதிரி இருக்கு!'' என்று சலித்துக் கொண்ட ரோஜா.

'ஹய்யோ! என்ன கிண்டல் செய்யப்போகிறானோ?' என்று மனம் இன்பமாய் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் போதே.

''நா வேலை முடிஞ்சு வரவரைக்கும்ன்னா... மிட்நைட் வரைக்கும் நீ காலேஜை தேவுடு காத்திட்டு இருக்க வேண்டியது தான்!'' எனக் கூறி, அவள் வயிற்றில் புளியைக் கரைத்தவன், மேலும் பேசினான்.

''ஹ்ம்ம்! நடுல வர முடியுமான்னு பார்க்கிறேன்... ஹ்ம்ம் உனக்கு அஞ்சு மணிக்கு காலேஜ் முடியும்ல...''

''அஞ்சு மணிக்கு வர முடியாது! எஸ்.பியோட ஏரியா இன்ஸ்பெக்டர்ஸ் மீட்டிங் இருக்கு! ஹ்ம்ம்... ஆறு மணிக்கு வரேன்... சரியா?'' என அவன் சொன்னதும் தான் ரோஜாவுக்கு நிம்மதியாய் இருந்தது.

''ஹ்ம்ம் சரி'' எனக் கூறியவள், அடுத்து கூறிய வாக்கியம் தான். அன்றைக்கு ஒரு பெரும் பிரச்சனை நடப்பதற்கு வித்தானது.

''ஆறு மணி ஆகும்ன்னா... நான் வேணும்ன்னா... என்னோட ஃபிரண்ட் கலா வீட்டுக்குப் போய்... அவகிட்ட நோட்ஸ் வாங்கிட்டு... அங்கேயே வெயிட் பண்றேன். நீங்க அங்க வந்து கூப்பிட்டுக்கிறீங்களா?'' என ரோஜா கேட்க.

''அவங்க வீடு எங்க?'' என்றான் ரபின், கேள்வியாய்.

ரோஜா இடத்தின் பெயரைச் சொன்னதும், ''ஹ்ம்ம்... கொஞ்சம் அவுட்டர் ஏரியா! பார்த்து பத்

திரமா போ! நானே வந்து கூட்டிக்கிறேன்!'' என்றான் அக்கறையாக.

''ஹ்ம்ம்... நோட்ஸை காலேஜ்லேயே வாங்கிக் கோயேன் கண்மணி! எதுக்கு அவ்வளவு தூரம்?'' என்றான் சிந்தனையுடன்.

''இல்ல... அவங்க அம்மா கூட ரெண்டு மூணு நாளா வீட்டுக்கு வாம்மா வாம்மான்னு கூப்பிட்டுக்கிட்டே இருக்காங்க! நா... முன்னாடியெல்லாம் ஃபிரண்ட்ஸ் வீடுன்னு யாரு வீட்டுக்கும் போனதே இல்லையா... அதான் இப்பப் போலாம்ன்னு நினைச்சேன்... அதுவுமில்லாம, அவ அந்த நோட்ஸை வீட்டில வச்சுட்டு வந்துட்டாளாம்... அதான்... போகட்டுமா வேண்டாமா?''? என அவள் மெல்ல இழுக்க.

''ஓகே!!! போயிட்டு வா!'' என்று அரைமனதாய் சரி சொன்னான், ரபிந்த்ரநாத்.

கூடவே, ''உன்னோட லஞ்ச் ஹவர் முடியுறதுக்குள்ள... சங்கிலி அண்ணேகிட்ட ஒரு போன் கொடுத்து விட்றேன்! இனிமே... அதில பேசு!'' என அவன் கூறவும், ரோஜாவுக்கு மனம் சந்தோஷத்தில் பறந்தது!

உணவு நேரம் முடிவதற்கு, பத்து நிமிடங்கள் முன்னரே, அவர்கள் வீட்டில் வேலை பார்க்கும் சங்கிலி அண்ணன், கல்லூரி கேட் அருகே வந்து நிற்கவும், முகமெல்லாம் மலர்ந்து விரிய, ஓடிப் போய்,

அவருக்கு நன்றி சொல்லிவிட்டு, அந்த அட்டைப் பெட்டியை வாங்கிக் கொண்டாள்.

கதவை விட்டு நகரும் முன்னரே, கைகள் வேகமாய்... அந்த அட்டைப் பெட்டியைப் பிரித்தன!

பல வண்ண ரோஜாக்கூட்டத்தின் நடுவே, ஒரு அழகிய பெரிய சிகப்பு ரோஜா மலர்ந்திருப்பது போலிருந்த அந்த உறையைக் கிழிக்கவே மனம் வரவில்லை ரோஜாவிற்கு!

அந்தப் பெரிய ரோஜா கிழிந்து விடாத வண்ணம், அதை அகற்றியவளின் கைகளில் முதலில் ஓர் கடிதமே தட்டுப்பட்டது.

கடிதத்தின் மீது ''சாரி போண்டாமணி!'' என எழுதியிருக்க,

''ப்ச்!'' என்று செல்லமாய் சலித்துக் கொண்டவள், அந்தக் கடிதத்தைப் பிரித்தாள்.

''நீ இன்னொருத்தங்க போன்ல இருந்து, எனக்குக் கூப்பிடுற வரைக்கும், உனக்கு போன் வாங்கித் தரணும்ன்னு எனக்குத் தோணவே இல்லை பாரேன்... அதுக்குத் தான் இந்த சாரி!'' - இதான் முதல் வரி.

''அச்சோ! எதுக்கு சாரி? நீங்க இப்ப வாங்கிக் கொடுத்ததே எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு!'' - பதிலுக்கு ரோஜாவின் மனம் சிணுங்கியது!

''ஆனா... என்னைச் சொல்லியும் குத்தமில்லை! நீயா ''என்னை'' கூப்பிடுவேன்னு நான் நினைக்கவே இல்லை!!'' - அடுத்த வரி!

''ஏனாம்? நா உங்களைக் கூப்பிட மாட்டேனாக்கும்? அதென்ன... ''என்னை'' ங்கிறதை கோட்ஸ் குள்ள போடறது!? ரொம்பத் தான் நக்கல்!!'' - செல்லமாய் நொடித்தது ரோஜாவின் நெஞ்சம்!

''போன்ல உன்னோட குரல் கேட்டதும்... அப்படியே மைசூர் போண்டாவை... தேங்கா சட்னில நனைச்சு சாப்பிட்ட மாதிரி செம ஜோரா இருந்துச்சு!'' - மூன்றாம் வரி!

''கருமம்! நினைச்சது தான் நினைச்சீங்க... ஒரு உருளைக்கிழங்கு போண்டாவை நினைக்கக் கூடாது?! மைசூர் போண்டாவாம்... எனக்குப் பிடிக்கவே பிடிக்காது!'' - கோபம் கொண்டு முகத்தைச் சுருக்கினாள் ரோஜா.

''ஆனா... பக்கத்து ப்ளேட் சட்னில நனைச்சு சாப்பிட்ட மாதிரி ஒரு ஃபீல் வந்துச்சா... அதான் போன் கொடுத்துவிட்டேன்!'' - நான்காம் வரி!

உள்ளங்கையால் நடு நெற்றியில் நங்கென்று அடித்துக் கொண்ட ரோஜாவின் இதழ்களில் மட்டும் ஏனோ சிரிப்பு!

''போன் ஆன் ஆகி தான் இருக்கு! எடுத்ததும்... மியூசிக் ப்ளேயரை ஆன் பண்ணிக் கேளு!'' - கடைசி வரி!

சட்டென பரபரப்பின் பிள்ளையாகி, கைப்பேசியை எடுத்து, ஹெட்போனை மாட்டி, மியூசிக் ப்ளேயரை உயிர்ப்பித்து என மின்னல் வேகத்தில் செயல் பட்டவளுக்கு,

அதில், ''என்னைத் தொட்டு அள்ளிக் கொண்ட மன்னன் பேரும் என்னடி! எனக்குச் சொல்லடி!'' என்ற பாட்டு ஒலித்தது!

ரோஜாவின் மேனி முழுதும், வெட்கத்தில் சிலிர்த்தது!

'அச்சோ! கண்டுபிடிச்சிட்டான் போலவே!' என அவள் எண்ணும் போதே.

''நெஞ்சைத் தொட்டு அள்ளிக் கொண்ட கண்ணன் ஊரும் என்னடி! எனக்குச் சொல்லடி!'' என்ற வரி வர, இப்போது ''கண்ணன்'' ''கள்ளனாய்'' மாறாமல் ''கண்ணனாகவே'' ஒலித்தான்!!

''நிஜமாவே கண்ணன் தான்! வாயாடிக் கண்ணன்!'' எனத் தனக்குத் தானே கூறிக் கொண்டவளை, கைப்பேசியின் அழைப்பு மணி திகைக்கச் செய்தது!

கைப்பேசியின் திரையில் மின்னிய ''லவின் காலிங்!'' என்ற சொற்கள். உள்ளுக்குள் ஓர் மின்னலை வெட்டிச் செல்ல வைத்தன!

முதல் மணி முடிவதற்குள்ளே, அழைப்பை எடுத்துக் காதில் வைத்தவளின் செவிகளை ''நீ அழைத்த அழைப்பிற்கோர் நன்றி!!!'' என்று ''நீ பார்த்த பார்வைக்கொரு நன்றி!'' என்ற மெட்டில் பாடினான் அவளது கணவன்!

வானில் எங்கோ தூரமாய் பறந்து, அவனது சிறகுக்குள் அடைக்கலம் ஆவது போல் நெஞ்சம் இனித்தது!

''சரி போண்டா! எனக்கு முக்கியமா ஒரு வேலை இருக்கு! சாயந்திரம் கரெக்ட்டா ஆறு மணிக்குக் கூப்பிடுறேன் சரியா? பாய்!'' - சட்டென தீவிரமான குரலுக்கு மாறி, அழைப்பை வைத்தான் ரபின்!

அவன் அழைப்பை சீக்கிரம் வைத்துவிட்ட போதும். ரோஜாவுக்கு மனதிற்கு நிறைவாகவே இருந்தது!

அன்றைய தினத்தின் மீதி வகுப்புக்கள் முழுதும் ரோஜாவின் கண்கள், பெஞ்சுக்கு அடியே இருந்த புது ஃபோனையே வருடிக் கொண்டிருந்தன என்பதைச் சொல்லவும் வேண்டுமா என்ன?

ஒருவழியாக, கல்லூரியும் முடிய, தோழி கலாவுடன் கிளம்பி அவளது வீட்டிற்குச் சென்றாள் ரோஜா.

அவர்கள் வீடு சற்றுத் தொலைவு என்பதால், ஐந்தே முக்கால் மணிக்குத் தான் இருவரும் அங்கே சென்றனர்.

வாய் என்னவோ, கலாவின் தாயும் தந்தையும் பேசியதற்கு பதில் சொன்னதே தவிர, கண்கள் கைப்பேசியையே நொடிக்கொரு முறை பார்த்துக் கொண்டிருந்தது! கைகளோ, ஒரு நிமிடத்திற்கு ஒரு முறை லாக் ஆகும் கைப்பேசியை உயிர்ப்பித்துக் கொண்டிருந்தன.

சரியாக ஆறு மணி!

அமர்ந்திருந்த இருக்கையை விட்டு சட்டென எழுந்து விட்டாள் ரோஜா.

''என்னம்மா? ஏன் எழுந்துட்டே?'' என்று கலாவின் தாய் கேட்க.

''அது... அது வந்தும்மா... பாத்ரூம்...'' என்று ஏதோ சொல்லி சமாளித்தாள் ரோஜா.

''பின் பக்கம் இருக்கும்மா... போயிட்டு வா! ஏய்... கலா கூட்டிட்டுப் போ!'' என அவர் அனுப்பி வைக்கவும்.

குளியலறைக்குள் நுழைந்து கதவை சாத்தியவள், கைப்பேசியை எடுத்துப் பார்த்த போது, உள்ளங்கை லேசாய் ஈரமாய் இருப்பது போலிருந்தது! கையில் வேர்வை படியும் அளவிற்கு, கைப்பேசியை இறுகப் பிடித்திருக்கிறோம் என்பதையெல்லாம் உணரும் நிலையில் அவளில்லை.

'ஏன் போன் செய்யவில்லை? ஏன் போன் செய்யவில்லை?' என மனம் படபடக்க. தானே செய்யலாம் என்று அவள் முயலும் போது, கைப்பேசியே கிணுகிணுத்தது!

''ஹாஆ!!!'' என்று உள்ளுக்குள் ஓர் பரவசம் ஓடி மறைய, வேகமாய் அதை எடுத்தாள் ரோஜா.

''ஹே போண்டா பேபி!'' என அவனது உற்சாகக் குரலில், இவ்வளவு நேரம் வரையிலும் உள்ளே ஓடிய ஓர் பதட்டம் முற்றிலுமாய் வடிந்து போனது!

''எங்க இருக்கீங்க? மணி என்ன தெரியுமா?'' என ரோஜா எரிச்சலாய் சொல்ல.

''ஆறு மணி ரெண்டு நிமிஷம்!!'' என்றான் அவன் சிரிப்புடன்.

''ப்ச்! ஜோக் அடிக்கிற நேரமா இது? எப்ப வரீங்க?'' என்றாள் ரோஜா, கோபமாய்.

''சாரிம்மா! இன்னும் அரை மணி நேரமாகும்! நீ... அங்கேயே வெயிட் பண்ணு... நா வந்துடுறேன்!'' என அவன் கூறவும்.

''சரி'' என சலித்துக் கொண்டே கைப்பேசியை வைத்தவள், திரும்பி வீட்டுக்குள் வந்தாள்.

அந்த அரை மணி நேரமும், பிராண அவஸ்தையாய் போனது ரோஜாவிற்கு!

சரியாக இருபத்தியந்தாவது நிமிடம், ''அவரு... அவரு இப்ப வந்திருவாரு... என்னைய கொண்டு போய் வீட்டில விட்டுட்டு, வேற எங்கேயோ போகணும்னு சொன்னாரு... உங்களுக்குத் தான் தெரியுமே... அவர் டி.எஸ்.பின்னு... நேரமே இருக்காது! நா கேட் பக்கத்தில போய் நின்னுக்கிறேன்... வந்ததும் கிளம்ப சரியா இருக்கும்!'' என்று எதையோ கோர்வையாய் சொல்லிவிட்டு, விடை பெற்றாள்.

கலாவும் அவளது அம்மாவும் கதவு வரை வந்து வழியனுப்பினர். அவர்கள் வீட்டின் முன்னே சிறு தோட்டம் இருந்தது. அதைத் தாண்டி, வெளி கேட் ஒன்று இருந்தது.

அவர்கள் வீட்டுக் கதவைத் தாண்டி, வெளிக்கதவு பக்கம் வரவும், ''இல்லம்மா, நானே போய்க்கிறேன்!

நா என்ன... அவ்வளவு பெரிய ஆளா?'' என்று ஆவர்களை இருத்தியவள்; கையில் இருந்த கைப் பேசி சிணுங்கவும் வேகமாய் எடுத்தாள்.

''போண்டாமணி! இன்னும்... அஞ்சு நிமிஷத்தில நா அங்க இருப்பேன்!'' - கணவனின் குரல் கேட் கவும், ''இதோ வந்துட்டேன்!!!'' என உற்சாகமாய் கதவைத் திறந்து கொண்டு, வெளியே வந்தாள்.

அவள் தாழ்ப்பாளை நீக்கிவிட்டு, இரண்டடி எடுத்து வைத்த நொடி ''ஐயோ... என் தாலியை அத்துட்டு ஓடுறானுங்களே!!'' என்ற பெண்மணி யின் குரல் ஓங்கி ஒலிக்க.

திடுக்கிட்டு, திரும்பிய ரோஜாவின் கண்ணில்,, ஒரு பைக் சீறிக் கொண்டு வருவது தெரிந்தது! அந்தப் பைக்கைத் தவிர, அந்த ரோட்டில் வேறு எந்த வாகனமும் இல்லை! ஆள் நடமாட்டமும் இல்லை!

அந்த பைக்கில் வருபவர்கள் தான். அந்தப் பெண்மணியின் நகையைத் திருடியிருக்கிறார்கள் என்பது தெளிவாய்ப் புரிந்தது!

என்ன எண்ணினாளோ, தன்னைக் கடந்து செல்லப் போகும் பைக்கின் குறுக்கே போய் நின்று, ''டேய்... வண்டியை நிறுத்து!!!'' என அவள் கத்த.

வண்டியில் வந்தவன் என்ன இவளது புருஷன் போல் மாங்கா மடையனா?

அவளைச் சுற்றிக் கொண்டு வண்டி செல்ல, ரோஜாவின் வேகம்... ஆவேசமாய் மாறியது!

''ஏய்! ஏய்! நில்லுடா!'' என இமைக்கும் நேரத்தில், தன் கையை வீசி, வண்டியின் பின்பக்கம் இருந்தவனின் சட்டையை அவள் பிடிக்க முயல, வண்டி சென்று கொண்டே இருந்தது!

அந்த நொடி, பின் பக்கம் அமர்ந்து... கண் மட்டும் தெரியும்படி, கருப்பு கர்சீப் கட்டி முகத்தை மறைத் திருந்தவன், தன்னைப் பற்றிய ரோஜாவின் கையை மறு கையால் பற்றி இழுத்து, அவளை தன் முன்னே விட்டான்.

அவனது அச்செயலை எதிர்பார்க்காத ரோஜா ''ஆஅஅ!'' எனக் கத்தும் போதே, ஓடிக் கொண் டிருந்த வண்டிக்கும்... நின்று கொண்டிருந்த ரோஜா வுக்குமான வேக்குறைவு, ரோஜாவைத் தடுமாறச் செய்தது!

அவள் சுதாரிப்பதற்குள், தள்ளாடிக் கொண்டு நின்ற அவளது முகத்தில் தன் வலது கையை வைத்து, வேகம் கொண்டு தள்ளினான் பின்னே அமர்ந்திருந் தவன்.

அவன் தள்ளிய வேகத்தில், ரோஜா சாலையில் தடுமாறி விழ, அவளது காதில் மாட்டியிருந்த ஹியரிங் அய்ட், தெறித்து விழுந்த வேகத்தில், பைக்கின் பின் சக்கரம் அதில் ஏறிச் சென்று, அதை சுக்கு சுக்காய் நொறுக்கியது!

அதே நேரம், ரோஜாவின் வலது காதிலிருந்து இரண்டு சொட்டு ரத்தம் வந்தது!

ஆனால், அந்த ரத்தத்தை விட, தன்னைத் தள்ளி விட்டவனின் ஸ்பரிசம் ரோஜாவின் மூளைக்குள் பெரும் பிரளயத்தை உண்டு பண்ணியது!!

அவன், செந்தூர்பாண்டியன்!!!

''ஹய்யோ இவனா? இவன் திருடன் தானா?!'' என ரோஜா எண்ணும் போதே.

அந்த பைக்கில் அமர்ந்திருந்த இரண்டு பேரும், ''ஹய்யோ!'' என்ற சத்தத்துடன் அவளருகே வந்து விழ... ம்ஹூம்... பறந்து வந்து விழ,

அவளுக்குப் பரிச்சியமான புல்லட் ஒன்று அருகே வந்து நின்றது!

''என்னங்க!'' என்ற கூவலில் தன் வலியை நிரப்பி, அவனிடம் பாய்ந்தாள் ரோஜா!

24

''அவ... அவன்... செந்தூர்ங்க!'' என ரோஜா ரபினின் சட்டையைப் பிடித்தாள்.

''தெரியும்! நீ முதல்ல... தள்ளி நில்லு!'' என்றவன், ரோஜா இன்னமும் அவனை ஒட்டியே நிற்கவும், அவளை அழைத்துச் சென்று ஓரமாய் நிற்க வைத்துவிட்டு வந்தான். அதற்குள், கலாவின் வீட்டு

மனிதர்கள்... அக்கம்பக்கத்தார் என்று கூட்டம் கூடி விட்டிருந்தது!

வந்திருப்பவன் போலீஸ் என்பதை அவனது சீருடையை வைத்துத் தெரிந்து கொண்ட அனை வருமே, ஒதுங்கி நின்று வேடிக்கை மட்டுமே பார்த் தனர்!

வந்தவன், வண்டியிலிருந்து விழுந்த இரு எருமைகளில் முக்கிய எருமையை எட்டி ஒரு உதை விட்டான்!

அவன் ''ஆஆ...'' எனக் கத்தும் போது, ''ஜாமீன்ல இருக்கோம்ங்கிற அறிவு கூட இல்லாம... திரும்ப கை வரிசையைக் காட்ட ஆரம்பிச்சிட்டியாடா? ச்சை!'' எனக் கையை உதறியவன், செந்தூர் பாண்டியனின் சட்டையைப் பிடித்து மேலே இழுத்தான்.

''இனி... வெளியவே வர முடியாதபடி... பண் றேன்டா ராஸ்கல்!'' என்றவன், அவனது அடி வயிற்றில் ஓங்கி ஒரு குத்து விட்டான்.

அதற்குள், வண்டி ஒட்டிக் கொண்டு வந்தவன் எழுந்து ஓடப் பார்க்க, வலது கையால் செந்தூரைப் பிடித்தபடி, இடது கையால் மற்றவனின் சட்டைக் காலரைப் பிடித்து இழுத்தான் ரபின்.

இழுத்த வேகத்தில் அவன் தடுமாற, இடுப்புக்கு மேலே தன் இடது காலைத் தூக்கி ஓங்கி ஓர் உதை விட்டான் ரபிந்த்ரநாத்.

இருவரும் ''அம்மா... ஐயோ!!!'' என்று அலறுவது வாயசைவில் கேட்டாலும். அவர்களது காட்டுக் கத்தல் தன் காதில் விழவில்லை... தனக்குக் கேட்கவில்லை என்பதை உணர்ந்த ரோஜா, மெல்ல வலது காதைத் தொட்டுப் பார்த்தாள்.

காதின் ஓரம் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது!

''ஹய்யோ!!'' - விக்கித்து நின்றாள் ரோஜா!

''முருகா! டாக்டரம்மா... இன்னொரு வாட்டி அடிப்பட்டா காது சுத்தமா கேட்காதுன்னு சொன்னாங்களே... ஹய்யோ... என்ன செய்றது?'' என்று மனம் பீதியில் உறைந்தது.

அருகே இருந்த கலாவின் கையை இறுகப் பிடித்து, ''கலா... எனக்கு... எனக்கு காதில இருந்து ரத்தம் வருதுடி! எங்க அத்தானுக்கு ஒரு போன் போட்டு... என்னைய இங்க வந்து கூட்டிட்டு போகச் சொல்றியா?'' என்றாள் நடுங்கிய குரலுடன்.

''ஹய்யோ! ரத்தம் வருதா? ஹய்யோ ஏன் ரோசா... நீ ஏன் அவனுங்களைப் பிடிக்கப் போறே? இப்ப என்ன பண்றது?'' என்று பதறிய அவளது உண்மைத் தோழி, வேகமாய் ஓடிச் சென்று தன் கைப்பேசியை எடுத்து வந்து, ''உங்க அத்தான் நம்பர் சொல்லு...'' என்றாள்.

''என்ன... என்ன கேட்குற? நம்பரா?'' எனத் தானாகவே ஊகித்து ரோஜா கேட்கவும், கலாவுக்கு அழுகையாய் வந்தது! பிறந்தது முதல்... இந்த சில

நாட்களாய் தான் ரோஜாவின் முகத்தில் உண்மையான சந்தோஷத்தைப் பார்க்கிறாள் அவள்! அதற்கும்... இப்படியொரு வேட்டு வைக்க வேண்டுமா? ஏன்ய்யா கடவுளே! என்று ஆயாசமாய் வந்தது!

அதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, ''ஆம்!'' என்பது போல் அவள் தலையசைக்க.

''ஹான்! நம்பர்? இரு... என்னோட ஃபோன்ல இருக்கா பாக்கிறேன்...'' என்று அவள் தன்னிடம் இருந்த போனைத் தேட முயற்சி செய்ய, அதைக் காணவில்லை.

''ஹய்யோ! போனைக் காணோம் கலா? அந்த... அந்த செந்தூர் தள்ளி விட்டத்தில... கையில இருந்த போன் எங்கேயோ விழுந்துருச்சு போல... நா போய் எடுத்தாறேன்!'' என்றவள், வேகமாய் ரோட்டின் பக்கம் ஓடி,

இரு கைகளிலும் இரு நரிகளைப் பிடித்திருந்த ரபின், ரோஜாவை அங்கே காணவும், ''இங்க ஏன் வந்தே?'' எனக் கர்ஜித்தான்.

ஆனால், அவனது காட்டுக்கத்தல் எல்லாம் ரோஜாவின் செவிப்பறையைத் தீண்டவே இல்லை என்பதை, அவளது மும்முரமான தேடல் வெளிக் காட்டியது!

ரோஜாவுக்குக் கேட்கவில்லை என்றால் மற்ற வருக்குக் கேட்காதா என்ன? அவனது கர்ஜனையில்

ஒரு நிமிடம் மூச்சு விட மறந்த கலா. வேகமாய் ஓடிச் சென்று தோழியின் கையைப் பற்றி இழுத்தாள்.

ஆனால், ரோஜாவோ "விடுடி... அவரு முதமுதல வாங்கித் தந்த போனு! ஹய்ய்யோ... எனக்கு அது வேணும்... ச்சை... அவரு எனக்குன்னு ஆசையா வாங்கித் தந்தது எனக்கு அது வேணும்... அது கூட இருக்கையில அவரு கூடவே இருக்க மாதிரி இருந்துச்சு தெரியுமா... எனக்கு அது வேணும்! விடுடி! நா எடுத்திட்டுத் தான் வருவேன்!" என்று தன் கையை உதறிக் கொண்டு, வெறி கொண்டவள் போல் சாலையை அலசிக் கொண்டிருந்தாள்,

கலாவுக்கு சொல்லப்பட்ட பதில், ரபின் இதயத்தில் வெண்சாமரம் வீசி, அனல் காற்றைக் கக்கிக் கொண்டிருந்தது!

ஒதுக்குப் புறமான ஏரியா என்பதால், முழு வீதிக்கும் ஒரே ஒரு தெரு விளக்கு மட்டுமே இருந்தது! பணமிருக்கும் இடத்தில் மின்னும் மின்சாரத்தில் ஒரு பகுதியை, மூன்று வீதிக்குத் தெருவிளக்காக்கலாம்! ஆனால், அங்கே?!

காதிலிருந்து வழிந்த ரத்தம் பெருத்த வலியைக் கிளப்பிய போதும், தன் கணவன் தனக்கு முதன் முதலாய் வாங்கிக் கொடுத்த பொருளைத் தொலைத்து விட்டோம் என்ற வருத்தமே, ரோஜாவை ஆட்டி வைத்தது!

கண்ணிலிருந்து கண்ணீர் வழிய, கண்களை அகல விரித்து விரித்து, சாலையை சல்லடை

போட்டு அலசிக் கொண்டிருந்த மனைவியைக் காண, ரபினுக்கு உருகி விட்டது!

ஆனால், அவளைத் தடுக்கும் வழி தான் தெரியவில்லை.

கையில் பிடித்திருக்கும் இரு நாய்களையும் விட்டுவிட்டு, மனைவியைப் பார்க்க ஓட முடியாது! ஒரு வினாடி. அவகாசம் கிடைத்தாலும்... இந்த இருவரும், நாலு கால் பாய்ச்சலில் ஓடி விடுவார்கள்! ஹ்ம்ம் என்ன செய்வது? கூடி நிற்கும், மாமனிதர்கள் யாரும் உதவிக்கு வருவது போலவும் தெரியவில்லை! அவர்களிடம் ஒப்படைத்தாலும், இரண்டே தள்ளில் அவர்களைத் தள்ளிவிட்டு, ஓடி விடுவார்கள்!

'ஹ்ம்ம்!!! என்ன செய்வது? என்ன செய்வது?' என வேகமாய் யோசித்தவன்.

"யாராவது... ஆர் 4 போலீஸ் ஸ்டேஷன்க்கு போன் பண்ணி, நடந்ததைச் சொல்லி, இங்க வரச் சொல்லுங்க! டி.எஸ்.பி வரச் சொன்னாருன்னு சொல்லுங்க!! சீக்கிரம்!!" என்று அவசரப்படுத்தினான்.

அந்தப் பகுதி வாசி ஒருவர், வீட்டினுள் வேகமாய் ஓடினார்.

அதன் பின்னர், "யாராவது சங்கரன் ஹாஸ்பிடலுக்கு போன் பண்ணி, டாக்டர் விவேகானந்தனை... இந்த இடத்துக்கு வரச் சொல்லுங்க. ப்ளீஸ்! அவசரம்!" என அவன் கத்த.

"அவருக்கு தான் சார்... போன் பண்ணலாம்ன்னு இருந்தேன்... நம்பர் தெரியல..." என்று பரிதவித்தாள் கலா.

"ஹாஸ்பிடல் நம்பருக்கு போன் பண்ண வேண்டியது தானே?" என்று எரிச்சல் பட்டவன்.

"ஓகே! ஓகே! இதான் நம்பர்..." எனக் கூறி, தன் அண்ணனின் எண்ணை வேகமாய் கூறினான்.

அடுத்த பத்தாவது நிமிடம் போலீஸ் வந்து விட்டனர்.

அது வரையிலும், அந்தத் திருட்டு நாய்கள் இரு வரையும் நகரவிடாமல் கையை முறுக்கிப் பிடித் திருந்த ரபின், தன் பிடியை லேசாய் தளர்த்தினான்.

ரத்தம் கூடப் பாய முடியாதபடி, இறுக்கிப் பிடித் திருந்த அவனது பிடியை விட்டு விடுபட்டதும், வாய் விட்டே "ஹப்பா!" என்று நிம்மதி பெருமூச்சு விட்டனர் இருவரும்.

ஆனால், அந்த நிம்மதி... செந்தூரின் கழுத்துப் பட்டையில் கைவைத்து, தள்ளிய ரபின், அவனது தலையை போலீஸ் ஜீப்பின் பானெட்டில் மோதிய போது, சுத்தமாய் தொலைந்து போனது!

"ஜாமீன்ல இருக்கும் போது... இந்த நாதாரித் தனம் பண்றியாடா நாயே? உன்னை... ஜென்மத் துக்கும் வெளிய வர முடியாதபடி செய்றேனா இல் லையா பாரு?" என்ற ரபின், அவனது தொடையில்

ஓங்கி ஒரு உதை விட, சப்தநாடியும் ஒடுங்கிப் போயிற்று செந்தூர்பாண்டியனுக்கு!

தொலைந்து போன கைப்பேசியை, ரோட்டின் மூலை முடுக்கெல்லாம்... சல்லடை போட்டு தேடிக் கொண்டிருந்த கண்மணி ரோஜா, ஏதோ உள் ளுணர்வு உந்த, சட்டென திரும்பிப் பார்த்தாள்.

கண்களில் ரௌத்திரம் தாண்டவமாட, "ஒரு வாட்டி போலீஸ் அடி வாங்கினது பத்தாது போல... இன்னொரு வாட்டி கேட்குதாடா மாப்பிளைகளா? இந்த வாட்டி... நா அடிக்கிற அடியில... தாலி அறுக் கிறது என்ன... தாலி கட்டக் கூட நீ பயந்து அலறணும்!" என்று பற்களைக் கடித்துக் கொண்டு, அடிக்குரலில் சீறிய ரபின், செந்தூரின் முக்கிய இடத்தைத் தனது முட்டியால் பதம் பார்த்தான்!

செந்தூரின் பாதி உயிர் அங்கேயே போய் விட் டிருந்தது!

ரோஜாவின் கண்முன்னே செந்தூர் அடி வாங்க, அவளது மனக்கண்முன்னே அந்த அரளிப்பூச்சரம்... அழுகிப் போய்... குப்பைத் தொட்டியில் வீசப்பட்டது.

மல்லிகைப் பூவின் வாசத்தில் முற்றிலுமாய் தன்னைத் தொலைக்க விடாமல் தவித்த அந்த அரளிப்பூ கண்ணுக்குத் தெரியாமல்... கருத்தினில் பதியாமல் தூரமாய் சென்று விட, மனம் முழுவதும் மல்லிகையின் வாசனையே நிரம்பி இருக்க,

"மாமா!" என அழைத்தாள் ரோஜா! அந்த அழைப்பில்... தன் உயிரின் தீண்டலும்... உதிரத்தின்

மிச்சமும்... உணர்வின் சாரமும்... உடலின் மோகமும் என அனைத்தையும் கலந்து "நான் திருமதி.ரோஜா ரபிந்த்ரநாத் ஆகிவிட்டேன்!" என்று உரக்கப் பறை சாற்றினாள்.

அது வரையிலும், செந்தூரின் திருட்டுத் தனத்தி லேயே வெகுண்டு போயிருந்த ரபினின் மனம், மனைவியின் "மாமா!" என்று அழைப்பில் மொத்த மாய் கவிழ்ந்து போனது!

செந்தூரின் மீதிருந்த பிடி தானாய் தளர, அவனை அப்படியே விட்டுவிட்டு, வேகமாய் ரோஜாவின் புறம் வந்தான் ரபின்.

"கண்மணி!!!" என வேகம் கொண்டு வந்த வனை, ஓடிச் சென்று அணைத்துக் கொண்டாள் கண்மணி!

பொது இடம்... கூடியிருக்கும் மனிதர்கள்... எதிரே இருக்கும் செந்தூர்... அடிபட்டிருக்கும் காது... இது எதுவுமே ரோஜாவின் மனதில் பதியவில்லை!

தன் மனதினுள் தான் உணர்ந்த காதலை, காதல் கொண்டவனிடம் காட்டி விட வேண்டும் என்ற வேகம் மட்டுமே அவளை வழி நடத்தியது!

அவளுக்குத் தன் மேலிருப்பது காதல் தான் என்பதை என்றோ உணர்ந்துவிட்ட ரபினுக்கும், அவளாகவே அதை உணர்ந்த வினாடி மிகவும் சந்தோஷமாய் இருந்தது!

அவளது அணைப்பிற்கு எதிரொலியாய், அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டவனுக்கு, சந்தோசம்... காதல்... நிம்மதி... உலகை வென்ற உணர்வு இதெல்லாம் இருந்தது சிற்சில வினாடிகள் மட்டுமே!

காதலன் என்பதை விடவும் காவலன் என்ற உணர்வு அவனை வேகமாய் ஆட்கொள்ள, மனைவி யின் முகத்தை நிமிர்த்தி, அவளது காதைப் பரி சோதித்தான்.

"ஹய்யோ! ரத்தம்... என்ன கண்மணி இது? இதை முதல்ல பார்க்காம...!!! முதல்ல ஹாஸ்பிடல் போலாம் வா... இந்த விவேக்கை என்ன இன்னும் காணோம்?" என அவன் பதறும் போதே, விவக்கின் கார் வந்து விட்டிருந்தது.

"ஹப்பா வந்துட்டான்..." என்றவன், ரோஜாவை அதில் ஏற்றிவிட்டு. ஒரு காவலாளியை அழைத்து, "என்னோட பைக்கை ஸ்டேஷன்ல நிறுத்திடுங்க! நைட் வந்து எடுத்துக்கிறேன்!" என்ற ஆணையுடன் தானும் வண்டியில் ஏறினான்.

அவன் ஏறப் போகும் சமயம், ரோஜா வண்டியி னுள் இருந்து இறங்கினாள்.

"ப்ச்! என்ன கண்மணி... உள்ள ஏறு!" என்று அவன் அவளை உள்ளே தள்ள,

"போனு... போனை காணோம்... எடுத்திட்டு வந்துடுறேன்" என்று தவித்தது ரோஜாவின் குரல்.

"ப்ச்... நா இன்னொரு போன் வாங்கித் தரேன்... கண்மணி! நீ ஏறு!" என்று தன் பலம் கொண்டு அவளை உள்ளே நகர்த்தினான் ரபின்.

"இல்ல... நீங்க முதல வாங்கித் தந்தது... நா... எடுத்திட்டு வரேன்..." என்று தவித்தாள் ரோஜா.

"சொல்றதைக் கேளுடி! வேற வாங்கித் தரேன்... இவ லவ்ஸ்க்கு ஒரு எல்லையில்லாம போச்சு!" என்று ஓங்கி ஓர் அதட்டல் போட்டவன், தானும் உள்ளே அமர்ந்து கதவைத் தாளிட்டான்.

வண்டியை வேகமெடுத்தான் விவேக்.

அரை மணி நேரத்தில், மருத்துவமனையை எட்டியிருந்தனர் மூவரும், அங்கே யுகா, பதட்டத்துடன் காத்திருக்க, பரிசோதனைகள் ஆரம்பமாகின.

ஒரு மணி நேரத்தின் முடிவில். "காது ஜவ்வு கிழிஞ்ச மாதிரி தெரியல! ஜஸ்ட்... அந்த மெஷின் வெளிய வந்த வேகத்தில... உள்பக்கம் காயம் ஏற்பட்டிருக்கு!" என்ற விவேக்.

"போன வாட்டி... அதாவது வலது காதில... காத்து ஜவ்வு முழுசுமே சேதமாகி இருந்தது! அந்த மாதிரி இப்ப இல்ல! சோ... பயப்பட வேண்டாம்ன்னு தான் நினைக்கிறேன்! எதுக்கும்... நாளைக்கே சென்னைல காட்டிட்டு வந்துடுறது பெட்டர்!" என்றான் யோசனையாக.

"ஹ்ம்ம்!! அப்படிச் சொல்றியா? ஹ்ம்ம்... நாளைக்கு என்னால போக முடியாது! நீயும்.. யுகாவும்

போக முடியுமா? இல்ல... அம்மாவையும் யுகாவையும் ரோஜாவோடு அனுப்புவோமா?" என ரபின் கேட்கவும்.

"ஏன்டா... நீ போயிட்டு வாயேன்!" - ரோஜாவின் மனதைப் புரிந்த ஒரு மூத்த சகோதரனாய் சொன்னான் விவேக்.

"இல்ல... விவேக்! எனக்கு... இன்னும் ஒரு வாரத்துக்கு வேலை சரியா இருக்கும்! என்னால நகரவே முடியாது!" என்றான் ரபின், கண்ணில் தீவிரத்தைத் தேக்கி.

"ஹ்ம்ம்!! நாளைக்கு... யுகா பக்கத்து கோவிலில்ல அன்னதானத்துக்கு கொடுத்திருக்கா போல... அன்னைக்கு, அந்த சாமியாரைப் பார்த்ததால... ஏதோ ஒழுங்கா நடக்கலைங்கிற ஃபீல் வந்துருச்சாம்... சோ... நாளைக்குக் கொடுத்திருக்கா! ஹ்ம்ம் என்ன செய்றது? நாளனைக்குப் போகலாமா? ஆனா... உடனே காட்டிட்டா பெட்டெர்... தள்ளிப் போடப் போட பிரச்சனை தான்..." என விவேக் யோசிக்கும் போதே.

"யுகா கோவிலுக்குப் போகட்டும் விவேக்! நீ... ரோஜாவைக் கூட்டிட்டுப் போயிட்டு வா!" என்றான் ரபின் முடிவாய்.

"அம்மா வர முடியுமான்னு கேட்போமாடா?" என விவேக் யோசிக்க.

"இல்ல விவேக்... அம்மாவால பஸ்ல டராவல் பண்ண முடியாது! உடனே ட்ரைன் டிக்கெட்டும்

கிடைக்காது... சோ நீ ரோஜாவைக் கூட்டிட்டுக் கிளம்பு!'' என்றான் ரபின், தீர்மானமாய்.

''சரிடா...'' என்ற வார்த்தையை விவேக் உதிர்க்கும் முன்னர், தனியார் பேருந்து ஒன்றுக்கும் அழைத்து, அன்றிரவே சென்னைக்கு செல்லும் பேருந்தில் டிக்கெட் வாங்கினான் ரபின்.

''நாளைக்குப் போலாமே!'' எனக்கு ஒண்ணு மில்லை... இப்ப வலியெல்லாம் போயிருச்சு!'' ''வேற மெஷின் தான் மாட்டணும் போல... அதை இன்னும் ஒரு வாரம் கழிச்சுப் போட்டுக்கலாம்!'' என்று ரோஜா மறுத்தது எல்லாம். ரபினின் காதில் விழவே இல்லை!

''நீ போற... அவ்வளவு தான்!'' என்று நறுக்குத் தெறித்தார் போல் சொல்லி, அவளை அன்றே வண்டி ஏற்றினான்.

அவள் பாவமாய் ரபினைப் பார்க்கவும், ''நீ... எதுக்காக யோசிக்கிற எனக்குப் புரியுதுடா குட்டி! நா எங்கேயும் ஓடிப் போயிட மாட்டேன்! சரியா? சென்னையில இருந்து திரும்பினதும்... என்னோட லவின் அவதாரத்தோட உச்சத்தை உனக்குக் காட்டு றேன்! ஆனா... அதுக்கு முன்னாடி... இந்தக் காதை சரி செஞ்சுக்கிறது அவசியம் குட்டி! ப்ளீஸ்டா! எனக்காக! உன்னோட மாமாக்காக!'' என்று ரபின், அவளது கைப்பிடித்து கொஞ்சியதை விடவும், அவனது ''டா''வும்... ''குட்டி'' யும் ஏதேதோ மாயம் செய்ய. ரோஜாவின் தலை தானாய் ஆடியது!

ரோஜாவும் விவேக்கும் சென்னை கிளம்பிச் செல்ல, ரபின் செந்தூர்பாண்டியனைக் 'கவனிப்பதற் காக' ஸ்டேஷன் கிளம்பிச் சென்றான்.

செந்தூர்பாண்டியனை வெளியே வர முடியாதபடி செய்ய வேண்டும் என்ற வெறியால் மட்டுமே. ரபின் ரோஜாவுடன் சென்னை செல்லவில்லை!

அவனுக்கிருந்த கோபத்திற்கு அளவே இருக்க வில்லை!


ஒரு தப்பு செய்துவிட்டு, மரணடி வாங்கிய பின்னரும், திரும்ப அதே தப்பைச் செய்திருக்கிறான் என்றால், வாங்கிய அடி... அவ்வளவு தாக்கமாய் இல்லை என்று தானே பொருள்!

ஒரு தாக்கத்தை ஏற்படுத்தாத அடியைத் தான் அடித்திருக்கிறோம் என்பதே அவனை வெகுண் டெழச் செய்தது!

''சாவடி அடிக்கிறேன்டா மகனே!!!'' என்று தன் ஆத்திரம் முழுதையும் ஒன்று திரட்டி, கை முஷ்டி களை இறுக மடக்கி, கண்களில் ரௌதிரத்துடன் காவல் நிலையத்திற்குள் நுழைந்தவனை.

''சார்... நாங்க ரெண்டு பேரும் வேற வேற ஜாதி சார்... ஆனா... மனசார விரும்புறோம்... ப்ளீஸ் சார் எங்களுக்கு நீங்க தான் கல்யாணம் பண்ணி வச்சு.. இவங்க ஜாதி ஆளுங்ககிட்ட இருந்து எங்களைக் காப்பாத்தணும்!'' என்று இன்ஸ்பெக்டரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான் ஒரு இளைஞன்!

25



செந்தூர் பாண்டியனை ஒரு வழி செய்ய வேண்டும் என்ற வெறியுடன் தான், ரபின் ரோஜாவுடன் கூடச் செல்லாமல், ஸ்டேஷனுக்கு வந்ததே! ஒரு நாள் கூட, அவனை விட்டு வைக்கக் கூடாது என்ற வெறி ரபினை ஆட்டி வைத்துக் கொண்டிருந்தது!

திருடியது மட்டுமில்லாமல், சரியாகி வந்த மனைவியின் காதிலிருந்து ரத்தம் கொட்ட வைத்து விட்டானே?! பாவி! வெளிக்காயம் தான் என்றாலும், காது தாண்டி... கழுத்து வளைவு வரை ரத்தம் வழிந்து விட்டதே! ச்சை... எவ்வளவோ கஷ்டத்தைத் தாண்டி... இப்போது தான் சந்தோஷமாய் இருந்தாள்! அவளைப் போய்! எருமை! இவனைக் கொன்றால் கூட ஆகாது!

இடுப்பு பெல்ட்டின் இறுக்கத்தைத் தளர்த்தி விட்டுக்கொண்டு, சட்டையை வெளியே எடுத்து விட்டவனின் முகத்திலிருந்த தீவிரமும், உடம்பிலிருந்த முறுக்கும், இன்று நள்ளிரவு வரை... அந்த ஸ்டேஷனில் மத்தளச் சத்தம் கேட்கும் என்பதை உறுதி செய்தது!

''அந்தத் திருட்டு நாய்ங்க இருக்க செல்லைத் திறங்க!!!'' என்ற ஆணையுடன் உள்ளே வந்த

ரபினின் காதுகளில், திருமணம் செய்துவைக்க வேண்டிய ஜோடியின் குரல் கேட்டது!

அந்த ஸ்டேஷன் இன்ஸ்பெக்டரும், ரபின் உள்ளே நுழையவும், ''சார்... ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் சார்... நீங்களே டீல் பண்ணா நல்லா இருக்கும் சார்! சட்டப்படி... இவங்க ரெண்டு பேரும் மேஜர் தான்... ஆனா... கொன்னுடுவானுங்க சார்!'' என்றார் சிறு பீதியுடன்.

''உன்னையா? இவங்களையா?'' என்று நறுக்குத் தெறித்தார் போல் வந்து விழுந்த ரபினின் குரலில், இன்ஸ்பெக்டரின் தலை குனிந்தது!

செந்தூர்பாண்டியன் இருந்த செல்லை ஒரு முறை வெறி கொண்டு பார்த்தவன், இன்ஸ்பெக்டரின் இருக்கையில் அமர்ந்தான்.

செந்தூரின் மீதிருந்த கோபமா இல்லை சாவதற்காகவே காதலிப்பார்கள் போல என்ற எரிச்சலா, ''என்ன லவ்வா?'' என்ற அவனது முதல் கேள்வியே, எதிரே இருந்த பெண்ணை நடுங்க வைத்தது.

அந்த இளைஞன், ''சார்... லவ் பண்றது ஒண்ணும் கொலைக்குற்றமில்லை!'' என்று துடுக்காய் பதில் சொல்ல, அங்கிருந்த கான்ஸ்டபிள் ஒருத்தர், ''டி.எஸ்.பிட்ட பேசுற தம்பி! மெதுவா பேசு!'' என்றார் அவனது தோளில் தட்டி, மெல்லிய குரலில்.

பின்புறத்தில், ''இவனுங்களோட சேர்ந்து... இந்தப் பையனும் அடி வாங்காம போகப் போறதில்ல போல!'' என்ற கிசுகிசுப்பு மெலிதாய் கேட்டது.

ஆனால், ரபினோ அந்தப் பையனைக் கூர்மையாய் பார்த்தான். ''சரிங்க சார்! சார்... எங்க படிக்கிறீங்க?'' என்றான் நக்கல் போல்.

அவன் ஒரு தனியார் பொறியில் கல்லூரியில் பெயரைச் சொல்லவும், ''ஃபைனல் இயரா?'' என்றான் கண்ணில் கிண்டலுடன்.

''ஆமா சார்! ப்ராஜெக்ட் வொர்க் போயிட்டு இருக்கு!'' என அவனும் சற்றே திமிராய் தான் பதில் சொன்னான்.

''சரி... சரி! கோபப்படாதீங்க மிஸ்டர். காதல் இளவரசன்! மேடம் என்ன செய்றாங்க?'' என்றான் பெண்ணின் பக்கம் திரும்பி.

''தர்ட் இயர் சார்... பி.இ.சிவில்'' என்றாள் அவள் மெல்ல,

''ஹ்ம்ம்... இப்ப என்ன கல்யாணத்துக்கு அவசரம்?'' என்றான் ரபின். இருவரையும் மாறி மாறிப் பார்த்தபடி.

''எங்க லவ் விஷயம்... அவங்க வீட்டில தெரிஞ் சுடுச்சு!''

''சோ?'' - ரபினின் கேள்வி ஒற்றைச் சொல்லில் ஊசியாய் இறங்கியது!

''அவளை அடிச்சிருக்காங்க! இங்க பாருங்க... நெத்தில காயம்...'' என்று தன் காதலியின் நெற்றியி லிருந்த காயத்தைச் சுட்டிக் காட்டினான்.

அவளோ, அப்போது தான் அடிபட்டது போல் விசும்பினாள்.

''சோ?''- மீண்டும் அதே ஒற்றை ஊசிக் கேள்வி!

''என்ன சார்? அவளை இனிமேல் காலேஜ் அனுப்புவாங்களான்னே தெரியல... இன்னும் அடிச்சு கொடுமை செய்வாங்க... அதெல்லாம் பார்த்துட்டு இருக்க முடியாது சார்! எனக்கும் அவளுக்கும் கல்யாணம் ஆகிடுச்சுன்னு வைங்க... எவனும் தொட முடியாதில்ல!'' என்றான் அந்த இளைஞன் சூடேறிய ரத்தத்துடன்.

''ஹோ! அப்படி வருதா கதை!'' என ஆசுவாசமாய் கேட்டவன்,

''அதுக்கு... எதுக்கு போலீஸ் ஸ்டேஷன் வந்தீங்க? ஏதாவது கோவில்ல போய் கல்யாணம் பண்ணியிருக்க வேண்டியது தானே?'' என்றான் எதுவும் தெரியா தவன் போல.

''நான் வேற ஜாதி... அவ வேற ஜாதி சார்! அதான் இங்க வந்தோம்? போலீஸ் பாதுகாப்போட கல் யாணம் பண்ணிக்கிட்டா ஒண்ணும் பண்ண முடியா தில்ல! அதான்!'' என்றான் அவனோ, 'எனக்கும் யோசிக்கத் தெரியும்!' என்ற மனோபாவத்துடன்.

''ஹ்ம்ம்! அப்படி! ஹ்ம்ம்!!!'' என்று வார்த்தை யால் யோசித்த பின்.

''கல்யாணம் பண்ணிட்டு என்ன செய்றதா உத் தேசம்?'' எனக் கேட்டான்!

"நான் இன்னும்... மூணு மாசத்தில படிப்பை முடிச்சிடுவேன்! அப்புறம் ஒரு வேலை..." - அவனை முடிக்க விடவில்லை ரபின்.

"நா இப்போ கேட்கிறேன் தம்பி!" என்றான் இடை வெட்டி.

"ஏதாவது ஒரு வீடு எடுத்து தங்கணும்!" என்ற இளைஞனின் குரலில் எரிச்சல் இருந்தது.

"ஹ்ம்ம். அப்புறம் பூவா?" என அவன் உண்பது போல் பாவனை காட்ட,

"மூட்டைத் தூக்கியாவது அவளைக் காப்பாத்து வேன் சார்!" என்றான் அவனோ, நெஞ்சை நிமிர்த்தி.

"இது... எந்தப் படத்து வசனம். தம்பி?" என ரபின் இடைவெட்டிய போது, அங்கே பலத்த அமைதி நிலவியது!

"சார்... எங்க லவ்வை நீங்க சந்தேகப்படுறீங் களா?" என எதிரே இருந்தவன் கேட்கவும்,

"நூறு சதவீதம்!!" என்றான் ரபின், உறுதியாய்.

எதிரே இருந்தவன் பேசத் தொடங்கும் முன்னர், "உன்னோட காலேஜ் ஃபீஸ் எவ்வளவு?" என்றான் அவனைப் பார்த்து.

"அறுபதாயிரம்!" என அவன் வேண்டா வெறுப் பாய் சொல்ல.

"அடுத்த வருஷம்... மே மாசத்துக்குள்ள... இந்தப் பொண்ணுக்கு ஃபீஸ் கட்ட... அறுபதாயிரம் சேர்த் துடுவியா?" என்றான் அவனிடம் திரும்பி.

"சார்... நான் ஒரு இன்ஜினியர் சார்... படிச்சதும்... இருபதாயிரம்... முப்பதாயிரத்துக்கு ஈஸியா வேலை கிடைக்கும். அறுபதாயிரம் என்ன சார்... பெரிய விஷயம்?" என அவன் சுலபமாய் பதில் சொல்ல.

"உன் பேர் என்ன?" என்றான் ரபின், சாவகாசமாய்.

"மகேஷ்!"

"ஹான்!! மிஸ்டர். மகேஷ்ன்னு உன் பேரு போட்ட போர்டை பிடிச்சுட்டு... எல்லா கம்பெனி ஹெட்ச். ஆரும் லைன் கட்டி நிக்கிறதா நினைப்பா? மெட்ராஸ்ல போய் பாரு... இன்ஜினியரிங் படிச் சிட்டு.... நைட் ஷிபிட்ல... ஏழாயிரத்துக்கும்... எட்டா யிரத்துக்கும்... அவனவன் சிங்கி அடிச்சிட்டு இருக் கான்!" என்றான் ரபின். நக்கலில் ஆரம்பித்து... கோபத்தில் முடித்து.

"அப்படியே வேலை கிடைக்கலைன்னாலும்... என் தலையை அடமானம் வச்சாவது அவளைக் காப்பாத்துவேன் சார்!" என அந்த இளைஞன் துள்ள.

அந்தப் பொண்ணோ "எனக்குப் படிக்கணும்ன்னு எல்லாம் அவசியம் இல்லை சார்... அவரு படிச்சு முடிச்சு சம்பாதிச்சா போதும்!" என்றாள் காதலில் திளைத்து.

"அப்ப... உங்கப்பா... இது வரைக்கும் உனக்குக் கட்டின ஃபீஸ் எல்லாத்தையும்... அவர்ட்ட திருப்பிக் கொடுத்திட்டுக் கல்யாணம் பண்ணிக்கோம்மா!" என்றான் ரபின். வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு.

''சார்... படிக்க வைக்கிறது அவங்க கடமை!'' என அவளது காதலன் நடுவே புக,

அமர்ந்திருந்த நாற்காலியை ஒரே தள்ளில் பின்னுக்குத் தள்ளிவிட்டு, வேகம் கொண்டு எழுந்த பின், முன்பக்கம் குனிந்து கொத்தாய் அவனது சட்டையைப் பிடித்தான் ''கடமையா? பெத்தவனுக்கு மட்டும் தான் கடமை இருக்கா? உனக்கு இல்லையா?'' என்றான் எரியும் கண்களுடன்.

காவல் நிலையமே, ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்றது!

''கல்யாணம் பண்ணிக்கிற வயசாடா இது? படிப்பை முடிச்சிட்டு... ஒரு வேலையோட இங்க வா... நானே உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்!! ஜாதி விட்டு ஜாதி என்ன... மதம் மாறி கூட கல்யாணம் பண்ணி வைக்கிறேன்! ஆனா... ஒரு வேலையோட வா! இவளை என்னால காப்பாத்த முடியும்ங்கிற தெம்போட வா! சும்மா... தெய்வீகக் காதல்... எங்க காதல் தான் உலகத்திலேயே பெருசு... அது இதுன்னு பினாத்திட்டு இருக்கிறதெல்லாம் ஒத்தே வராது!'' என்றான் வேகமாய்.

''லைஃபை ப்ராக்டிகலா பாருங்கப்பா... இதோ இந்த ரோட்டு கடைசில இட்லி விக்கிறாங்களே ஒரு அம்மா... அவங்க கூட உனக்கு ஒசில சாப்பாடு தர மாட்டாங்க! எல்லாத்துக்கும் பணம் வேணும், மகேஷ்!'' என்றான் நிதர்சனத்தை எடுத்துக் காட்டும் குரலில்.

''என்னடா இவன்... பணம் தான் ஆதாரம் மாதிரி பேசுறான்னு நினைக்கிறியா? இப்ப... இந்த நிமிஷம்... உன்னோட வயசும்... அதுல ஓடுற இளரத்தமும் வேணும்ன்னா... பணம் என்னடா பணம்ன்னு நினைக்கலாம்! ஆனா... ரெண்டே நாள்... ரெண்டே நாளில பயம் வந்திடும் மகேஷ்!''

''சார்... உங்க அட்வைஸ் எங்களுக்குத் தேவையில்ல! சட்டப்படி... நாங்க ரெண்டு பேரும் மேஜர்... எங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க முடியுமா முடியாதா?'' - தடித்து விழுந்தன வார்த்தைகள்.

ரபினுக்குப் புரிந்தது! 'இந்த வாழ்க்கை... என்னை என்ன செய்துவிட முடியும்?' என்ற தெனாவெட்டில் வந்து விழும் வார்த்தைகள் இவை என்று, ரபினுக்குப் புரிந்தது!

''மகேஷ்! ப்ளீஸ்! இது கல்யாணத்துக்கான வயசு இல்ல!''

''எனக்கு இருபது வயசாகுது சார்... அவளுக்கு பத்தொன்பது ஆகிடுச்சு! இதோ பாருங்க... பர்த் சர்டிபிகேட்!'' என்று சில காகிதங்களை அவன் முன்னே வைத்தனர்.

''ஊஃப்! உனக்குப் புரியல!'' என்று தலையை அழுந்தக் கோதி விட்டுக் கொண்டவன்.

''சரி! நா கல்யாணம் பண்ணி வைக்கிறேன்! ஆனா... எனக்கு... நீ இந்தப் பொண்ணை ஒழுங்கா

காப்பாத்துவேன்கிற உறுதி வேணுமே?!'' என்றான் கூர்மையுடன்.

''எதிலையாவது எழுதிக் கொடுக்கணுமா சார்? எங்கன்னு சொல்லுங்க... எழுதிக் கொடுக்கிறேன்!'' என மகேஷ் வேகம் கொள்ள.

''அந்த பேப்பரை வச்சுட்டு நா என்ன பண்றது? வீசிக்கிறதா?'' எனக் கேட்டான் ரபின். மகேஷின் முகத்தை விட்டு அகலாத பார்வையுடன்.

''அப்புறம்? என்ன சார் செய்யணும்?'' - மகேஷுக்கு வந்த எரிச்சலுக்கு அளவே இல்லை!

''அந்தப் பொண்ணு பேர்ல... ஒரு அம்பதாயிரம் பணம் டெபாசிட் செய்யணும்! அவ்வளவே தான்!''

''என்னது? அம்பதாயிரம்?'' என அவர்கள் மட்டு மில்லாமல் காவல் நிலையமே வாய் பிளந்து நின்றது.

''ஆமா! எங்களுக்கு... நீ அவளைக் காப்பாத்துவே அப்படிங்கிறதுக்கான காரண்டி! சப்போஸ்... அவளை விட்டுட்டு ஓடிப் போயிட்டேன்னு வையு... அந்தப் பொண்ணுக்கு ஒரு பாதுகாப்பு வேணாம்?'' என்றான் ரபின், தன் பக்க நியாயமாய்.

இப்போது மகேஷ் பதில் சொல்வதற்கு முன்னர், அந்தப் பெண் இடைப்புகுந்தாள் ''அவரு... என்னை விட்டு ஓடிப் போக மாட்டாரு!'' என்ற அக்குரலில், கோபம் கொப்பளித்தது.

''ப்ச்!!!'' என்று ரபின், உச்சு கொட்டும் போதே.

''சார்... எங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க முடியுமா முடியாதா?'' என்றான் மகேஷ். மீண்டும்.

''உன்னோட காதல்ல... நீ இவ்வளவு உறுதியா இருந்தா... இன்னும் ஒரு வருஷம் கிழிச்சு... இதே பொண்ணைக் கூட்டிட்டு... ஒரு வேலையோட வா மகேஷ்! நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்!'' என்றான் ரபினும், சற்றே இறங்கிய குரலில்.

''சார்... நா இப்ப கேட்கிறேன் சார்! கல்யாணம் பண்ணி வைக்க முடியுமா முடியாதா?'' என்றான் கோபத்துடன்.

''எந்தவொரு வாக்குறுதியும் இல்லாம... என்னால கல்யாணம் பண்ணி வைக்க முடியாது!'' என்றான் ரபின், தீர்மானமாய்.

''என்ன சார்... வாக்குறுதி... வாக்குறுதிங்கிறீங்க... அவளே வேணாம்ன்னு சொல்லும் போது... உங்களுக்கு என்ன சார் வந்துச்சு! நீங்க... எங்களுக்கு என்ன மாமனா? மச்சனா?''- ஓர் உயர் போலீஸ் அதி காரியுடன் பேசுகிறோம் என்ற அச்சமே இல்லாமல், வேகமாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.

''ஏய்... என்னடா வாய் நீளுது?'' என்று இன்ஸ் பெக்டர் கையை ஓங்கிக் கொண்டு வர.

''ஷ்!!'' என அவரைக் கையமர்த்திய ரபின்.

''உன்னோட ஃபிரண்ட் மகேஷ்! காவல்துறை உங்களது நண்பன்னு கேள்விப்பட்டது இல்லை?!'' என்றான் ரபின். அவனது தோளில் கைப்போட்டு.

"என்னோட உயிரே போனாலும் அவளைக் கை விடமாட்டேன் சார்!" என மகேஷ் சொல்ல,

"கொஞ்சம் ப்ராக்டிகலா பேசுப்பா... உயிர் போனப் புறம்... உன் ஆவியா வந்து அவளோட கையைப் பிடிச்சிட்டு இருக்கும்! சும்மா... சினிமா டயலாக் பேசிக்கிட்டு..." - அதீதமாய் எரிச்சல் வந்தது ரபினுக்கு.

"நாங்க வரோம் சார்!" என்ற மகேஷ். அந்தப் பெண்ணின் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு சென்றான்.

அவன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்த ரபின், "ரெண்டு பேரும் என்ன ஜாதிய்யா?" என்றான் யோசனையாய்.

"பையன்... குலம்ங்க... பொண்ணு... ங்க!" என்று கான்ஸ்டபிள் சொல்ல.

பையன் ரோஜாவின் தந்தையின் ஜாதி என்பது மனதில் வெட்டியதே ஒழிய, அவன் "தனது" ஜாதி என்ற எண்ணம் அவனுக்குள் வரவே இல்லை!

"சரி... திருமலை! அந்தப் பசங்க ஏதாவது கம்ப்ளைன்ட் கொடுத்தா... சம்பந்தப்பட்ட ஆளுங்க மேல... கொலை முயற்சி கேஸ் போட்டு... உள்ள தள்ளுங்க! நான் வந்து பார்த்துக்கிறேன்!" என்றவன்.


"நாளைக்கு வர பத்திரிக்கையில... போலீஸ் ஸ்டேஷன்ல கல்யாணம் பண்ணிக்க வர ஜோடிங்க... பொண்ணு பேர்ல அம்பதாயிரம் ரூபா பிக்ஸ்ட்

டிபாசிட் போடணும்ன்னு... அப்பத் தான் கல்யாணம் பண்ணி வைப்போம்ன்னு மெசேஜ் கொடுங்க!" என்றுவிட்டு, "உள்ள இருக்க நாய்ங்க ரெண்டுக்கும்... சாப்பிட ஏதாவது கொடுங்க! நா... இன்னும் ஒரு மணி நேரம் கழிச்சு வரும்போது... அடி வாங்குறதுக்கான தெம்போட அவனுங்க இருக்கணும்!" என்றான் கட்டளையாய்.

அன்றிரவு, செந்தூரின் வாழ்வில் துயர இரவாய் கழிய,

அடுத்த நாள் காலையில், மகேஷின் காதலியின் கழுத்திலிருந்த தாலி, போலீஸ் ஸ்டேஷன் மேஜையிலிருக்க, "மகேஷின் கட்டாயத்தின் பேரில் தான்... இந்தத் திருமணம் நடந்தது! எனக்கு இதில் இஷ்டமில்லை! ஆதலால், விலகிப் போகிறேன்!" என்ற அவளது வாக்குமூலம், அந்தத் திருமாங்கல்யத்தின் கீழே இருந்தது! சீண்டுவார் இன்றி!

26



"ச்சை!!! இதுக்குத் தான் சொன்னேன்!" என்று தலையில் அடித்துக் கொண்ட ரபின், "அந்தப் பொண்ணு... ஊரு எது? கம்ப்ளைன்ட் ஏதாவது கொடுத்திருக்காங்களா?" என்றான்.

"இல்ல சார்!"

"அந்தப் பொண்ணு இங்க வந்துச்சா? அடிச்சிருந் தாங்களா?" என்றான் ரபின், யோசனையுடன்.

"அந்தப் பொண்ணை அடிச்ச மாதிரி இல்ல சார்! அந்தப் பையனை அடிச்சிருந்தாங்க... அந்தப் பொண்ணோட அப்பாவை அடிச்சிருப்பானுங்க போல... கையில கட்டு இருந்துச்சு" என்றார் காவலாளி.

"ஹ்ம்ம்! ரெண்டு பேர் போய்... அந்தப் பொண்ணு வீட்டில என்ன நிலைமைன்னு பார்த்திட்டு வாங்க!" என்று அனுப்பி வைத்தான்.

ஒரு மணி நேரத்தில் திரும்பிய காவலாளிகள், "நாங்க போனப்ப... பொண்ணு காலேஜ் கிளம்பிட்டு இருந்துச்சு சார்! அவங்க அப்பா... கூடப் பிறந்தவங் களை அடிச்சிருக்கானுங்க... அவங்களைக் கொன் னுடுவேன்னு மிரட்டி இருப்பாங்க போல... அதான் எழுதிக் கொடுத்திருச்சுன்னு நினைக்கிறேன்!" என்றார்கள்!

"அந்தப் பொண்ணு உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையே!" என்றான் ரபின், மீண்டும் உறுதி செய்து கொள்ளும் குரலில்.

'இருந்தா என்னடா செய்வே? அவளைக் காப் பாத்துறேன்னு பேர்ல.. இன்னொரு கல்யாணம் பண்ணிப்பியா? லூசு!' என்று மனசாட்சி குரல் கொடுக்க,

'ஏய்! ஏய்! போண்டாமணிக்கு மட்டும் இந்த விஷயம் தெரிஞ்சது... உன்னைக் குண்டாக்குள்ள தூக்கிப் போட்டு கும்மிடுவா!' என அதை அடக்கிய ரபின்.

'இப்ப... மகேஷையும்... அந்தப் பொண்ணையும் கூட்டி வச்சுப் பேசினியே... அதை நீ ஏன்... ரோஜா விஷயத்தில செய்யல!?' என்ற மனசாட்சியின் கேள்வியில் சற்றே திகைத்தான்.

'ஹ்ம்ம் ஏன் செய்யல?' என ஒரு நிமிடம் யோசித் தவன்.

"ஹ்ம்ம்! ஏன்னா... அதுக்கான கால அவகாசம் என்கிட்டே இல்ல! நா... இன்னும் ஒரு மணி நேரம் லேட்டா போயிருந்தா கூட... ரோஜாவோட உயிர் போயிருக்கும்! அந்த இக்கட்டான சூழ்நிலையில்... எங்க இருந்து செந்தூர்பாண்டியனைப் பிடிக்கிறது... ரோஜாவைப் பேச வைக்கிறது? அப்போதைய சந்தர்ப்ப சூழ்நிலை அப்படி!" என்றான் எதார்த்தமாய்.

'எல்லாம்... சரி! இப்ப... ரோஜாவோட நிலைமை வேறொரு பொண்ணுக்கு வந்தா என்ன செய்வ?' என்றது மனசாட்சி.

"என்னை மாதிரி... இன்னொரு ரபின் வருவான்!" என்றவன், "அப்படியொரு நிலைமை இன்னொரு பொண்ணுக்கு வராத மாதிரி... சில ஒழுங்கு முறை கொண்டு வருவேன்!" என்றான் தீர்மானமாய்.

"ஃப்ரஸ்ட் ஆப் ஆல்... போலீஸ்கிட்ட வந்து கல்யாணம் பண்ணி வைங்கன்னு கேட்கிறவங்

களை... பொண்ணு பேர்ல அம்பதாயிரம் டிபாசிட் பண்ணச் சொல்லிச் சொல்லுவேன்! நிஜமான காதல் இருக்கவன்... முக்கியமா காதலியை வச்சுக் காப் பாத்தத் துப்பிருக்கவன். செய்வான்! அப்படிச் செய்ற வனுக்கு... நானே கல்யாணம் பண்ணி வைப்பேன்! அவங்களுக்கு... ஏதாவது பிரச்சனை வந்தா... சம்பந்தப்பட்டவனை உள்ள தூக்கி வைப்பேன்!''

'சும்மா... திமிரெடுத்து போய்... லவ்... லவ்ன்னு பினாத்திட்டு வரதுங்க. அந்த அம்பதாயிரம் செக் லேயே... பாதி அரைவேக்காடு ஓடிடும்! கொஞ்சம் அறிவு இருக்கிறது சிந்திக்கும்! சிந்திக்கிறது... எப்படியும் வீட்டுக்குத் திரும்பிப் போய்டும்! அப்படி இல்லாம... யோசிக்கவே மாட்டேன்னு அடம் பிடிக்கிற லூசுங்களை... பாதுகாக்கிற வேலை இந்தப் போலீஸ்க்கு இல்லை! எக்கேடும் கெட்டுப் போகட்டும்ன்னு விட வேண்டியது தான்!' எனத் தன் எண்ணங்களை மிகத் தெளிவாய் முன்னிறுத்தி முடித்தான்.

தன் முடிவை எஸ்.பியிடம் கூறியபோது, ''குட் மூவ். ரபின்! வாழ்க்கைன்னா என்னன்னு தெரியாம... கல்யாணத்துக்குள்ள அடியெடுத்து வைக்க நினைக் கிறவங்களுக்கு... இது ஒரு பிரேக்கா இருக்கும்! கொஞ்சம் சிந்திப்பாங்க! பார்க்கலாம்!'' என்று தட்டிக் கொடுத்தார்.

உள்மனது உந்த, மகேஷின் ஊருக்கு... அதாவது ரோஜாவின் பிறந்த ஊருக்குச் சென்றான் ரபின்.

அவன் சந்தேகித்தது போல். ஊரே ரோஜாவின் தந்தை வீட்டில் தான் கூடியிருந்தது!

அவன் உள்ளே வந்ததும், ''வாங்க மாப்பிள்ள! வாங்க''என்று வேலுச்சாமி வரவேற்க.

அவரைக் கண்டு கொள்ளாமல், கூட்டத்தின் நடுவே நின்று, இரண்டு கன்னங்களிலும் கை விரல் கள் பதிய அடி வாங்கியபடி நின்றிருந்த மகேஷை முன்னே இழுத்தான்.

''ஹோ! இவன் பையன்ல... அதான் நாலு அறையோட விட்டுட்டீங்க போல... பொண்ணுன்னா தான் இடுப்பு எலும்பை உடைப்பீங்க இல்ல!'' என்றான் மகேஷின் முகத்தை இப்படியும் அப்படியு மாய் திருப்பி!

''மாப்பிள்ளை!''

''என்னப்பா... உனக்கு காது கேட்குது தானே?'' என்றான் மீண்டும், மகேஷிடமே பார்வையைப் பதித்து.

மகேஷ் தலை குனிந்து நிற்கவும், ''இதைத் தான்டா நா நேத்தே சொன்னேன்... அந்தப் பொண்ணை வச்சுக் காப்பாத்துற திடம் இருக்கணும்ன்னு... அது இல்லாம... எதுக்குடா காதல் செய்றீங்க?'' என்றான் அவனது தாடையை இறுக்கிப் பிடித்து.

''இப்ப... அந்தப் பொண்ணோட உயிருக்கு ஒண்ணும் பிரச்சனையில்ல... அதனால ஓகே!

ஆனா... அந்தப் பொண்ணு செத்திருந்தா என்னடா செய்வே?'' என்றான் பற்களைக் கடித்தபடியே.

''உன்னோட சித்தப்பன்... பெரியப்பன் மாதிரி... அந்தப் பொண்ணோட அப்பன் அவளைக் கொன்னு போட்டிருந்தா? உன்னோட காதல் போய்... அந்த உயிரை மீட்டுக் கொண்டு வருமா? லூசுப் பயலே!''

''காதலிடா... நா வேணாம்ன்னு சொல்லலை! நிதானமா காதலி! தகுதியை வளர்த்துக்கிட்டு கல்யாணம் பண்ணிக்கோ! இதே நீ... ஒரு வேலை யோட... மனசில தெம்போட... அந்தப் பொண்ணைக் கூட்டிட்டு வந்திருந்தேன்னு வை... நானே உங்க ரெண்டு பேருக்கும் பாதுகாப்பு கொடுத்திருப்பேன்!'' என்றான் கடுமையாக.

''மாப்பிள்ளை! என்ன பேசுறீங்க? நம்ம ஜாதில இருந்துக்கிட்டு... ஒரு கீழ் ஜாதி புள்ளையை கல்யாணம் பண்ணி வைப்பேன்னு சொல்லுறீங்க?'' என்று வேலுச்சாமி எகிற,

''கால்முட்டி... சுக்கு சுக்கா உடையுற அளவுக்கு என்கிட்ட அடி வாங்கியும்... இந்த ஜாதி வெறி போகலைல்ல!'' என ரபின், உறும.

''என்னது? எங்கண்ணனை நீங்க தான் அடிச் சீங்களா?'' என்றது ஒரு குரல், ஆக்ரோஷமாய்.

''ஆமாய்யா! நான் தான் அடிச்சேன்! எனக்கிருந்த ஆத்திரத்துக்கு... அந்தாளைக் கொன்னிருப்பேன்... அதுக்குள்ளே வந்து தடுத்துட்டானுங்க!'' என்றான் ரபின். நெஞ்சை நிமிர்த்தி.

''ஏய்!'' என ஒருவன் ரபின் மீது பாய, அவனது தாடையில் ரபின் விட்ட குத்தில். பற்கள் சில உடைந்து, ரத்தம் பொலபொலவெனக் கொட்டியது!

''எங்கண்ணே மேலேயே கை வச்சுட்டியா?'' என்று ஒருவன் அருவாளைத் தூக்கிக் கொண்டு எகிற.

''ஏய்! அவரு நம்ம வீட்டு மாப்பிள்ளைடா! விடுங்க!!'' என்று கை அமர்த்தினார் வேலுச்சாமி.

ஓங்கிய அருவாள் அப்படியே அந்தரத்தில் நின்று விட, ரபின் அலட்சியமாய் பார்த்தான்.

''ஹோ! உங்க மாப்பிள்ளைங்கிறதால விடுறீங் களோ? அப்படியெல்லாம்... நீங்க எனக்கு பிச்சை போட வேண்டாம்! உங்க ஆளுங்களா... நானான்னு பார்த்துடலாம்!'' என்று கையை மடக்கி விட்டுக் கொண்டு, ரபின் சண்டைக்குத் தயார் ஆனான்!

அங்கிருந்த கும்பலில் ஓரிருவர், சண்டைக்குத் தயார் நிலையில் நின்றிருக்க, வேலுச்சாமியோ ரபினின் கையைப் பிடித்துக் கொண்டார்.

''ச்சே.... ச்சே! என்ன மாப்பிள்ளை... பிச்சை... கிச்சைன்னு எல்லாம் பேசிக்கிட்டு! நாங்க நாப்பது வருஷத்துக்கு முன்னாடி... பஞ்சத்துல அம்புட் டையும் இழந்துட்டு நின்னப்ப... உங்க அப்பாரும்... நாச்சியார் அம்மாவும்... அவுக சொத்தில பாதியை... ஊரு மக்க பேருக்குக் கிரையம் பண்ணிக் கொடுத் தாக! எங்க வாழ்க்கையே... உங்க குடும்பம் போட்ட

பிச்சை மாப்பிள்ளை! அதேன்... நாச்சியார் அம்மா சொல்லுக்கு... இந்த ஊரில மறு பேச்சு இருந்த தில்லை! அப்படிப்பட்டவுக பிள்ளையை நாங்க அடிப்போமா? நீங்க கிளம்புங்க... மாப்பிள்ளை!'' என்று அவனை வழியனுப்பி வைத்தார்.

நாத்திகம் பேசும் தாயின் மீது, இந்த ஜாதி வெறியர்கள் காட்டும் மரியாதைக்கான காரணத்தைப் புரிந்தவனாய், அங்கிருந்து வெளியேறினான் ரபின். ஆனால், முகத்திலிருந்த வெறுப்பையோ... கண்ணி லிருந்த வெறியையோ அவன் நீக்கி விடவில்லை!

கண்கள் தீக்கனலாய் எரிய, அங்கு நின்ற ஒவ் வொருவரையும் முறைத்தபடி அவன் வெளி யேறியதும், அங்கே பெரும் சலசலப்பு ஏற்பட்டது!

மனமும் உடலும் சோர்ந்து தெரிந்தது ரபினுக்கு!

வீட்டுக்குப் போனால் நன்றாக இருக்கும் போல் தோன்றியது.

''என்னடா? இந்த நேரத்தில?'' என்று வீட்டின் முற்றத்தில் அமர்ந்திருந்த வேலு நாச்சியாரின் அருகே அமர்ந்து, அவரது மடியில் தலை வைத்துக் கொண்டான் ரபின்.

''என்ன பாப்பா... கொஞ்சுது?'' என அவர் தலை வருட,

''செம டென்ஷன்ம்மா!'' என்றவன், ''உங்க மகன்ங்கிறதால... இன்னைக்கு என்னைய உயிரோட

விட்டிருக்கானுங்க ம்மா! இல்லைன்னா... ரபின்... சதக்...'' என்றான் விளையாட்டாய்.

நாச்சியார் பெரிதாய் பதறி விடவில்லை.

''உனக்கு விவேகம் தான் பத்தாதே தவிர... வேகம் ஜாஸ்தி தான்டா! அப்படியெல்லாம்... இன்னொருத் தனைக் குத்த விட்டுட மாட்டே!'' என்றார் அவர் சாவதானமாய்.

''நல்லா புரிஞ்சு வச்சிருக்கீங்க!'' என்று ரபின் சிலாகிக்க,

''அதனாலதான்... அவனை டாக்டர்க்கும்.. உன்னை போலீசுக்கும் படிக்க வச்சேன்!'' என்றார் நாச்சியார், மகனின் தலையைக் கோதி.

''சரி சரி! அதென்ன விவேகம் பத்தாதுன்னு கமெண்ட்? நாங்க தான் லவின் அவதாரம் எடுத்து... அதை சிறப்பா செஞ்சிட்டு வரோம்ல!'' என அவன் சிறுபிள்ளையாய் சிணுங்க,

''ஒரு விஷயத்தில... விவேகமா இருந்தா பத்தா துடா!'' என்ற தாயின் கரங்கள், அவனது கன்னங் களை லேசாய் தட்டின.

''வேறெந்த விஷயத்தில... கோட்டை விட்டோ மாம்?''

''இப்ப... இந்த கேஸ் விஷயத்தில... இப்ப எதுக்கு... ரோஜா ஊருக்குப் போனே?'' என்றார் நாச்சியார்.

''பின்ன என்னம்மா? வளர்க்கிற புள்ளையைத் துப்போட வளர்க்கணும்! அதை விட்டுட்டு... அவங்க

ஓடிப் போற வரைக்கும் சும்மா இருந்துட்டு... அவனை வெட்டி... இவனைக் குத்தி... பண்ண கல்யாணத்தை இல்லைன்னு ஆக்குறதில என்ன இருக்கு? சொல்லுங்க? பிள்ளையை ஒழுங்கா வளர்க்கத் துப்பில்லாதவன்... பெரிய ஜாதியை வளர்க்க வந்துட்டானுங்க!'' - ரபினின் முகத்தில் கடுமை பரவியிருந்தது.

நாச்சியார் பேசும் முன்னர், ''அதுவும் பாருங்களேன்! இந்த வாட்டி... ஓடிப் போனவன்... பையனாம்... அதனால... அவனை ஒண்ணுமே செய்யல... ஆனா... நம்ம கண்மணியை கிட்டத்தட்ட கொன்னுட்டானுங்க! ஆக்சுவலி... இந்த முறை அவனுங்க என்ன செய்திருக்கானுங்கன்னு பார்க்கத் தான் நான் போனதே!'' என்றான் கடுப்புடன்.

''ஏன்மா... இப்படி இருக்காங்க? இவனுங்களால... எத்தனை பேரை இப்படி அழிக்க முடியும்?'' என்றான் விரக்தியாய்.

''பழைய பாட்டு ஒண்ணு வரும் தெரியுமா? திருடனா பார்த்து திருந்தா விட்டால்... திருட்டை ஒழிக்க முடியாதுன்னு! அப்படித் தான் இதுவும்! இந்த சமுதாயம்... எப்ப சங்கரன்... ரபின்... விவேக்... இப்படிப்பட்ட ஆளுங்களா நிறையுதோ... அப்பத் தான் திருந்தும்! ஆனா... அதுக்கான சாத்தியக் கூறு தான் ரொம்பக் கம்மி!'' என்றார் பெருமூச்சு ஒன்றை வெளியேற்றியபடி.

''ஹே! சைக்கிள் காப்ல... எங்கப்பா பேரை சொல்லிட்டீங்க! சரியான கள்ளி மாதாமா நீங்க!'' என்று ரபின் குதூகலிக்க,

''எம் புருஷனை... நா பேரைச் சொல்லிக் கூப்பிடாம யாருடா கூப்பிடுவா!'' என அவனை அடித்தவர், ''நா என்ன... உம் பொண்டாட்டி மாதிரி பட்டிக்காடா... புருஷனை மாமா... மாமான்னு கூப்பிடுறதுக்கு! நா யூத்டா!'' என்றார் முகம் கொள்ளா சிரிப்புடன்.

அவனுக்கு ஜூஸ் எடுத்து வந்த யுகாவும், குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க,

''அடிங்க! நக்கலா இருக்கா உங்களுக்கு எல்லாம்?''

''என்னோட செல்லம்... மண் வாசனை மாறாம... மாமா... மாமான்னு என்ன அழகா கூப்பிடுறா? அதைப் பார்த்து... உங்களுக்கு எல்லாம் பொறாமை!'' என்றான் மூக்கைச் சுருக்கி.

''பெரிய பாரதிராஜா படத்தில வர... ஹீரோ இவரு! அந்தம்மா... தாவணி போட்ட மயிலு! ரொமான்ஸ் தாங்கல! இல்லடா யுகா?'' என்று வேலு நாச்சியார் சிரிக்க,

அவரது மறு பக்கம் வந்து அமர்ந்து கொண்டு, அவரது கழுத்தைக் கட்டிக் கொண்டு ''ம்ம்ம்!'' என ஒத்து ஊதினான் யுகவீணா.

''ஹஹஹா!'' என்று சிரித்த ரபின், ''எல்லா டென்ஷனும் ஓடியே போச்சு! நா போய்... என்

மயிலோட மாமாவைக் கேட்கப் போறேன்!'' என்றவன், தனது கைப்பேசியை வெளியே எடுத்தபடியே, துள்ளிக் கொண்டு ஓடினான்.

சிறு சிரிப்புடன் பார்த்திருந்தனர், வேலு நாச்சியாரும், யுகாவும்!

ரபினின் கைப்பேசியில் இருந்து, விவேக்கின் கைப்பேசிக்கு அழைப்பு பறந்தது!

விவேக் எடுத்து ''ஹலோ!'' என்றதும், ''என்னடா ஸ்டெத்து? டாக்டர்ட்ட காட்டியாச்சா?'' என்றான் ரபின், வேகமாய்.

''காட்டியாச்சு! நா சொன்ன மாதிரி வெளிக்காயம் தானாம்! வேற செட் போட்டு... இனிமேல் அடிபடக் கூடாதுன்னு ரெண்டு மணி நேரம் பாடம் எடுத்து... அனுப்பி வச்சிருக்காங்க!'' என்றான் அவன்.

''ஹோ!'' என உள்வாங்கிய ரபின், ''அவட்ட போன் கொடு!'' என்றான்.

''காலையில இருந்து... உன்னோட ரோஜா... ஹோமை காட்... இந்தக் காவியத்தில எல்லாம் சொல்லுவாங்களே... தலைவனைப் பிரிந்த தலைவிக்கு பசலை நோய் வந்திருச்சுன்னு... உன் பொண்டாட்டிக்கு ஏகத்துக்கும் பசலை நோய் வந்திருச்சுடா!'' என்றான் விவேக்கோ, நக்கலாய்.

''அச்சோ! நீ ஏன்டா... பசை போட்டு ஒட்டின மாதிரி போனை அவட்ட கொடுக்காம மொக்கை

போட்டுட்டு இருக்கே! அவட்ட கொடுடா!'' - பல்லைக் கடித்தான் ரபின்.

அடுத்த வினாடி, கைப்பேசி ரோஜாவிடம் கை மாறியதற்கு அடையாளமாக ''மாமா!'' என்ற இனிமையான அழைப்பு செவியை நிறைத்தது!

''ஹே போண்டா மணி! எப்படிடா செல்லம் இருக்கே?''

''ஹ்ம்ம்! போண்டா மணி சொல்லாதீங்க...''

''ஹய்யோ! நீ இப்படிச் சிணுங்கிறதை கேட்கிறதுக்காகவே... திரும்பத் திரும்பச் சொல்லலாம் போலவே! போண்டாமணி! போண்டாமணி!''

''ஹ்ம்ம்ம்! என்ன செய்றீங்க?''

''நானா? ஹ்ம்ம்... ஜூஸ் குடிக்கிறேன்... நீ என்ன செய்றே?''

''இப்பத்தான் சாப்பிட்டோம்!''

அடுத்து அரை மணி நேரம், என்ன பேசினார்கள்... ஏது பேசினார்கள் என்று கேட்டால் இருவருக்குமே தெரியாது!

முடிவில், ''சரி போண்டா! பேச வேண்டியது எல்லாம்... இப்பவே பேசிடு! நாளைக்கு... நீ இங்க வந்ததும் எல்லாம் ஆக்சன் தான்!'' என்று ரபின் சொல்ல, அங்கே வெட்கத்தின் பரிமாற்றம் மட்டுமே அரங்கேறியது.

ஒரு வழியாக, விவேக்கிடம் கைப்பேசி செல்லவும், ''வந்த வேலை முடிஞ்சுடுச்சுடா... சோ

இப்பவே ஏதாவது பஸ் இருந்தா கிளம்பி வந்துடு றோம்!'' என்றான் அவன்.

''இப்பத்தான்டா என்னோட ஸ்டெத்து மாதிரி பேசுறே!'' என ரபின் குதூகலிக்க,

''ஹஹ்ஹா! உன் அவசரம் புரியுது... சீக்கிரமே வந்துடுறோம்!'' என்றான் விவேக்.

உறுதியாக.

அந்த உறுதியை, அடுத்த ஒரு மணி நேரத்தில் ''நாங்க பஸ் ஏறிட்டோம், ரபின்! நைட்... பத்து மணிக்கு வந்திடுவோம்!'' என்ற அறிவிப்பில் நிறை வும் செய்தான்!

ஆனால், சரியாக எட்டு மணிக்கு, விவேக்கின் கைப்பேசியிலிருந்து அழைப்பு வரவும், ''என்னடா சும்மா... நொய்... நொய்ன்னுட்டு!'' என ரபின் சலித்துக் கொள்ள,

''மா... மா... மாமா! ஹா... ஹா... ஹான்!'' - ரோஜாவின் பதறிய குரல், அவனது காதை நிறைத்தது!


''கண்மணி! என்னம்மா? என்ன? என்னாச்சு?'' என ரபின் பதற,

''ஹ்ஹ்ஹ்... ஹக்... அத்தான்... தான்... தானை...'' - முடிக்க முடியாமல் மூச்சுத் திணறினாள் ரோஜா.

''விவேக்! விவேக்குக்கு என்ன? பஸ் ஆக்ஸி டன்ட்டா?'' - ரபினின் நாடித் துடிப்பு எகிறியது.

''ஹ்ஹ்ஹ்ஹ்... க்க்க்க! அத்... அத்தானைக் குத் திட்டாங்க!'' என்றாள் ரோஜா, ஒருவாறாய் தன் பலத்தைத் திரட்டி.

27



''வாட்!'' என ஒரு நிமிடம் அதிர்ந்தவன்,

''எந்த இடத்தில இருக்கீங்க?'' என்றான் தன்னை சுதாரித்துக் கொண்டு.

என்ன... ஏது என்று விசாரித்து, நேரத்தை விரயம் செய்வதற்கு பதிலாக, காரியத்தில் வேகமாய் இறங் குவது உசிதம் என்ற நிதர்சனம் உரைக்க, தொண் டைக்குள் அடைத்த துக்கத்தை மறைத்துக் கொண்டு, ஒரு காவல்காரனாய் விவரம் கேட்டான், ரபீந்திரநாத்.

''பெரிய...ய...ய... குளத்தில மாமா...'' என்றாள் ரோஜா, மூச்சுக்குத் திணறியவளாய்.

''முதல்ல ஆம்புலன்ஸ்க்கு போன் பண்ணு... நா வந்துட்டே இருக்கேன்...'' என்றவன்,

''பயப்படாத கண்மணி! ஸ்டெத்துக்கு ஒண்ணும் ஆகாது!'' என்றான் அவளுக்குத் தைரியமூட்டும் விதமாக.

"ஹோ!!!" எனக் கதறி அழுதாள் ரோஜா.

"ஹய்யோ! மாமா... எங்கப்பாரு தான் மாமா... குத்திப்புட்டாரு! ஹய்யோ... ரத்தம் போகுதே!" என்று ரோஜா, வார்த்தைகளை வேகமாய் வெளியிட்டதில் ரபினின் ரத்தம் உறைந்தது!

"உனக்கு விவேகம் பத்தாது! இன்னைக்கு... எதுக்கு ரோஜா ஊருக்குப் போனே!?" என்று வேலு நாச்சியார் காலையில் கேட்டது மனதில், சம்பந்த மில்லாமல் நிழலாடியது.

'ஹய்யோ! என்னால் தானோ! என்னால் தான்... என்னைப் பழி தீர்ப்பதற்குப் பதிலாக... என் சகோதரனை... ஹய்யோ!' - உடலின் ஒரோர் அணுவும் ரண வேதனைப்பட்டன.

ஆனால், வேதனைப்பட்டுக் கொண்டு நிற்க இது நேரமில்லையே!

அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்த நேரத்தில் தான், ரோஜா அழைத்தது!

வீட்டிற்குச் சென்று வேலு நாச்சியாரிடமும்... யுகாவிடமும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் அழைத்துச் செல்லலாமா என்று ஒரு நிமிடம் எண்ணியவன், அந்த எண்ணத்தை உடனடியாகக் கைவிட்டான்.

வேலு நாச்சியாரின் உயிர் நாடியே, விவேக் தான்! தன்னை அணைத்துக் கொண்டு உறங்கியதைவிட,

விவேக்கை அரவணைத்துக் கொண்டு அவர் உறங்கிய நாட்களே அதிகம்!

எதற்குமே பெரிதாய் கவலைப்படாத அம்மாவின் கண்களில், அவன் கண்ணீரைப் பார்ப்பதும் விவேக்கின் விஷயத்தில் மட்டும் தான்! விவேக்கின் பிறப்பைக் கேள்வி கேட்டு யார் பேசினாலும், வேலு நாச்சியாரின் மனமும் கண்ணும் கலங்கிவிடும்!

ரபினை விட, விவேக்கின் மீது அவருக்குப் பாசம் அதிகம்!

அதுவும், "இவன்... கீழ் ஜாதி பையன்ல்ல!" என்று சொல்கையில், "எனக்கு அவனைத் தான் பிடிக்கும்!" என்று வீறு கொண்டு எழும் பாசம்!

அந்தப் பாசம், அவரது வயிற்றில் உதித்த ஒற்றை முத்தான ரபினிடம் ஒருவித பொறாமையை என்றுமே ஏற்படுத்தியதில்லை! அதற்குக் காரணம், விவேக்!

ஒரு மூத்த சகோதரனாய்... நண்பனாய்... நலம் விரும்பியாய்... ஆசானாய்... வழி காட்டியாய் மட்டுமில்லாமல் அளவிலா அன்பைச் சுரக்கும் அமுத சுரபி அவன்!

அவனுக்கு ஒன்றென்றால் எப்படி வேலு நாச்சியார் தாங்க மாட்டாரோ! அதே போல், ரபினுக்கு ஒன்றென்றால் விவேக் தாங்க மாட்டான்!

ஒரே சூலில் உதிக்காவிட்டாலும், அந்த இரு முத்துக்களும் ஒரே சிப்பியில் அடை காக்கப்பட்ட தாலோ என்னவோ?

எப்போதுமே, ஒரு வீட்டில்... ஒரு தத்து பிள்ளை இருந்தால்... அந்தத் தம்பதியருக்கு குழந்தைப்பேறு இல்லாத காரணத்தினால், ஒரு மகவைத் தத்தெடுத்து... அப்பிள்ளையை வளர்க்கையில் இயற்கையாகவே கருவுற்று, தங்களுக்கென ஒரு வாரிசை ஈன்று எடுப்பர்!

ஆனால், விவேக் விஷயத்தில்... அப்படியே தலைகீழ்! திருமணம் முடிந்து, ஒன்றரை வருடத்தில் ரபினை ஈன்றெடுத்து விட்டார் வேலு நாச்சியார்! அவனைப் பாராட்டி... சீராட்டி வளர்க்கையில், அவர்களது சொந்தக் கிராமத்தில் (அதாவது ரோஜாவின் ஊரில்) நடந்த ஓர் ஜாதிக் கலவரத்தில், தாய் - தந்தை இருவரையும் அருவாள் வெட்டுக்கு இரையாகக் கொடுத்துவிட்டு, அனாதையாய் நின்ற ஏழு வயது விவேக்கை, வீட்டிற்கு அழைத்து வந்தார் சங்கரன்!

ஜாதி வெறிப் பிடித்து அலையும் தன் இனத்தாருக்கு, ஒரு பாடம் கற்பிக்கும் வண்ணம், "கீழ் சாதிப் பய!" என்று தூற்றப்பட்ட விவேக்கை தன் மகனாய் சுவீகாரம் எடுத்துக் கொண்டார்.

தங்களுக்குப் படியளக்கும் பெரிய குடும்பத்தில், இப்படியொரு இனக்கலப்பு நடந்தது... அந்த சமூகத்தையே பெறுமளவு புரட்டிப் போட்டது!

ஆனால், அதனால் ஏற்பட்ட சலசலப்பு... சிறிதளவும் விவேக்கின் மீது வைத்த பாசத்தை மாற்றி

விடவில்லை! சொல்லப் போனால், ரபினை விட ஒரு படி மேலே போய், தாய் - தந்தை இருவருமே விவேக்கைத் தாங்கினர்!

அவன் வேற்றாளாய் நின்று விடக் கூடாது என்பதில் உறுதியாய் இருந்து, அவனை வளர்க்கவும் செய்தனர்!

அப்படிப்பட்ட விவேக்கிற்கு... விபத்து... ம்ஹூம் திட்டமிடப்பட்ட சதி என்று தெரிந்தால், அம்மா தாங்க மாட்டார் என்பது நிச்சயமாய் புரிந்தது!

கூடவே, யுகா!

வாழ்க்கையில், சோகங்களை மட்டுமே சந்தித்த அந்த ஜீவன், சந்தோஷமாய் இருப்பதே விவேக்கைத் திருமணம் செய்து கொண்ட பின்னர் தான்!

அவளது வாழ்வாதாரமே விவேக் தான் என் கையில், அவளிடம் எப்படிச் சொல்வது?

கடவுளே!

ரபினின் உடல் உதறலெடுக்க ஆரம்பித்தது!

'விவேக் எனக்கு வேணும்... எங்க குடும்பத்துக்கு வேணும்!' என்று இடைவிடாது வேண்டிய மனதுடன், பெரிய குளம் நோக்கிப் பறந்தது அவனது வண்டி.

நடுவிலேயே, ரோஜாவை அழைத்து, ஆம்புலன்ஸ் வந்ததா என விசாரித்தான்.

தனியார் மருத்துவமனை ஒன்றின் ஆம்புலன்ஸ் வந்ததாக அவள் கூற, "பயப்படாத! இன்னும் பத்து

நிமிஷத்தில... என்னோட பிரண்ட்... ராகவன்னு பேரு... அங்க வந்திடுவான்! அவன் பார்த்துப்பான்! நா இன்னும் முக்கால் மணி நேரத்தில அங்க இருப்பேன்!'' என்றான் ஆதரவாய்.

''சீக்கிரம் வந்துடுங்க மாமா!'' என்றாள் ரோஜா, குரல் உடைய.

''வந்துடுறேன், கண்மணி! நீ தான்... பயப்படாம... விவேக்கைப் பார்த்துக்கணும்... சியர் அப்!'' என்றவன்,

''விவேக்... விவேக்குக்கு... பல்ஸ் இருக்குத் தானே?'' என்றான் உடைந்த குரலில்.

அவனால், விவேக்கற்ற ஒரு வாழ்க்கையை எண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை.

தன் உயிரையே யாரோ பறித்து எறிந்தாற் போல் வலித்தது!

ஆனால், அந்த வலிக்கு இடமில்லாமல் ''அத்தான்... முழிச்சுத் தான் மாமா இருக்காங்க... உணர்வு எல்லாம் இருக்கு! எனக்கு ஒண்ணுமில்லை... எலும்பில எங்கயும் அடிபடலன்னு அவங்களே சொல்றாங்க! சொல்லப் போனா... எனக்கு அவங்க தான் தைரியம் சொல்றாங்க!'' என்றாள் ரோஜா.

பெருத்த நிம்மதியாய் இருந்தது ரபினுக்கு!

''டாக்டர்ங்கிறதை நிரூபிக்கிறான்! சரியான ஸ்டெத்து!'' என்ற ரபினின் இதழ்க்கடையில் அடுக்கு மல்லிகையாய் சிறு புன்னகைப் பூத்தது!

''பேசுறான்னா... அவன்கிட்ட போன் கொடுடா!'' என ரபின் பரக்க,

''பேசுறாங்க தான்... ஆனா வலியிருக்கும்ல! சும்மா! நேர்ல வாங்க... பேசிக்கலாம்! சீக்கிரம் வாங்க!'' என்றவள், கைப்பேசியை அணைத்தாள்.

ரபினின் வண்டி வேகம் கொண்டு பறந்தது.

அவன் சொன்ன முக்கால் மணி நேரத்தை விடவும் பத்து நிமிடங்கள் முன்பாகவே, அந்தத் தனியார் மருத்துவமனையின் வரவேற்பறையில் இருந்தான் ரபின்.

அவனைக் கண்டதுமே, வரவேற்பறையில் சிறு சலசலப்பு ஏற்பட்டது.

அது ''போலீஸ்'' என்ற தனது அடையாளத்துக்காக ஏற்பட்ட சலசலப்பு என்பதை உணர்ந்தவனாய், ''இங்க... விவேக்ன்னு ஒருத்தர் அட்மிட் ஆகி இருக்காரில்ல! நா அவரோட பிரதர்!'' என்றான் அறிமுகமாய்.

''டாக்டர். கிரி அட்டன்ட் பண்ணிட்டு இருக்கார் சார்... எமர்ஜென்சில இருக்காங்க!'' என வரவேற்பு பெண் சொல்லும்போதே, ரபினின் நண்பன் ராகவன் வந்துவிட்டிருந்தான்.

''ரபின்! இங்க வா!'' என அவன் குரல் கொடுத்த திசையில் விரைந்தான் ரபின்.

''அண்ணனுக்கு ஒண்ணும் பிரச்சனையில்லைடா... விலாவில குத்தியிருக்காங்க... ஃப்ராக்சர்

எல்லாம் இல்லை... பட் நிறைய ப்ளட் லாஸ்!'' என அவன் கூறிக் கொண்டிருக்கும்போதே,

அவசர சிகிச்சை பிரிவினுள் நுழைந்து விட்டிருந்தான்.

''சார்... சார்... உள்ள போகக் கூடாது சார்! ட்ரீட்மென்ட் முடியட்டும்!'' என நர்ஸ் தடுக்கும் போதே, ''அவரை உள்ள விடுங்க சிஸ்டர்!'' என்று குரல் கொடுத்தார் மருத்துவர்.

''கிரிண்ணா!'' என்று ரபின் வியக்க,

''வாடா, பாபின்! இப்பத்தான் உன்னோட அண்ணன்ட்ட... எங்கடா உன்னோட பாசமலரைக் காணோம்ன்னு கேட்டுட்டு இருந்தேன்!'' என்றான் உள்ளிருந்தவன்.

செவிப்புலன் கிரியின் வசமிருக்க, கண்களோ தளர்ந்து போய் படுக்கையில் படுத்திருந்த விவேக்கின் மீதே இருந்தது!

நெற்றியில் ஓர் பெரிய வெட்டு. இடுப்பு பக்கமாய் பெரிய காயம்... கையில் சிறிதாய் ஓர் கீறல் என்று பார்க்கவே அலங்கோலமாய் இருந்தான் விவேக்.

''விவேக்!'' என்று கதறலாய் வெளிவந்தது ரபினின் குரல்.

''டேய்! ஒண்ணுமில்லைடா! இன்னும் ஒரு வாரத்தில எல்லாம் நார்மல் ஆகிடும்!'' என்ற விவேக், தம்பியை நோக்கி கை நீட்ட,

''டேய்... எலும்புக்கூடு டாக்டரு! என்ன தான் நீ டாக்டரா இருந்தாலும்... இப்ப உனக்கு நான் தான் டாக்டர்! நான் தான்... சொல்லுவேன்!'' என்ற கிரி,

''இன்னும் ஏழு நாளில சரியாகிடும்டா, பாபின்!'' என்றான் தீவிரமான முக பாவத்துடன்.

விவேக் பக்கென சிரித்துவிட, ரபினால் முடியவில்லை!

''எப்படிடா?'' என்ற ரபினின் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வடிந்து, விவேக்கின் காயம் பட்ட கையில் தெறித்தது!

''ச்சே! அழாதடா!'' என்ற விவேக்கிற்கும் மனம், நெகிழ்ந்து போயிருந்தது.

''அம்மாக்கும் வீணாக்கும் சொல்லலைதானே?'' என அவன் பயத்துடன் கேட்க, அதற்குப் பதில் சொல்லத் திராணியின்றி மறுப்பாய் தலையசைத்தான் ரபின்.

தம்பியின் நிலை, சும்மா இருந்த கண்ணில் நீரை நிரப்பிவிட, ''அம்மா தாங்க மாட்டாங்கடா!'' என்றான் விவேக், கரகரத்த குரலில்.

கூடவே, ''அப்படி என்ன தான்.... பாசமோ! அதுவும்... இந்தக் கீழ் ஜாதி அநாதை மேல!'' என்று அவன் விரக்தியாய் கூற,

''ச்சீ... லூசு!'' என்று வேகமாய் மறுத்த ரபின், ''கிரிண்ணா... உங்க ஹாஸ்பிடலைக் கழுவுறதுக்கு.. பினாயில் வச்சிருப்பீங்க இல்ல... அதில ரெண்டு

லிட்டரை இவன் வாயில ஊத்தி அனுப்பி விடுங்க!'' என்றான் கடுப்புடன்.

''அதென்னடா ரெண்டு லிட்டரு... மொத்தமா பத்து லிட்டரையும் கவுத்துடுறேன்!'' என்ற கிரியின் குரலிலும் கடுப்பு தெரிந்தது.

''உங்கம்மா... ஒரு ஜெம் ஆஃப் அ வுமன் டா! உன்னோட பேச்சால... அவங்களை இன்சல்ட் பண்றேடா நீ?'' என்றான் கிரி, விவேக்கை மட்டுமல்லாமல் அவனது குடும்பத்தையும் அறிந்த அவனது பால்ய சிநேகிதனாய்.

''ஓகே! ஓகே! வாபஸ்!'' என்றான் விவேக், கையை மேலே உயர்த்தி.

''டேய்... டேய்! பார்த்து... தையல் போட்டிருக்கேன்! பிரிஞ்சிடப் போகுது!'' என கிரி, சொல்லும் போதே ''ஆஆஅ!'' என்ற சிறு வலியுடன் கையைக் கீழே போட்டான் விவேக்.

தமையன் படும் வேதனை பொறுக்க முடியாமல், கண்ணிலிருந்து ஒரு நீர் அருவியாய் வழிய, ''ச்சை... எல்லாம் என்னால தான்டா!'' என்றான் ரபின், குற்ற உணர்வுடன்.

''ப்ச்! உளறாத.. அதெல்லாம் ஒண்ணுமில்லை'' என விவேக் மறுக்க,

''இன்னைக்குக் காலையில போய்... அந்தக் காட்டுமிராண்டிகளை மிரட்டிட்டு வந்தேன்டா... அந்தக் கடுப்பில தான் உன் மேல கை வச்சிருக்

கானுங்க!'' என்றான் ரபின், பற்களைக் கடித்துத் துப்பியபடியே.

''ஹே! உனக்கு எப்படித் தெரியும்?'' - விவேக்கின் குரலில் அதிர்ச்சி இருந்தது!

''நீ என்ன லூசா? ரோஜா சொன்னா!'' - கடுப்படித்தான் ரபின்.

''ரோஜா! ஹோ காட்! மறந்தே போயிட்டேன் பாரேன்... அவளுக்கும் அடி பட்டிருக்குடா... அடுத்த ரூம்ல இருக்கா... சீக்கிரம் போய்ப் பாரு!'' என்று தலையில் அடித்துக் கொண்டான், விவேக்.

''வாட்ட்!'' அவளுக்குமா?'' என்று ரபின் அதிர,

''ஆமாடா... ஆக்ச்சவலி... பெரிய குளம் பஸ் ஸ்டாண்ட்ல முகமூடி போட்டுட்டு நாலு பேரு பஸ்ல ஏறினாங்க! என்ன ஏதுன்னு யோசிக்கிறதுக்குள்ள... எங்ககிட்ட வந்து... அடிக்க ஆரம்பிச்சுட்டாங்க! பஸ்ல இருந்த சில பேரு... ரெஸ்கியூக்கு வந்ததால... இதோட போச்சு! அவங்க பின்னாடி இருந்து இழுத்ததால... காயம் ரொம்ப ஆழமா விழலை! ஆனா... ரோஜாவைப் பிடிச்சு... பஸ் கம்பில இடிச்சு... எனக்கு ஒண்ணுமே புரியல! ரோஜா தான்... திடீர்ன்னு... இந்தாளு எங்கப்பான்னு அலறினா... அதுக்குள்ளே... என்னையும் நெத்தில வெட்டிட்டு... நடுல வந்த அவளையும் குத்திட்டு... ஓடிட்டாங்க! என்னென்னமோ நடந்து போச்சு!'' என்றான் விவேக் விளக்கமாய்.

"ப்ளடி ***" என்ற ரபினின் கை பிடித்த விவேக், "முதல் ரோஜாவைப் போய் பாரு!" என்றான் கனிவாய்.

"அம்மாட்டயும்... யுகாட்டயும் விஷயத்தைச் சொல்லிட்டு... அவங்களை இங்க வரச் சொல்லிட்டுப் போறேன்டா! நீயும் ரோஜாவும் இன்னும் வரலைன்னதுமே... அம்மா கெஸ் பண்ணியிருப்பாங்க!" என்ற ரபினின் கணிப்புப்படி,

அவனது கைப்பேசி அலறியது! நாச்சியாரின் பெயரைத் தாங்கியபடி!

அவன் எடுத்ததும், "ரபின், விவேக்குக்கு என்ன?" என்றார் அவர், இறுகிய குரலில்.

"அம்மா... உங்களுக்கு..." ரபின் இழுக்க,

"தேனி மட்டுமில்லடா... பெரிய குளத்தில இருக்கிறவங்களுக்குக் கூட இந்த நாச்சியார் உதவி பண்ணியிருக்கா!" என்றவரின் குரலில் கோபமிருந்தது.

"விவேக் எப்படி இருக்கான்?" என மீண்டும் கேட்ட அவரது குரலில் அழுத்தம் கூடியிருந்தது.

"இப்போ பரவாயில்லைம்மா! கிரிண்ணா... விவேக்கோட படிச்சாங்களே... அவங்க ஹாஸ்பிடல்லதான் அட்மிட் ஆகியிருக்கான்!" என்றான் ரபின் மெதுவாய்.

"எவன்டா... என் மகன் மேல கை வச்சது? அதுவும்... ஒரு பிஸியான பஸ் ஸ்டாண்ட்ல! முப்பது

பேர் இருக்க பஸ்ஸுக்குள்ள!" என்ற வேலு நாச்சியாரின் கேள்விக்கு,

"வேலுச்சாமி!" என்றான் ரபின் மெல்ல.

"ஹோ! இன்னைக்குக் காலையில... நீ விட்டு வச்சிட்டு வந்த மிச்சமோ?!" என நாச்சியார் கேட்ட போது, ரபினின் ரௌத்திரம் கூடியது.

"நீ போலீஸ் தானேடா... என் மகன் மேல கை வச்சுட்டாங்கன்னு... நா அவங்க மேல கம்ப்ளைன்ட் கொடுக்கிறேன்.... அவனுங்களைத் தூக்கி உள்ள போடு! என்னை மீறி.. இந்த நாச்சியாரை மீறி... எந்த வக்கீல் கொம்பன் அவனுங்களை ஜாமீனில் எடுக்கிறான்னு பார்ப்போம்! எம் புருஷன் கொடுத்த சொத்தில சுகம் கண்டுட்டு... எங்க சொத்தையே அழிக்கிறானா? நா யாருன்னு காட்டுறேன்! திருடனா பார்த்துத் திருந்தட்டும்... திருந்தட்டும்ன்னு இருந்தா... இவனுங்க திருந்த மாட்டானுங்க! நாம தான் திருத்தணும்! இவனுங்களைப் பொழைக்க விடாம திருத்துறேன்!" என்றபோது, வீரமங்கை ராணி வேலுநாச்சியாரின் மறு உருவாய் ஜொலித்தார், நாச்சியார்.

"அம்மா!" என ரபின் திகைத்து அழைக்க,

"என்னடா அம்மா? நீ... தூக்கி உள்ள போடுறியா? இல்ல... எஸ்.பிட்ட கம்ப்ளைன்ட் கொடுக்கவா? இல்ல... எம்.எல்.ஏ. எம்.பி.ன்னு போய் கம்ப்ளைன்ட் கொடுக்கணுமா?" என்றார் அவர் உக்கிரமாய்.

''வேணாம்மா! அவங்களைத் தூக்கி உள்ள வச்சுட்டுத்தான்... நா வீட்டுக்கு வருவேன்'' என்ற ரபின், போனை வைக்கும் முன்னர்,

''நீ எப்ப வேணும்ன்னா வா... என்னோட மருமகளை... முதல வீட்டில கொண்டாந்து விடு!'' என்றார் ஆணையாக.

''அவளுக்கும் அடி பட்டிருக்காம்-ம்மா! நீங்களும் யுகாவும் வரும்போது... அவளைக் கூட்டிட்டுப் போங்க!'' என்றான் மகன்.

''ஹோ! ஆமா இல்ல... அந்தக் காட்டுமிராண்டிக... சொந்த ரத்தத்தைக் கூட விட்டு வைக்க மாட்டானுங்க... உறிஞ்சிடுவானுங்க!'' என்றவரின் ஆத்திரம் துல்லியமாய் வெளிப்பட்டது.

''நீங்களும் யுகாவும் வரீங்க தானே?'' என ரபின் மீண்டும் கேட்க,

''அந்த ஊமைப் பொண்ணு... கதறி அழறதைப் பார்க்கிற திராணி எனக்கில்ல! ஒரு வாட்டி... பட்டதும் கேட்டதுமே எனக்கும் அவளுக்கும் போதும்! இப் போதைக்கு... விவேக் ஒரு கேஸ் விஷயமா பெரிய குளத்தில் இருக்கான்னு சொல்லி வை. வீட்டுக்கு வந்ததும் தெரிஞ்சுக்கட்டும்!'' என்றார் ஆத்திரம் முழுதாய் வடிந்து அழுகை எட்டிப் பார்த்த குரலில்.

''அம்மா!'' - இப்போதும் அதிர்ந்து நின்றான் ரபின்.

''என்னால முடியலடா! ஜாதிங்கிற ஒரு குப் பைக்காக... என்னோட... என்னோட கோபுரத்தையே

சேதப்படுத்திட்டானுங்க!'' - குரல் உடைந்து, அழுகை வீரிட்டு வரச் சொன்னவர், ''நா அங்க வந்துட்டு இருக்கேன்!'' எனக் கூறி, போனை வைத் தார்.

தாயின் கோபம் வேகத்தைக் கொடுத்தபோதும், அவன் தாரத்தை மறந்து விடவில்லை.

வேகமாய் அடுத்த அறைக்குள் நுழைந்தவன் ''மாமா!'' என்ற தேனமுதக் குரலில் நெஞ்சம் நிறைந் தான்.

''கண்ணம்மா!'' - தன் உயிரைக் கூட்டி, அவன் உணர்வாக்க

''மாமா!'' என்ற ஒற்றைச் சொல்லிலேயே அந்தச் சிங்கத்தைச் சாய்த்துப் போட்டாள் ரோஜா.

தலையில் பெரிய கட்டுடன் படுத்திருந்தவள், அவனைக் கண்டதும் கட்டிலை விட்டிறங்கி, அவனது மார்பில் மஞ்சம் கொள்ள,

''என்னடா இது? இவ்வளவு பெரிய காயம்? அதான்... விவேக்கிட்ட போனை கொடுக்க மாட் டேன்னு சொன்னியா?'' என்றான் கண்ணீர் பொங்கி வழிய.

''அதை விடுங்க மாமா! எங்கப்பா தான் மாமா... அத்தானைக் குத்தினாங்க... நீங்க அவங்களைப் பிடிச்சு முதல உள்ள வைங்க! முகமூடி போட்டுட்டு வந்தா... யாருக்கும் தெரியாதுன்னு நினைச்சாங்க போல! இருபது வருஷமா... இவங்க இருந்த அதே

வீட்டில இருந்து வளர்ந்த எனக்கு... அவங்களை எப்படித் தெரியாம போகும்? ச்சை! நீங்க அவங்களைப் பிடிங்க மாமா... நா வந்து சாட்சி சொல்றேன்... விவேக் அத்தான் எவ்வளவு பாவம்... அத்தான் என்ன தப்பு செஞ்சாங்க... எதுக்கு அவங்களை அடிக்கணும்! ச்சை... யுகா அக்கா எவ்வளவு பாவம்! நீங்க உள்ள தூக்கி வைங்க மாமா... கண்ணை கட்டிட்டு எல்லாம் அடிக்க வேணாம்! திறந்துட்டே அடிங்க! நல்லா அடிங்க!'' என்றாள் தன் மனதின் பொருமலை மறையாமல் வெளியிட்டு.

அவளால் தன் பிறந்த வீட்டினர் நடத்தி விட்டுச் சென்ற கொடூரத்தைச் சற்றும் சகித்துக் கொள்ள முடியவில்லை.

ஜாதியின் பெயரைச் சொல்லி, இவர்கள் செய்யும் அட்டூழியத்திற்கு ஒரு முடிவு வந்தே ஆக வேண்டும் என்ற வெறி நெஞ்சை நிறைத்தது! அந்தக் கொடுமையைச் செய்பவர்கள்... தன் ரத்தம் என்றாலும், அதைத் தடுத்தே ஆக வேண்டும் என்ற உறுதி நெஞ்சில் வேரூன்ற ஆரம்பித்தது.

''நீ... டென்ஷன் ஆகாத கண்ணம்மா! நா பார்த்துக்கிறேன்! அம்மா... இப்போ வந்துடுவாங்க! அவங்களோட நீ வீட்டுக்குப் போ! சரியா?'' என்றவன்,

''நா இதுக்கு ஒரு முடிவு கட்டிட்டு... வீட்டுக்கு வரேன்!'' என்றான் குரலில் தீவிரத்துடன்.

காதல் கொண்ட மனம், அவனைத் தடுக்க நினைத்தபோதும், கோபம் கொண்ட மனம் அவனை வழியனுப்பி வைத்தது!

''இதில ஒரு கையெழுத்துப் போடு! மத்தது எல்லாம் நான் பார்த்துக்கிறேன்!'' என்றவன், ரோஜாவிடம் ஒரு கையெழுத்தை வாங்கிக் கொண்டு, விவேக்கிடம் சற்று நேரத்தில் வந்து விடுவதாகக் கூறி விடைபெற்றான்.

நேரே, காவல் நிலையம் சென்று... ரோஜா கையொப்பம் இட்டுக் கொடுத்த பேப்பரை வைத்து, ஒரு புகாரைப் பதிவு செய்தவன், ஐந்தாறு காவலாளிகளுடன் ரோஜாவின் பிறந்த ஊருக்குச் சென்றான்.

அவ்வளவு சீக்கிரம், ரபினை அவர்கள் அங்கே எதிர்பார்க்கவில்லை என்பது அவர்களது முகத்திலிருந்த அதிர்ச்சியே எடுத்துக் காட்டியது!

இருந்த ஆத்திரமெல்லாம் கைகளுக்கு இடம் பெயர, வேலுச்சாமியின் சட்டையைக் கொத்தாய் பிடித்தான் ரபின்.

''தம்பி! மரியாதை!'' என்று அவர் உறும,

''என்னய்யா பெரிய மரியாதை! இன்னைக்குக் காலையிலேயே... உங்க கூட்டம் முழுசையும் தூக்கி உள்ள வச்சிருப்பேன்! ஆனா... என்கிட்டே லீகலா கம்ப்ளைன்ட் எதுவுமில்லை... அந்தப் பொண்ணும்... உங்க மேல கை வைக்க முடியாதபடி எழுதிக்

கொடுத்திட்டு போயிருச்சு! இருந்தாலும்... என்னோட போலீஸ் பவரை வச்சு... உங்களை என்ன வேணும்னாலும் செஞ்சிருக்லாம்! ஆனா... என்னோட பவரை தவறான முறையில யூஸ் பண்ணக் கூடாதுன்னு பேசாம இருந்தேன்!'' என்றான் அவரது சட்டையைப் பிடித்தபடியே, அவரை ஒரு இன்ச் மேலே தூக்கியபடி.

''இப்ப... எவன் எங்க பேர்ல கம்ப்ளைன்ட் கொடுத்தது! அந்தக் கீழ் ஜாதி நாயா?'' என அவர் எகிற,

பிடித்திருந்த கையால், அவரை ஓங்கி சுவற்றில் அறைந்தான்.

அவர் தடுமாறும்போதே, ''நீ சொல்ற கீழ் ஜாதி மகான்... உன்னைக் காட்டிக் கொடுக்கக் கூட இல்லை! அது உன் மேல உள்ள பயத்தால இல்ல! என் அடி மேல உள்ள பயத்தால!'' என்றவன், வேலுச்சாமியின் சட்டையைப் பிடித்துத் தரதரவென வெளியே இழுத்து வந்தான்.

''இந்த கம்ப்ளைன்ட்ல இருக்க... எல்லாரையும் அரெஸ்ட் பண்ணுங்க!'' என்று அவன் பிறப்பித்த ஆணையில் பெயரில், மற்றவர்களும் பிடிபட,

''வேற எவன்டா கம்ப்ளைன்ட் கொடுத்தது?'' என அலறினார் வேலுச்சாமி.

''எவன் இல்ல... எவுங்க! சரியா? ஏன்னா... கம்ப்ளைன்ட் கொடுத்தவங்க... என்னோட அம்மாவும்... என்னோட பொண்டாட்டியும்!'' என்றவன்,

''இனி... நீ எப்படி வெளியே வரேன்னு பார்க்கிறேன்! நீ இருந்தா தானேடா..! ஆடுறவனை எல்லாம்... உள்ள தூக்கி வைக்கிறேன்டா!'' என்றவன், அவரை ஜீப்பில் ஏற்றினான்.

ஒரு வேலுச்சாமியை அடக்க ரபீந்திரநாத் வந்தாயிற்று? ஆனால், தமிழ்நாடெங்கும்... ஏன் இந்தியாவெங்கும்... ஏன் உலகமெங்கும் நடக்கும் இனப்பாகுபாடுகளை அடக்க எத்தனை ரபீந்திரநாத் வர வேண்டுமோ?

28



பத்து நாட்களுக்குப் பிறகு

காலை ஏழு மணி இருக்கும்.

''அம்மா... அம்மா... அம்மா...'' என்று ஆர்ப்பாட்டமாய் கூவிக் கொண்டு வந்தவன், ரபின் அல்ல! விவேக்!

காலை நடைப்பயிற்சி முடிந்து, தினசரியில் ஆழ்ந்திருந்தார் வேலு நாச்சியார்.

''பார்த்து... விவேக்! தையல்.. இப்பத்தான் பிரிச்சிருக்கு! ஏதாவது ஆகிடப் போகுது!'' எனப் பதறினார் வேலு நாச்சியார்.

ஆர்ப்பாட்டமெல்லாம் முழுதாய் வடிந்துவிட, அவரருகே அமர்ந்து, தாயின் மடியில் தலை சாய்த்தான் விவேக்.

அவனது முடியைக் கோதி விட்ட நாச்சியாரின் கண்களிலிருந்து வடிந்த இரண்டு சொட்டுக் கண்ணீர், விவேக்கின் உச்சந்தலையில் பட்டு... அவன் உள்ளம் தீண்டியது.

''என்னம்மா இது? எனக்குத்தான் சரியாகிடுச்சு இல்ல...'' என்ற விவேக், அவரது கன்னத்தில் ஓர் முத்தமிட,

''என்ன சரியாச்சு? ருசிக்கு இல்லாட்டியும்... பசிக்கு சாப்பிடறவன்டா நீ! ஆனா... இன்னும்... ரெண்டு இட்லி கூட சாப்பிட மாட்டேங்கிற... ஒரு இட்லியை வச்சுக்கிட்டு... யுகா கெஞ்சிட்டு இருக்கா! உடம்பு சரியா இருந்தா... ஒழுங்கா சாப்பிடுவே இல்ல!'' என வாஞ்சையாய் மகனின் கன்னம் வருடிய நாச்சியாரின் முகம் பாசத்தால் கனிந்திருந்தது.

''என்னம்மா இது? என்னமோ... எல்.கே.ஜி. பையன் மாதிரி.. ஃபீல் பண்றீங்களே!'' என்றான் விவேக், சிரிப்புடன்.

''உனக்கே குழந்தை பிறந்தாலும்... எனக்கு நீ தான்டா முதல் குழந்தை!'' என்றார் வேலு நாச்சியார், வாஞ்சையாக.

தனக்கு அடிபட்டது தொட்டு, தாயின் மனம் ஒரு நிலையில் இல்லை என்பதை உணர்ந்தான் அந்த மருத்துவன்.

அதில் மனம் நெகிழ்ந்த போதும், தாயை இன்னமும் பலவீனப்படுத்தி விடக்கூடாது என்ற நோக்கத்துடன், ''எப்படிம்மா... நா சொல்ல நினைச்சதை... நீங்க அப்படியே சொல்லிட்டீங்க!'' எனப் பெரிதாய் குதூகலித்தான், அவன்.

''என்னடா? என்ன சொன்னேன்?'' என அவர் யோசிக்கும்போதே,

''வீர மங்கை வேலு நாச்சியாரின்... மறுபதிப்புக்கு... மறுபதிப்பு வரப் போகுது!'' என்றான் விவேக், புதிர் போடும் குரலில்.

''புரியலையே!'' என நாச்சியார் யோசிக்கும் போதே,

''பேரிக்காய்களுடன் சேர்ந்து... மேரி மாதாவும் பேரிக்காயா மாறிப் போச்சுடா ஸ்டெத்து!'' என்று நடுவே புகுந்தான், அப்போது தான் எழுந்து வந்த ரபின்.

''காலங்கார்த்தால... என்ட்ட அடி வாங்காம போகமாட்டே போல!'' - சின்ன மகனை எச்சரித்த கையோடு,

''என்னடா?'' என்றார் பெரிய மகனிடம்.

''என்ன என்னடா? ஜூனியர் வேலு நாச்சியார் வரப் போறாங்கன்னு சொல்றான்! இது கூடப் புரியலையா?'' என்ற ரபின், ''கன்க்ராஸ்ட்டா ஸ்டெத்து!'' என்றான் தமையனைத் தழுவிக் கொண்டு.

"தேங்க்ஸ்டா!" என்ற விவேக்கைப் புறக்கணித்து விட்டு, யுகாவை நாடிச் சென்றார் வேலு நாச்சியார்.

"யுகாம்மா!" என அவர் அழைத்த விதத்திலேயே, முகத்தில் மலர்ச்சியுடன், அவரை வந்து கட்டிக் கொண்டாள் யுகவீணா.

"எனக்கு... வேலு நாச்சியார் வேண்டாம்டா! ஜூனியர் சங்கரன் வேணும்! பெத்துக் கொடுப்பே தானே!?" என அவர் ஆசையாய் கேட்கவும், யுகா வின் நெஞ்சில் சுரந்த பாசம், கண்ணில் கண்ணீராய் வெளி வந்தது!

அந்த நேரம், "ஓகேடா ஸ்டெத்து! உனக்கு... சங்கரன்! எனக்கு... நாச்சியார் என்ன சொல்றே? டூலா? நோ டூலா?" என்று சகோதரனுடன் உடன்படிக்கை போட்டுக் கொண்டிருந்தான் ரபின்.

"டேய்... நீ இன்னும் வேலைக்குக் கிளம்பல?" என்று நாச்சியார் குரல் கொடுக்க,

"இவங்களோட கடமை உணர்ச்சிக்கு அளவே இல்ல!" என முணுமுணுத்த ரபின்,

"இல்லம்மா! அடுத்த ஜெனரேஷன்க்கு... ஒரு மேரி மாதாவை ரெடி பண்ணலாம்ன்னு!" என்றான் சத்தமாய்.

"அதை... ரோஜாவோட காலேஜ் முடிஞ்சதும் பார்க்கலாம்! இப்போதைக்கு... அவளைக் காலேஜ்ல கொண்டு போய் விட்டுட்டு... வேலைக்குப் போ!" என்றார் நாச்சியார்.

"அதெல்லாம் முடியாது! நான் இந்த வாரம்... ஏற்காடு போறேன்!" என்றான் ரபின், பிடிவாதமாய்.

யுகாவின் சந்தோஷத்தைத் தனதாய் எண்ணி, மனம் பூரித்துப் போய் நின்றிருந்த ரோஜா, தலையில் அடித்துக் கொண்டாள்.

"உன்னை யாருடா போக வேண்டாம்ன்னு சொன்னது? நல்லா போ! ஆனா... என் மருமக... இன்னும் ரெண்டு வருஷத்துக்கு படிக்க மட்டும் தான் செய்வா... வாந்தியெல்லாம் எடுக்கக் கூடாது சொல்லிட்டேன்!" என்றார் கண்டிப்பாய்.

மேலும் சின்ன மகன் பேசும் முன்னர், "அடுத்த தலைமுறைல... நாச்சியாரோட தொழிலைப் பாக் குறதுக்கு ஒரு ஆள் வரதை விட... இந்தத் தலை முறைல ஒரு ஆள் வேணும்! அதைக் கெடுத்து வைக்காத!" என மீண்டும் மகனை எச்சரித்து விட்டு, பெரிய மருமகளின் பக்கம் திரும்பினார்.

"காலையில சாப்பிட்டதும் போய்... டாக்டர்கிட்ட காட்டிட்டு வந்திடலாம்டா, யுகா!" என்றார் அவளது கன்னம் தட்டி.

இங்கே ரபினோ, "இவங்க அராஜகம் தாங்கல!" என்று தலையில் அடித்துக் கொண்ட கையோடு, "கண்மணி... உள்ள வா!" என்றான் அதிகாரமாய்.

விவேக்கின் சிரிப்பைக் கிடப்பில் போட்டுவிட்டு, தன் பின்னே வந்து நின்ற மனைவியை "ஃபாலோ மீ!" எனக் கூறி, அறைக்குள் நுழைந்தான்.

உள்ளே நுழைந்தவளை, ''அதென்ன... என்னைப் பார்த்து நக்கலா சிரிச்சிட்டு இருந்தே? நல்லா இல்ல சொல்லிட்டேன்!'' என்றான் முகத்தில் கோபத்துடன்.

''ஹ்ஹஹா!'' என்று சிரித்த ரோஜா,

''இந்த... முசுட்டுப் போலீஸ் அவதாரம் எல்லாம்... ஜெயில்ல இருக்க எங்கப்பாட்ட வச்சுக்கோங்க! என்கிட்டே வேணாம்!'' என்றாள், சுருங்கியிருந்த அவனது கன்னங்களை, இரண்டு கைகளாலும் இழுத்து, சிரிக்க வைக்க முயன்றபடி.

''எனக்கு ரபினை விட... லவினைத் தான் மாமா ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என்றாள் ரோஜா, கன்னம் நிறைந்த சந்தோஷத்துடன்.

''ஹ்ம்ம்! சொல்லிட்ட இல்ல! அமல் படுத்திட வேண்டியதுதான்!'' என்றவன், தன்னை நெருங்கி நின்ற மனைவியை நெஞ்சோடு அணைத்து, மெல்லத் தூக்கினான்.

''ஹ்ம்ம்... வேணாம்!'' என் ரோஜா மெல்ல முனங்க,

''என்ன போண்டா வேண்டாம்? நா ஒண்ணுமே செய்யலையே!''

''நீங்க செய்வீங்களே!''

''என்ன செய்வேன்?''

''செய்யும் போது தெரியும்!''

''ஹோ! அப்ப செய்யவா?''

''இன்னும் செய்யலையா?''

''அடிப்பாவி! நான் செயல் வீரனடி!''

''ஹ்ம்ம்! சொல் வீரன் மாதிரி தான் தெரியுது! செயலை ஒண்ணும் காணோமே!''

''அவமானம்! அவமானம்!'' என்று தன் தலையால் அவளது நெற்றியில் முட்டியவன், அப்படியே கீழே குனிந்து இதழ்களின் மத்தியில் குடி கொண்டான்.

இரண்டு நிமிடங்கள் கழித்து அவன் நிமிர்ந்த போது, ''நீங்க ஆபீஸ் போணும்ல!'' என்றாள் ரோஜா சோகமாய்.

''அதுக்கு ஏன்... மைசூர் பேண்டாவா இருந்த நீ... ஊசிப்போன உருளைக்கிழங்கு போண்டாவா மாறுற?'' என்ற ரபினின் கரங்கள், மனைவியை கட்டிலில் விட்டன.

''ஹான்! எனக்கு மைசூர் போண்டா பிடிக்கவே பிடிக்காது!'' என ரோஜா, கையை உதறிக் கொண்டு சிணுங்க,

''எனக்குப் பிடிக்குமே!'' என்ற ரபின், ரோஜாவில் மெத்தை அமைத்து, அதில் துயில் கொள்ளத் தொடங்கினான்.

ரபின், தானெடுத்த லவின் அவதாரத்தின் உச்சத்தை நெருங்கும் வேளையில், ''அத்தை... திட்டுவாங்களே!'' என்றாள் ரோஜா, மெதுவாய் தன்னருகே இருந்த அவனது காதுக்குள்,

"அவங்க பேர்றாங்க!" என்ற ரபின், ரோஜாவின் இளம் மொட்டுக் கன்னங்களில், தனது ஈர முத்தம் பதித்து, அதை மலர வைத்தான்.

"ஹ்ம்ம்.. அத்தை சொல்லியிருக்காங்க இல்ல..." என்ற ரோஜாவின் கரங்கள், அவனை மெல்ல விலக்க முயன்றன.

விலகாதே என்ற அர்த்தத்தைத் தாங்கி நின்ற அந்த விலகலை விலக்கி, தன் காதலை காமத்தின் வழியே விளக்க முயன்றான் ரபின்

அவளும், அவனது விளக்கத்திலிருந்து விலகா தவளாய் மெல்ல மஞ்சம் சேர்ந்தாள்!

இரு இளம் உள்ளங்களும், காதலெனும் பாலத் தில்.... கூடலெனும் வண்டியை வேகமாய் ஓட்டினர்.

அந்த வண்டியில் பிரேக்கே இல்லை போலும்! நிற்காமல் ஓடிக் கொண்டே இருந்தது! அதை ஓட்டியவனுக்கும் சோர்வு தழுவவில்லை! அதை நடத்திக் கூட்டிச் சென்ற நட்த்துனளுக்கும் சலிப்புத் தட்டவில்லை!

அது ஓடிய சாலைக்கும் முடிவே இல்லை போலும்! காதல் சோலையாய் விரிந்து கொண்டே இருந்தது!

ஓடிய சாலையும்... ஓட்டிய வண்டியும் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தால், முடிவேது?

முடிவற்ற ஆரம்பமாய்... ஆரம்பமற்ற முடிவாய்... வட்டமெனச் சுழன்று வந்தது காதல்! அதில் வட்ட மடித்தது கூடல்!

உள்ளிருந்து தடை எழாவிட்டாலும், வெளியிருந்து தடை வரலாம் அல்லவா?

எப்போதும், நாயகனும்.. நாயகியும் கூடி நிற் கையில்... தூரத்தில் ஓர் குயிலோ... இல்லை ஒருவரது கைப்பேசியோ... இல்லை சத்தமாய் கேட்ட ஹாரன் ஒலியோ... இப்படி எதுவோ ஒன்று நடுவே புகுந்து கூடலை ஊடலாக்கும்! இப்போது, அந்த வேலையைச் செய்தது நாச்சியாரின் குரல்!

"டேய் ரபின்! வேலைக்கு நேரமாகலை? சீக்கிரம் கிளம்பு!" என்ற அவரது குரல், வரவேற்பறையி லிருந்து ஓங்கி ஒலித்து, படுக்கையறையிலிருந்த ரபினை அணையிட்டு தடுத்தது!

"ஹய்யோ! அத்தை!" என்று ரோஜா, பதறி விலக,

"ஏய்... ஏய்... ஒரே ஒரு கிஸ்... போண்டா... ப்ளீஸ்டி!" என்றான் ரபின், அவளது கையைப் பிடித்து இழுத்தபடியே.

"போண்டா... போண்டா... போண்டா... ச்சை... அதை முதல விடுங்க! ஒண்ணு என்ன ஆயிரம் கிஸ் தரேன்!" என்றாள் ரோஜா, கடுப்பாய்.

"அப்படியா? நல்லா டீலா இருக்கே!" என்ற ரபின், "இனிமேல்... இந்த ரபின்... போண்டாங்கிற வார்த் தையை... ஏன் மைசூர் போண்டா சாப்பிடுறதையே

விட்டுடுறேன்!'' என்றான், ரோஜாவின் கையை விடாமல்.

''நிஜமா?'' என்றாள் ரோஜா சந்தேகமாய்.

''ப்ராமிஸ் பேபி! ரபின்... போண்டாங்கிற வார்த்தையை அழிச்சிட்டான்!'' என்றான் ரபின், வீரதீரமாய்.

''ஹ்ம்ம்!'' என்று லேசாய் அலுத்துக் கொண்டவள், ரபினின் கன்னத்தில் லேசாய் இதழ் ஒற்றினாள்.

''இந்த லேசு பாசு டச்சுக்கெல்லாம்... ஆனானப்பட்ட போண்டாவை விட்டுக் கொடுக்க முடியாது!'' என்றான் ரபின், முறுக்கிக் கொண்டு.

''ஹ்ம்ம்ம்!'' என் மெல்லச் சலித்துக் கொண்டவளின் உதடுகள், ரபினின் கன்னத்தை கனமாய் தீண்டின.

''ஓகே! ஒண்ணு!'' என்றவன், ''ஆயிரம் எண்ணுற அளவுக்கு... நாம அறிவாளி எல்லாம் இல்ல! பேசாம... ஒரொரு கிஸ்க்கும்... நா பதில் கிஸ் தந்துடுறேன்... நீ கணக்கு வச்சுக்கோ!'' என்றான் சாதாரணமாய்.

''ஹுக்கும்! என்னோட ப்ளஸ்-டூ மார்க் சீட் பார்த்தீங்களாக்கும்!'' என்றாள் ரோஜா, அவனது கன்னத்தில் குத்தி.

''ஹஹஹா! ஜஸ்ட் பாஸ் வாங்கின என்னைப் போய்... கணக்கு வச்சுக்கச் சொல்றீங்களே... நீங்க

என்ன லூசான்னு தானே கேட்கிறே?'' என ரபின் அவளது கழுத்தில் கைகளால் விளையாட,

''என்னது ஜஸ்ட் பாஸா? அறுபது பெர்சென்ட் ஆக்கும்!'' என்று கோபமாய் முறுக்கிய ரோஜா, அவனது மூக்கைப் பிடித்து ஆட்டினாள்.

''சரி... சரி விடு! நீ முதல் இருந்து ஆரம்பி!'' என்றான் ரபின், அவளது முகத்தைப் பிடித்து தன் முகத்தருகே இழுத்தபடியே.

அடுத்த அரை மணி நேரமும்,.இதழ் தாண்டி... இதயம் நுழைந்த முத்தங்களில் பாதி, பதிவேட்டில் ஏற்றப்பட, மீதியோ அனாமத்தாய் ''லவின்'' கணக்கிற்கு இடம் மாறின!

ரோஜாவும்... கணக்கு வழக்கில் கண்டிப்பில்லாத கணக்குப் பிள்ளையாய் கணக்கை மாற்றி மாற்றி எழுதினாள்!

ஒரு கட்டத்தில், ''ச்சு... போங்க! இன்னும் பத்து நிமிஷம் லேட் ஆனா... உங்களுக்குப் பதிலா அத்தை எஸ்.பி. ஆபீஸ் கிளம்பிப் போயிடுவாங்க! இன்னைக்கு... எங்கப்பா கேஸ்... கோர்ட்டுக்குப் போகுது ஞாபகம் இருக்கா இல்லையா?'' என்றாள் ரோஜா, அவனிடமிருந்து வலுக்கட்டாயமாக விலகியபடி.

''ஜாமீன் கிடைக்காத கேசு... கோர்ட்டுக்குப் போனா என்ன போகாட்டி என்ன?'' என உறுதியாய் சொன்னவன், ரோஜாவை மீண்டும் இழுத்தான்.

"ஷ் விடுங்க! நா போணும்! நீங்க வேணும்ன்னா அத்தைட்ட திட்டு வாங்கிட்டு... அதைத் துடைச்சுப் போட்டுட்டுத் திரியலாம்! என்னால முடியாதுப்பா!" - உறுதியாய் மறுத்துவிட்டு, அவனை விட்டும் கட்டிலை விட்டும் அவள் விலக,

"போடி போண்டா! மைசூர் போண்டா! தேங்கா போட்ட மைசூர் போண்டா! ஊசிப் போன மைசூர் போண்டா!" என்றான் ரபின், கட்டிலில் சாய்ந்து... உல்லாசமாய் சிரித்தபடி.

"என்னது போண்டாவா?" என்று ரோஜா, இடுப்பில் கை வைத்து முறைக்க,

"ஆமா! போண்டா! போண்டா! போண்டா! போண்டாமணி!" என்றான் ரபின், வேண்டுமென்றே.

"சொல்லமாட்டேன்னு சொன்னீங்கல்ல?" என்று ரோஜா பொரும,

"ரபின் தான் சொல்ல மாட்டான்னு சொன்னேன்! லவின் சொல்லுவான்... ரோஜா!" என்றான் ரபின், கண்களைச் சிமிட்டி.

"ஹான்...!" என ரோஜாவால் சிணுங்க மட்டுமே முடிந்தது.

"இருங்க உங்களை வச்சுக்கிறேன்!" என மிரட்டியவளை, "தாராளமா!" என்று இரு கரம் கூப்பி வரவேற்றான் ரபின்.

"உங்களை..." என்று பல்லைக் கடித்துக் கொண்டு ரோஜா, அவனை நோக்கி முன்னேறும் போதே,

"ரபின்! ரோஜா!" என்ற குரல் வெளியே இருந்து கேட்டது.

ரோஜா, ஓடியே போனாள்!

அடுத்த ஒரு மணி நேரத்தில், ரபினும் ரோஜாவும் அலுவலுக்குக் கிளம்பி வந்தனர்.

கேலியும்... கிண்டலும்... யுகாவின் வெட்கமும்... ரோஜாவின் முறைப்பும்... விவேக்கின் சிரிப்பும்... ரபினின் குறும்பும்... நாச்சியாரின் கண்டிப்புமாய் சென்ற உணவு நேரத்தைத் தொடர்ந்து, ரோஜாவும் ரபினும் வெளியே கிளம்பினர்.

புல்லட்டை ஸ்டார்ட் செய்த ரபின், ரோஜா பின்பக்கம் ஏறியதும், "ஹலோ மேரி மாதா! உங்களோட ஒளி பிரதிக்கு ஆர்டர் கொடுத்துட்டேன்! இன்னும் பத்து மாசத்தில வந்துடும்!" என்று போகிற போக்கில் சொல்லிவிட்டு, பறந்தான்.

அவன் சொன்னதன் அர்த்தம் கேட்டிருந்தவர்களுக்குப் புரிய, சில பல வினாடிகள் பிடித்தது!

அர்த்தம் புரிந்ததும்,

விவேக் 'கள்ளன்டா நீ!' என்று சிரிக்க,

யுகா விவேக்கின் தோளில் சாய்ந்து, சிரிப்பெனும் பூவைப் பூக்க வைக்க,

ரோஜா "ஹையய்யையோ!" என்றபோதும், முகம் கணவனின் முதுகில் முகம் புதைக்க,

''அடிங்க!'' என்று கை ஓங்கியபடி அவனைச் சிரிப்புடன் பார்த்திருந்தார் வேலு நாச்சியார்! ஓர் சந்தோஷமான குடும்பத்தின் ஆணிவேர் என்ற கர்வம், சிறிதுமில்லாமல், ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தின் ஆரம்பம் என்ற நிமிர்வு, குறைந்து விடாமல்!